சமண முனிவர்கள் இயற்றிய

# நாலடியார்

## தெளிவுரை

புலியூர்க் கேசிகன்



சாரதா பதிப்பகம்

சமண முனிவர்கள் இயற்றிய

# நாலடியார்

தெளிவுரை

புலியூர்க் கேசிகன்

சாரதா பதிப்பகம்
சென்னை - 600 014.
☎ 044-2811 4402 / 044 - 2844 3791 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

**கௌரா புத்தக மையம்**
செயிண்ட் ஜான் சர்ச் வணிக வளாகம்
9, ராக்கின்ஸ் சாலை, திருச்சிராப்பள்ளி-1
☎ : 99520 34876 / 0431 2419584

**கௌரா புத்தக மையம்**
4, வெங்கட்ராங்கம் பிள்ளை தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 94456 73791 / 97907 06549

விலை : ரூ. **80.00**

* முதற் பதிப்பு : டிசம்பர் 2010

* © உரிமை : பதிப்பகத்திற்கே

* பதிப்பாசிரியர் : **எஸ். கௌமாரீஸ்வரி** M.A., M.L.I.S.,

* நூலின் பெயர் : நாலடியார் தெளிவுரை

* பக்கங்கள் : 224

* ஒளி அச்சு : ஜெய் ஜீனா

* வெளியீடு : சாரதா பதிப்பகம்
ஜி-4, சாந்தி அடுக்ககம்,
3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 14.

* அச்சிட்டோர் : கிளாசிக் பிரிண்டர்ஸ், செ - 2

**CODE : 057**

**கௌரா ஏஜென்ஸீஸ்**
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 5.
☎ : 044-2844 3791 / 97907 06548 / 97907 06549
www.gowrabookfair.com. E-mail : gowra_09@yahoo.in / gowra09@gmail.com


அம்மாவுக்கு...

# முன்னுரை

'நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி', 'பழகு தமிழ்ச் சொல்லருமை நாலிரண்டில்'- இந்த இரண்டு தொடர்களும் நாலடியாரின் பெருமையையும் திருக்குறளின் சிறப்பையும் நன்கு காட்டுவன.

குறள் வெண்பாக்களால் ஆகிய நூலுக்குக் 'குறள்' என்ற பெயர் ஏற்பட்டாற்போல, நாலடி வெண்பாக்களாலாகிய இந்நூலிற்கும் 'நாலடி' என்னும் பெயர் அமைந்தது. 'ஆர்' விகுதி சேர, அது நாலடியார் ஆயிற்று. நாலடியார், நாலடி நானூறு, வேளாண் வேதம் எனவெல்லாம் இதனைக் குறிப்பிடுவார்கள்.

திருக்குறள், கருத்துக்களைச் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கிறது; நாலடி, விளக்கமாகவும் இனிதாகவும் அனைவருக்கும் புலனாகுமாறும் எடுத்துச் சொல்லுகிறது. திருக்குறளின் விளக்கம்போல் இந்த நூல் போற்றப்பட வேண்டியதாகும். அதனைக் கற்பதற்குமுன் கற்கப்பட வேண்டிய அடிப்படை நூலுமாகும்.

வட நாட்டிலே, ஒரு சமயம் பெரிய பஞ்சம் ஏற்பட, சமண முனிவர்கள் எண்ணாயிரவர் பாண்டிய நாட்டைத் தஞ்சமாக வந்து அடைந்தனர். தமிழ் நாட்டிலே தங்கிய அவர்கள் தம் உடலைப் பேணியதுடன், தமிழென்னும் அமுதையும் பருகித் தமிழ்ச் சான்றோராகவும் சிறந்தனர். வடநாட்டுப் பஞ்சம் நீங்கியதும், அவர்தம் நாடுதிரும்ப விரும்பவும், பாண்டியன் அவரைப் பிரிய மனமின்றி விடைகொடாது காலந் தாழ்த்தினன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடல் எழுதித் தம் காணிக்கையாகப் பாண்டியனுக்கும் தமிழுக்கும் வைத்துவிட்டு யாரும் அறியாதேயே, தம் நாடு சென்றுவிட்டனர்.

செய்தியறிந்த பாண்டியன் பெரிதும் வருத்தம் அடைந்தான். அந்த ஏடுகளை வையையிலே எறிய ஆணையிட்டான். அவற்றுள், வெள்ளத்தை எதிர்த்து வந்த ஏடுகள் 400. அவையே நாலடி நானூறாகத் தொகுக்கப் பெற்றன. போற்றிப் பேணப் பெற்றன.

நாலடியார் எழுந்த வரலாறு இப்படி வழக்காற்றிலே சொல்லப்படுகிறது.

கதை எப்படியானாலும், அதன் அமைதி நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறது. வளமும் வண்மையும் பெருகியிருந்த தமிழகத்திலே, கள்ளுண்ணலும், புலால் உண்ணலும், பரத்தையர் உறவும், மற்றுஞ் சிலபல பழக்க வழக்கங்களும் நிலவியதைக் கண்ட சமணச்சான்றோர்கள், தவவாழ்வினரான முனிவர்கள், அவற்றை விடுத்தால் தமிழர் சமுதாயம் எவ்வளவு சிறப்புறும் என்று எண்ணத் தொடங்கினார்கள். அதன் பயனே, சமூக நடைமுறை அமைதிகளாக அவர்கள் ஆக்கிய பெரு நூல்கள் பலவாம். சமணம் இந்நாட்டினின்றும் பேரளவுக்கு மறைந்து விட்டாலும், இந்நூல் தமிழர் மரபியலோடு ஒன்றிக்கலந்து உயர்வுடன் ஒளிபெற்று விளங்குகின்றது.

இத்தகைய ஒப்பற்ற நூலுக்கு பால் இயல் அதிகார முறைமையும், தக்கதோர் உரையும் கண்டவர் பதுமனார். தருமர் மதிவரர் போன்ற பிற சான்றோர்களும் உரை கண்டனர்.

திருக்குறளின் துணையான இந்த நூல் தமிழக மெங்கும் பரவிப் பல்கித் தமிழ் அன்பர்களின் சிந்தனைகளுக்கு மெருகேற்றி, அவர்களை எல்லாம் சொல்லிலும் செயலிலும் உறுதியுடையோராகவும், வாழ்விலே உயர்வுடையோராகவும் ஆக்குதல் வேண்டும். அந்த ஆர்வமே இந்தத் தெளிவுரை அமைப்பிலே என்னைச் செலுத்தியது.

மல்லிகைப் பதிப்பகத்தார் இதன் முதற்பதிப்பினை வெளியிட்டுப் பரப்பும் பணியினை மேற்கொண்டனர். இரண்டாம் பதிப்பைக் காவேரி புத்தக நிலையத்தார் வெளியிட்டனர். மூன்றாம் பதிப்பினை தேன்மழைப் பதிப்பகத்தார் வெளியிடுகின்றனர்.

இவர்களுக்கும் நாலடியின் நற் கருத்துக்களை நாடெல்லாம் பல்வகையானும் பரப்பி வரும் நற்றமிழ்ச் சான்றோர்களுக்கும் நன்றி கூறிக்கொண்டு, இதனை வழங்குகின்றேன்.

தமிழன்பர்கள் விரும்பி வரவேற்றுப் பயன்பெறுவர் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதுமே உண்டு.

**1964** **புலியூர்க் கேசிகன்.**

# வாழ்க்கைக் குறிப்பு

| | | |
|---|---|---|
| **பெயர்** | : | புலியூர்க்கேசிகன் |
| **தோற்றம்** | : | 16.10.1923 |
| **மறைவு** | : | 17.4.1992 |
| **இயற்பெயர்** | : | க. சொக்கலிங்கன் |
| **தந்தைபெயர்** | : | கந்தசாமி பிள்ளை |
| **தாயார்** | : | மகாலட்சுமி அம்மையார் |
| **குடும்பம்** | : | துணைவி - சொ. சுந்தரத்தம்மை |
| | : | மகன் - திரு. சொ. கந்தவேலன் |
| | : | மகள் - திருமதி. நீலச்செல்வி (எ) மகாலட்சுமி - மகாதேவன் |
| | : | மகள் - செல்வி. சொ. கலைச்செல்வி (தமிழ் வளர்ச்சித்துறை) |
| | : | மகள் - திருமதி. மலர்ச்செல்வி ஹரிகுமார் |
| **ஊர்** | : | நெல்லையைச் சேர்ந்த புலியூர்க் குறிச்சி |
| **கல்வி** | : | ஆங்கிலப் பிரிவு - இண்டர், இந்துக் கல்லூரி, நெல்லை |
| **பணிகள்** | : | ஆசிரியர் - வடுகச்சி மலைப்பள்ளி 3 ஆண்டுகள்.<br>மேலாளர் - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 10 ஆண்டுகள் பாரி நிலையம், 2 ஆண்டுகள் அருணா பப்ளிகேஷன்ஸ், பல ஆண்டுகள் மாருதி பதிப்பகம். |
| **தமிழார்வம்** | : | தமிழார்வம் காரணமாக டாக்டர் மு.வ., தமிழ்க்கடல் மறைமலையடிகள், தமிழ்த் தென்றல் திரு.வி.க., கவிமணி போன்ற |

தமிழறிஞர்களுடன் தொடர்பு கொண்டு தமிழறிவை வளப்படுத்தியமை.

**தமிழ்த் தொண்டு :** சங்க இலக்கியங்கள் அனைத்துக்கும் எளிய உரை எழுதி மலிவுப் பதிப்பில் விற்று இலக்கியங்களை அனைவர் மத்தியிலும் எளிமைப்படுத்திப் புரிய வைத்தமை. மனோ சக்தி, எண்களின் இரகசியம், எண்களும் எதிர் காலமும், தியானம் போன்ற நூல்கள் பல்வேறு நாடு களில் புகழ் தேடித் தந்தன.

**பிற சிறப்புகள் :** சிறந்த கவிஞர், படிதிருத்துநர், பதிப்பாசிரியர், எழுத்தாளர், மொழி பெயர்ப்பாளர், சோதிடர், எண் கணித வல்லுநர், ஆவிகள் பற்றிய ஆராய்ச்சியாளர்.

: பல்கலைக்கழகச் சொற்பொழிவாளராகவும் கல்லூரிகள், பள்ளிகள் மற்றும் இலக்கிய விழாக்களில் தலைமை ஏற்றும் சிறப்பித்தவர்.

: வானொலியில் உரையாற்றியவர். குமுதம், குங்குமம், தாய், இதயம், விகடன், ஞான்பூமி, முத்தாரம், அமுத சுரபி, கல்கண்டு போன்ற இதழ்களில் இவர் படைப்புகள் வந்துள்ளன.

: நந்தி வாக்கு, சோதிட நண்பன் போன்ற பல இதழ்களின் ஆசிரியராக இருந்தவர்.

**சிறப்பு :** தென்னிந்திய இரயில்வே முத்தமிழ் மன்றம், ஸ்ரீராம் நிறுவனம், கம்பன் கழகம், திருவள்ளுவர் இலக்கிய மன்றம், பன்னாட்டுத் தமிழுறவு மன்றம் போன்ற பல்வேறு அமைப்புகள் பாராட்டிச் சிறப்பித்துள்ளன. இவரது அறநெறிச் செல்வர், புகழ் பெற்ற பேரூர்கள், புலவரும் புரவலரும் போன்ற நூல்கள் பாட நூல்களாக வைக்கப் பட்டிருந்தன. இவரது படைப்புகளை ஆய்வாளர்கள் ஆய்வு செய்து பட்டம் பெற்றுள்ளனர்.

# சமண முனிவர்கள் இயற்றிய நாலடியார்

## புலியூர்க்கேசிகன் தெளிவுரை

## பொருளடக்கம்


கடவுள் வணக்கம் ........................................ 1

### அறத்துப்பால்

#### 1. துறவற இயல்

1. செல்வம் நிலையாமை ........................................ 5
2. இளமை நிலையாமை ........................................ 11
3. யாக்கை நிலையாமை ........................................ 13
4. அறன் வலியுறுத்தல் ........................................ 22
5. தூய்து அன்மை ........................................ 28
6. துறவு ........................................ 33
7. சினம் இன்மை ........................................ 38

#### 2. இல்லற இயல்

9. பிறர்மனை நயவாமை ........................................ 49
10. ஈகை ........................................ 54
11. பழவினை ........................................ 59
12. மெய்ம்மை ........................................ 64
13. தீவினை அச்சம் ........................................ 68

### பொருட்பால்

#### 1. அரசியல்

14. கல்வி ........................................ 74
15. குடிப் பிறப்பு ........................................ 79
16. மேன் மக்கள் ........................................ 84
17. பெரியாரைப் பிழையாமை ........................................ 88
18. நல்லினம் சேர்தல் ........................................ 93
20. தாளாண்மை ........................................ 102

#### 2. நட்பு இயல்

21. சுற்றம் தழால் ........................................ 107
22. நட்பு ஆராய்தல் ........................................ 112
23. நட்பிற் பிழை பொறுத்தல் ........................................ 117

### 3. இன்ப இயல்


25. அறிவுடைமை ........ 127
26. அறிவு இன்மை ........ 132
27. நன்றியில் செல்வம் ........ 137


### 4. துன்ப இயல்


28. ஈயாமை ........ 142
29. இன்மை ........ 147
30. மானம் ........ 151
31. இரவு அச்சம் ........ 156


### 5. பொது இயல்


32. அவை அறிதல் ........ 161


### 6. பகை இயல்


33. புல்லறிவாண்மை ........ 166
34. பேதைமை ........ 170
35. கீழ்மை ........ 175
36. கயமை ........ 179


### 7. பல்நெறி இயல்


37. பன்னெறி ........ 184


## காமத்துப் பால்

### 1. இன்ப துன்ப இயல்


38. பொது மகளிர் ........ 190


### 2. இன்ப இயல்


39. கற்புடை மகளிர் ........ 195
40. காமம் நுதலியல் ........ 199

கீழ்க்கணக்கு நூல்கள் ........ 205

பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை ........ 207

# நாலடியார் தெளிவுரை

## கடவுள் வணக்கம்

அருமையான மனிதப் பிறவியினை எடுத்திருக்கிறோம். அதனை முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். அயர்வாலோ, அறியாமையினாலோ தவறிவிடுவோமானால், ஒரு நல்ல வாய்ப்பினை இழந்துவிட்டவர்கள் ஆவோம்.

உடல் வேறு; ஆன்மாவாகிய உயிர் வேறு. தனித்திருந்த ஆன்மா, உடற்கூட்டிலே வாழ்வு பெற்று, பல்வேறு உயிரினங்களாகத் தோன்றித் தோன்றி, அந்தக் கூடுகளை விட்டுப் பிரிந்து உழன்று கொண்டே இருக்கிறது. இப்படிப் பிறப்பும் இறப்பும் என்று உழன்று கொண்டே இருக்கின்ற உயிருக்கு, நல்லது தீயது அறியும் அறிவோடு கூடியதான மனிதப் பிறப்புத்தான் சிறப்பானது. இந்தப் பிறப்பிலேதான், அது தன்னுடைய நிலையான நல்வாழ்வுக்கான முயற்சிகளிலே உறுதியுடன் ஈடுபடவேண்டும்; ஈடுபடவும் இயலும்.

உயிர்கள் இப்படிப் பிறந்து இறந்து உழல்கின்ற காலத்து, அவை தம் உயிருக்கு உறுதிபயக்கும் நிலையான பேரின்பத்தை அடைய, அருள்செய்யும் பெருங்கருணையும் தலைமையும் உடையவனாக 'விளங்குபவன்' பேரறிவுப் பொருளாகிய ஒருவனே! அவன் 'உள்ளான்' என்பதை உணரவும், அவனுடைய அருளைப் பெறுவதற்கான நன்னெறியின்கண் அயராது ஈடுபடவும் கூடிய ஆற்றலுடையதும், இந்த மனிதப் பிறவிதான்.

இந்த அடிப்படையிலேதான், நம் முன்னோர்கள் பலப்பல கடவுட் கொள்கைகளைக் கண்டனர். அவற்றுள் அருகதேவனே பரம்பொருள் என்ற கொள்கையினை உடையது சமணம். அந்தச் சமண சமயத்துச் சான்றோர்கள் செய்தது இந்த நூல்.

இந்த நூலினைப் பால் முறை, அதிகார முறை, இயல்முறை எனவெல்லாம் வகுத்து முறைப்படுத்தி, நூலின் பொருளினை விளக்குவதாக அமைந்த உரையொன்றும் வகுத்தவர் பதுமனார் என்பர். அவர் செய்ததே இந்தக் கடவுள் வாழ்த்தும். அவரும் சமண சமயத்தவரே. அதனால், இதனை வழிபடு கடவுளை வாழ்த்தியது எனலாம்.

இந்த வாழ்த்து, மனிதப் பிறவியினராகிய நாம், பகுத்தறிவு உடையவரேயானாலும், நம்முடைய பிறப்பின் உண்மையினையும், மறைவின் வருகையினையும் அறியாத அறியாமையினையும் உடையவர்களாக இருக்கின்றோம். அப்படியிருப்பதனால் இந்த உடல் வீழ்வதற்கு முன்னரே அதன் நிலையாமைத் தன்மையினைத் தெளிவாக உணர்ந்து, நல்லொழுக்க நன்னெறிகளிலே நிலைத்த ஈடுபாட்டுடன் நிற்கவேண்டும். அதற்குக் கடவுள் நினைவினை நீங்காது மனங்கொள்ளல் இன்றியமையாதது என்று கூறுவதாகும்.

**வானிடு வில்லின் வரவறியா, வாய்மையால்,**
**கானிலந் தோயாக் கடவுளை - யாம்நிலம்**
**சென்னி யுறவணங்கிச் சேர்தும், 'எம் உள்ளத்து**
**முன்னியவை முடிக!' என்று.**

வானமானது, தன்பால் இட்டுத் தோன்றுகின்ற வானவில்லின் வரவை இன்ன காலத்தது என்றும், இன்ன காரணத்தது என்றும் அறியமாட்டாது. அதுபோலவேதான் உயிர்களாகிய நாமும், உடலின் வரவையும், அதனை இழக்கும் நிலையையும் பற்றி ஏதும் அறியமாட்டாதவர்களாக இருக்கின்றோம். அதனால், தான் அருள் திருமேனி உடைமை யினால், தரையிலே தன் கால்படியாதவனாக விளங்கும் கடவுளை, 'யாம் எண்ணியவை அனைத்தும் இப்பிறவி யினுள்ளேயே வந்து நிறைவேறுவதாக' என்று கருதி, எம் தலையானது தரையிலே பொருந்தும்படியாகப் பணிந்து உண்மையாகவே எம் உள்ளத்துள் அவனைச் சேர்த்துக் கொள்வோமாக.

இப்படிப் பதுமனார் இறைவனருளை வேண்டுகின்றார். இவ்வாறு இறைவனின் திருவடிகளை உள்ளத்துட் கொள்வது தான் சிறப்பு என்பதனைத் திருக்குறள் கடவுள் வாழ்த்தும் உரைக்கும். ஒழுக்கத்தின் முதன்மை. உயரிய கடவுள் நினைவினை உள்ளங்கொள்ளுதலும் அந்நினைவோடு வாழ்வை வகுத்து வாழ்தலுமாகும் என்பதே ஆன்றோர் முடிபு.

# அறத்துப்பால்

உயிர்கள் அனைத்தும் உய்தி அடைவதற்கு உரிய உறுதியைத் தருவன நான்கு என்பார்கள் சான்றோர். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

அறம், பொருள், இன்பம் என்ற இம்மூன்றினும், இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றினையும் தருவது அறம் எனவும், இம்மை மறுமை என இரண்டினையும் தருவது பொருள் எனவும், இம்மை ஒன்றையே தருவது இன்பம் எனவும் கூறுவர்.

இதனால், மூன்றும் தருவதாகிய சிறப்புப் பற்றி அறம் முதற்கண்ணும், அடுத்துப் பொருளும், அடுத்து இன்பமும் தகுதிபற்றிய முறையினாலே வரிசைப்படுத்தி நிறுத்தப் படுவனவாயின.

இவ்வகையிலே, முதற்கண், 'அறம்' பற்றிக் கூறும் செய்யுட்கள், அதிகாரத்துப் பத்துப் பத்துச் செய்யுட்களாகப் பதின்மூன்று அதிகாரங்களுள் அமைக்கப்பட்டன. இவற்றுள் முதல் ஏழும் துறவற இயலையும், பின் ஆறும் இல்லற இயலையும் உரைப்பன.

'அறம்' மூன்று வகைப்படும். அவை, ஒழுக்கம், வழக்கு, தண்டம் என்பன.

'வழக்கு' என்பது, 'தான், தனது' என்பதன் காரணமாக, உயிர்கள் ஒருவருக்கொருவர் தமக்குள் மாறுபட்டு ஒன்றின்மேற் செல்லுதல். இது பதினெட்டு வகைப்படும்.

'தண்டம்' என்பது ஒழுக்க வழக்கமாகிய நெறிகளி னின்றும் தவறினவர்களை, மீண்டும் அந்தந்த நெறிகளிலே நிறுத்துவதன் பொருட்டு விதிக்கும் தண்டனைகளாம்.

மேற்கூறிய 'வழக்கும் தண்டமும்' உலகை நல்லவழியிலே செலுத்துவதற்குப் பயன்படுவனவாம்.

'ஒழுக்கம்' ஒன்றுதான் உயிர்க்கு நிலையான உறுதி தருவது. அதனால், அந்தச் சிறப்புடைய ஒழுக்கமே, சிறப்புடைய அறமாக இந்நூலுள்ளும் முதற்கண் அமைக்கப்பட்டிருக்கின்றது.

# 1. துறவற இயல்

'ஒழுக்கம்' என்பது பொதுவியல்பினால் இருவகைப் பட்டுச் சொல்லப்படும். அவை, இல்லறமும் துறவறமும் என்பன. இல்லறமாவது, வாழ்க்கைத் துணைவியுடன் இல்வாழ்க்கை நடத்தி, இருமை இன்பங்களையும் அனுபவித்து வாழும் இன்ப வாழ்வு, துறவறமாவது, வீடு பெறுவதென்ற உறுதியான ஒரே குறிக்கோளுடன் உலகத்துப் பற்றுக்கள் அனைத்தையுமே அறந்துறந்து வாழுகின்ற துறவறவாழ்வு.

இவ்விரண்டினுள், திருக்குறள் முதலில் இல்லறத்தைக் கூறி அதன்பின் துறவறத்தைக் கூறுகிறது. இந்நூலினுள் முதற்கண் துறவறமும், பின் இல்லறமும் கூறப்படுகின்றது.

'துறவறம்' நிலைபேறு உடையதான வீடுபேற்று இன்பத்தைப் பெறுவதற்குக் காரணமாவது என்பர். 'இல்லறம்' அந்த அளவுக்குக் காரணம் ஆகாமைப்பற்றி முதலில் துறவறம் வைக்கப்பட்டது என்பார்கள்.

துறவறம், பற்று அற்ற வாழ்வு ஆதலால், இந்தப் பகுதியினுள், உலகத்துப் புறப்பற்று அகப்பற்றுகளை எல்லாம் நிலையற்றவை என்று கருதி, அவற்றின்பால் பற்றின்றி வாழ்தல் வேண்டும் என்பது வற்புறுத்தப்படும்.

துறவு இருவகையாக மேற்கொள்ளப்படும். இளமையிலேயே துறவு பூண்பது ஒருவகை; இல்வாழ்விலே திளைத்துப் பின் அதன் நிலையாமையை உணர்ந்து துறவு மேற்கொள்வது மற்றொரு வகை. இவற்றுள் முதலிற் கூறப்பெற்றதே துறவு நெறியில் சிறப்பானது.

# 1. செல்வம் நிலையாமை

உலக வாழ்விலே, செல்வம் வாழ்வின் இன்பத்துக்கு மிகவும் அடிப்படையான ஒன்றாகும். போதிய அளவு அது இல்லாதபோது, வாழ்வே மிகவும் வருத்தம் உடையதாக ஆகிவிடும். இது பற்றியே, 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்று குறளும் கூறும்.

இப்படி, மிகவும் இன்றியமையாத ஒன்றினை, 'நிலையாமை எனக் கருதி ஒதுக்க வேண்டும்' என்று வற்புறுத்துவது இந்தப் பகுதி. செல்வம் ஓரிடத்திலே நிலைபெற்றிருப்பதன்று; அதனால் அதன்பால் அளவுக்கு மீறிய பற்று வைக்க வேண்டாம் என்பதுடன் அது வந்து சேர்ந்த காலத்திலே அதனால் முடிந்தவரை அறஞ்செய்து, பலர்க்கு உதவி செய்து வாழ்தலும் வேண்டும். இந்த நெறியே இதன்கண் கூறப்பட்டிருக்கின்றது.

'துறவு' நிலையிலே, செல்வத்தின்பால் எழுகின்ற பற்றினைத் துறப்பது முதன்மையானது என்பதும் இதன் கருத்தாகும்.

1. **அறுசுவை உண்டி, அமர்ந்து இல்லாள் ஊட்ட,**
**மறுசிகை நீக்கி உண்டாரும்,- வறிஞராய்ச்**
**சென்று இரப்பர் ஓரிடத்துக் கூழ், எனின்,**
**செல்வமொன்று**
**உண்டாக வைக்கற்பாற்று அன்று.**

காதல் மனைவி அருகே அமர்ந்து அறுசுவைகளுடன் கூடிய உணவினை அன்புடன் வாயிலே எடுத்தெடுத்து ஊட்டிக் கொண்டிருக்கும் போதும், அடுத்த உருண்டையை வேண்டாமெனத் தடுத்து உண்டு களிப்பவர் சிறந்த செல்வச் செழுமையினையும் இன்பவாழ்வினையும் உடையவர்கள். அப்படிப்பட்டவர்களும் ஒருசமயத்தே வறுமையாளராவார்கள்; ஓரிடத்திலே சென்று புன்மையான கூழினையும் யாசித்து நிற்பார்கள். செல்வத்தின் நிலையாமை இப்படிப்பட்டது என்றால், செல்வம் என்கின்ற ஒன்றினை நிலையுள்ளதாகக் கொண்டு பேணிக்காத்து வைக்கப்பட வேண்டியதாகக்

கருதுவது முறையாகுமோ? ஆகாது. அதனை உள்ளபோதே அறவழிகளிற் செலவிடுவதே அறிவுடைமையாகும்.

அறுசுவை-தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, உவர்ப்பு, துவர்ப்பு அமர்ந்து-அன்புடனே அருகே அமர்ந்துகொண்டு சிகை-சோற்று உருண்டை, உருவ ஒப்புமைபற்றிக் கூறினர். 'கூழ்' உண்பவர் மிகவும் வறிஞர். அவர்பாலுஞ் சென்று அதனையும் யாசிக்கும் நிலை என்றமையால், மிகுதியான வறுமைநிலை குறிக்கப்பட்டது. வீடும், செல்வமும், மனைவியும், எல்லாமும் இழந்து பிச்சைக்காரர்களாவதும் இயல்பு என்பது கருத்து.

**2. துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டும்**
**பகடு நடந்தகூழ் பல்லாரோடு உண்க**
**அகடுஉற யார்மட்டும் நில்லாது , செல்வம்**
**சகடக்கால் போல வரும்.**

நடுவுநிலைமை பொருந்த, எவரிடத்துமே செல்வம் நிலையாக நிற்பதில்லை. வண்டிச் சக்கரத்தின் ஆர்க்கால்கள் போல, மேலும் கீழுமாகச் சுற்றிசுற்றி இடம் மாறிக்கொண்டே போகின்ற இயல்பினை உடையது அது. அதனால், எருமைக் கடாக்களை நடத்திப் போரடித்துப் பெற்ற நெல்விளைவாகிய, குற்றமற்ற பெருஞ்செல்வமானது விளைந்து தோன்றிய காலத்திலே, அதனை எவருக்கும் தராமல் சேமித்துப் பூட்டி வைக்காதீர்கள். அது கிடைத்த காலந்தொடங்கி, அனைவரும் பசியின்றி வாழ வேண்டும் என்ற அறநினைவுடன், பலரோடும் கூடிப் பகிர்ந்து உண்பீர்களாக!

துகள் - குற்றம். துகள்நீர் பெருஞ்செல்வம் - வேளாண்மையால் வந்த பெருஞ் செல்வம்; அதுவே குற்றமற்ற 'பெருஞ்செல்வம்'. பகடு - எருமைக்கடா. 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்றது குறளும். உணவுப் பொருள்களை முறையின்றிச் சேமித்து வைப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது இந்தப் பாடல்.

**3. யானை எருத்தம் பொலியக், குடைநிழற்கீழ்ச்**
**சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - மேலை**
**வினைஉவப்ப வேறாகி வீழ்வர், தாம்கொண்ட**
**மனையாளை மாற்றார் கொள.**

நால்வகைச் சேனைகளும் தம் பின்னாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்க, அவற்றின் தலைவராகப் பட்டத்து

யானையின் பிடரியின்மீது அமர்ந்து, அந்தப் பிடரே தாம் அமர்ந்ததனால் அழகுபெற்றுத் திகழுமாறு கொற்றக் குடையின் நிழலின்கீழ் வெற்றியுலா வந்த மன்னவர்களும், தம் முற்பிறப்பின் பழைய தீவினை வந்து அந்த வாழ்வை எல்லாம் அழித்துவிட, நிலைவேறுபட்டுப் போவார்கள். தாம் முறையாக மணந்து கொண்ட மனையாளையும் காத்துப் பேணும் வலுவற்று, மாற்றார் அவளைச் சிறைப்பிடித்துச் செல்லத், தாம் அதனையும் காணும் அந்த இழிநிலைமைக்கும் ஆளாவர்.

'அரசியல் செல்வாக்குக்கூட நிலையற்றது' என்று கூறுவது இது. வெற்றியுலா வந்தவன் நாட்டையும் இழந்து மனைவியையும் மாற்றார் சிறைப்பிடித்துச் செல்லப் பழியுடையவன் ஆதலும் நேரும் என்கிறது பாடல். எருத்தம் - கழுத்து. குடை - வெண் கொற்றக்குடை. சேனை - நால்வகைச் சேனை. மேலைவினை - முற்பிறவிகளிலே ஒழுகிய ஒழுக்கங் காரணமாக வந்து பற்றும் ஊழ்வினை. இதனை, 'ஏனைவினை' எனவும் பாடங் கொள்வர். அது உருத்து வந்து ஊட்டுமாதலால், 'உவப்ப' என்றனர். இதனால், அரசர்கள், தம் செல்வாக்குள்ள போதே அறஞ்செய்வதில் ஈடுபட வேண்டும் என்றனர். இதனால், அரசர்கள், தம் செல்வாக்குள்ள போதே அறஞ்செய்வதில் ஈடுபட வேண்டும் என்றனர். 'குடை நிழலமர்ந்து குஞ்சரம் ஊர்ந்தோர் நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர்' என்ற சான்றோர் வாக்கும் இதனை வற்புறுத்தும்.

4. **நின்றன நின்றன நில்லா என உணர்ந்து,**
**என்றின ஒன்றின வல்லே, செயின், செய்க**
**சென்றன சென்றன, வாழ்நாள்; செறுத்துடன்**
**வந்தது வந்தது, கூற்று!**

நாட்கள் செல்லச் செல்ல வாழ்நாளும் கழிந்து கொண்டே போகின்றது. கூற்றமும், உயிரைப் போக்கும் சினத்துடன் அணுக அணுக வந்து கொண்டே இருக்கின்றது. அதனால் நிலை பெற்றன நிலை பெற்றன என்று கருதும் செல்வங்கள் எல்லாம், நிலைத்து நிற்பன அல்ல என உணருங்கள். உணர்ந்து, உங்கள் மனம் பொருந்தின அறச்செயல்களை எல்லாம், உங்களால் கூடுமான வரையிலும் செய்யுங்கள். அதற்கு நாட்களைக் கடத்திக் கொண்டே போகாதீர்கள். விரைவிலேயே காலந்தாழ்த்தாமல் செய்யத் தொடங்கி விடுங்கள்.

செல்வ நிலையாமையை உணர்ந்து அறஞ் செய்ய வேண்டுமென நினைப்பது மட்டும் போதாது; அத்துடன் உடல்

நிலையாமையையும் உணர்ந்து அதனை விரைவிலேயே செய்யத் தொடங்கி விட வேண்டும் என்பது இது. வல்லே விரைவாக. செறுத்து-கோபித்து. உடன் - விரைவில். 'நாள் என ஒன்றுபோற் காட்டி உயிர் ஈறும் வாள்' எனக் காலக்கழிவைக் குறள் கூறுவதும் உணர்க. கூற்று-கூறுபடுத்துவது; உடலையும் உயிரையும் கூறுபடுத்தி வேறுவேறாகப் பிரிப்பது ஆதலால், கூற்று என்றனர்.

5. **என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்**
**பின்னாவது என்று பிடித்திரா, - முன்னே**
**கொடுத்தார் உயப்போவர் கோடில் தீக்கூற்றம்**
**தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.**

கூற்றம் மிகவும் கொடிய தன்மையினை உடையது. எனினும் தன் கடமையிலே ஒருபோதும் கோணுதல் இல்லாமல் நடப்பது. அது, உயிர்களைப் பற்றிப் பாசக்கயிற்றாற் கட்டி இழுத்துச் செல்லும். அவ்வழியிலே வெம்மையான வெவ்வழல் நரகம் குறுக்கிடும். ஏதாவது ஒரு பொருள் தம் கையிலே கிடைக்கப் பெற்றால், இது நமக்குப் பின் காலத்திலே உதவுவது என்று அதனை இறுகப் பற்றிக் கொண்டிராமல், பிறருக்கு முதலில் அதனைக் கொடுத்து மகிழ்ந்தவர்கள், அந்த வெம்மையான பாழ் நரகைத் தப்பிச் செல்வார்கள்; சென்று, சுவர்க்கமும் அடைவார்கள். செய்யாத பிறரோ, அந்த வெம்மையிலேயே வீழ்ந்து தவிப்பார்கள்.

தருமஞ் செய்வதால், மறுமையிலே நேரவிருக்கும் நன்மையைச் சொல்லுகிறது பாடல். தருமஞ் செய்தவர் சுவர்க்க போகம் அநுபவிப்பார்கள். அல்லாதோர் நரக வெம்மையிலே கிடந்து அழுந்துவார்கள் என்பது கருத்து. உயப்போதல்-தப்பிப் போதல். கோடுதல்-கோணுதல். தீ-கொடுமை. ஆறு-வழி. சுரம்-வெம்மையான பாழ்நிலம். கூற்றம், வெம்மை உடையது எனினும், செய்தவர்க்கு அவ்வவ் வினைகளின் பயன்களை அநுபவிக்கச் செய்வதில் நடுநிலை த்வறாதது. இது பற்றியே 'கோடில் தீக் கூற்றம்' என்றார்.

6. **இழைத்தநாள் எல்லை இகவா, பிழைத்தொரீஇக்,**
**கூற்றம் குதித்துஉய்ந்தார் ஈங்கில்லை;-ஆற்றப்**
**பெரும்பொருள் வைத்தீர் வழங்குமின், நாளைத்**
**'தழீஇந் தழீஇந்' தண்ணம் படும்.**

நாம் பிறக்கும்பொழுதே நம்முடைய வாழ்நாள் இவ்வளவுதான் என்பதும் வரையறுக்கப்பட்டு விடுகின்றது.

அப்படி விதிக்கப்பட்ட ஆயுட்காலத்தின் இறுதியானது ஒரு போதும் தன் எல்லையைக் கடந்து போவதே இல்லை. அந்த எல்லையைக் கடந்து நீங்கியவராகக் கூற்றத்தைக் கடந்துபோய் வாழ்ந்தவர்கள் என்பவர் எவருமே இந்த உலகத்தில் இதுவரை இல்லை. அதனால் மிகுதியான பெரும்பொருள்களை எல்லாம் வைத்திருப்பவர்களே அவற்றை எல்லாம் இப்போதே தருமத்திற்கு வழங்கத் தொடங்கி விடுங்கள். நாளைக்கே சாவை குறிக்கும் தண்ணுமை என்கிற சாக்காட்டுப் பறையானது, 'தழீஇம் தழீஇம்' என்று உங்களைக் குறித்தும் ஒலிக்கத் தொடங்கிவிட நேரிடலாம்.

இழைத்த நாள்-விதித்த நாள். எல்லை இகவா-கூடுதலும் குறைதலுமாகித் தன் எல்லையைக் கடவாது. பிழைத்து - தப்பி. ஒரீஇ - நீங்கி. ஆற்ற - மிகுதியான. குறித்து-கடந்துபோய். தண்ணம்-தண்ணுமை என்னும் சாக்காட்டுப் பறை. 'நாளைக்கே சாவு வந்தாலும் வந்து விடும்; அதனை யார் அறிவார்? அதனால் இப்போதே பொருள்களை வாரி வழங்குங்கள்; அறம் செய்து உய்யுங்கள்' என்பது கருத்து.

7. **தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா, வைகலும்**
**கூற்றம் அளந்து, நும் நாள்உண்ணும்; ஆற்ற**
**அறஞ்செய்து அருள்உடையீர் ஆகுமின் யாரும்**
**பிறந்தும், பிறவாதா ரில்.**

தன்னுடைய பேரொளியினால் விளக்கம் உடையதாகத் தோன்றுவது ஞாயிறு. அந்த ஞாயிற்றினையே நாழிகையாகக் கொண்டு, நாள்தோறும் அளந்து அளந்து கூற்றமானது உங்களுடைய வாழ்நாட்களை உண்டு கொண்டேயிருக்கும். அதனால், மிகுதியான அறங்களைச் செய்யுங்கள்; எவ்வுயிரிடத்தும் அருள் உடையவராக ஆகுங்கள்; எப்படிப் பட்டவரானாலும், அப்படி அறஞ்செய்து அருள் உடையவராக ஆகாமற் போனால்,* மனிதராகப் பிறந்தும் பிறவாதவராகவே சேர்த்துக் கருதப்படுவார்கள்.

'மனிதப் பிறவி பெற்றதே தருமஞ் செய்வதற்கும், அருள் உடையவராவதற்குந்தான். அதனை மறந்தபோது அவர் மனிதராகப் பிறந்ததனால் என்ன பயன்? அவர் பிறவாத வராகவே எண்ணப்படுவர்' என்பது கருத்து. தோற்றம்-தோன்றுதலும் ஆம். வைகலும்-நாள்தோறும். சூரியன் தோன்றி மறைதலினாலே, நாள் தோன்றி அழிய, அத்துடன் வாழ்நாளும் கழிந்துகொண்டே போவதனை இப்படிக் கூறினார்.

8. **'செல்வர்யாம்' என்று, தாம் செல்வுழி எண்ணாத**
**புல்லறி வாளர் பெருஞ்செல்வம்-எல்லில்**
**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல் தோன்றி,**
**மருங்கறக் கெட்டு விடும்.**

*'யாங்கள் செல்வர்கள்' என்று அகங்காரம் கொண்டவர்களாகத் தாம் இறந்தபின் செல்லவேண்டிய இடத்தைப் பற்றி எண்ணாதவர்கள் எல்லாரும், அற்பமான புத்தியினை உடையவர்கள். அப்படிப் பட்டவர்களுடைய பெருஞ்செல்வம் எல்லாம், இரவிலே கார்மேகமானது வாய்திறப்பதனால் தோன்றுகின்ற மின்னலைப்போலச் சிறிதுபொழுதே ஒளியுடன் தோன்றிப் பின்னர் இருந்த இடமே தெரியாமல் முற்றிலும் அழிந்துபோய்விடும்.*

*'செல்வச் செருக்கினாலே அறத்தின் பயனை மதியாத அற்பர்களுடைய செல்வம் விரைவிலேயே அழிந்து போகும்' என்பது கருத்து. செல்வுழி-செல்லும் இடம்; வீடு. புல்லறிவு-அற்பமான அறிவு. கருங்கொண்மூ-கார் மேகம்.*

9. **உண்ணான், ஒளிநிறான், ஓங்குபுகழ் செய்யான்,**
**துன்னருங் கேளிர் துயர்களையான், - கொன்னே**
**வழங்கான், பொருள் காத் திருப்பானேல், 'அஆ**
**இழந்தான்' என் றெண்ணப் படும்.**

*தானும் வயிறார நன்றாகச் சாப்பிட மாட்டான்; தன்னிடத்தே ஒளியானது நிலைபெற்றிருக்குமாறு தன்னை ஆடையணிகளாற் புனைந்தும் இன்புற மாட்டான்; வளரும்படியான புகழைத் தரும் செய்கைகளையும் செய்ய மாட்டான்; சேர்வதற்கு அருமையான உறவினர்களுடைய துயரங்களையும் போக்கமாட்டான். தன்னை யாசித்து வந்தவர்களுக்கு வழங்கவும் மாட்டான்; இப்படி, ஒருவன் எதையும் செய்யாமல் வீணாகப் பொருளையே பெரிதென்று பூதம் காப்பதுபோலக் காத்துக் கொண்டிருப்பானானால், ஐயோ! அந்தப் பொருளை அவன் இழந்துவிட்டான் என்றே சான்றோரால் எண்ணப்படுவான்.*

*செல்வத்தின் பயனை அவன் அநுபவிக்காததனால், அது இருந்தும் அவனளவில் இல்லாததாகி விடுகிறது. ஒளி-விளக்கம். கொன்னே-வீணே. துன் அரும்-சேர்தற்கு அரிய.*

10. உடாஅதும், உண்ணாதும், தம் உடம்பு செற்றும்,
கெடாஅத நல்லறமும் செய்யார்,-கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர்; வான்தோய் மலைநாட!
உய்த்தீட்டும் தேனீக் கரி.

வானளாவிய மலைமுடிகளையுடைய நாட்டிற்கு உரிய தலைவனே தாம் நன்றாக உடுத்து அநுபவிக்காமலும், வயிறார உண்டு பயனடையாமலும், தம் உடலினை வருத்திக் கொண்டும், என்றும் அழிவில்லாத நல்ல தருமங்களைச் செய்யாதவர்களாகியும், யாசகர்களுக்குக் கொடாதவர்களாகியும், பொருளைச் சேர்த்து வைப்பவர்கள் இருக்கிறார்களே அவர்கள், உறுதியாக அதனை ஒருநாள் இழந்தே விடுவார்கள். இதற்கு பற்பல மலர்களின்றும் தேனைக் கொண்டு வந்து கூட்டிலே சேர்த்துவைக்கும் தேனீயே நல்ல சான்றாகும்.

'தேன் கூட்டினின்றும் தேனைப் பிறர் எடுத்துக் கொள்வதுபோல, அவனுடைய அவ்வளவு பொருளையும் எவரேனும் ஒரு நாள் கவர்ந்து கொண்டு போய்விடுவர்' என்பது கருத்து. 'தம் உடம்பு செற்றும் கெடாத நல்லறம்' என்பது, தம் உடம்பு அழியினும் தாம் அழிவில்லாது நிலைத்திருக்கும் நல்ல அறச் செயல்கள். உய்த்தல்-கொண்டு வருதல். ஈட்டல்-சம்பாதித்தல்.

## 2. இளமை நிலையாமை

இளமை துடிப்பான பருவம். உடலின் வனப்பும் கட்டும் பல்வகையான விருப்பங்களைத் தூண்டிவிடுகின்றன. அந்த வேட்கைக்குள் கட்டுப்பட்டு, அதன்கண் ஈடுபடுவோர் பலர். அவர்களுடைய ஆர்வங்களும் அநுபவங்களும் நிலையற்றன என்று, எவரேனும் சொல்லமுடியுமோ? முடியாது.

ஆனால், இளமைப் பருவத்தின் ஆசாபாசங்களையும் கட்டுப்படுத்தி நல்லொழுக்க நெறியில் வாழ்வதே சிறப்பு உடைமையாகும். இளமையின் நிலையாமையை உணர்ந்து ஒழுக்கமுடன் ஆசைகளைக் கட்டுப்படுத்தி வாழ்தல் வேண்டும்.

இதனை வலியுறுத்துவார், இளமையின் நிலையாமையான இயல்பினையும், அதன் பருவக் கோளாறுகளிலே ஈடுபடாதவர்கள், உடலையும் உள்ளத்தினையும் கட்டுப்படுத்தி உறுதியாக வாழ்ந்தவர்கள், அடையும் நிலையான இன்பங்களையும் வகுத்துக் கூறுகின்றார், இந்தப் பகுதியில்.

'செல்வத்தால் செருக்கடைந்து கெடாமல் அறவழிகளிலே ஈடுபடுதல் வேண்டு'மென அதன் நிலையாமையை முதலில் வைத்தவர், அடுத்து, 'உடலின் வலிமையால் கட்டற்று வாழ்தல் கூடாது' என, இதனை அடுத்து வைத்துள்ளனர்.

11. **'நரைவரும்' என்றெண்ணி, நல்லறி வாளர்**
**குழவி யிடத்தே துறந்தார், -புரைதீரா,**
**மன்னா இளமை மகிழ்ந்தாரே, கோலூன்றி,**
**இன்னாங்கு எழுந்திருப் பார்.**

நல்ல அறிவாளர்கள், பின்னர் தமக்கு நரைவரும் என்பதை எண்ணியவர்கள். அதனால் அவர்கள் இளம் பருவத்திலேயே உடலின் வளத்தைக் குறைக்கும் ஆசாபாசங்களை எல்லாம் துறந்துவிட்டார்கள். இளமை என்றும் குற்றங்களினின்றும் தீராதது; நிலையில்லாத தன்மையினையும் உடையது. அதனை உணராமல், அந்தப் பருவத்தின் களிப்பில் அதிகமாக ஈடுபட்டவர்களே, இப்போது கோல் ஊன்றி மிகவும் வருத்தத்துடன் எழுந்திருக்கின்றனர்.

நல்ல 'ிவு-பழம் பிறவிகளிலே செய்த நற்செயல்களினாலே வந்து வாய்க்கும் அறிவு. குழவி-குழவிப் பருவம். துறந்தார்-பற்றுக்களைத் துறந்துவிட்டவர். புரை-குற்றம். மன்னா-நிலையாத. இளமையில் துறந்தவர் நரைதிரை மூப்பின்றி வலுவுடையராய் இருப்பதும், துறவாது சிற்றின்பங்களிலே திளைத்தவர் தளர்வுற்று நலிவதும் கூறி, இளமையின் நிலையாமையை வற்புறுத்துகிறது இந்தப் பாடல். 'குழவி' சிறு பருவம் குறித்தது.

12. **நட்புநார் அற்றன; நல்லாரும் அஃகினார்;**
**அற்புத் தளையும் அவிழ்ந்தன; - உட்காணாய்**
**வாழ்தலின், ஊதியம் என்னுண்டாம்? வந்ததே,**
**ஆழ்கலத்து என்ன கலி'.**

'நட்பு' என்று ஒருவரை யொருர் பிணித்திருந்த பிணிப்புக்களும் அற்றுப் போயின. மனைவிமாரும் தம் அன்பின் அளவிலே குறைந்தவராய் விட்டார்கள். உற்றார் உறவினர் என்று ஒருவரோடொருவர் கொண்டிருந்த பிணிப்பும் கட்டவிழ்ந்து போய்விட்டது. இவை எல்லாவற்றையும் உள்ளத்திலே எண்ணிப் பார்ப்பாயாக. இப்படி வாழ்கின்றதனாலே உண்டாகும் பயன்தான் என்ன? கடலிலே அமிழ்ந்து கொண்டிருக்கின்ற மரக்கலத்தைப் போன்ற துன்பமும்தான், உனக்கு இதோ வந்து விட்டதே!

*இளமையிலே சிற்றின்ப வேட்கையிலே முழுகியிருந்த ஒருவனின் தளர்ச்சியுற்ற முதுமை நிலைமையைக் குறித்துச் சொன்னது இது. இதனால், இளமையின் இன்பம் எல்லாம் நிலையில்லாதன என்பது உணர்த்தப்பட்டது. அஃகினார்-குறைந்தார். உட்காணாய் - உள்ளத்து உணராய். கலம்-மரக்கலம். நல்லார்-மகளிர். கலி-துன்பம்; 'கலுழ்' எனவும் பாடம்.*

13. **சொல்தளர்ந்து, கோல்ஊன்றிச், சோர்ந்த நடையினராய்ப்,
பல்கழன்று, பண்டம் பழிகாறும்-இல்செறிந்து,
காம நெறிபடரும் கண்ணினார்க்கு இல்லையே
ஏம நெறிபடரும் ஆறு.**

*இல்வாழ்க்கை என்னும் வாழ்விலே மிகவும் நெருக்கம் உடையவராயிருந்து, ஆசையின் வழியிலே செல்லுகின்ற அறிவு உடையவர்களுக்குத், தம் உயிருக்குப் பேரின்பத்தைத் தருகின்ற அரண் போன்ற துறவு நெறியிலே மனஞ் செலுத்துவதற்கான வகையே இல்லாமற்போய் விடுகின்றது. சொற்கள் தளர்வுற்றுப் போய், கையிலே தண்டினை ஊன்றிக் கொண்டு, தளர்ந்த நடையினை உடையவர்களாய்ப் பற்கள் அனைத்தும் கழன்று வீழ்ந்துபோக, அவர்களுக்கு உரிமையான உடலும் பழிக்கப்பட நேர்வதுதான், அவர்களுக்கு இறுதியிலே உண்டாவதாகும்.*

*சிற்றின்பத்திலே ஈடுபட்டு, உடலைத் தளரச் செய்து நலிவடையாமல், இளமையின் நிலையாமையை உணர்ந்து, அப்போதே காமநெறியை வெறுத்து, உயிருக்கு ஏமமாகிய துறவுநெறியிலே ஈடுபடுக என்பது கருத்து. பண்டம்-உடலாகிய பண்டம். பழிகாறும்-பழிப்பையடையும். கண்-அறிவு. ஏமம்-அரண்; உயிர்க்கு உறுதி தரும் பேரின்பம்.*

14. **தாழாத், தளராத் தலைநடுங்காத், தண்டூன்றா,
வீழா இறக்கும் இவள்மாட்டும்,-காழிலா
மம்மர்கொள் மாந்தர்க்கு அணங்காகும் தன்கைக்கோல்
அம்மனைக்கோல் ஆகிய ஞான்று.**

*மூப்பினாலே முதுகு கூனிப்போய், உடல் தளர்ச்சியுற்றுத் தலை நடுங்கிக் கொண்டிருக்கத், தண்டினை ஊன்றியவளாகத் தள்ளாடி விழுந்து விழுந்து செல்கின்றாள் இந்தக் கிழவி. உறுதியில்லாத மோகங்கொண்டு திரிகின்ற மாந்தர்களுக்கு, இவளுடைய கையிலிருக்கும் ஊன்று கோலானது, இவள் தாயின் கைக் கோலாக இருந்த காலத்திலே, இவளிடத்தும் காமத்தால் மிக்க வருத்தம் உண்டாகியிருக்கும் அல்லவோ?*

'இப்போது வெறுக்கப்படத்தக்கவளான இவளே முன்னர் ஆசை எழச் செய்பவளாயிருந்தாளே! இதனை உணர்ந்தாவது இளமையின் நிலையாமையை அறிந்து துறவு நிலையிலே மனங்கொள்க' என்பது கருத்து. இறக்கும்-செல்லும். காழ்-உறுதி. மம்மர் - மோக மயக்கம். அணங்கு-தன் அழகால் பிறரை வருத்திக் கொல்லும் பெண் தெய்வம்.

15. **எனக்குத் தாய்ஆகியாள் என்னையீங்கு இட்டுத்,**
**தனக்குத்தாய் நாடியே சென்றாள்;-தனக்குத்தாய்**
**ஆகி யவளும் அதுவானால், தாய்த்தாய்க் கொண்டு**
**ஏகும் அளித்திவ் வுலகு.**

எனக்குத் தாயாக இருந்தவள் என்னை இங்கே விட்டு விட்டுத், தனக்கு வேறொரு தாயை நாடி அடுத்த பிறவி எடுப்பதற்காகச் சென்று விட்டாள். அவளுக்குத் தாயாக இருந்தவளும் அப்படியே அவளை விட்டுவிட்டுப் போய் விட்டாள். இதுவே இவ்வுலகின் இயல்பானால், தாய் மற்றொரு தாயைத் தேடிக்கொண்டே சென்று கொண்டிருக்கும்படியான ஏழைமையை உடையதுதான் இவ்வுலகமாகும் போலும்.

ஒருத்தி, இளமை மாறி முதுமை எய்திச் சாவை ஏற்று, இன்னொருத்தி வயிற்றிலே சென்று பிறக்கிறாள்: அவளும் அப்படியே. இப்படிச் சாவதும் பிறப்பதுமாகப் போய்க் கொண்டே இருக்கும் இந்த உலகத்திலே இளமை என்பது ஒரு நிலையானதோ? என்பது கருத்து. அளித்து - ஏழைமை உடையது.

16. **வெறியார் வெங்களத்து வேன்மகன் பாணி**
**முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க**
**மறிகுளகு உண்டன்ன மன்னா மகிழ்ச்சி**
**அறிவுடை யாளர்கண் இல்.**

வெறியாட்டமானது ஆடுதல் நிகழ்கின்ற கொடிய பலியிடுமிடத்திலே வேலை ஏந்தி வெறியாடுவோனாகிய வேன்மகனின் கையிலேயுள்ள, தளிர்கள் நிறைந்த நறுமண முடைய பூமாலையானது தன் முன்னே விளங்கிக் கொண்டிருக்கக் கண்ட ஆட்டுக் குட்டியானது, அந்தத் தளிரை உண்பது போன்ற நிலையில்லாத மகிழ்ச்சியினை உடையது இளமைப் பருவத்து இன்பங்கள் எல்லாம். அத்தகைய மகிழ்ச்சி அறிவுடையவர்களிடத்திலே ஒருபோதும் இருப்பதில்லை.

*'அடுத்த நொடியிலே சாவு வருவதை அறியாமல் மறிதளிர் உண்டு மகிழ்வது போலவே, அடுத்த நொடியிலே சாவு வருதலும் கூடும் என்பதையறிந்து அறவழியிலே செல்லாமல் சிற்றின்பங்களிலே ஈடுபடுவர் அறியாதார்' என்பது கருத்து. வெறியயர்தல் - ஆவேசித்து ஆடுதல். வேன்மகன் - பூசாரி. பாணி - கையில். முறி - தளிர். தயங்க - அசைந்து கொண்டிருக்க. குளகு - தளிர்.*

**17. பனிபடு சோலைப் பயன்மரம் எல்லாம்**
**கனியுதிர்ந்து வீழ்ந்தன்று, இளமை; -'நனிபெரிதும்**
**வேற்கண்ணள்!' என்றிவளை வெஃகன்மின்; மற்றிவளும்**
**கோற்கண்ணள் ஆகும், குனிந்து.**

*குளிர்ச்சி பொருந்திய சோலைகளிலேயுள்ள, பயனைத் தருகின்ற மரங்கள் எல்லாம், கனிகள் உதிர்ந்து வீழ்ந்தபின் தோன்றும் பரிதாபமான நிலையினைப் போன்றதுதான் வாழ்வு. 'மிகவும் சிறப்பான வேல்போன்ற கண்களை உடையவளா யிருக்கின்றாள்' என்று சொல்லி இவளை விரும்பாதீர்கள். இவளும், தன் உடல் குறுகிக், கண் பார்வை இழந்து, தன் வழி தெரிவதற்குத் தன் கைக்கோலையே கண்ணாகக் கொள்ள வேண்டிய முதியவளாக ஆகிவிடுபவளே!*

*அனைவரும் விரும்பும் வண்ணம் கனிகளோடு விளங்கிய சோலை மரங்கள், அக்கனிகள் வீழ்ந்து போன பின்னர் ஒருவராலும் விரும்பப் படாதவாறு போல, இளமை கழிந்தபின் எந்தப் பெண்ணுமே எவராலும் விரும்பப்படாள். அதனால், அப்படிப்பட்ட நிலையற்ற இளமையை அறிவுடையோர் விரும்பார்கள் என்பது கருத்து. பனிபடு - குளிர்ச்சி பொருந்திய. நனி - மிக்க. வெஃகுதல் - விரும்புதல். குனிந்து - கூனிக் குறுகி.*

**18. பருவம் எனைத்துள? பல்லின்பால் ஏனை?**
**இருசிகையும் உண்டீரோ? என்று - வரிசையால்**
**உண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோள்**
**எண்ணார், அறிவுடையார்.**

*'பிராயம் எவ்வளவு ஆகியுள்ளது! பல்லின் தன்மை எப்படியுள்ளது? இரண்டு கவளமும் உண்டு வீட்டீரோ?' என்று வயது முதிர்ச்சியினை முறைமையால் உள்ளத்திலே எண்ணி ஆராய்தலைச் செய்யப்படுவதனால், தேகத்தின் வலிமையைப் பற்றி எண்ணி, அறிவு உடையவர்கள் அளவுக்குமீறி மகிழ மாட்டார்கள்.*

*'காலந்தோறும் இப்படி விசாரிக்கும் முறை மாறுதலை உடையது உடலின் வலிமை. அதனால், ஆன்றோர் அதனை நிலையானதென நினையாது உயிர்க்கு உறுதி தேடுவதிலேயே மனஞ் செலுத்துவார்கள்' என்பது கருத்து. பருவம்-பிராயம். வரிசை - முறைமை; உபசாரமும் ஆம். சிகை - கவளம். கோள் - வலிமை.*

**19. 'மற்றறிவாம் நல்வினை, யாம் இளையம் என்னாது**
**கைத்துண்டாம் போழ்தே, கரவாது, அறஞ்செய்ம்மின்!**
**முற்றி இருந்த கனியொழியத், தீவளியால்**
**நற்காய் உதிர்தலும் உண்டு!**

*மரங்களிலே முதிர்ச்சியுற்றிருந்த கனிகள் மட்டுமே அல்லாமல், நல்ல காய்களும் கடுங்காற்றினால் உதிர்ந்து போதல் நிகழ்வதும் உண்டு. அதுபோலவே, முதியவர்கள் மட்டு மல்லாமல் இளமைப் பருவத்தினரும் மாண்டு போதல் நிகழ்வதும் ஏற்படலாம். அதனால், நல்ல செயல்களை எல்லாம் நம்முடைய பின்காலத்தே அறிந்து செய்வோம்; இப்போது யாம் இளையோம்தாமே என்று, எவரும் கருத வேண்டாம். கையில் பொருள் வந்து கிடைத்த பொழுதிலேயே உள்ளத்தில் கரவு ஏதுமின்றி அறஞ் செய்வதிலே ஈடுபடுங்கள்: அதுதான் சிறந்தது.*

*'இளமை அநுபவிக்கும் வயது; எல்லாம் வயதானபின் தருமஞ் செய்யலாம்' என்று நினையாதீர்கள். 'இளமை நிலையற்றது என்பதை உணர்ந்து உடனே தருமஞ் செய்வதிலே ஈடுபடுங்கள்' என்பது கருத்து. கைத்து உண்டாம் போழ்து - கையிலே செல்வம் வந்து உண்டான பொழுது. கரவாது - ஒழியாது. தீவளி - கடுங்காற்று; புயல். நற்காய் - நல்ல காய்.*

**20. ஆட்பார்த்து உழலும் அருளில்கூற்று உண்மையால்**
**தோட்கோப்புக் காலத்தாற் கொண்டு உய்மின்;**
**பீட்பிதுக்கிப்**
**பிள்ளையைத் தாயலறக் கோடலான், மற்றதன்**
**கள்ளங் கடைப்பிடித்தல் நன்று.**

*ஆயுள் முடிந்துபோன ஆட்களைத் தேடிக்கொண்டே திரிகின்ற இயல்பினையுடையது அருள் அற்ற கூற்று. அது உண்மையாதலால், நல்வினையாகிய கட்டுச்சோற்று மூட்டையைத் தேடிக்கொள்ளும் காலத்தோடேயே தேடி வைத்துக் கொண்டு பிழைத்துக் கொள்ளுங்கள். கருப் பையிலே*

இருக்கும் கருவை வெளிப்படச் செய்து, தாயானவள் அலறித் துடிக்கப் பிள்ளையைக் கொண்டு போகின்றதனால், அந்தக் கூற்றத்தின் வஞ்சனையை மறவாமல், உறுதியாக அறிந்து தெளிவுகொள்ளுதலே மிகவும் நன்மையாகும்.

'எமன் எப்போது வருவான்?' என்று எவராலுமே சொல்ல முடியாது. தாய் அலறப் பச்சிளங் குழந்தையையும் கொண்டு போகும் கருணையற்றவன் அவன். அதனை உணர்ந்து, காலம் தாழ்த்தாமல் தருமஞ் செய்து நல்வினைகளைத் தேடிக் கொள்ளுங்கள் என்பது கருத்து. தோட் கோப்பு-தோளிலே கோத்துக் கொண்டு செல்லும் கட்டுச் சோற்று மூட்டை. வழியிடையிலே அது பசி நீக்குவதுபோல், நல்வினைகளும் வறுமைக்குத் துணை செய்யும் என்க.

## 3. யாக்கை நிலையாமை

இளமை நிலையுள்ளது அன்று. அது நிலையுள்ளது என்று கருதி நல்ல வினைகளைச் செய்வதிலே ஈடுபடாமல், சிற்றின்பங்களிலே ஈடுபடுதல் கூடாது என்றது முன் அதிகாரம். இந்த அதிகாரம், இளமை மட்டுமன்று யாக்கையே நிலையற்ற ஒன்றுதான் என்பதைக் கூறி அதனால், நிலையுடையதான உயிரின் நன்மையைக் கருதி, அனைவரும் அறநெறியிலே ஈடுபடுதல் வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

எலும்பு, தசை, தோல் முதலிய எட்டு வகையான தாதுக்களால் யாக்கப்பட்டது உடல். யாத்தல்-கட்டுதல். அதனால், அது யாக்கை எனப்பட்டது. இடத்து நிகழ்கின்ற பொருளான இளமைப் பருவத்தின் நிலையாமை கூறிய பின்னர், அடுத்து இடமாகிய யாக்கையின் நிலையாமையை உணர்த்துகின்றனர்.

உடல், உயிரின் நன்மைக்கான செயல்களிலே ஈடுபடுவதற்கு உதவும் கருவியாகவே அமைந்தது. அதனால், நிலையாமையை உணர்ந்து உயிரின்பத்திலே நாட்டஞ் செலுத்தவேண்டும் என்பது கருத்து.

21. **'மலைமிசைத் தோன்றும் மதியம்போல்' யானைத்**
**தலைமிசைக் கொண்ட குடையர்,- நிலமிசைத்**
**துஞ்சினார் என்றெடுத்துத் தூற்றப்பட் டாரல்லால்**
**எஞ்சினார் இவ்வுலகத் தில்.**

*மலையின் மேலாகத் தோன்றும் முழுநிலவினைப் போலத் தமது பட்டத்து யானையின் தலையின் மேலாக எடுத்துக் கொள்ளப்பட்ட வெண்கொற்றக் குடையினராக விளங்குபவர் பேரரசர்கள். அவர்களும் இந்த உலகத்திலே இறந்தவர்கள் என்று பலரும் அறியக் காட்டி இகழப் பட்டவர்களே யாவர். அஃதன்றி, அந்தச் சாவாகிய இகழ்ச்சிக்குத் தப்பினவரென்று எவருமே இவ்வுலகில் இதுவரை இல்லை.*

*எவ்வகையான வசதிகளும் உடலைப் பேணுவதற்கு உடையவரான அரசரும் இறப்பர். எனவே, ஏனையோரும் இறப்பர் என்று சொல்லி, யாக்கை நிலையாமை கூறப்பட்டது. எஞ்சினார்-சாவுக்குத் தப்பி நிலையான வாழ்வு பெற்றவர்.*

22. **வாழ்நாட்கு அலகா வயங்குஒளி மண்டிலம்**
**வீழ்நாட் படாஅது எழுதலால், - வாழ்நாள்**
**உலவாமுன் ஒப்புரவு ஆற்றுமின்; யாரும்**
**நிலவார், நிலமிசை மேல்.**

*உங்களுடைய ஆயுள் நாட்களுக்குக் கணக்கிடுவது போல, ஒளி விளக்கமுடைய ஞாயிற்று மண்டிலம், உதித்த லில்லாத வீழ்நாள் ஏற்படாதபடி தவறாது உதயமாகின்றது. அதனால், வாழ்நாள் அழிந்து போவதற்கு முன்பாகவே உங்கள் கடமையான அறங்களைச் செய்து நல்வாழ்வுக்கு வழிதேடுங்கள். இந்த உலகத்தின்மேல், எத்தகையவரேயானாலும் நிலையாக நிலைபெற்றிருக்க மாட்டார்கள் என்பதை உணருங்கள்.*

*நாளைக்கென்று நீங்கள் ஒதுக்கிக் கொண்டே போனால், நாள் உங்களுக்காகக் காத்திராது; அது போய்க்கொண்டே இருக்கும்; சாவும் எதிர்பாராது வந்தாலும் வந்துவிடும். அதனால், அறத்தை உடனே செய்வீர்களாக என்பது இது. அலகு - கூறுபடுத்திக் கணக்கிடுதல். வயங்குதல்-விளங்குதல். படா அது - தவறாது. ஒப்புரவு என்பதனைத் துறவறம் எனக்கொண்டால் நிலமிசை என்பதை வீட்டுலகம் என்க. வாழ்நாள் கழியாமுன் துறவறம் மேற்கொண்டு நிலையான இன்பம் பெறுக' என்பது கருத்து.*

23. **'மன்றம் கறங்க மணப்பறை யாயின,**
**அன்றவர்க் காங்கே, பிணப்பறையாய்ப், - பின்றை**
**ஒலித்தலும் உண்டாம்' என்று, உய்ந்துபோம் ஆறே**
**வலிக்குமாம், மாண்டார் மனம்.**

மன்றம் முழுவதும் முழங்க மணப்பாறையாக விளங்கியவை, அன்று அவருக்கு அவ்விடத்திலே சாவுப் பறையாகப் பின்னர் ஒலித்தலும்கூட இவ்வுலகிலே நேர்வது தான். இந்த உண்மையை உணர்ந்து மாட்சிமைப்பட்டவர் களுடைய மனமானது, தாம் பிறவித் துயரினின்றும் தப்பிப் போகும்படியான வழியையே உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கும்.

'திருமண நாளிலேயே வீழ்ந்துபோகும் நிலையாமையினை உடையது உடம்பு என்பதனை உணர்ந்து, உலக இன்பங்களிலே மனஞ்செலுத்தாமல், உயிர் உய்வதற்குரிய வழியான அறநெறி களிலே மனஞ் செலுத்துவர் சான்றோர்' என்பது கருத்து. மன்றம் - இங்கே திருமணத்திற்காகக் கூடியிருக்கும் அவை. கறங்க-ஒலிக்க. மாண்டார் மனம் அப்படி மதிக்கும் என்றதால், அங்ஙனம் மதியாதார் பேதைமையுடையார் என்பதும் கூறப்பட்டது.

**24. சென்றே எறிய ஒருகால்; சிறுவரை**
**நின்றே எறிப, பறையினை; - நன்றேகாண்**
**முக்காலைக் கொட்டினுள், மூடித், தீக் கொண் டெழுவர்**
**செத்தாரைச் சாவார் சுமந்து!**

ஒருவர் இறந்துபோன இடத்திற்குச் சென்று ஒருமுறை கொட்டுவார்கள்; சிறிது நேரம் சும்மாவிருந்து மீண்டும் இரண்டாவது முறை கொட்டுவார்கள்; மூன்றாவது தடவை பறையினைக் கொட்டுவதற்குள் செத்துப் போனவர்களை இனிச் சாகப்போகிறவர்கள், துணியால் மூடித் தூக்கிச் சுமந்து கொண்டு, உயிரற்ற அந்த உடலை எரியிடுவதற்கு உரிய நெருப்பையும் எடுத்துக்கொண்டு கிளம்பிப் போவார்கள். இதுதான், யாக்கையின் நிலைமை, இதனை நன்றாக எண்ணிப் பாருங்கள்.

'எண்ணிப் பார்த்து, உடல் அவத்தைகளிலே ஈடுபட்டுச் சீரழியாமல், நற்கதியடைவதிலே நாட்டங் கொண்டவராக, அதற்குரிய மார்க்கத்திலே மனத்தைச் செலுத்துங்கள்' என்பது கருத்து.

**25. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென்று அலறப்**
**பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டும்,-மணங்**
**கொண்டீண்டு**
**'உண்டுண்டுண்டு' என்னும் உணர்வினாற் சாற்றுமே**
**'டொண் டொண் டொண்' என்னும் பறை.**

உறவின் முறையார் எல்லாரும் கூட்டமாகக் கூடிக் கொண்டு கலீரென்று பெருங்குரலிலே கூவி அழப், பிணத்தைத் தூக்கிக் கொண்டு போய்ச் சுடுகாட்டிலே சேர்ப்பவர்களைக் கண்டுள்ளோம். அப்படிப் பார்த்திருந்தும், திருமணம் செய்து கொண்டு, இவ்வுலகத்திலே உறுதியாக இன்பம் உண்டு உண்டு என்று சொல்லும் மயக்கமான அறிவுள்ளவனை என்ன சொல்வது? அவனைக் குறித்துத், 'தொண் தொண்' என ஒலிக்கும் சாக்காட்டுப் பறைதான் அவனுக்கு யாக்கையின் நிலையாமையைத் தெரிவிக்கும் போலும்!

'மணவாழ்வின் இன்பத்திலே திளைத்திருப்பவனுக்கு, ஒலிக்கும் சாக்காட்டுப் பறைதான், உன்னுடலுக்கும் இதுதான் கதியென யாக்கை நிலையாமையை எடுத்துச் சொல்லும்' என்பது கருத்து. கணம்-கூட்டம். காடு-சுடுகாடு.

**26. நார்த்தொடுத்து ஈர்க்கிலென்? நன்றாய்ந்து அடக்கிலென்?**
**பார்த்துழிப் பெய்யிலென்? பல்லோர் பறிக்கிலென்?**
**தோற்பையுள் நின்று, தொழிலறச் செய்தூட்டும்**
**கூத்தன் புறப்பட்டக் கால்.**

தோலாற் பொதிந்திருக்கின்ற உடலாகிய பையினுள்ளேயிருந்து, தான் செய்யவேண்டுமென விதிக்கப்பட்ட தொழில்களை முழுவதும் செய்து, தன் உடலை அநுபவிக்கச் செய்கின்ற கூத்தாடியாகிய உயிரானது, அந்த உடலைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்ட தென்றால், அதன் பின், அந்த உடலை நாரால் தொடுத்து இழுத்துச் சென்றால் என்ன? நன்றாக ஆராய்ந்து அடக்கஞ் செய்தால்தான் என்ன? கண்டவிடத்திலே போட்டால்தான் என்ன? பலரும் பழித்தால்தான் என்ன? எதுவும் அந்த உடலைப் பற்றுவதே இல்லை.

உயிர்தான் உடலுக்கு அநுபவமாகிய இன்பத்தையும் துன்பத்தையும் தருவது. அது போய்விட்டபின் உடல் உணர்வற்றதாகிவிடும். அதைக்குறித்து ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டங்கள்? இப்படி அதன் நிலையாமையைக் கூறுவது இது. அடக்கில் - அடக்கஞ் செய்தல். கூத்தன் - நொடிக்கொரு முறை உடலைத் தன்னிச்சை போலெல்லாம் ஆட்டுவிப்பதால், பாவையினை ஆட்டுவிக்கும் கூத்தனாக உயிர் புனைந்து கூறப்பட்டது.

**27. 'படுமழை மொக்குளிற் பன்காலும் தோன்றிக்**
**கெடுமிதோர் யாக்கை ' யென் றெண்ணித்,-'தடுமாற்றம்**
**தீர்ப்போம் யாம்' என்றுணருந் திண்ணறி வாளரை**
**நேர்ப்பார் யார், நீணிலத்தின் மேல்?**

*வீழ்கின்ற மழைநீரிலே தோன்றும் குமிழிகள் போலப் பன்முறையும் தோன்றித் தோன்றி அழிகின்ற நிலையாமையை உடையது இந்த உடல். இப்படி எண்ணி, இப்பிறவியிலே குறுக்கிடும் தடுமாற்றங்களை யாம் போக்கிக் கொள்வோம் என்று அறிந்து உணர்கின்ற உறுதியான அறிவுடையவர்களை ஒத்திருப்பவர்கள், இந்தப் பெரிய உலகத்தின்மேல் வேறு யாவர் இருக்கின்றார்கள்?*

*மொக்குள்-குமிழி; முகை போல்வது. தடுமாற்றம் - மனமாயையால் வரும் தடுமாற்றங்கள். திண்ணறிவு- திண்மையான அறிவு. நீணிலம்-பரந்த உலகம். அவரை ஒப்பவர் எவருமில்லை என்றதால், அத்தகையவர் அல்லாதாரின் புன்மையும் உணரப்படும்.*

**28. யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர், தாம்பெற்ற**
**யாக்கையால் ஆய பயன்கொள்க;-யாக்கை**
**மலையாடும் மஞ்சுபோல் தோன்றி, மற்றாங்கே**
**நிலையாது நீத்து விடும்.**

*உடலானது, மலைமுகடுகளிலே தவழ்ந்து செல்லும் வெண்மேகம் போலத் தோன்றி, அவ்விடத்திலே நிலைத் திராமல், அதனைக் கைவிட்டுப் போய்விடும் தன்மையது. அது போலவே, உயிரும் உடற்கூடெடுத்துத் தோன்றிப் பின் அதனைக் கைவிட்டுப் போய்விடும் இயல்பினை உடையது. அதனால் உடலினை உறுதி உடையதாகப் பெற்றவர்கள், தாம் பெற்ற அந்த உடலால் ஆன நல்ல பயன்களை எல்லாம் உடனேயே நிறைவேற்றிக் கொள்வார்களாக!*

*'உடல் தளர்ந்து உயிர் போய்விடுவதற்கு முன்பே, நற்செயல்களிலே ஈடுபட்டு உயிருக்கு உறுதிதேடிக் கொள்ள வேண்டும்' என்பது கருத்து. மஞ்சு -வெண்மேகம். யாப்பு- வலிமை. ஆய பயன்-பெறுவதற்குரிய சிறந்த பயன். நீத்து விடும்- கைவிட்டுப் போய்விடும்.*

**29. 'புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை' என்றெண்ணி,**
**இன்னினியே செய்க அறவினை- 'இன்னினியே**

**நின்றான், இருந்தான், கிடந்தான், தன் கேள் அலறச்**
**சென்றான்' எனப்படுத லான்!**

*இப்பொழுதுதான் ஒருவன் நின்றுகொண்டிருந்தான்; அப்புறம் உட்கார்ந்தான்; அப்புறம் படுத்தான்; அப்புறம் தன் உறவின் முறையார்கள் அலறித் துடிதுடிக்க இறந்து போய்விட்டான்!' இப்படி உடலின் நிலையாமை பற்றிச் சொல்லப்படுவதனால், 'புல்லின் நுனியின் மேலாக இருக்கும் நீர்த்துளியைப் போன்று யாக்கையும் நிலையாமை உடையது' என்று எண்ணி, இப்பொழுதே அறச்செயல்களைச் செய்வதிலே ஈடுபடுங்கள்.*

*'நின்றுகொண்டிருந்த ஒருவனே சற்று நேரத்தில் தளர்ந்து சோர்ந்து செத்துப்போகவும் காணுகின்றோம். இத்தகைய நிலையாமையினை உடையது உடல். இதனை உணர்ந்து இப்பொழுதே அறவினைகளைச் செய்யத் தொடங்குக!' என்பது கருத்து. இன்னினியே - இப்பொழுதே.*

30. **கேளாதே வந்து, கிளைகளாய் இல்தோன்றி**
**வாளாதே போவரால், மாந்தர்கள்-வாளாதே**
**சேக்கை மரன்ஒழியச் சேண்நீங்கு புட்போல,**
**யாக்கை தமர்க்கொழிய நீத்து.**

*மாந்தர்கள், 'யாம் வரட்டுமோ?' என்று கேளாமலேயே வந்து, உறவினர்களாக ஒரு வீட்டிலே பிறப்பார்கள். பின் 'போகிறோம்' என்று சொல்லாமலேயே தனக்கு இருப்பிடமாயிருந்த மரமானது தனித்துக் கிடக்கத் தொலை தூரத்திற்குப் பறந்து போகின்றதோர் பறவையைப் போலத், தம் உறவினர்களுக்குத் தம் உடம்பை உயிரின்றித் தனித்து விட்டுவிட்டுத் தாமும் போய்விடுவார்கள்.*

*'பறவைகள் மரத்தைக் கைவிட்டு அதனைப்பற்றி ஏதும் நிலையாதே போய்விடும் என்பதை உணர்ந்து, அந்த உடலாற் செய்யத்தகும் நல்ல செயல்களிலே ஈடுபடவேண்டும்' என்பது கருத்து. சேக்கை - இருப்பிடம்.*

## 4. அறன் வலியுறுத்தல்

*செல்வம், இளமை, யாக்கை என்பவை நிலையில்லாதன என்பதுபற்றிய செய்திகள் இதுவரை கூறப்பட்டன. இவை போலன்றி, என்றும் நிலையான புகழும் உயிருக்கு உறுதியும் தருவதான அறத்தின் தன்மையை உணர்ந்து, அதனை*

அனைவரும் மேற்கொள்ள வேண்டும் என்னும் காரணத்தால், அதனை வலியுறுத்திக் கூறுவது இந்தப் பகுதி.

'அறம்' என்பது இம்மை, மறுமை, வீடு என்ற மூன்றையும் தருவது என்று முன்பே சொல்லியிருக்கிறோம். 'இம்மை' என்பது இந்த உலக வாழ்வு. 'மறுமை' என்பது செய்த வினைகளின் பயனாக நாம் இறந்த பின்னர் அநுபவிக்கும் சுவர்க்கமும் நரகமும் ஆகிய வாழ்வு. வீடு, அனைத்தையும் விட்ட பேரின்பநிலை. இம்மூன்றுமே அறத்தால் வருவதனால் அதனை எவரும் அலட்சியப் படுத்தாமல் மேற்கொள்ளல் வேண்டும்.

31. **'அகத்தாரே வாழ்வார்?' என்று அண்ணாந்து நோக்கிப்**
**புகத்தாம் பெறாஅர், புறக்கடை பற்றி**
**மிகத்தாம் வருந்தி இருப்பரே, மேலைத்**
**தவத்தால் தவஞ்செய்யா தார்.**

முன் பிறவிகளிலே செய்த தவத்தின் பயனாக, நல்லறிவு உடையவர்களாகித் தவஞ்செய்பவரோ இளமையிலேயே தவநெறிப்பட்டு உள்ள உறுதியுடன் விளங்குவார்கள். அவ்வாறன்றித் தாமும் தவஞ்செய்வோமென்று உள்ளத்தே உறுதியற்றுப் போலியாக முயல்பவர்களோ, பசியால் துன்புற்று, பெரிய செல்வர்களின் வீடுகளை அண்ணாந்து நோக்கி, 'இந்த வீட்டிலுள்ளவர்களே உண்மையாக வாழ்பவர்கள்' என்று சொல்லி, அவரிடம் சென்று இரந்து பெற முயன்றும், உள்ளே தாம் நுழையப் பெறாதவராக, அவ்வீட்டுப் புறக்கடையினைப் பற்றிக்கொண்டு, தம் நிலையை எண்ணி மிகவும் வருந்தி இருப்பவர்களாவார்கள்.

'அவர்கள் துறவியராக முயன்றும் பசித்துயரால் இரந்துண்ண முயன்றதன் காரணமாக உள்ளத்து உறுதியற்ற வராகின்றனர். அது மேலைத்தவம் இன்மையால் வந்தது. அவர் துன்பமும் முழுக்கப் பற்று விடாமையால் நேர்ந்தது' என்பது கருத்து.'தவமும் தவம் உடையார்க்கு ஆகும்' என்றதும் இது. புறக்கடை-கடைப்புறம்; பின்புற வாயில்.

32. **'ஆமாம் நாம், ஆக்கம் நசைஇ; அறம் மறந்து,**
**போவாம் நாம்' என்னாப், புலைநெஞ்சே! - ஓவாது**
**நின்றுஞற்றி வாழ்தி எனினும், நின் வாழ்நாள்கள்**
**சென்றன; செய்வது உரை.**

ஐயோ! அற்பத்தனமான எண்ணங்களை உடைய நெஞ்சமே! 'நாம் மென்மேலும் செல்வம் உடையவர்களாவோம்'

என்று எண்ணி, அணுவளவும் நிலையில்லாத அந்தச் செல்வத்தை விரும்பினாய். நாம் இறந்து போவோம் என்று எள்ளளவும் நினையாமற் போயினாய். சிறிது பொழுதும் ஓய்வில்லாமல், நிலையாக அந்தச் செல்வத்தைச் சம்பாதிக்கப் பலவாறெல்லாம் முயன்று நீ வாழ்வாய் என்றபோதும், நின் வாழ்நாட்கள் கழிந்து போயின. இனிச் செய்வதைச் சொல்வாயாக!

உள்ள நாளெல்லாம் பொருள் தேடுவதிலேயே ஈடுபட்ட ஒருவன் தன் சாவுப் படுக்கையிலே கிடந்து தன் நெஞ்சை நோக்கிப் புலம்புவதாக அமைந்தது இது. அறநெறியினைக் காலங்கடத்தாமல் செய்ய வேண்டும்; இன்றேல் இப்படித்தான் வருத்தம் அடைய நேரும் என்று காட்டுவது இது. நசைஇ-விரும்பி. புலை - கீழான. ஓவாது - இடையறாது. நின்று - பொருள் ஆர்வத்திலேயே நிலைபெற்று. உஞற்றி - முயற்சி செய்து.

33 **வினைப்பயன் வந்தக்கால், வெய்ய உயிரா,**
**மனத்தின் அழியுமாம், பேதை; - நினைத்ததனைத்**
**தொல்லையது என்றுணர் வாரே தடுமாற்றத்து**
**எல்லை இகந்தொருவு வார்.**

பழவினையானது வந்து சம்பவித்த காலத்திலே அறிவீனன், கடுமையாகப் பெருமூச்சு விட்டவனாகத், தன் மனத்திலே அதனையே நினைந்து நினைந்து தளர்ந்து போவான். அந்தத் தீவினைப் பயனை ஆராய்ந்து, அது முற்பிறப்பின் அறக்கேட்டால் வந்து சம்பவித்தது என்று உணர்பவர்களே, பிறவித் துயரின் எல்லையை விட்டு நீங்கிப் பேரின்ப நிலையை அடைவார்கள்.

விவேகம் அற்றவர் பழவினையை நினைந்து வருந்துவார்; உள்ளவர் வருந்தார் என்றதால், விவேகமுங்கூட அறவினைப் பயனாலேயே வருவதாகும் என்றனர். தடுமாற்றம் - பிறவித் துயரால் உயிர் சுழன்று படும் வேதனைகள். இகந்து - கடந்து.

34. **அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்,**
**பெரும் பயனும் ஆற்றவே கொள்க! - கரும்பூர்ந்த**
**சாறுபோற் சாலவும் பின்னுதவி, மற்றதன்**
**கோதுபோற் போகும் உடம்பு!**

அருமையாகவே பெறுதலையுடையது உடல். அந்த உடலினைப் பெற்றதன் பயனாக. உயிருக்குப் பெரும் பயனாக

விளங்கும் தருமங்களையும் நாம் மிகுதியாகவே தேடிக்கொள்ள வேண்டும். கரும்பானது பக்குவமாகத் தன்னை ஆலையிலிட்டு நசுக்கியவர்களுக்குத், தன்னிடத்திற் பொருந்திய சாற்றைக் கொடுத்து இன்புறுத்துவது போலவே, தருமங்களும் உடலை வருத்தித் துறந்தவர்களுக்கு மறுமையிலே சிறந்த இன்பத்தைத் தந்து உதவி செய்யும். இந்த உடலோவென்றால், சாறுபோன கரும்பின் சக்கையைப் போல, உயிர் போனபின் பயனற்றுக் கழித்துப் போடப்படுவதாகிவிடும்.

கருப்பஞ்சாறு போலத் தரும காரியங்களிலே ஈடுபடுபவர்க்கு அறமானது உதவும்; ஆனால், அப்படி அறஞ் செய்யாத உடலோ ஒன்றுக்கும் உதவாது போய்விடும் என்பது கருத்து. பயத்தால் - பயனால். ஊர்ந்த - உண்டானபின் - இங்கு மறுமை இன்பத்தைக் குறிக்கும்.

**35. கரும்பாட்டிக், கட்டி சிறுகாலைக் கொண்டார்**
**துரும்பெழுந்து வேங்கால் துயராண்டு உழவார்;**
**வருந்தி உடம்பின் பயன்கொண்டார், கூற்றம்**
**வருங்காற் பரிவது இலர்.**

கரும்பை ஆலையிலே வைத்து நசுக்கி வெல்லக் கட்டியினை முற்காலத்திலே எடுத்துக் கொண்டவர்கள். பின்னர் அதன் சக்கையாகிய துரும்பு நெருப்பிலே பொருந்தி வேகும்பொழுது, அவ்விடத்தே அதனைக் கண்டு, கொஞ்சமும் துயரப்படமாட்டார்கள். அது போலவே உடம்பினை இச்சைகளுக்கு ஆட்படாமல் வருத்தி, உடம்பினாலாகும் உண்மைப் பயனான அறநெறிகளைக் கைக்கொண்டவர்கள், கூற்றமானது தம்மீது வருகின்ற காலத்திலே, உடம்பை விடுவது குறித்து வருத்தம் அடையமாட்டார்கள்.

கரும்பின் பயன் சாறு; அதனைப் பெற்றவர் சக்கை எரிவது கண்டு வருந்தார். அதேபோல, உடம்பின் பயன் நல்வினை செய்தல்; அதனைச் செய்தவர் சாவுக்கு வருந்தார்; செய்யாதவரோ வருந்துவர் என்பது கருத்து. கட்டி - வெல்லக் கட்டி. துரும்பு - கரும்புச் சக்கை. பரிவது - வருந்துவது.

**36. 'இன்றுகொல்? அன்றுகொல்? என்றுகொல்?' என்னாது,**
**'பின்றையே நின்றது கூற்ற'மென் றெண்ணி**
**ஒருவுமின், தீயவை, ஒல்லும் வகையான்**
**மருவுமின் மாண்டார் அறம்.**

இன்றைக்கோ, அன்றைக்கோ, என்றைக்கோ என்று எல்லாம் நினையாமல், கூற்றமானது உயிரைக் கொள்ளும் பொருட்டாக நம் பின்னேயே வந்து உரிய சமயத்தைப் பார்த்துக் கொண்டு நிற்கின்றது. இங்ஙனம் உண்மையை நினைந்து, தீய செயல்களிலே ஈடுபடுவதை உடனேயே விட்டுவிடுங்கள். மாட்சிமையுடைய சான்றோர்கள் கடைப்பிடித்த தரும மார்க்கத்தில் உங்களால் முடிந்த வகைகளில் எல்லாம் உடனேயே ஈடுபடுங்கள்.

ஒல்லும் வகையால் - தருமம், பொருளுள்ள அளவிற்கு ஏற்பவும், துறவறம் உடலின் நிலைக்கு ஏற்பவும் செய்தல். 'ஆயுள் நிலையல்லவென்பதை உணர்ந்து, தீய செயல்களை விலக்கிச் சான்றோர் கடைப்பிடித்த அறவழிகளிலே உள்ளத்தைச் செலுத்திச் செயல்படவேண்டும்' என்பது கருத்து.

**37. மக்களால் ஆய பெரும்பயனும், ஆயுங்கால்,**
**எத்துணையும் ஆற்றப் பலவானால்,-தொக்க**
**உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகாது, உம்பர்க்**
**கிடந்துண்ணப் பண்ணப் படும்.**

மக்களாக உடலெடுத்துப் பிறந்ததனால் செய்யத்தக்க பெருமையாகிய பயன்களும் ஆராயுங்காலத்தே. எவ்வளவினும் மிகவும் பலவாகும். ஆதலினாலே, நரம்பு தசை முதலியவை சேர்ந்த உடலின் நன்மைக்காகவே, உபயோகமான செயல் களைச் செய்து நடவாமல், மேலுலகத்திலே இருந்து அநுபவிக்கும்படியான பேரின்பத்தைக் கருதி, அதனைத் தருகின்ற அறவழியிலேயே அனைவரும் செயற்பட வேண்டும்.

'மக்கள்' என்றது, மனித உடம்பை. உடலினாற் செய்யும் நற்காரியங்கள் பலவிருக்கவும், அவற்றைச் செய்யாமல் உடலிச்சைகளிலேயே மனஞ்செலுத்துவது கூடாது; மறுமைக்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டும் என்பது கருத்து. தொக்க-தொகுத்த. ஒப்புரவு-உபகாரம்; நன்மை தரும் செயல். உம்பர்-மேலுலகம்; சுவர்க்கம்.

**38. உறக்குந் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி**
**இறப்ப நிழற்பயந் தாஅங்கு-அறப்பயனும்**
**தான்சிறி தாயினும், தக்கார்கைப் பட்டக்கால்,**
**வான்சிறிதாப் போர்த்து விடும்.**

மிகமிகச் சிறு அளவினதாகிய ஓர் ஆலம் விதையானது முளைத்துக் கிளைகள் நெருங்கி, மிகவும் நிழல்தந்து பெரிய

மரமாகி விளங்குவது போன்றது தருமத்தின் பயனும். அந்த அறப்பயன் தன் செயல் அளவிலே அது செய்யப்பட்டுச் சேர்ந்த காலத்து, வானகமும் சிறியதாகுமாறு எங்கும் கவிந்து, செய்தவனுக்கு மிகுந்த சிறப்பைத் தருவதாகும்.

'தருமம் செய்வதையும் தகுதியுடையவர்களுக்கே செய்தால் பெரும்பயன் விளையும்' என்பது கருத்து. உறக்கும் துணையது-கிள்ளி எடுக்கின்ற அளவிற்குச் சிறியது. இறப்ப-மிகுதியாக. போர்த்து-கவிந்து; பரந்து.

39. **வைகலும் வைகல் வரக்கண்டும், அஃதுணரார்,**
**வைகலும், வைகலை வைகுமென்று இன்புறுவர்;**
**வைகலும் வைகற்றம் வாழ்நாள் மேல் வைகுதல்**
**வைகலை வைத்துணரா தார்.**

நாள்தோறும் கடந்து போகும் நாட்கழிவைத், தம் வாழ்நாளின்மேல் செல்லுதலாக வைத்து, அந்த நாட் கழிவினைப் பற்றிய உண்மையை அறியாதவர்கள், நாள்தோறும் நாட்கழிவானது தவறாது வந்துகொண்டிருக்கக் கண்டும், அதன் உண்மையான இயல்பினை உணர மாட்டார்கள். நாள்தோறும் ஆயுள் கழிந்து போதலை இருக்கிறதென்று தம் அறியாமையால் நினைந்து, அவர்கள் எல்லாரும் அற்ப மகிழ்ச்சியினையே அடைவார்கள்.

'நாள் கழிவதுடன் தம் ஆயுளும் கழிந்துகொண்டு போவதை உணர்ந்து, அறநெறியிலே ஈடுபட்டு மறுமைப் பயனுக்கு வழிகோல வேண்டும்' என்பது இது.

40. **மான அருங்கலம் நீக்கி, இரவென்னும்**
**ஈன இளிவினால் வாழ்வேன்மன்-ஈனத்தால்**
**ஊட்டியக் கண்ணும் உறுதிசேர்ந்து இவ்வுடம்பு**
**நீட்டித்து நிற்கும் எனின்**

'ஈனத்தனமான காரியங்களைச் செய்து இந்த உடலைப் போற்றிவந்த போதிலும், இந்த உடலானது, தன்பால் உறுதிசேரப் பெற்றதாகி, நீடித்த காலம் நிலைத்து நிற்பதென்று சொல்ல முடியாது. அப்படி நிலைத்திருக்குமானால், மானம் என்று சொல்லப்படும் அருமையான அணிகலனை ஒதுக்கி விட்டு. இரப்பது என்று சொல்லுகின்ற தாழ்மையான மானக் கேட்டுக்கு உட்பட்டும், பெரும்பாலும் யானும் வாழ்வேன்.

'எவ்வளவுதான் ஊட்டிப் பேணினாலும் உடல் நிலையற்றது; ஆதலால், அதனை நிலைக்கச் செய்யக் கருதி மானங்கெட்ட செயல்களிலே எவரும் ஈடுபடுதல் கூடாது; அதனை ஒறுத்து அறநெறிகளிலே உறுதியுடன் ஈடுபடுதல் வேண்டும்' என்பது கருத்து. இரவு-இரத்தல். இளிவு - தாழ்ச்சி.

## 5. தூய்து அன்மை

'ஊத்தைச் சடலமடி உப்பிட்ட பாண்டமடி' என்று, உடலின் தன்மையைக் குறித்துப் பெரியோர்கள் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள். என்றாலும் உடலின் கவர்ச்சியிலே மயங்குபவர்கள்தாம் மக்களுள் பெரும்பாலர். இம்மை இன்பத்திற்கு ஆதாரமான உடலின் அழகுக்குப் பூச்சுக்களாலும் புனைவுகளாலும் மேலும் மேலும் அழகுபடுத்திக் களிக்கவும் அவர்கள் தவறுவதில்லை.

தூய்மையான அறநெறியிலே மனிதரைச் செல்வதற்கு விடாது, மயக்கும் இந்த உடற்கவர்ச்சியின் காரணமாக, ஒழுக்கநெறி குன்றிப் போவதனால், அதனைப் பற்றி- அதன் தூய்மையற்ற தன்மையைப்பற்றி ஆராய்கிறது இப்பகுதி.

இதன்கண், பெரும்பாலும் அழகு உடலினர் என்று சுட்டப்படும், பொருட் பெண்டிரின் உடற்கவர்ச்சி பற்றியே பேசப்படுகிறது. அதன்பால் மயங்கிக் காமவசத்தராகி, நன்னெறி பிறழ்ந்து நலியாமல், துறவுநெறி மேற்கொண்டு, உயிருக்குத் திண்மையளிக்கும் நிலையான முயற்சிகளிலே ஈடுபடுதல் வேண்டும் என்பது இந்தப் பகுதியின் கருத்தாகும்.

**41. 'மாக்கேழ் மடநல்லாய்' என்றரற்றுஞ் சான்றவர்**
**நோக்கார்கொல், நொய்யதோர் புக்கில்லை?-**
**யாக்கைக்கோர்**
**ஈச்சிற கன்னதோர் தோலறினும், வேண்டுமே,**
**காக்கை கடிவதோர் கோல்!**

'மாந்தளிர் போன்ற மேனி நிறத்தினையும், இளமைப் பருவத்தினையும் உடைய பெண்ணே!' என்று வாய்விட்டுப் போற்றுகின்ற பெரிய மனிதர்கள், அற்பமான ஒரு புகத்தக்க வீடு அது என்பதைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டார்களோ? அப்படி அவர்களால் புகழப்பட்ட அழகிய உடலிலே, ஈயின் சிறகின் அளவான ஒரு தோற்பகுதியானது அறுபட்டுப் போனாலும், அந்தப் புண்ணைக் குத்துதற்கு வருகின்ற காக்கையை ஓட்டுவதற்கு, ஒரு கொம்பே துணையாக வேண்டியதிருக்குமே!

'காக்கை உகக்கும் பிணம்' என்றாற்போல; அவ்வளவு அருவருப்பான உடலைப் போய் அப்படிப் புகழ்ந்து காமுற்றுத் திரிகிறார்களே? அவர்கள் என்ன பெரியவர்கள்? அதனை மறந்து பற்றுவிட்டுத் துறவு நெறியிலே ஈடுபடுவார்களாக' என்பது கருத்து. 'புக்கில்லை' 'துச்சிலை' எனவும் பாடம்.

**42. தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப், பொய்ம் மறைக்கும்.**
**மீப்போர்வை மாட்சித்து, உடம்பானால்,-மீப்போர்வை.**
**பொய்ம்மறையாக், காமம் புகலாது, மற்றதனைப்**
**பைம்மபறியாப் பார்க்கப் படும்.**

தோலாகிய போர்வையை மேலாகப் போர்த்துக் கொண்டதாகப் பலவான துளைகளை உடையதாகத், தன்னிடத்தேயுள்ள அசுத்தங்களை எல்லாம் மூடி மறைக்கின்ற ஆடை அணிகளாகிய மேற் போர்வையினால் மாட்சிமை உடையதாகத் தோன்றுவதுதான் உடம்பு. அப்படியானால், அந்த ஆடை அணிகள் ஆகிய மேற் போர்வையினால், உள்ளேயுள்ள பொய்ம்மைகளை மறைத்து, அதன் பால் நாமும் விருப்பமுடையவராக அதனைப் புகழ்ந்து சொல்லாது அதனைப் - பையை உள்ளே திருப்பிப் பார்ப்பதுபோலப் புரட்டிப் பார்த்து, உள்ளேயுள்ள அழுக்குப்பற்றிய உண்மை யினைத் தெரிந்து கொள்ளல் வேண்டும். அதுவே அறிவுடை மையாகும்.

'மேலே அழகாகத் தோன்றினாலும், உள்ளே அழுக்காயிருக்கும் பையினைப் புரட்டிப் பார்த்து அதன் உண்மையை அறிவதுபோல, உடலின் அசுத்தங்களை உள்ளாக ஆராய்ந்து பார்த்து, அதன் பால் இச்சை கொள்ளுதலை விடுத்துத் துறத்தலாகிய நன்னெறியிலே ஈடுபடவேண்டும்' என்பது கருத்து.

**43. தக்கோலந் தின்று, தலை நிறையப் பூச்சூடிப்,**
**பொய்க்கோலஞ் செய்ய, ஒழியுமே - 'எக்காலும்**
**உண்டி வினையுள் உறைக்கும்' எனப் பெரியோர்**
**கண்டு, கை விட்ட மயல்?**

எப்பொழுதும் உணவுண்ணலாகிய செயலினாலேயே உறுதி பெறும் என்று, அறிவிலே பெரியவர்கள் உண்மையை அறிந்து பார்த்துத் தள்ளிவிட்ட செத்தையாகும் இந்த உடம்பு. இதனைத் தக்கோலம் என்னும் மணப்பொருளைத் தின்றும்,

தலை நிறையப் பூச்சூடியும், பொய்யாகப் புனைந்து புனைந்து கோலஞ் செய்து கொண்டாலும், இதன் கெட்ட நாற்றம் முழுவதும் ஒழிந்து விடுமோ?

'உடலின் உள்ளெல்லாம் கெட்ட நாற்றம் நிறைந்திருக்கும்; அதைப் போக்கத் தக்கோலந்தின்றும்; புறநாற்றத்தைப் போக்கப் பூச்சூடியும் பெண் வந்தாலும், அவளுடைய உடலின்மேல் காமுற்று உள்ளந் தளரலாகாது. அதனை வெறுத்து நல்லற நெறியிலே மனஞ் செலுத்த வேண்டும்' என்பது கருத்து.

44. **'தெண்ணீர்க் குவளை, பொருகயல், வேல்' என்று,**
**கண்ணில்புன் மாக்கள் கவற்ற, விடுவேனோ**
**உண்ணீர் களைந்தக்கால் நுங்குசூன் றிட்டன்ன**
**கண்ணீர்மை கண்டொழுகு வேன்?**

உள்ளே இருக்கின்ற நீரைக் களைந்து போக்கி விட்டால் நுங்கைத் தோண்டி எடுத்து விட்டபின் அவ்விடத்தே காணப்படும் குழிபோலத் தோன்றும் கண்களின் உண்மையான தன்மையைப் பார்த்து, அதன் பால் மயங்காது நடந்து வருபவன் யான்; 'தெளிவான நீரிலே மலர்ந்துள்ள கருங்குவளை' என்றும், 'பிறழ்கின்ற கயல்மீன்கள்' என்றும், 'வேல்' என்றும் அக்கண்களைச் சொல்லி, அறிவற்ற அற்பமனிதர்கள் என்னைக் கவலைப்படுத்தலாம்; அதனைக் கேட்டு யான் உண்மையறிந்து மேற்கொண்ட துறவொழுக்கத்தைக் கை விடுவேனோ?

கவற்ற-கவலைப்படுத்த. 'உண்மையறிந்து துறந்த தான், உண்மையறியாத இவர்களின் பேச்சைக் கேட்டு மனம் மாறுவேனோ' என்பது கருத்து. நீர்மை - தன்மை; குணம். பொரு கயல் - பிறழ்கின்ற கெண்டை மீன்.

45. **'முல்லை முகை, முறுவல், முத்து' என்று, இவைபிதற்றும்**
**கல்லாப்புன் மாக்கள் கவற்ற விடுவேனோ,**
**எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க**
**பல்லென்பு கண்டொழுகு வேன்?**

அனைவரும் காணும்படியாக, ஊருக்குப் புறத்தேயுள்ள சுடுகாட்டிலே உதிர்ந்து சிதறிக்கிடக்கின்ற பல்லாகிய எலும்புகளைப் பார்த்து, உடலின் நிலையாமையாகிய உண்மை நிலையை அறிந்து, துறவறத்திலே ஒழுகிவருபவன் யான். அப் பற்களின் தோற்றத்தை, 'முல்லை அரும்புகள்' என்றும், 'இளநகை' என்றும் 'முத்தெ'ன்றும், இன்னபடியெல்லாம் பிதற்றுகின்ற, நல்லற நூற்களைக் கல்லாத அற்ப மனிதர்களின்

*பேச்சுக்கள் என்னைக் கவலைப்படுத்துமாறு, யான் என் துறவு ஒழுக்கத்தைக் கைவிட்டு விடுவேனோ?*

*'கண்பார்வைக்கும் மனந்தளரேன்' என்றது முன் பாடல். இதன் கண், 'முறுவல் கண்டும் மனந்தளரேன்' என்பது கூறப்பட்டது பல்லென்பு - பற்களாகிய எலும்புகள்.*

46. **குடரும், கொழுவும், குருதியும், என்பும்,**
**தொடரும் நரம்பொடு தோலும், - இடையிடையே**
**வைத்த தடியும், வழும்புமாம், மற்றிவற்றுள்**
**எத்திறத்தாள், ஈர்ங்கோதை யாள்?**

*குடரும், கொழுப்பும், இரத்தமும், எலும்பும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்திருக்கிறதான நரம்பும், தோலும், இவற்றின் இடையிடையே வைத்திருக்கின்ற தசையும் நிணமும் ஆகிய உடலின் இத்தகைய பல்வேறு பகுதிகளுள், 'குளிர்ச்சியான தலைமாலையை உடைய பெண்' என்று சொல்லப் படுபவள்தான், எந்தப் பகுதியைச் சார்ந்தவளோ?*

*'தனித்தனியாகப் பார்த்தால் எல்லாம் அசுத்தமானவை களாயிருக்கின்றனவே? இவை சேர்ந்த பெண் என்பவள் மீது உண்மையறிந்தார் காமுற்று அலைவது அறிவீனம் அல்லவோ?' என்று சொல்லித் துறவை வற்புறுத்துவது இது. வழும்பு - நிணம். தடி -தசை.*

47. **ஊறி, உவர்த்தக்க ஒன்பது வாய்ப்புலனும்**
**கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தைப்,-பேதை,**
**'பெருந்தோளி! பெய்வளாய்!' என்னும், மீப் போர்த்த**
**கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.**

*மலங்களால் ஊறி, வெறுக்கத்தக்கதாக விளங்கும் ஒன்பது துவாரங்களாகிய புலன்களும் அசுத்தக் குழம்புகளைச் சிதறிச்சிதறி வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் உடலாகிய அசுத்தப் பாண்டத்தைப் 'பேதையாள்!' எனவும், 'பெருந் தோளினாள்' எனவும், 'இடப்பட்ட வளையல்களை உடையவளே' எனவும், அதன்மீது போர்த்திருக்கிற அழகான தோலினால், கண்களுக்கு ஒளிபெறும் படி மயக்கஞ் செய்யப்பட்டு, அறிவற்றோர் போற்றுவார்கள்.*

*'அறிவுடையோர் அதனை வெறுத்து, உயிர்க்கு உறுதி தருகின்ற அறவழியாகிய துறவுநெறியிலே மனஞ் செலுத்து வார்கள்' என்பது கருத்து. கும்பம்-பாண்டம். கருந்தோல்- அழகிய தோல்.*

48. பண்டம் அறியார், படுசாந்தும் கோதையும்
கண்டு, பாராட்டுவார் கண்டிலர்கொல் - மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்
முடைச்சாகா டச்சிற் றுழி?

*உடலாகிய பண்டத்தினது அசுத்தமான தன்மையை அற்ப அறிவினர் ஒருபோதும் அறியமாட்டார்கள். பூசுவதற்குத் தகுதியான சந்தனத்தைப் பூசிக்கொண்டும், தலையிலே பூமாலையைச் சூடிக் கொண்டும் விளங்கும் அதனைப் போற்றிப் பாராட்டுவார்கள். பெட்டையும் ஆணும் ஆகிய வன்மையான கழுகுகள் திரண்டு கூடிப் பெயர்த்துப் பெயர்த்துக் குத்துகின்ற, முடை நாற்றம் உடைய வண்டியாகிய உடம்பின் அச்சாகிய உயிர் அற்றுப் போகின்ற தன்மையைக் கண்டும் இவர்கள் உண்மையை அறியார்களோ?*

*'உயிரற்ற உடலைக் கழுகுகள் கூடிக் குத்தியுண்பதை அறிந்தும் மனிதர்கள் அதைப் பாராட்டுகின்றார்களே? அவர்கள் அதன் அசுத்தத் தன்மையை உணர்ந்து துறவு பூணமாட்டார்களோ?' என்பது இது. மண்டுதல்-திரண்டு சேர்தல். முடை-முடை நாற்றம். சாகாடு-வண்டி.*

49. கழிந்தார் இடுதலை, கண்டார் நெஞ்சு உட்கக்,
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி,-ஒழிந்தாரைப்
'போற்றி நெறிநின்மின்; இற்றிதன் பண்பு' என்று
சாற்றுங்கொல், சாலச் சிரித்து.

*சுடுகாட்டிலே கிடக்கின்ற இறந்தவர்களுடைய தலையோடானது, தன்னைக் கண்டவர் நெஞ்சம் அச்சங் கொள்ளும்படியாகப் பள்ளமாகிக் குழிந்திருக்கிற கண்களை உடையதாகத் தோன்றி, "உடலின்கண் பற்று ஒழித்த சான்றோரைப் போற்றி அவர்கள் நின்ற நெறியிலேயே நில்லுங்கள்; இவ்வுடம்பின் குணம் இறுதியில் இப்படிப் பட்டதுதான்" என, மிகவுஞ் சிரித்துச் சொல்லும் போலும்!*

*அத்தலையோட்டைக் காண்பவர்கள், உடலின் தூய்து அன்மையை உணர்ந்து நெறிப்படுதல் கூடுமாதலால், 'அது சொல்லும் போலும்' என்றனர். கழிந்தார்-இறந்தார். இற்று இதன் பண்பு-இதன் பண்பு இத்தன்மையானது.*

50. உயிர்போயார் வெண்தலை உட்கச் சிரித்துச்,
செயிர்தீர்க்கும், செம்மாப் பவரைச்;-செயிர்தீர்ந்தார்

**கண்டு, 'இற்றிதன் வண்ணம்' என்பதனால்,**
**பண்டத்துள் வைப்பது இலர்.**

உயிர் போய்விட்டவர்களுடைய வெண்மையான தலை எலும்புகள், பிறர் அச்சம் கொள்ளும்படியாகச் சிரித்துச் செம்மாந்து, உடலின்பத்திலே மூழ்கியிருப்பவரின் இறுமாப்பாகிய குற்றத்தைத் தீர்க்கும். ஆதலால், அப்படிக் குற்றம் தீர்ந்தவர்கள். 'இதன் குணம் இப்படிப்பட்டது' என அறிந்து உடலைப்பற்றித் தெரிந்து கொள்வதனால், தம் உடலை ஒரு பொருளாகக் கருதிப் பேணிப் புனைந்துவைக்க மாட்டார்கள்.

'உடலின் தன்மையை அவர்கள் உணர்ந்துவிடுவதனால் அதனை ஒரு பொருளாகக் கருதி, அதன் சுகபோகங்களிலே மனஞ்செலுத்த மாட்டார்கள்' என்பது கருத்து.

## 6. துறவு

வாழ்க்கை நெறி இரண்டு வகைப்படும். ஒன்று இல்லறம் மற்றொன்று துறவறம். இல்லறம் - இல்லத்திலே மனையாளோடு கூடி இன்புற்றிருந்து இனம் பெருக்கி, உறவு முறையாருடன் கூடி மகிழ்ந்து அறம்பல செய்து நற்கதி பெறுவது.

துறவறம்-செல்வமாகிய புறப்பற்றையும் உடலின்பமாகிய அகப்பற்றையும் அறவே விடுத்து, உயிரின்பங் கருதி உறுதியுடன் மேற்கொள்ளும் ஒழுக்கம். 'எனது, யான்' என்ற இருவகைப் பற்றுக்களையும் விட்ட நெறி இது.

உடல் எடுத்துப் பிறந்துள்ளதன் நோக்கம், உயிருக்கு உறுதிப் பொருளை நாடுவதேயாகும். அதனால், அந்த அளவிலே சிறப்புடையதான துறவுநெறியைச் சான்றோர் பலரும் மேற்கொள்வார்கள். அதனைப் பற்றிக் கூறுவது இந்தப் பகுதி.

பற்றுக்களின் மீது வசப்படும் மனிதன் நன்மை தீமைகளைப் பகுத்தறிய இயலாதவனாகி விடுகிறான். அது பற்றிப், பற்றற்றவனே சிறந்த ஒன்றை மேற்கொண்டவன் ஆகிறான்.

51. **விளக்குப் புக இருள் மாய்ந்தாங்கு, ஒருவன்**
**தவத்தின்முன் நில்லாதாம் பாவம்,-விளக்குநெய்**
**தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை**
**தீர்விடத்து நிற்குமாம், தீது.**

விளக்கானது ஓரிடத்திலே செல்லவும், அங்கே அதற்கு முன்னர் இருந்த இருளானது முற்றவும் அழிந்துபோவது போல, ஒருவனுடைய தவமாகிய ஒளியின் முன்னே பாவமாகிய இருளும் நில்லாது அழிந்து போய்விடும். விளக்கின் நெய் குறைந்துபோனவிடத்து ஒளி மறைய நேர்ந்தால் அப்படி நேர்ந்தவுடனே இருள் அங்குச் சென்று பரவுவது போல, நல்வினைகள் நீங்கியிருக்கும் ஒருவரிடத்திலே, தீயசெயல்களும் விரைந்து சென்று பரவி நிலைபெற்றுவிடும்.

'புலன்கள் எதையாவது எப்போதும் செய்து கொண்டே இருக்கும் இயல்பின. அவற்றை நல்வினைகளிலே ஈடுபடுத்தாத போது தீவினை அவற்றைக் கவிந்து கொள்ளும். இதனை உணர்ந்து துறவு நெறியான தன்னெறியிலேயே அனைவரும் ஈடுபடுக' என்பது கருத்து.

52. **நிலையாமை, நோய், மூப்புச் சாக்காடென் றெண்ணித்,**
**தலையாயார் தங்கருமம் செய்வார்;-தொலைவில்லாச்**
**சத்தமுஞ் சோதிடமும் என்றாங்கு இவைபிதற்றும்**
**பித்தரிற் பேதையார் இல்.**

செல்வங்களின் நிலையாமையினையும், நோய் மூப்புச் சாக்காடு என வரும் உடலின் நிலையாமையையும் குறித்து, மனத்திற் கொண்டவராகத், தலைமையான அறிவுடையவர்கள் தமக்குரிய உயிர்க்கு உறுதியான நல்ல செயல்களையே செய்வார்கள் என்றும் தொலையாத ஆரவாரத்தை உடைய போலியான நூல்களும், வருவதை உரைக்கும் சோதிட நூல்களும் என்று சொல்லப்பட்டவற்றையே நாளும் பிதற்றித் திரிகின்ற பைத்தியக்காரர்களை விடப், புத்தி கெட்டவர்கள் உலகத்தில் எவருமே இலராவர்.

'அவை இவ்வுலக இன்பம் பற்றிக் கற்பித்துக் கூறுவனவே அல்லாமல், மக்களை உண்மை நெறிப் படுத்துவன ஆகா. ஆதனால் அவற்றை விடுத்து உறுதிப் பொருளிலேயே மனஞ்செலுத்த வேண்டும்' என்பது கருத்து.

53. **இல்லம், இளமை, எழில், வனப்பு, மீக்கூற்றம்,**
**செல்வம், வலி, யென் றிவையெல்லாம்,-மெல்ல**
**நிலையாமை கண்டு, நெடியார், துறப்பர்**
**தலையாயார் தாமுய்யக் கொண்டு.**

இல்லத்திலிருந்து மனையாளோடும் வாழ்வதாகிய மனை வாழ்க்கை, அந்த வாழ்வினைத் துய்த்து இன்புறுகின்ற இளமைப்

பருவம், அந்தப் பருவத்திலே காணப்படும் பருவ இயல்பான மிகுந்த அழகு, சமூகத்திலே ஏற்படுகின்ற செல்வாக்கு, பல்வகைச் செல்வங்கள் உடலின் வலிமை எனப்படுகின்ற இவைகள் எல்லாம் நிலைத்திராமையை அமைதியாக ஆராய்ந்து பார்த்து மேலோர்கள், தாங்கள் பிறவித் துன்பங்களினின்றும் கடைத் தேறுவதற்கான வழிகளை மேற்கொள்ளுதலில் காலத்தை நீட்டியாதவராக, இளமையிலேயே உலகப் பற்றினை துறந்து விடுவார்கள்.

மீக்கூற்றம்-மேலான சொல்; செல்வாக்கு. மெல்ல-அமைதியாக; அவசரப்பட்டுத் தவறான முடிவுக்கு வாரார் என்க. ‘இவற்றினிடத்தெல்லாம் மனம் பற்றுக் கொள்ளுங் காலத்து, மெல்ல ஆராய்ந்து, அவற்றைத் துறந்து, உறுதிப் பொருள் களிலே நாட்டஞ் செலுத்துபவரே மேலோர்’ என்பது கருத்து.

**54. துன்பம் பலநாள் உழந்தும், ஒருநாளை**
**இன்பமே காமுறுவர், ஏழையார்; -இன்பம்**
**இடைதெரிந்து, இன்னாமை நோக்கி, மனையாறு**
**அடைவொழிந்தார், ஆன்றமைந் தார்.**

அறிவில்லாதவர்கள் பற்பல நாட்களினும் துன்பத்திலேயே கிடந்து வருந்தியபோதிலும், ஒரு நாளைக்குக் கிடைக்கும் இன்பத்தையே பெரிதாக மதித்து விரும்புவார்கள். அறிவினால் மிகுந்து அதற்கேற்ப அடங்கியவராக விளங்கும் சான்றோரோ, இன்பமானது அடிக்கடி மாறுபடுவதைத் தெரிந்தவர்களாகி, அதனால் மேல்வரும் துன்பத்தையும் அறிந்து, இல்வாழ்க்கை நெறியிலே செல்லுதலினின்றும் அறவே நீங்கினவர்களாக இருப்பார்கள்.

‘இல்வாழ்விலே பலப்பல துன்பங்கள் நேர்வது கண் கூடு; ஆயினும் ஓரோரு சமயத்துப் பெறும் இன்பத்திற்காக அதனை விரும்புவார்கள் பலர். ஆனால் அறிவு உடையவரோ, இன்பம் நிலையில்லாது மாறிப்போவதையும், துன்பமே வாழ்வில் மிகுதியாவதையும் அறிந்து அதனை மேற்கொள்ளார்’ என்பது கருத்து. மனையாறு - இல்வாழ்வு. அடைவு - அடைதல். இடை-மாறுபடுதல்; இடையீடுபடுதல். அறிவே உண்மைச் செல்வம்; ஆதலால், அஃதற்றோர் ஏழையர் ஆயினர்.

**55. கொன்னே கழிந்தன்று இளமையும்! இன்னே**
**பிணியொடு மூப்பும் வருமால்;-துணிவொன்றி**
**என்னொடு சூழாது, எழுநெஞ்சே! போதியோ,**
**நன்னெறி சேர, நமக்கு?**

*இளமையாகிய சிறந்த பருவமும் வீணே கழிந்து விட்டது. இப்பொழுதே நோய்நொடியொடு கிழத்தனமும் வந்து நம்மைச் சேர்ந்து விடும். ஆதலால், துணிவினைப் பொருந்தி, என்னொடும் ஆராயாமல் எழுகின்ற நெஞ்சமே! நமக்கு நல்ல வழியானது கிடைப்பதற்கு இப்போதாவது முயற்சி செய்யப்போகின்றாயோ, அல்லவோ?*

*'உள்ளத்தின் வழியாகவே உயிரும் இன்ப துன்பங்களை எல்லாம் அநுபவிக்கும். இளமையிலே, அதன் வழியே நின்று உலக இன்பங்களிலே உழன்ற ஒருவன், நன்னெறியை நாடியவனாக, முதலிலே தன் மனத்தைத் தன் வழிப்படுத்த இப்படிச் சொல்லுகிறான்' என்று கொள்க. கொன்னே-வீணே. சூழ்தல்-ஆராய்தல்; கலந்து பேசுதல். நமக்கு-உயிராகிய தன்னையும் மனமாகிய நெஞ்சையும் சேர்த்துக் கூறியது.*

**56. மாண்ட குணத்தோடு மக்கட்பேறு இல்லெனினும்,**
**பூண்டான் கழித்தற்கு அருமையால்-பூண்ட**
**மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே**
**கடி' யென்றார், கற்றறிந் தார்.**

*''மனைக்கு மாட்சிமைப்பட்டதான குணங்களுடன், தன் குலவளர்ச்சிக்கான பிள்ளைப்பேறும் இல்லாமற் போனாலும், ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டவன், அவளை விட்டு நீங்குவது என்பது முடியாததாகும். அதனாலும், தான் மேற்கொண்ட வறுமையால் நேரும் வருத்தம் என்னும் காரணத்தாலும், மேலான முறைமையாகிய துறவொழுக்கத்திலே நிலைபெற்று நின்று, அந்த இல்வாழ்வையே விட்டுவிடுவாயாக'' என்பார்கள், நல்ல நூற்களைக் கற்று, உண்மையறிவை அறிந்த சான்றோர்கள்.*

*'திருமணம் செய்துகொண்ட பின், எந்தக் காரணத்தாலும் அந்தப் பிணிப்பை விடுவது அருமையாதலால், அதற்கு முன்பே துறவு மேற்கொள்க' என்பது கருத்து. மிடி-துன்பம். மேன் முறை - மேன்மையான முறையாகிய துறவு நெறி. கடி-கடிந்து ஒதுக்குக.*

**57. ஊக்கித்தாம் கொண்ட விரதங்கள் உள்ளுடையத்**
**தாக்கருந் துன்பங்கள் தாந்தலை வந்தக்கால்,**
**நீக்கி, நிறூஉம் உரவோரே, நல்லொழுக்கம்**
**காக்குந் திருவத் தவர்.**

*தாம், முயற்சி எடுத்து மேற்கொண்ட நோன்புகள் எல்லாம் முழுவதும் அறவே கெட்டுப் போகும்படியாகத் தாங்குவதற்கு*

அரிய துன்பங்கள் வந்து தம்மைச் சேர்ந்த காலத்திலும் அவற்றை ஒதுக்கித் தம் நோன்புகளிலேயே மனத்தை உறுதிப்படுத்துகின்ற உள்ளத் திண்மையினை உடையவர்களே, உயிருக்கு நிலைத்த நன்மையைத் தருவதான துறவு ஒழுக்கத்தைப் பேணும்படியான சிறப்பினை உடையவர்கள் ஆவார்கள்; பிறர் அங்ஙனம் ஆகார்.

'தவநெறி மேற்கொண்டாலும் இடையே மனத்தைச் சஞ்சலங்களிலே உழலவிடாமல் உறுதியுடன் விளங்க வேண்டும். அப்படி உறுதி உடையவரே உண்மைத் துறவியர்' என்பது கருத்து. உரவு-வலிமை. திருவத்தவர்-சிறப்பினை உடையவர்.

58. **தம்மை இகழ்ந்தமை தாம் பொறுப்பது அன்றி, 'மற்று**
**எம்மை இகழ்ந்த வினைப்பயத்தான்,-உம்மை**
**எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்!' என்று**
**பரிவதூஉம், சான்றோர் கடன்.**

ஒரு கேடுஞ் செய்யாத தம்மை, அறிவற்ற பேதை மாக்கள் இகழ்ந்தால், அதைத் தாம் பொறுத்துக் கொள்வதும் அல்லாமல், ' எம்மை இப்படி இகழ்ந்து பேசிய தீவினையின் பயனால், இவர்கள் மறுமையில் தீநிரம்பிய நரகத்திலே வீழ்வார்களே?' என்று, அவர்களுக்காக இரக்கப்படுவதும், துறவினால் சான்றாண்மை உடையவராக விளங்குபவரின் கடமையாகும்.

'தமக்குத் துன்பம் இழைத்தவருக்கும், அதனால் துன்பம் நேரிடக் கூடாது என்று எண்ணுகின்ற இரக்கம் உடைமையே உண்மைத் துறவியரின் இலக்கணம்' என்பது கருத்து. உம்மை மறுமை. பரிவு-இரக்கம். எரிவாய் நரகம்-வெவ்வழல் உடைய நரகம்.

59. **மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற**
**ஐவாய வேட்கை அவாவினைக்,-கைவாய்,**
**கலங்காமற் காத்து, உய்க்கும் ஆற்றல் உடையான்**
**விலங்காது வீடு பெறும்.**

'மெய் வாய் கண் மூக்குச் செவி' என்னும் பெயர் கொண்ட ஐந்து புலன்களின் வழியாக எழுகின்ற வேட்கை என்னும் ஆசையினை, அதனால் தன் மனம் கலங்காமற் காத்துக் கொண்டவனாகத் துறவு ஒழுக்கத்திலே அந்த மனத்தைச் செலுத்துகின்ற ஆற்றல் உடையவன் எவனோ அவன் தப்பாமல் வீட்டின்பத்தைப் பெற்று விடுவான்.

'புலனிச்சைகளினால் மனம் சிதறாமற்படிக்கு, உள்ளத்து உறுதியுடன் தவநெறியிலே ஈடுபடுகிறவன் தவறாமல் முத்தியடைவான்; பிறர் அடையார்' என்பது கருத்து. கைவாய்-ஒழுக்கநெறி; துறவு நெறி. வீடு-முத்தி நிலை.

**60. துன்பமே மீதூரக் கண்டும், துறவுள்ளார்**
**இன்பமே காமுறுவர், ஏழையார்;-இன்பம்**
**இசைதோறும், மற்றதன் இன்னாமை நோக்கிப்**
**பசைதல் பரியாதாம், மேல்.**

துன்பங்களே நாளும் நாளும் வந்து கொண்டிருப்பதைக் கண்டும், இல்வாழ்வினைத் துறந்துவிடுதலைப் பற்றி நினையாதவராக, அந்த இல்வாழ்விற் கிடைக்கும் சிற்றின்ப சுகத்தையே அறிவற்றவர்கள் பெரிதும் விரும்புவார்கள். மேலானவரோ, இன்பம் வந்து வாய்க்கும் பொழுதெல்லாம், அதனால் பின்வரும் துன்பத்தையே நினைந்து, இன்பத்தின்பால் ஆசை கொள்வதை ஒருபோதும் மேற்கொள்ள மாட்டார்கள்.

'துன்பம் நேர்தலை அறிந்தும், கிடைக்கும் இன்பத்தை மட்டுமே விரும்பி, அந்தத் துன்பத்தையும் பொருட்படுத்தாது இல்வாழ்வை மேற்கொள்பவர் ஏழையர்; இன்பம் நெருங்கி வருந்தோறும், அதன் இன்னாமையை அறிந்து அதன்மேல் மனம் செலுத்தாதவர் மேலோர்' என்பது கருத்து. பசைதல்-பற்று வைத்தல். பரிதல்-மேற்கொள்ளல்.

## 7. சினம் இன்மை

துறவு நெறியிலே மனம் செலுத்துபவர், மிகவும் முதன்மையாகக் கொள்ளவேண்டிய பண்பு, சினம் கொள்ளாதிருத்தல். துறவினால் பெற்ற மன உறுதியும் ஆற்றல்களும் சினம் எழுந்தகாலத்து முற்றவும் அழிந்துவிடும். அத்துடன், அதனால் பலரும் துன்புறுதலும் கூடுமாதலால், அதனை ஒழிப்பதன் முதன்மையை எல்லா அறநூல்களுமே வற்புறுத்தும். திருக்குறளின் வெகுளாமையும் இதனையே கூறும்.

"சினம் இன்மை" என்பது, "பிறர் அறிந்தோ அறியாமலோ, நடந்துகொண்ட விதத்தால் சினம் கொள்ளவேண்டிய நிலைமையானது எழுந்தாலும், அப்போதும் சினத்தை எழாமல் தன்னுள்ளே அடக்கி, அவர்மீது இரக்கங் கொள்ளுதல்'' என்று அறிதல் வேண்டும்.

துறவறத்தாருக்குப் போலவே இல்லறத்தாருக்கும் இது இன்றியமையாத பண்பாகும். சிறு சினமும், அதனைத் தொடர்ந்து வரும் பகைமை உணர்ச்சியும் எவ்வளவோ தீமைகளுக்கெல்லாம் காரணமாகிவிடுவதை நாம் கண்கூடாகக் காணலாம் அல்லவோ;

61. **மதித்துஇறப் பாரும் இறக்க! மதியார்,**
**மிதித்துஇறப் பாரும் இறக்க! -மிதித்தேறி,**
**ஈயுந் தலைமேல் இருத்தலால், அஃதறிவார்**
**காயும் கதமின்மை நன்று.**

தம்மை மேன்மைப்படுத்திச் செல்பவர்களும் செல்வார் களாக; தம்மை மதியாமல் கீழ்மைப்படுத்திச் செல்பவர்களும் செல்வார்களாக; மிகவும் இழிவான ஈயுங்கூட தம் தலைமேல் மதித்து ஏறிவந்து இருப்பதனால், அதனை அறிந்தவர்கள், பிறரையும் தம்மையும் சுட்டுப் பொசுக்கும் சினத்தைக் கொள்ளாதவராக இருப்பதே, மிகவும் நன்மை தருவதாகும்.

'உயர்ந்தோர் எவரையும் மதிப்பார்கள்; இழிந்தோர் சான்றோரையும் அவமதிப்பார்கள்; அதனால் இப்படி அவமதிப்போரைத் தலைமேல் ஏறி அமர்கின்ற ஈயைப் போலக் கருதிப் பொருட்படுத்தாமல் இருக்கவேண்டும்; அவர்மேற் சினங்கொள்ளல் கூடாது' என்பது கருத்து.

62. **தண்டாச் சிறப்பிற்றம் இன்னுயிரைத் தாங்காது,**
**கண்டுழி எல்லாம் துறப்பவோ, -மண்டி,**
**அடிபெயராது, ஆற்ற இளிவந்த போழ்தின்**
**முடிகிற்கும் உள்ளத் தவர்?**

வைத்த காலைப் பெயர்த்து எடுத்துவைக்கவும் முடியாதபடி பெரிய அவமதிப்பு இடைவிடாது நெருங்கி வந்த போதிலும், அதற்கும் உள்ளங் கலங்காது, தாம் மேற்கொண்ட செயலை நிறைவேற்றும்படியான மனவுறுதி கொண்டவர்கள், சிறந்தவர்கள். அவர்கள் நீங்காத சிறப்பினையுடைய தமது இனிதான உயிரைப் பேணித் தாங்குவதற்கு நினையாமல், கண்டவற்றில் எல்லாம் செல்லவிட்டு, அதனை விட்டுவிட என்றாவது நினைப்பார்களோ?

பிறர், தமக்குச் சினமுண்டாகச் செய்வதற்காகச் சினங்கொண்டு உயிரைவிடும் அறியாமை உடையவரைக் குறித்துச் சொல்லியது இது. 'சான்றோர் அவ்வாறு உயிரைச் சிதறவிடாமல் அமைதியாக இருப்பர்' என்பது கருத்து. தண்டாச் சிறப்பு - நீங்காத சிறப்பு. துறத்தல் - இழத்தல்.

63 **காவாது, ஒருவன்தன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்**
**ஓவாதே தன்னைச் சுடுதலால், - ஓவாதே**
**ஆய்ந்தமைந்த கேள்வி அறிவுடையார், எஞ்ஞான்றும்**
**காய்ந்தமைந்த சொல்லார், கருத்து.**

*பிறன் ஒருவன் தன் வாயைக் காத்துக் கொள்ளாமல், அதனைத் திறந்து சொல்லும் கடுஞ்சொல்லானது, ஓய்வில்லாமல் தம்மைச் சுட்டு வருத்துதலால், ஒழிவில்லாமல் மெய்ப்பொருள்களை ஆராய்ந்து நிரம்பிய கேள்வியைப் பெற்ற அறிவுடையவர்கள், எப்போதும் பிறரைக் கோபித்துக் கடுமையான சொற்களைத் தாம் சொல்லவே மாட்டார்கள்.*

*'பிறருடைய கடுஞ்சொற்களால் படுகின்ற வேதனையை மனத்துட் கொண்டு, பிறர்பால் அத்தகைய கடுஞ்சொற்களைத் தாம் ஒருபோதும் கூறமாட்டார்கள் சான்றோர்கள்' என்பது கருத்து. கறுத்து-சினந்து.*

64. **நேர்த்து நிகர் அல்லார் நீர்அல்ல சொல்லியக்கால்**
**வேர்த்து வெகுளார், விழுமியோர்,-ஓர்த்ததனை,**
**உள்ளத்தான் உள்ளி, உரைத்துராய், ஊர்கேட்பத்**
**துள்ளித் தூண் முட்டுமாம், கீழ்.**

*தமக்கு ஒப்புமை இல்லாதவர்கள், தம்மை எதிர்த்துத் தகுதியற்ற சொற்களைச் சொல்லிய காலத்தும், அதனைக் கேட்டு மனம் புழுங்கிச் சினங்கொள்ள மாட்டார்கள் மேலானவர்கள். கீழ்மக்களோ, அந்தச் சொற்களை நன்றாக ஆராய்ந்து, தம் உள்ளத்தினால் நினைந்து, பலரும் கேட்ப அவர்க்குச் சொல்லி, ஊரெல்லாம் கேட்கும்படி உராய்ந்து துள்ளிக்குதித்துத், தூணிலேயும் போய் முட்டிக் கொள்வார்கள்.*

*'அற்பர் செய்யும் நிந்தனைகளைப் பொருட்படுத்த மாட்டார்கள் பெரியோர்கள். கீழ்மக்களோ, 'அவன் அப்படிச் சொல்லலாயிற்றா' என உள்ளங்கொதித்துப், பலருக்குஞ் சொல்லித் தமக்கே அதிகமான இழிவைத் தேடிக் கொள்வார்கள்' என்பது கருத்து. 'ஊர் கேட்ப' என்பது, இவன் துள்ளலும் உராய்தலும் தூண்முட்டலும் கண்டு ஊரார் வந்து என்னவென்று கேட்க எனவும் பொருள்படும்.*

65. **இளையான் அடக்கம் அடக்கம், கிளை பொருள்**
**இல்லான் கொடையே கொடைப்பயன்;-எல்லாம்**
**ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்**
**பொறுக்கும் பொறையே பொறை.**

புலன் வழியாக எழுகின்ற ஆர்வத் துடிப்புக்களை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றலுடைய இளமைப் பருவத்தினன், அந்த ஆர்வங்களை அடக்கி நடப்பதே மேலான அடக்கமாகும். மென்மேலும் வளர்ச்சியடையும் பொருள்நிலை இல்லாத ஒருவன், தன்னிடம் உள்ளதையும் மனமுவந்து கொடுப்பதே உண்மையான பயன்தரும் ஈகையாகும். எல்லோரையும் வெற்றிகொள்ளத் தகுந்த உடல் வலிமையையும் உள்ள உறுதியையும் உடையவனான ஒருவன், சினங் கொள்ளாமல், பிறர் தனக்குச் செய்த தீச்செயல்களைப் பொறுத்துக் கொள்ளும் பொறுமையே உண்மையான பொறுமையாகும்.

'ஏலாமையாற் சினங்கொள்ளாதிருத்தல் சிறப்பன்று; தன்னைப் பழித்தவனை ஒறுக்கும் ஆற்றல் உடையவனின் பொறுமையே பொறுமை' என்பது கருத்து. கிளை பொருள்-கிளைக்கும் பொருள். மதுகை-உடல் வலிமை. உரன்-உள்ள உறுதி.

66. **கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச் சொல்**
**எல்லாருங் காணப் பொறுத்து, உய்ப்பர்-ஒல்லை**
**இடுநீற்றாற் பையவிந்த நாகம்போல், தத்தம்**
**குடிமையான் வாதிக்கப் பட்டு.**

மந்திரித்து இட்ட திருநீற்றினால் படம் அடங்கின நாகப் பாம்பைப் போலத் தங்கள் தங்கள் குடிமையின் தகுதி காரணமாக வருத்தப்பட்டுக் கயவர் வாயினின்றும் வந்து கல்லால் எறிந்தது போலத் தாக்குகின்ற கொடுமையான சொற்களையும், யாவரும் காணும்படியாகப் பொறுத்துத் தமது தகுதியை நிலைபெறுத்துவார்கள் சான்றோர்கள்.

குடிமை-குலப்பெருமை. 'இழிந்தோர் பேச்சுக்கு எதிராகத் தாமும் இழிசொற்களைக் கூறாமல், தம் குடியின் தகுதி கருதி அவ்விழிந்தோர் பேச்சையும் உயர்ந்தோர் பொறுத்துக் கொள்வர்' என்பது கருத்து. உய்த்தல்-செலுத்துதல்; தம் பெருமையை நிலைநாட்டுதல்.

67. **மாற்றாராய் நின்று தம் மாறேற்பார்க்கு ஏலாமை**
**'ஆற்றாமை' என்னார், அறிவுடையோர்;-ஆற்றாமை**
**நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால், தாமவரைப்**
**பேர்த்தின்னா செய்யாமை நன்று.**

தமக்குப் பகைவர்களாக எதிர் நின்று, தம் பகைமைக்கு ஏற்ற செயல்களையே செய்துகொண்டிருப்பவருக்கு எதிராகத்

*தாமும் அப்படிச் செய்யாமையினை, ஆற்றலில்லாமை என்று அறிவுடையோர் கருதவே மாட்டார்கள். ஆதலால், அப்படிப் பகைவர்களும் பொறுமையின்றி எதிர்த்துக் கொடுமையான செயல்களைச் செய்த காலத்தும் தாங்கள் அவர்களுக்கு மீட்டும் அப்படிப்பட்ட கொடுமைகளைச் செய்யாமலிருப்பதே நன்மை தரும் பண்பாகும்.*

*'வீரர்க்குத் தம்மை எதிர்த்தாரை அழிப்பதே பண்பு; ஆனால், துறவியர்க்கோ அது பண்பாகாது; பொறுப்பதே பண்பு' என்பது கருத்து. மாற்றார்-மாறுதல் உடையவர்; பகைவர்.*

**68. நெடுங்காலம் ஓடினும், நீசர் வெகுளி**
**கெடுங்காலம் இன்றிப் பரக்கும்; - அடுங்காலை**
**நீர்கொண்ட வெப்பம்போல் தானே தணியுமே,**
**சீர்கொண்ட சான்றோர் சினம்.**

*கீழ்மக்களுடைய சினமானது நெடுங்காலம் ஓடினாலும் கூட அதற்கு ஓர் அழிவு காலம் இல்லாமல் மென்மேலும் வளர்ந்து கொண்டே போகும். காய்ச்சும் பொழுது நீரானது கொண்ட வெப்பத்தைப் போலச் சீர்மையான உள்ளத்தைக் கொண்ட சான்றோர்களின் சினமானது, பிறரால் ஆற்ற வேண்டாமல் தானே சிறிது நேரத்தில் வெப்பம் அடங்கி ஆறிப்போய் விடும்.*

*'கீழ்மக்கள் அறியாமை காரணமாக வரும் அகந்தையுடையவர். அதனால், அவர் கொண்ட சினம் நாளுக்கு நாள் அவர்பால் வளரும். சான்றோர் சினமோ முதலிலே கொதிப்படைந்தாலும் அவரது உள்ளச் சீர்மை காரணமாகக் காலப்போக்கில் தானாகவே ஆறிப்போய் விடும்' என்பது கருத்து. நீசர்-கீழ்மையான குணத்தினர்.*

**69. உபகாரம் செய்ததனை ஓராதே, தங்கண்**
**அபகாரம் ஆற்றச் செயினும்,-உபகாரம்**
**தாம்செய்வ தல்லால், தவற்றினால் தீங்கூக்கல்**
**வான்தோய் குடிப்பிறந்தார்க்கு இல்.**

*தனக்குச் செய்த உபகாரத்தினை நினையாமல், தம்மிடத்திலே அபகாரத்தையே ஒருவன் மிகுதியாகச் செய்தானானாலும், அவனுக்குத் தாங்கள் மீண்டும் உபகாரமே செய்வதல்லாமல், பிசகியுங்கூடத் தீமையைச் செய்யத்*

தொடங்குதல், வானளாவிய புகழினை உடைய உயர்குடியிலே பிறந்தவர்களிடத்திலே ஒரு போதும் இல்லையாகும்.

'உபகாரத்திற்குப் பதில் அபகாரஞ் செய்தானே?' என்று சினங்கொள்ளாமல் பொறுத்துக் கொள்வதுடன், மீண்டும் அவனுக்கு உபகாரமே செய்யும் பரந்த மனப்பண்பு உடையவரே உயர்குடிப் பிறந்தார் எனத் தக்கவர்' என்பது கருத்து. தீங்கு ஊக்கல்-தீமை செய்யத் தொடங்குதல்.

70. **கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டும், தம்வாயாற்**
**பேர்த்துநாய் கௌவினார் ஈங்கில்லை,-நீர்த்தன்றிக்**
**கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற், சொல்பவோ,**
**மேன்மக்கள் தம்வாயான் மீட்டு?**

நாயானது நம்மீது கோபித்து நம்மைக் கௌவிக் கொள்ளுதலைக் கண்டும், அதனாற் சினங்கொண்டு மீண்டும் அந்த நாயை நாம் நம் வாயாற் கௌவுதல் இந்த உலகத்திலே இல்லை. அதனால், கீழ்மக்கள், குணம் உடையதல்லாமல் கீழ்த்தரமான பேச்சுக்களையே பேசினாலும், அதனால் சினங்கொண்டு மேன்மக்கள், திரும்பவும் தம் வாயால் அவர்களை அப்பேச்சுக்களால் ஏசுவார்களோ?

'நாய் கடித்தால் எவரும் அதனைத் திருப்பிக் கடிப்பதில்லை; அது போலவே, கீழோர் பழித்தாலும் அவர்களைச் சான்றோர் திருப்பிப் பழிக்க மாட்டார்கள்' என்பது கருத்து. ஏனென்றால், அத்தகைய இழி சொற்களை அவர்கள் வாயாற் சொல்லாத பண்பினர் ஆதலால் என்க.

## 2. இல்லற இயல்

செல்வம் நிலையாமை முதலாக ஏழு அதிகாரங்கள் துறவறம் பற்றிய உறுதிகளை வற்புறுத்தின. இனி இல்லறத்தாருக்கு உறுதி தரும் செய்திகள். இதுமுதல் ஆறு அதிகாரங்களுள் சொல்லப்படுகின்றன.

இம்மை மறுமையாகிய இரண்டிடத்தும் இன்பந் தருவது இல்லற நெறியாகும். வாழ்க்கைத் துணைவியாகிய கற்புடைய மனையாளோடும் கூடி இருந்து செய்யப்படும் அறவாழ்வு இது. இந்த வாழ்வுதான் உலகிற்குப் பலவகையானும் உயர்வையும் சிறப்பையும் வளத்தையும் வாழ்வையும் தருவதாகும்.

இல்வாழ்வின்கண் இன்பம் நிலவுவது போலவே துன்பங்களும் மிகுதியாக விளங்குகின்றன. அவற்றால், உள்ளம் சோர்வு கொண்டு விடாமல் உறுதியுடன் ஒழுக்க நெறி நின்று பேணிவருதல் வேண்டும். அப்படிப் பேணுவதே இல்லற நெறியைச் செம்மையுடன் பின்பற்றுவதாகும்.

## 8. பொறை உடைமை

பொறை உடைமையாவது - பொறுமை உடையவராக விளங்குதல். இல்வாழ்வு தன்வீடு, தன் பொருள், தன் வாழ்வு என்ற புறப்பற்றினாலும், எனது என்னும் அகப்பற்றினாலும் நிலைபெறுவது. இந்தப் பற்றுக்கள் அளவுகடந்து போய் விடாமல் முறையோடு எங்கும் சென்று கொண்டிருக்கும் வரையிலே எவ்வகைத் தீங்கும் ஏற்படாது.

ஆனால், காரணம் பற்றியாவது, அல்லது அறியாமை பற்றியாவது தம்முடன் கலந்தவர் செய்த பிழையைப் பொறுத்து, இல்வாழ்வுப் பிணைப்பை நெகிழவிடாமல் பேணிக்கொள்ள வேண்டிய கடமையை எவரும் மறந்து விடக்கூடாது. அறியாமை வயப்பட்ட உயிர்களாதலால், பொறுமையிழக்க நேர்கின்ற சந்தர்ப்பங்களும் பலவாகலாம். பொறுமை இழந்தால் வரும் தீமைகளை உளங்கொண்டு பொறுமையோடிருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துவது இந்தப் பகுதி.

சினம், பொதுவாக அயலார் பற்றியும், பொறுமை இன்மை கலந்தார் பற்றியும் ஏற்படுவது என்ற வேறுபாட்டை அறிந்து இதனைப் படிக்கவேண்டும்.

71. **கோதை அருவிக் குளிர்வரை நன்னாட!**
**பேதையோ டியாதும் உரையற்க! -பேதை,**
**உரைக்கிற், சிதைந்துரைக்கும்; ஒல்லும் வகையான்,**
**வழுக்கிக் கழிதலே நன்று.**

மாலையினைப் போன்ற தோற்றத்துடன் வீழ்கின்ற அருவிகளை உடைய, குளிர்ச்சி பொருந்திய மலைகளையுடைய நல்ல நாட்டிற்கு உரியவனே! அறிவில்லாத பேதைமாக்களோடு எதனையும் எப்போதும் சொல்லாதிருப்பாயாக. அந்தப் பேதை எதையாவது சொல்வதென்றால் சொற்பொருள்களின் வரம்புகள் சிதைந்ததாகவே பேசுவான். கூடுமான வகையிலே எல்லாம் அத்தகையவரைத் தப்பி, அவர்களுடைய தொடர்பு களின்றும் நீங்குதலே நினக்கு நன்மை தருவதாகும்.

பேதை சொல்லாற்றலையும், சொற்பொருளையும் உணராதவன், அவன்வழி அனுப்புஞ் செய்திகளைத் தவறாக அவன் சென்று உரைக்க, அதனாற் காரியம் கெட, உன்னிடம் எழும் சினத்தையும் அவமானத்துக்கு அஞ்சிப் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிருக்கும். ஆகவே அத்தகையாரின் தொடர்பையே கைவிடுதல் நல்லது என்பது கருத்து.

72. **நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால், மற்றது**
**தாரித்திருத்தல் தகுதி; மற்று-ஓரும்**
**புகழ்மையாக் கொள்ளாது, பொங்குநீர் ஞாலம்**
**சமழ்மையாக் கொண்டு விடும்.**

நேர்மையான பண்பு அற்றவர்களாகிய கீழோர்கள், பண்பற்ற இழிந்த சொற்களைத் தம்மைக்குறித்துச் சொல்லிய காலத்திலும், அதனைப் பாராட்டாது பொறுத்திருப்பதே அறிவுடையோரின் தகுதியுடைமையாகும். அதற்கு மாறுபட்டதாகிய பொறுமையின்மையை, மிக்க நீர்ப்பெருக்கையுடைய கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ள உயர்ந்தவர்கள், புகழுக்குக் காரணமாகக் கொள்ளாது, பழித்தற்குக் காரணமாகவே எண்ணித் தம்மிடத்தினின்றும் நீக்கிவிடுவார்கள்.

'சிறியோர் செய்த சிறுபிழை எல்லாம் பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே' என்பது இது. புகழ்மைக்கு எதிர்ப்பதம் சமழ்மை. நேர் அல்லார் - தமக்குச் சமம் இல்லாதவரும் ஆம். தாரித்தல் - பொறுத்தல்.

73. **காதலார் சொல்லும் கடுஞ்சொல், உவந்துரைக்கும்**
**ஏதிலார் இன்சொலின் தீதாமோ - போதெலாம்**
**மாதர்வண் டார்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப!**
**ஆவ தறிவார்ப் பெறின்?**

பூக்களிலே எல்லாம் அழகிய வண்டினங்கள் மொய்த்து ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கின்ற, நிறைந்த கடலினது குளிர்ச்சியான கடற்கரையினையுடைய நாட்டின் தலைவனே! தமக்கு நன்மையாவது எதுவென ஆராய்ந்து அறிபவரைப் பெற்றால், தம்மிடத்து அன்பு உடையவர் சொல்லும் கடுமையான சொற்கள் தம்பால் உவப்புடன் சொல்லுகின்ற அயலாரின் இனிய சொற்களைவிடத் தீதாகுமோ?

'பகுத்தறிவு உடையவர்கட்கு அன்புடையவர் கூறும் கடுஞ்சொல்லே, அயலார் கூறும் இன்சொல்லினும் விருப்பந்தருவதாயிருக்கும்' என்பது கருத்து. அதனைப்

பொறுமையுடன் ஏற்றுத் தம் குற்றம்தெளிதல் சொல்லப் பட்டது. மாதர்-அழகிய; மலிகடல்-நிறைந்த கடல்.

**74. அறிவது அறிந்தடங்கி, அஞ்சுவது அஞ்சி,**
**உறுவது உலகுவப்பச் செய்து,-பெறுவதனால்**
**இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்**
**துன்புற்று வாழ்தல் அரிது.**

*அரிய வேண்டிய நன்மை தீமைகளைப் பற்றிய நுட்பங்களை எல்லாம் அறிந்து அடக்கம் உடையவராகி, அஞ்சி ஒதுங்குவதற்குரிய பழிச்செயல்களுக்கு அஞ்சி ஒதுங்கித், தமக்கு நேர்ந்த காரியத்தை உலகம் உவக்குமாறு முறையே செய்து இன்பமுற்று வாழுகின்ற இயல்பினை உடையவர்கள், எப்போதும் துன்பமுற்று வாழ்தல் என்பதே அரிதாகும்.*

*'நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, பொறுமையுடன் தம் வாழ்வினை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு என்றும் துன்பம் நேர்வதில்லை' என்பது கருத்து.*

**75. வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்**
**தேற்றா வொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்.**
**ஆற்றுந் துணையும் பொறுக்க; பொறானாயின்**
**தூற்றாதே, தூர விடல்!**

*இரண்டுபேர் தம்முன் வேற்றுமை இல்லாமல் கலந்து நட்புக் கொண்ட காலத்திலே, அவர்களுள் நம்பத்தகாத தீய ஒழுக்கம் ஒருவனிடத்தில் உண்டாகுமானால், மற்றவன் தன்னால் பொறுக்கக்கூடிய அளவுவரைக்கும் பொறுக்கக் கடவன்; அப்படிப் பொறுக்க மாட்டானாயின் அந்த நண்பனைத் தூற்றாமல் அவனுடைய நட்பை மட்டும் தூரமாக ஒதுக்கிவிடக் கடவன்.*

*'நண்பனிடத்துத் தீய நடத்தை உள்ளதென்று பின்னர் அறிந்தால் பொறுக்கும் அளவுக்குப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும். அந்த அளவினைக் கடந்த போதும், அவன் நட்பை விட்டு விடலாமே அல்லாமல், பொறுமையிழந்து அவனைப் பலரும் அறியத் தூற்றுதல் கூடாது என்பது கருத்து. தேற்றா-நினைத்ததற்கும் அரிய; தெளிவற்ற.*

**76. இன்னா செயினும், இனிய ஒழிக!' என்று,**
**தன்னையே தானோவின் அல்லது,-துன்னிக்**
**கலந்தாரைக் கைவிடுதல், கானக நாட!**
**விலங்கிற்கும் விள்ளல் அரிது!**

காடுகள் செறிந்து நாட்டை உடையவனே! நண்பர்கள் ஓரோர் காலத்து இனிமையற்ற செயல்களையே செய்தாலும். அவை இனியனவாக நீங்கட்டும் என்று நினைத்துத் தன்னையே தான் வெறுப்பதல்லாமல், நெருங்கித் தன்னிடத்து நட்புக் கொண்டவரைக் கை விட்டுவிடுதல் விலங்கினங்களுக்கும் அருமையான செயலாகும்.

நண்பர் தமக்குத் தீமை செய்யும்போது, அது ஊழ் வினைப் பயன்; இனிதாக நீங்கட்டும் எனப் பொறுத்தல் வேண்டுமே அல்லாமல், நட்பினரைக் கைவிடுதல் கூடாது என்பது கருத்து. விள்ளல் - விடுதல். விலங்கினமே பழகியவரை அவர் தீமை செய்தாலும் விட்டு நீங்காது பொறுக்கின்றனவே; மனிதன் பொறுக்க வேண்டாமோ என்பதும் உணர்த்தப்பட்டது.

77. பெரியார் பெருநட்புக் கோடல்; தாம் செய்த
அரிய பொறுப்பவென் றன்றோ?-அரியரோ
ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட!
நல்லசெய் வார்க்குத் தமர்?

ஒல்லென்று ஒலிமுழங்கும் அருவிகளைக் கொண்ட உயர்ந்த மலைகளையுடைய நல்ல நாட்டிற்கு உரியவனே! பெரியோர்களுடைய மேன்மையான தொடர்பினை யாவரும் விரும்பிக் கொள்ளுதல், 'தாம் செய்த பொறுத்தற்கரிய தவறுகளையும் அவர்கள் பொறுத்துக் கொள்வார்கள்' என்றதனால் அல்லவோ? நல்லவைகளையே செய்பவர்களுக்கு நண்பராகச் சேருபவர்கள் அருமையானவர்களோ?

'நன்மை செய்பவர்களுக்கு எவரும் நண்பராவர். பெரியோர் பிறர் குற்றங்களைப் பொறுத்து நன்மை செய்பவர்கள்; ஆதலால், அவர்கட்கு நண்பர்களும் மிகுதியாவர்' என்பது கருத்து. தமர்-உறவினர்; அவர் போன்று நெருக்கம் உடைய நண்பர்.

78. வற்றி, மற் றாற்றப் பசிப்பினும், பண்பிலார்க்கு
அற்றம் அறிய உரையற்க!-அற்றம்
மறைக்குந் துணையார்க்கு உரைப்பவே, தம்மைத்
துறக்குந் துணிவிலா தார்.

உடலானது வற்றி உலர்ந்துபோகும் அளவுக்கு மிகுதியான பசித்துயரமானது ஏற்பட்டாலுங்கூடப், பண்பில்லாதவர் களுக்குத் தமது வறுமையை அறியும்படியாகச் சொல்ல வேண்டாம். மிகுதியான துயரம் வந்த காலத்தில் தம் உயிரை,

விட்டுவிடும் துணிவில்லாதவர்கள். தமது வறுமையை அதனை நீக்கவல்ல நண்பர்களுக்குச் சொல்லுவார்கள்.

'மிக்க வறுமை நேர்ந்தவிடத்தும், பெரியோர் அதனைப் பொறுத்துக் கொண்டு உயிரையேனும் விட்டு விடுவார்களே அல்லாமல் பிறரிடம் சொல்லமாட்டார்கள்; அப்படி உயிர்விடத் துணிவற்றவர்களுங்கூட அதனைப்பற்றி வெளியே கூறி அவமதிப்புக்கு ஆளாகாமல் உதவுபவர்களிடம் மட்டுமே சொல்லலாம்' என்பது கருத்து.

**79. இன்பம் பயந்தாங்கு இழிவு தலைவரினும்**
**இன்பத்தின் பக்கம் இருந்தைக்க!-இன்பம்**
**ஒழியாமை கண்டாலும், ஓங்கருவி நாட!**
**பழியாகா வாறே தலை.**

உயர்ந்த அருவிகளையுடைய நாட்டிற்கு உரியவனே! இன்பத்தைத் தந்து, அவ்விடத்தே தாழ்மை நேர்ந்தாலும், அதனால் அப்படி இன்பஞ் செய்தலை மீண்டும் விட்டுவிடாது, அதன் பக்கமாகவே இருக்கின்ற உனக்கு, இன்பம் நீங்காமல் இருப்பதைப் பார்த்தாலும், பழிப்பு உண்டாகாத அறவழியே தலைமையானதாகும்.

'இன்பம் வருமிடத்துத் தாழ்வும் வருமானால் துன்பத்தை யேனும் பொறுத்துக்கொள்ள வேண்டுமேயன்றித் தாம் இன்பத்தை விரும்பித் தாழ்வுக்கு உட்பட்டுப் பழிக்கு ஆளாகக் கூடாது' என்பது கருத்து. இருந்தைக்க-இருக்கும் உனக்கு. ஓங்கு அருவி-மேலாக எழும்பி விழும் அருவி.

**80. தான்கெடினும்,தக்கார்கேடு எண்ணற்க! தன்னுடம்பின்**
**ஊன்கெடினும், உண்ணார்கைத்து உண்ணற்க!-**
**வான்கவிந்த**
**வையகம் எல்லாம் பெறினும், உரையற்க,**
**பொய்யோடு இடைமிடைந்த சொல்!**

தான் அழியவே நேர்ந்தாலும் அதனை நீக்கிக் கொள்ளும் பொருட்டு மேலோர்களுக்குக் கேடு செய்வதை ஒருவன் எண்ணாதிருப்பானாக. தன் உடம்பின் ஊனே வற்றி, உடலே அதனால் அழிவதானாலும், உண்ணத்தகாதவர் கையிலிருந்து கிடைக்கும் உணவை ஒருவன் ஒருபோதும் உண்ணா திருப்பானாக. வானம் கவிந்துள்ள உலகம் அனைத்துமே பெறுவதாயிருந்தாலும், பொய் இடையிடையிலே கலந்த சொல்லை, ஒருவன் என்றுமே சொல்லாதிருப்பானாக!

'எவ்வளவு வறுமை வந்த காலத்தினும், பொறுமையோடு அதனைச் சகித்துக் கொள்ளவேண்டுமே யல்லாமல், தவறான செயல்களிலே ஈடுபடக்கூடாது' என்பது கருத்து. கைத்து-கையினின்றும். கவிந்த-மூடிய.

## 9. பிறர்மனை நயவாமை

பிறருடைய மனைவியரைக், காமத்தால் அறிவிழந்து விரும்பாமைபற்றிக் கூறுவது இந்தப் பகுதி. இல்லற வாழ்விலே தன் மனைவியுடன் கூடி இன்புற்று அறம்பேணும் நடத்தையினை மேற்கொண்டவன் இல்லறத்தான். எனினும், காமத்தால் அவன் கட்டுமீறிச் செல்லுதல் பற்றி எண்ணுவது கூடாது என்று எச்சரிப்பது இந்தப் பகுதியின் நோக்கமாகும்.

காமம் பொறுத்தற்கு அரியது என்பதுபற்றிப் பொறையுடைமைக்குப் பின் இது வைக்கப்பட்டது. இது பொறுத்தற்கரிய பெருங்குற்றம் என்பதும் உணர்த்தப்பட்டது.

'இல்வாழ்வு' ஒவ்வொரு இல்லத்துத் தலைவியின் அமைதியைப் பொறுத்தே அமைவது. அதனால், பிறனின் இல்லத் தலைவியை விரும்புவதன்மூலம் ஒருவன் அந்த அறத்தின் அடிப்படைக்கே ஊறு செய்பவனாகின்றான் என்பதை உணரவேண்டும். அதனால், அது மிகவும் தீயது என உணர்ந்து அதனைவிடவும் வேண்டும்.

81. **அச்சம் பெரிதால்; அதற்கின்பம் சிற்றளவால்;**
**நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்; - நிச்சலும்**
**கும்பிக்கே கூர்த்த வினையால்; பிறன்தாரம்**
**நம்பற்க, நாணுடை யார்!**

பிறருடைய மனைவியரை விரும்பி, எழுகின்ற காலத்திலே தம்முள் தோன்றுகின்ற அச்சமோ மிகவும் பெரிதாகும். அந்தப் பேரச்சத்திற்குக் கைமாறாகக் கிடைக்கும் இன்பமோ மிகவும் சிறிதளவினதே. அந்த ஒழுக்கத்தின் உண்மையான நிலையினை ஆராய்ந்து பார்க்குமிடத்து, அரசனாற் கொலை செய்யப்படுதலும் நேர்வதாகும். எந்நாளும் நரகத்திற்கே கொண்டுவிடும். மிகுந்த தீவினையும் அதுவாகும். அதனால், நாணம் உடையவர் எவருமே அயலானது மனைவியை விரும்பாதிருக்கக் கடவர்.

'பிறன் மனைவியை விரும்புதல் இம்மையினும் துன்பந்தரும்; மறுமையினும் துன்பந்தரும்' என்பது கருத்து.

கும்பி-நரகம். நம்பற்க-விரும்பற்க. கூர்த்த மிகுதியான. 'நாணுடையார் நம்பற்க.' எனவே, நம்புவோர் நாணம் அற்றவர் என்றனர்.

**82. அறம், புகழ், கேண்மை, பெருமை, இந் நான்கும்**
**பிறன்தாரம் நச்சு வார்ச் சேரா; - பிறன்தாரம்**
**நச்சுவார்ச் சேரும், பகைபழி பாவமென்று**
**அச்சத்தோ டிந்நாற் பொருள்.**

*அயலானது மனைவியை விரும்புகிறவர்களைப் பகையும், பழியும், பாவமும், அச்சமும் ஆகிய நான்கு பொருள்களுமே சென்று அடையும். அறம், புகழ், நட்பு, பெருமை ஆகிய நான்கு பொருள்களும் பிறன்மனைவியை விரும்பிச் செல்கின்ற வனிடத்திலே ஒரு நாளும் சென்று அடையா.*

*அப்பெண்ணைச் சார்ந்தவர் மட்டுமல்லாமல், அச்செயலைக் கேட்ட எவரும் பகைவராவராதலால் அறம், புகழ், கேண்மை, பெருமை என்பவை எல்லாம் இல்லாமற்போம் என்று அறிக. அச்சம், தன்னுள் எழுவது; பகை, அவள் இல்லத்தார் கொள்வது; பழி, ஊரில் எழுவது; பாவம், மறுமையில் வந்து பற்றும் தீவினைப் பயன்.*

**83. புக்கவிடத்து அச்சம், போதரும் போதச்சம்,**
**துய்க்கும் இடத்தச்சம், தோன்றாமற் காப்பச்சம்;**
**எக்காலும் அச்சம் தருமால்; எவன்கொலோ,**
**உட்கான், பிறனின் புகல்?**

*பிறனுடைய மனைவியை அடைய விரும்பி, அவ்விருக்கும் இடத்தை நாடிப் போகும்பொழுது அச்சம் ஏற்படுகின்றது. போய்த் திரும்புபொழுதும் அச்சம் ஏற்படு கின்றது. அவளுடன் கூடி அநுபவிக்கும்போதும் அச்சம் ஏற்படு கின்றது. அந்த உறவு வெளியே தோன்றி விடாமற் காப்பதிலும் அச்சம் ஏற்படுகின்றது. இவ்வாறு எப்போதும் அச்சமே தருவதாயிருந்தும், ஒருவன், பிறன் மனையாளை விரும்பிப் போவதற்கு ஏன் பயப்படமாட்டேன் என்கிறான்?*

*பிறன் மனை நயப்பவன் கொள்ளும் அச்சமிகுதி கூறி, அதனை நயவாமை இதன்கண் வலியுறுத்தப்பட்டது. உட்குதல்-அஞ்சுதல்.*

**84. காணிற் குடிப்பழியாம்; கையுறிற், கால்குறையும்;**
**மாணின்மை செய்யுங்கால், அச்சமாம்;-நீணிரயத்**

**துன்பம் பயக்குமால்; துச்சாரி! நீகண்ட**
**இன்பம், எனக்கெனைத்தால்? கூறு.**

*பிறர் காண நேர்ந்தால், செல்பவனுக்கு மட்டுமல்லாது அவன் குடும்பத்திற்கே பழிச்சொல் ஏற்படும். கையோடு அகப் பட்டுக் கொண்டாலோ காலையே முறித்துவிடுவார்கள். மாட்சியற்ற அந்தச் செயலைச் செய்யுங்காலத்து எழும் அச்சமோ மிகுதியாகும். அந்தச் செயல், நெடுங்காலம் அநுபவிக்கும்படியான நரக வேதனையையும் தரும். ஆகவே, தீய செயலிலே ஈடுபடுபவனே! நீ அதனாற் கண்ட இன்பம் எவ்வளவோ? எனக்குச் சொல்வாயாக*

*'அதனால் விளைவது அத்தனையும் இம்மையினும் மறுமையினும் துன்பமே. அதனால், அதன்பால் மனஞ் செலுத்துதல் கூடாது' என்பது கருத்து. எனைத்தால் - எவ்வளவினதோ?*

85. **செம்மையொன் றின்றிச் சிறியார் இனத்தராய்க்,**
**கொம்மை வரிமுலையாள் தோண்மரீஇ-உம்மை**
**வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே இம்மை**
**அலியாகி ஆடிஉண் பார்.**

*ஒருவகையான நல்ல நடத்தையும் இல்லாமல், கீழானவர்களோடு சேர்ந்தவர்களாக, திரட்சியையும் தொய்யிலையும் உடைய முலைகளை உடையவளது தோளைச் சேரவிரும்பி, முன் பிறவியிலே, தம் வலிமையினால் பிறருடைய மனையாளிடம் சென்ற பாவிகளே. இந்தப் பிறவியிலே ஆண் தன்மை அற்றுப் போனவர்களாகிக் கூத்தாடிப் பிச்சையெடுத்து உண்பவர்களான பேடிகள் ஆவர்.*

*கொம்மை-இளமையும், அழகும் வன்மையும், பருமையுமாம். முற்பிறப்பில் தமக்குள்ள வலிமையால் பிறர் மனைவியரைக் கூடி இன்புற்றவர்கள், இப்பிறப்பில் அலிகளாகிக் கூத்தாடிப் பிழைக்கிறார்கள்; அவர்களைக் கண்டாவது உள்ளது தெளிவு கொள்க' என்பது கருத்து. அலி-பேடி. ஆண்மையும் பெண்மையும் அற்ற அலித் தன்மை கொண்ட உருவம். மரீஇ - மருவி; விரும்பி.*

86. **பல்லார் அறியப் பறையறைந்து, நாள்கேட்டுக்,**
**கல்யாணஞ் செய்து, கடிபுக்க-மெல்லியல்**
**காதன் மனையாளும் இல்லாளா, என்னொருவன்**
**ஏதின் மனையாளை நோக்கு?**

திருமணத்திற்குத் தகுதியான நாளினைச் சான்றோர் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து, அந்நாளிலே பலரும் அறியும்படியாக மணப்பறைகளை முழக்கிக், கல்யாணஞ் செய்து கொள்ளப்பட்டுத், தம் பாதுகாப்பிலே வந்து சேர்ந்த, மென்மையான தன்மையினையும் தன்பால் விருப்பத்தையும் உடைய, மனையாட்டியும் தன் வீட்டிலே இருப்பவளாயிருக்க, அவளைத் தவிக்க விட்டுவிட்டு அயலானின் மனைவியை ஒருவன் விருமபிப் பார்ப்பதுதான், என்ன காரணமோ?

'தன் மனைவியிருக்கப், பிறன் மனைவியை விரும்புவது தகாது' என்பது கருத்து. அதனால் தன் மனைவி இல்லாதவன் விரும்பலாமா என்றால் அதுவும் கூடாது; அது அதனினும் மிகவும் வெறுக்கத்தக்கது என்பதற்கே இப்படிக் கூறினார்.

**87. அம்பல் அயலெடுப்ப அஞ்சித் தமர்பரீஇ,**
**வம்பலன் பெண்மரீஇ, மைந்துற்று, -நம்பும்**
**நிலைமையின் நெஞ்சத்தான் துப்புரவு, பாம்பின்**
**தலைநக்கி யன்னது உடைத்து.**

அயலார்கள் எல்லாரும் அலர் எடுத்துத் தூற்றவும், உறவினர் அதனால் நேர்ந்த பழிக்கு அஞ்சியும் அவனுக்கு நேரும் துன்பத்திற்கு அஞ்சியும் வருத்தப்படவும், மயக்கங் கொண்டு அயலானுடைய பெண்டாட்டியைச் சேர்ந்து, பிறர் நம்பத்தக்க நிலைமையிலே இல்லாத உள்ளத்தை உடையவன் அநுபவித்த இன்பமானது பாம்பினது தலையை ஒருவன் தன் பேதைமையால் நக்கினாற்போன்ற தன்மையையே உடைய தாகும்.

பளபளப்பானதென்று நினைத்துப் பாம்பின் தலையை நக்கினால் அவன் விஷத்தால் உயிர்த்துறக்க நேர்வதுபோலத் தற்காலத்தில் இன்பங் கிடைக்கிறதென்று அயலானின் மனைவியை விரும்பினால், முடிவிலே அழிவுதான் வந்து சம்பவிக்கும் என்பது கருத்து.

**88. பரவா, வெளிப்படாப், பல்லோர்கண் தங்கா,**
**உரவோர்கட் காமநோ யோஓ கொடிதே!**
**விரவாருள் நாணுப் படலஞ்சி, யாதும்**
**உரையாதுள் ஆறி விடும்.**

உள்ளத்திலே உறுதியினை உடையவர்களிடத்து உண்டாகும் காம நோயானது மிகவும் கொடுமையானதாகும். ஏனெனில், அது வளராமலும், வெளிப்படாமலும், பலரிடத்துச்

சென்று நிற்காமலும், வேறானவர்களிடத்து வெட்கப்படுதலை அஞ்சியும், ஒன்றும் சொல்லாதும், அவரது உள்ளத்தின் உள்ளேயே அடங்கிப் போய்விடும் இயல்பினைக் கொண்டது என்பதனால்,

'அறிவுடையாரும் வினைவசத்தால் பிறர் மனைவியர் பால் காம வசப்பட நேரலாம்; நேரினும், அவர் அதற்குத் தாம் இரையாகாமல், அதனைத் தம்முள் அடக்கியே அவித்து விடுவார்' என்பது கருத்து. இதுவே வசமிழந்த காலத்து அனைவராலும் செய்தற்கு உரியது என்பதும் உணர்க.

89. **அம்பும், அழலும், அவிர்கதிர் ஞாயிறும்,**
**வெம்பிச் சுடினும், புறஞ்சுடும்- வெம்பிக்**
**கவற்றி மனத்தைச் சுடுதலால், காமம்**
**அவற்றினும் அஞ்சப் படும்.**

பிறர் எய்கின்ற அம்பும், நெருப்பும் விளங்குகின்ற கதிர்களையுடைய ஞாயிறும் வெப்பங்கொண்டு உடலிலே சுட்டாலும், அவை புறமாகிய உடம்பையே சுட வல்லனவாகும். மிகவும் வெப்பங்கொண்டு மனத்தைக் கவலைப்படுத்தி எரித்தலாற், காமமானது அவற்றினுங் கொடியதெனக் கருதிச், சான்றோர்களால் அஞ்சித் துறக்கப் படுவதாகும்.

'உடல் சுடப்படுவதினும் உள்ளஞ் சுடப்படுவதே மிக்க வேதனையைத் தருவதாதலால், அத்தகைய காமமாகிய பிறர்மனை நயத்தலைக் கைவிடுக'' என்பது கருத்து.

90. **ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு**
**நீருள் குளித்தும் உயலாகும்; - நீருள்**
**குளிப்பினும், காமஞ் சுடுமே; குன்றேறி**
**ஒளிப்பினும், காமஞ் சுடும்.**

ஊருக்குள்ளே பற்றி எழுந்த உருவஞ்சிறந்த நல்ல நெருப்பினாற் சுடப்படாமல் நீருள் குளித்தாகிலும் அதன் வெம்மையினின்றும் தப்பிவிடலாம். ஆனால், காமமோ நீருள் மூழ்கினாலும் சுடும்; குளிர்ச்சி மிகுந்த மலையின் மேலேறிச் சோலைகளுக்குள்ளே போய் ஒளிந்து கொண்டாலும் சுட்டு வருத்தும்.

'சாதாரண நெருப்பால் ஊரே பற்றி எரிந்தாலும் நீரிற் குளித்து மறைந்து அதற்குத் தப்பி விடலாம், காம நெருப்புக்கு எங்குபோய் ஒளிந்தாலும் தப்ப முடியாது; அதனால் அது

எழாமலே தடுத்துக் கொள்ளல் வேண்டும் என்பது கருத்து. உருகெழு-உருவம் விளங்குகின்ற; அச்சம் விளைவிக்கின்ற. செந்தீ-கொழுந்துவிட்டு எரிகின்ற நெருப்பு.

## 10. ஈகை

வறுமையால் வாடியவர்களாக வந்து இரந்து நிற்பவர்களுக்குத் தம்மிடம் உள்ளதை இல்லை என்று சொல்லாமல் கொடுத்தலே ஈகை ஆகும். இதனால், அவரது வறுமையாலான துன்பம் தீர்வதுடன், அப்படி வழங்கியவர்களுக்கு இம்மையிற் புகழும், மறுமையில் இன்பமும் வாய்ப்பனவாகும் என்பர் சான்றோர்.

வறுமையில் வாடியவர்க்குத் தருவது மட்டுமே உண்மையான ஈகையாகும். அவரால் மீட்டும் எந்த உதவியையும் செய்யமுடியாது. ஆதலால் அல்லாதாரான பிறருக்கு தருவதெல்லாம் 'குறியெதிர்ப்பை நீரதுடைத்து' என்றாற் போலப் பின்வரும் பெரு நன்மைகளை எதிர் பார்த்துச் செய்யப்படுவனவே யாகும். 'ஈகை' என்று சொல்லப்படாது.

இல்லறத்தான், தன் முயற்சியினால் பாடுபட்டுச் சேமித்துத் தேடிய செல்வத்தை, இப்படி வறியவர்கட்கு வழங்குதலைத் தன் கடமைகளுள் ஒன்றாகக் கருதிக் கொள்ளுதல் வேண்டும் என்பது குறித்துக் கூறுவது இந்தப் பகுதியாகும்.

**91. இல்லா இடத்தும், இயைந்த அளவினால்**
**உள்ள இடம்போல் பெரிதுவந்து, - மெல்லக்**
**கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு**
**அடையாவாம்? ஆண்டைக், கதவு.**

தம்மிடத்தே கொடுத்து மகிழ்தற்குத் தக்க அளவற்ற செல்வமானது இல்லாத காலத்தினும், நம்முடைய நிலைமைக்கு இசைந்த மட்டிலும், செல்வமுள்ள காலத்தைப் போலவே பெரிதும் மனமுவந்து, அமைதியாகக் கொடுத்து உதவுதலோடு சேர்ந்த ஈகைக் குணமுடைய மனிதர்களுக்குச் சுவர்க்கமாகிய அவ்விடத்துக் கதவு எப்போதும் அடைக்கப்படாததாகத் திறந்தே இருக்கும்.

'இரப்பவர்க்கு, 'இல்லை' என்று சொல்லாமல் கொடுக்கும் ஈகையாளரின் வருகையை எதிர்நோக்கி, மேலுலகத்தவர் கதவைத் திறந்து வைத்துக் காத்திருப்பார்கள்'

என்பது கருத்து. அவர் சுவர்க்கம் செல்வர்; பிறர் செல்லார் என்பதும் இதனால் சொல்லப்பட்டது.

**92. முன்னரே, சாநாண், முனிதக்க மூப்புள;**
**பின்னரும் பீடழிக்கும் நோயுள;-கொன்னே**
**பரவன்மின், பற்றன்மின், பாத்துண்மின்; யாதும்**
**கரவன்மின், கைத்துண்டாம் போழ்து.**

*நீங்கள் பிறவிஎடுப்பதற்கு முன்னரே, நீங்கள் சாகும் நாளும் வெறுக்கத்தக்க கிழத்தனமும் உங்களுக்கு நேரும் காலம் விதிக்கப்பட்டிருக்கின்றது. பின்னரும், உங்கள் பெருமையை அழிக்கும்படியான நோய்களும் உள்ளன. இதனால், கையிலே பொருள் உண்டாயிருக்கும் பொழுதிலே வீணாக மென்மேலும் அதனைத் தேடி நாலாபுறமும் ஓடாதேயுங்கள். அதனைப் பற்றிக் கொண்டும் இராதேயுங்கள். யாவருக்கும் ஈத்து, இருப்ப வற்றைப் பலரோடும் பகுத்து உண்ணுங்கள். எதையும் ஒளியாமல் இருங்கள். இதுவே நன்மை தருவதாகும்.*

*'பொருள் உள்ள பொழுதே, ஊழ்வினைப்பயனால் வரும் சாக்காடு நோய் முதலியவற்றை உணர்ந்து ஈகையிலேயே மனம் செலுத்த வேண்டும்' என்பது கருத்து. பீடு - பெருமை. சாநாள் - சாகும் நாள்.*

**93. நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்;**
**கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கா லீண்டும்,**
**மிடுக்குற்றுப் பற்றினும், நில்லாது செல்வம்**
**விடுக்கும் வினையுலந்தக் கால்.**

*செல்வமானது, தம்முடைய நல்வினையால் வந்து சேருங் காலத்திலே, பிறருக்குக் கொடுத்துத் தாம் அனுபவித்தாலும் அதனாற் குறையாது, அச்செல்வமும் வளர்ந்துகொண்டே போகும். தம்மிடத்திலே பொருளைச் சேர்க்கும் இந்த நல்ல வினைப்பயன் அழிந்த காலத்திலே, வலிபொருந்தி அதனைப் பிடித்துக் கொள்ள முயன்றாலும், அது நிலையாமற் போய்விடும். இதனை அறிந்து உணராதவரே, தம்மைச் சேர்ந்தவர்கள் துன்பத்தால் நடுக்கத்தை அடைந்து வாடிய காலத்தும், அதனைப் போக்காமல் கருமித்தனமாக இருப்பவர்களாவர்.*

*'செல்வம் வருவதும் போவதும் முன்வினைப் பயன்; கொடுப்பதால் அது குறைந்தும் போகாது; இறுக்கிப் பிடிப்பதால் நிலைத்தும் இருக்காது; அதனால், இருக்கும்*

போதே கொடுத்து நல்ல கதியைத் தேடிக் கொள்ளுக' என்பது கருத்து.

94. இம்மி அரிசித் துணையானும், வைகலும்
நும்மில் இயைவ கொடுத்துண்மின்;-உம்மை
கொடாஅ தவரென்பார், குண்டுநீர் வையத்து
அடாஅ அடுப்பி னவர்.

இம்மியளவான அரிசியே ஆனாலும், உங்களுக்கு இசைந்த மட்டிலே நாள்தோறும் இரவலர்களுக்குக் கொடுத்து, அதன் பின்பே நீங்கள் உண்ணுங்கள். ஆழமான கடல் சூழ்ந்த இந்த உலகத்திலே, சமைக்காத அடுப்பை உடையவரான சோற்றுப் பிச்சைக்காரர்கள் என்பவர்கள் எல்லாம், முற்பிறப்பிலே தம்மிடம் வந்து இரந்தவர்களுக்கு ஏதும் உணவுகொடாத உலோபிகளேயாவர்.

'அதனால், அடுத்த பிறப்பில் நாமும் அந்நிலையினை அடையாமல் இருப்பதைக் கருதியாவது கொடுத்து உண்பதில் ஈடுபடல் வேண்டும்' என்பது கருத்து. 'இம்மி' என்பது மிகச் சிறிய அளவு; ஒன்றில் தொளாயிரத்து அறுபதிலே ஒரு பங்கு.

95. மறுமையும் இம்மையும் நோக்கி, ஒருவற்கு
உறுமாறு இயைவ கொடுத்தல்!-வறுமையால்
ஈதல் இசையாது எனினும், இரவாமை
ஈதல் இரட்டி யுறும்.

மேலுலகத்து வரும் பயனையும், இவ்வுலகத்து வரும் பயனையும் நன்றாக ஆராய்ந்து பார்த்து, ஒருவற்குப் பொருந்தும் வகையிலே இசைந்தவைகளைக் கொடுத்தல் வேண்டும். தமக்குள்ள வறுமை காரணமாக அப்படிக் கொடுத்தல் இசையாமற்போன காலத்தும், பிறரிடம் சென்று தாம் இரந்து நிற்காமையானது, கொடுப்பதினும் காட்டில் இரண்டு மடங்கு பயன் தருவதாகும்.

'கொடுப்பது இம்மை மறுமை இன்பங்களைத் தருவது எனினும் வறுமையுற்றகாலத்துச் சென்று பிறரிடத்து இரந்து நில்லாமையோ அதைவிடச் சிறந்தது' என்பது கருத்து. இரத்தல் இழிவென்பதன் மூலம் ஈகையின் பெருமை வலியுறுத்தப்பட்டது.

96. நடுவூருள் வேதிகை சுற்றுக்கோள் புக்க
படுபனை அன்னர், பலர்நச்ச வாழ்வார்;
குடிகொழுத்தக் கண்ணும், கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

*பலரும் தம்மை விரும்பிவந்து சேருமாறு கொடுத்துண்டு வாழ்பவர்கள், ஊர்நடுவிலே திண்ணையினால் நாற்புறமும் சூழ்ந்து கொள்ளுதலை உடைய, காய்த்தல் பொருந்திய பெண்பனை மரங்களைப் போன்றவர்கள் தம்முடைய குடித்தனமானது வளமுடையதாக இருக்கின்ற காலத்தினும் பிறருக்குக் கொடுத்து உண்ணாத அறிவற்ற மனிதர்கள், சுடுகாட்டிலே இருக்கும் வளமான ஆண்பனைக்குச் சமானமாவார்கள்.*

*'சுடுகாடு நினைத்தபோது செல்வதற்கு அச்சந்தரும் அசுத்தமான இடம்; அதனையும் மீறிச் சென்றாலும் நிற்பது பயனற்ற ஆண்பனை; அப்படிப்பட்டவரே இருந்தும் ஈயாத உலோபிகள்' என்பது கருத்து.*

**97\. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணும், உலகஞ்**
**செயற்பால செய்யா விடினும்,-கயற்புலால்**
**புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!**
**என்னை உலகுய்யும் ஆறு?**

*கயல்மீன்களின் புலால் நாற்றத்தைப் புன்னையின் நறுமலர்கள் போக்குகின்ற, அலைமோதுகின்ற கடலினது குளிர்ச்சியான கரையினையுடைய நாட்டின் தலைவனே! பெய்யும்படியான காலத்திலே மழையானது பெய்யாமற் பொய்ப்பட்டுப் போனவிடத்தும், உயர்ந்தோர் செய்யத்தக்க நல்ல செயல்களைச் செய்யாமற்போன காலத்தும், இந்த உலகமானது பிழைக்கின்றதற்கான வகைதான் என்னவோ?*

*'அதனால், அம் மழை போலும்; உயர்ந்தோர் போலும் கைம்மாறு கருதாது அனைவரும் மனமுவந்து உதவுதல் வேண்டும்' என்பது கருத்து.*

**98\. ஏற்றகைம், மாற்றாமை, என்னானும் தாம்வரையாது**
**ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்;-ஆற்றின்**
**மலிகடல் தண்சேர்ப்ப! மாறீவார்க்கு ஈதல்**
**பொலிகடன் என்னும் பெயர்த்து.**

*வளங்களால் மிகுந்த கடற்கரையினை உடைய தலைவனே! இரந்து வந்து ஏந்தின கையை, இல்லையென்று மறுக்காமல், உள்ளது எதையானாலும் இன்னான் இனியானென்று ஒரு வரையரையும் கருதாமல், பிரதி உபகாரஞ் செய்யமாட்டாத வறுமையாளார்களுக்குக் கொடுப்பதே சிறந்த ஆண்மக்களுடைய கடமையாகும். அப்படிக் கொடுப்ப*

தானாலும், அதனை எதிர்உபகாரஞ் செய்யும் வல்லமை உடைய ஒருவர்க்குக் கொடுத்தல் 'கொழுத்த வட்டிக்குக் கடன் கொடுத்தல்' என்னும் பெயரையே உடையதாகும்.

'கொடை என்பது பிரதிசெய்ய இயலாத வறியவர்களுக்கு மனமுவந்து கொடுத்தலே; பிறவெல்லாம் பொலிகடன் போன்றன' என்பது கருத்து. 'ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்' என்னும் மணிமேகலையடியும் இதனைக் காட்டும்.

**99. இறப்பச் சிறிதென்னாது, இல்லென்னாது, என்றும்**
**அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க! - முறைப்புதவின்**
**ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோல்**
**பைய நிறைந்து விடும்.**

நாம் கொடுப்பது மிகவும் சிறிய அளவினதாக இருக்கிறதே என்று நினையாமலும், இல்லை என்று சொல்லாமலும், எப்போதும், எப்படிப்பட்டவர் இடத்தும் அறமாகிய பயனுள்ள செயலைச் செய்து வருக. அப்படிச் செய்வதானது, வாயில் தோறும் முறையாகப் பிச்சைக்குச் செல்கிற தவசியினது பிச்சைப் பாத்திரத்தைப் போல, மெல்லமெல்ல அறப்பயனை முற்றவும் நிறைவு செய்துவிடும்.

'இருப்பது கொஞ்சமானாலும் அதனையும் இல்லை என்று சொல்லாமல் கொடுத்துவருதல் வேண்டும்' என்பது கருத்து. கடிஞை-பிச்சைப் பாத்திரம். புதவு-வாயில். இறப்ப-மிகவும்.

**100. கடிப்பிகு கண்முரசங் காதத்தோர் கேட்பர்;**
**இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்;**
**அடுக்கிய மூவுலகும் கேட்குமே, சான்றோர்**
**கொடுத்தார் எனப்படுஞ் சொல்.**

குறுந்தடியினாலே அடித்து ஒலி எழுப்பப்படுகின்ற கண்ணினையுடைய பேரிகையின் ஒலியினைக் காததூரம் வரை உள்ளவரே கேட்பார்கள். மேகமானது இடியிடித்து முழங்கும் முழக்கத்தை ஒரு யோசனை தூரம் வரையிலும், உள்ளவரே கேட்பார்கள். ஆனால், பெரியோர்களால், 'இவர்கள் கொடுத்தவர்' எனக் கூறப்படும் புகழ்ச் சொல்லையோ, ஒன்றன்மேல் ஒன்றடுக்கியதாக அமைந்துள்ள மூவகை உலகத்தவரும் கேட்பார்கள்.

## 11. பழவினை

'ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்' என்று சிலம்பு கூறி, அந்த உண்மையின் விளக்கமாகக் கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியையும் காட்டுகிறது. அந்த ஊழ்வினை என்பதுதான், இங்கே 'பழவினை' என்ற குறிப்பிடப்படுவதும்.

இப்பொழுது மனித உடலெடுத்துப் பிறந்திருப்போர் தம்முடைய முற்பிறப்புக்களிலே செய்த நல்வினை தீவினைகளின் பயனை இப்பிறப்பிலே தவறாது அநுபவிப்பார்கள் என்பது இதன் கருத்தாகும்.

இப்படி வரும் பழவினைகள் மூன்று வகைப்படும் என்பார்கள். அவற்றுள், ஒன்று அநாதி காலந்தொட்டு உயிர் பலப்பல பிறவிகளினும் செய்து சேர்த்துக் கொண்டிருக்கிற மொத்தவினை. அவற்றுள் இப்பிறப்பிற்கு முன்தோன்றி மறைந்த பிறவிகளால் அநுபவிக்கப் பட்டுள்ளவைபோக எஞ்சியவற்றுள், இப்பிறவியில் அநுபவிப்பதற்காக எடுத்து வைக்கப்பட்ட ஈவுவினை மற்றொன்று. இவ்விரண்டும் அல்லாமல் பின்னும் அநுபவிக்கக் கிடந்த இருப்பு வினைத்தொகுதி மூன்றாவது. இவை மூன்றையும் 'பழவினை' என்பது குறிக்கும். குறள், இதனை 'ஊழ்' என்னும் அதிகாரத்தினுள் சொல்லும்.

'முற்பிறப்புக்களிலே நல்வினை செய்தவர்கள் நன்மையையும், தீவினை செய்தவர்கள் தீமையையும் துய்ப்பார்கள்' என்பது ஆன்றோர் கூற்று.

**101. பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று**
**வல்லதாந், தாய்நாடிக் கோடலை, - தொல்லைப்**
**பழவினையும் அன்ன தகைத்தே, தற்செய்த**
**கிழவனை நாடிக் கொளற்கு.**

பலவான பசுக்கூட்டங்களின் இடையிலே கொண்டு போய் விட்டுவிட்டாலும், இளங்கன்றானது தன்னுடைய தாயினைத் தானே தேடிச்சென்று சேர்வதிலே வல்லமை உடையதாகும். அதுபோலவே, தொன்மையாகவே வந்து கொண்டிருக்கும் பழவினையும் தன்னைச் செய்த உரிமையாளனைத் தானே தேடிச்சென்று அடைவதற்கு வல்லமை உடையதாகும்.

'தீவினைப்பயன் அந்தந்தப் பிறப்போடும் மறையாது பிற்பிறப்புகளினும் தொடர்ந்து வந்து தவறாது பலிக்குமாதலால்,

அதனைக் கைவிட்டு நல்வினைகளில் ஈடுபடுதலே வேண்டும்' என்பது கருத்து.

**102. உருவும் இளமையும், ஒண்பொருளும், உட்கும்**
**ஒருவழி நில்லாமை கண்டும்,-ஒருவழி**
**ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு**
**நின்றுவீழ்ந் தக்க துடைத்து.**

மேனியின் அழகும், அதன் இளமையும், மேலான செல்வ சம்பத்துக்களும், பலரும் அஞ்சத்தக்க பெருமதிப்பும் என்பவையெல்லாம் ஒருவழிப்பட்டு நிலையாக நிற்றல் இல்லாமையை உடையன. இதனைக் கண்டும், ஒரு பிறப்பிலேனும், ஒரு நற்செய்கையினையேனும் செய்தல் இல்லாதவனுடைய வாழ்வானது, உடலைப் பெற்று நின்று வீழ்ந்த தன்மையது என்று சொல்லும் அந்த அளவினையே உடையதாகும்.

'பிறந்து இறந்தான்' என்பதல்லாது, 'பிறவியின் பயனான நன்னெறிப்பட்டு அவன் உய்ந்தான்' என்று சொல்ல முடியாது. அவன் நல்வினை செய்தவனல்லனாகவே, நல்லன எதுவும் அவனுக்கு வந்து வாய்க்கவும் செய்யாது' என்பது கருத்து.

**103. வளம்பட வேண்டாதார் யார்? யாரும் இல்லை;**
**அளந்தன போகம்; அவரவர் ஆற்றான்;**
**விளங்காய் திரட்டினார் இல்லை, களங்கனியைக்**
**காரெனச் செய்தாரும் இல்.**

விளாங்காயினைத் தம்முடைய முயற்சியினால் உருட்சி யுடையதாகத் திரட்டி அமைத்தவர் எவரும் இல்லை; களாப் பழத்தினைக் கருமையாகச் செய்தவர்களும் அப்படியே எவரும் இல்லை. அவை அவற்றின் இயல்பான தன்மைகள். செல்வம் முதலியவற்றால் வளப்பத்தை அடைந்து வாழவேண்டும் என விரும்பாதவர்கள் ஒருவரேனும் இல்லை. ஆனால் இன்பங்கள் அவரவரது ஊழ்வினை காரணமாக முன்பே அவர்களின் இயல்புகளாக விதிக்கப்பட்டு அமைந்தனவாகும். இதனை அனைவரும் அறிதல் வேண்டும்.

'தாம் வளமாக வாழ்வதையே எல்லோரும் விரும்பு கிறார்கள்; அது முன்வினைப் பயனால் வருவது என்பதை உணர்ந்து, அவர்கள் எல்லாரும் இந்தப் பிறப்பிலாவது நல்ல வினைகளைச் செய்வதிலே ஈடுபடவேண்டும்' என்பது கருத்து.

104. உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா;
பெறற்பா லனையவும் அன்னவாம்; மாரி
வறப்பின் தருவாரும் இல்லை; அதனைச்
சிறப்பின், தணிப்பாரும் இல்.

வந்து கூடும்படியான தீவினைகளைத் தடுத்தல் என்பது முனிவர்களுக்கும் ஆகாததொன்றாகும். பெறும்படியான தன்மையை உடைய நல்வினைகளும் அப்படியே தவறாமல் வந்து சேர்வனவாம். மழையானது பெய்யாமல் வறண்டு போகுமானால் அதனைக் கொணர்ந்து தருபவர்களும் எவரும் இல்லை; அது அளவுக்கு அதிகப்பட்டுப் போனால் அதனைத் தடுப்பவர்களும் எவரும் இல்லை. அது போலவேதான் ஊழ்வினைப் பயனுமாகும்.

'மழை வறண்டபோது தருவதற்கும், அதிகமான போது தடுப்பதற்கும் எப்படி ஒருவருக்கும் வலிமை இல்லையோ, அதுபோலவே வினைப்பயன் வந்து நேரிட்டபோது அதனைத் தடுக்கவும் யாராலும் ஆகாது' என்பது கருத்து.

105. தினைத்துணையர் ஆகித், தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையர் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்த தெவனுண்டாம், மேலை
வினைப்பயன் அல்லாற், பிற?

பனையளவாக உயர்ந்த வாழ்வுடையவராக இருந்தவர்கள், தம் அளவாற் குறைந்த தினையளவினராகித் தம்முடைய சாமர்த்தியத்தை எல்லாம் உள்ளே அடக்கிக் கொண்டு, தினந்தோறும் பெருமைகெட்டு வாழவும் வாழ்வார்கள். எண்ணிப் பார்த்தால், உயர்வும் தாழ்வும் எல்லாம் முன்செய்த வினைப்பயனே அல்லாமல், வேறு என்ன உண்டாவதற்கு இருக்கிறது?

'உயர்ந்த நிலையிலிருந்தவன் தாழ்ந்த நிலையடைவது முன் செய்த தீவினைப்பயன் என்று உணர்ந்து, நல்வினையிலேயே ஈடுபட வேண்டும்' என்பது கருத்து.

106. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்;
கல்லாதார் வாழ்வது அறிதிரேல், -கல்லாதார்
சேதன மென்னுமச் சேறகத் தின்மையாற்
கோதென்று கொள்ளாதாம், கூற்று.

பலவகைப்பட்ட சிறந்த நூற்கேள்விகளினால் பிறவியின் உண்மையான பயனை அறிந்தவர்கள் அழிவு எய்தவும், எதுவும்

*கல்லாத மூடர்கள் நெடுங்காலம் வாழ்வதும் உலகில் நடப்பதை அறிந்திருக்கிறீர்கள். படியாதவர்கள் அறிவு என்னப்பட்ட அந்தச் சாரத்தைத் தமது உள்ளே உடைத்தாகாமையால், அவர்களைக் கூற்றுவன் சக்கை என்று நினைத்து எடுத்துக் கொள்ளாது போய் விடுகின்றான் போலும்!*

*'நல்லவர்கள் சீக்கிரமே அழிவதும், கெட்டவர்கள் நெடுங்காலம் அழிவின்றி வாழ்வதும் ஏன் என்றால், அது அவரவர் வினைப்பயனால் வந்து நேர்ந்தன என்று கொள்ளவேண்டும்' என்பது கருத்து.*

**107. இடும்பைகூர் நெஞ்சத்தார் எல்லாரும் காண,**
**நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்,-அடம்பம்பூ**
**அன்னங் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப!**
**முன்னை வினையாய் விடும்.**

*அடம்பங் கொடியின் பூக்களை அன்னப்பறவைகள் கோதிக் கிழித்து விளையாடுவதற்குரிய இடமாக விளங்கும், அலைகளையுடைய - கடலினது குளிர்ந்த கரைகளையுடைய நாட்டின் தலைவனே! ''சிலர் துன்பமிகுந்த உள்ளத்தை உடையவர்களாகி, எல்லாரும் காணும்படியாகச் செல்வர்களின் பெரிய வாயில்களிலே சென்று நின்று, பிச்சைக்காக வருந்தியிருக்கும் நிலைமை எல்லாம், முற்பிறப்பிலே அவர்கள் செய்த தீவினைகளின் பயனால் வந்து இப்பிறப்பிலே நிலைபெற்றதேயாகும்'' என்று அறிவாயாக.*

*'இதனால், இப்பிறப்பிலே பலரும் அனுபவிக்கிற நன்மை தீமைகளுக்கெல்லாம் பழவினையே காரணமென்பது கருத்தாகும். இடும்பை-வருத்தம். அலைகடல் -அலைகின்ற கடலும் ஆகும்.*

**108. அறியாரும் அல்லர், அறிவது அறிந்தும்,**
**பழியோடு பட்டவை செய்தல்,-வளியோடி**
**நெய்தல் நறவுயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப!**
**செய்த வினையான் வரும்.**

*காற்றானது விரைவாக வீசி நெய்தற் பூக்களினின்றும் தேனைச் சிந்துகின்ற, நீண்ட கடலினது குளிர்ச்சியான துறையையுடைய தலைவனே! ஒருவர் அறியாதவர்களும் அல்லராகி, அறியவேண்டுவன எல்லாம் தெரிந்திருந்தும், நிந்தனையோடு பட்ட செயல்களை எல்லாம் செய்வது,*

*முற்பிறப்பிலே அவர் செய்த தீவினையால் வந்து நிகழ்வது என்று அறிவாயாக.*

*'அறிவுடையோரும் ஒரொருகாலத்துத் தீய செயல்களிலே ஈடுபடுவது, அவர்களுடைய முற்பிறப்பிற் செய்த வினைகளின் காரணமாகவே' என்பது கருத்து.*

**109. ஈண்டுநீர் வையத்துள், எல்லாரும், எத்துணையும்**
**வேண்டார்மன், தீய; விழைபயன், நல்லவை;**
**வேண்டினும், வேண்டாவிடினும், உறற்பால**
**தீண்டா விடுதல் அரிது.**

*நெருங்கிய கடலினாலே சூழப்பட்டிருப்பது இந்த உலகம். இதனுள்ளே, எவ்வெவர்களும் எவ்வளவாயினும் தீயவைகளை விரும்பவே மாட்டார்கள். நன்மைகளே அனைவரும் விரும்பும் பயனாகும். விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நன்மையோ தீமையோ ஒருவருக்கு வரத்தக்கவை அவரை வந்து அடையாமற் போவது மட்டும் இல்லையாகும்.*

*'ஒருவருடைய விருப்பமோ வெறுப்போ எப்படியிருந்தாலும், முன்வினைப்பயன் வந்து தவறாமல் நிகழ்ந்தே தீரும்' என்பது கருத்து.*

**110. சிறுகா, பெருகா, முறை பிறழ்ந்து வாரா,**
**உறுகாலத் தூற்றாகா, ஆமிடத்தே யாகும்**
**சிறுகாலைப் பட்ட பொறியும்; அதனால்,**
**இறுகாலத்து, என்னை பரிவு?**

*உயிர் உடலின் அடைகின்ற அந்தச் சிறிய அளவு நேரத்தில்தானே உண்டாகிய ஊழ்வினைகள் எல்லாம் ஒரு போதும் குறையவும் மாட்டா, கூடவும் மாட்டா. அவை, முறைமை தப்பியும் வருவதில்லை. துன்பம் வந்த காலத்திலே ஊன்றுகோலாக எதுவும் உதவவும் மாட்டா. அவை வரவேண்டிய காலத்திலே வந்து சேரும். அதனால் அப்படி நேரும் துன்பங்களைக் குறித்து அவற்றாற் கேடுறும் காலங்களிலே மனம் வருந்துவது எதற்காகவோ?*

*'கருவிலேயே வினைப்பயன் விதிக்கப்படுவதனால், எவரும் அதனின்றும் தப்பவே முடியாது; அதனை அநுபவித்தே தீரவேண்டும்' என்பது இது. பொறி-தலை எழுத்து என்று சொல்லப்படும், ஊழின் நியமம்.*

# 12. மெய்ம்மை

மெய்ம்மையாவது ஒவ்வொரு பொருளின் இயற்கையான உண்மைத் தன்மை ஆகும். அதனை அறிந்து தெளியும் அறிவே உண்மையான அறிவுடைமையாகும். மயக்க உணர்வின் காரணமாகப் பொருள்களின் தன்மைகளைப் பிறழ உணர்ந்தால், அதனால் விளையும் தீமைகளும் பலவாயிருக்கும்.

மனிதன், பலவகைப் பொருள்களின் தொடர்புடன் வாழவேண்டியவன். அவற்றின் உண்மையான இயல்புகளை அவன் அறிந்து அவற்றைப் பயன்படுத்த வேண்டியதும் மிகவும் இன்றியமையாததாகும். அதனால், இது இல்லறவியலின்கண் அமைக்கப்பட்டது.

இப்படிப் பொருள்களின் தன்மைகளை உள்ளவாறு உணர்ந்து தெளியும் ஆற்றல் ஒருவனுக்கு ஊழ்வினைப் பயனின்றி அமையாததனால், ஊழ்வினைபற்றிக் கூறிய பழவினை என்னும் அதிகாரத்திற்குப் பின்னர், இது வைக்கப்பட்டது என்று கொள்ளுக.

**111. இசையா ஒருபொருள் இல்லென்றால் யார்க்கும்**
**வசையன்று; வையத்து இயற்கை;-நசையழுங்க**
**நின்றோடிப் பொய்த்தல், நிரைதொடீஇ செய்ந்நன்றி**
**கொன்றாரிற் குற்றம் உடைந்து.**

வரிசையாகப் பல வளையல்களை அணிந்துள்ளவளே! தம்மால் கொடுப்பதற்கு இயலாத ஒரு பொருளைத் தம்மிடம் வந்து யாசிப்பவர்க்கு இல்லையென்று சொல்லுதல் எவருக்கும் குற்றமாகாது. அதுவே உலகத்தாரின் இயற்கையுமாகும். ஆனால், கொடுப்பவனைப் போல நடித்து, வந்து இரந்தவர்களுடைய ஆசையானது கெடும்படியாக நெடுங்காலம் கழியச் செய்தபின், ஏதுங்கொடாமற் பொய்த்தல் இருக்கிறதே, அது மிகவும் கொடுமையாகும். அது, ஒருவன் செய்த உபகாரத்தை மறந்தவர்களைக் காட்டினும் பெரிதும் குற்றம் உடையதுமாகும்.

'இல்லையென்று சொல்லுதல் உண்மை நிலைமையை உரைத்தால் தவறன்று; ஆனால், இருக்கும்போதுங் கொடுப்பது போலக் காட்டிக் கடைசியில் இல்லை யென்பது மிகவும் தவறாகும்' என்பது கருத்து. நசை-விருப்பம்.

112. தக்காரும் தக்கவர் அல்லாரும், தந்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர்,-அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம்; கைக்குமாம்,
தேவரே தின்னினும், வேம்பு.

*தகுதியை உடைய சான்றோர்களும், தகுதியற்ற கீழோரும் எக்காலத்தினும் தத்தம் இயல்பான குணங்களினின்றும் குறைதல் இல்லாதவராவார்கள். கருப்பஞ்சாற்றுக் கட்டியானது எவர் தின்றாலும் கசக்காது; ஆனால், வேப்பங்காயோ தேவர்களே தின்றாலுங்கூடக் கசக்கவே செய்யும்.*

*'தக்கார் எந்தக்காலத்தும் தம் தகுதியிற் குறையார்கள். தகுதியற்றோர் எந்த உயர்வினை அடைந்தாலும், தம் கீழ்மைப் பண்பினின்றும் நீங்கார்' என்பது கருத்து.*

113. காலாடு போழ்தில், கழிகிளைஞர், வானத்து
மேலாடு மீனிற் பலராவர்,-ஏலா
இடரொருவர் உற்றக்கால், ஈர்ங்குன்ற நா ட
'தொடர்புடையேம்' என்பார் சிலர்.

*குளிர்ச்சி பொருந்திய மலைகளையுடைய நாட்டிற்குத் தலைவனே ஒருவனுக்குச் செல்வாக்கு உண்டான காலத்திலே, வானத்தின் மேலே இயங்குகின்ற விண்மீன்களினும் மிகுதியான பலர் கூடிவந்து அவனுக்கு நெருங்கிய உறவினராவார்கள். அவ்வொருவனே தகாத துன்பம் ஒன்றை அடைந்த காலத்திலோ, அவனுடன் தொடர்புடையவராயிருக்கிறோம் என்று சொல்லுபவர்களோ மிகவும் சிலராயிருப்பார்கள்.*

*இதனால், 'பொய்யுறவு காட்டிச் செல்வமுடைய காலத்தில் வந்து தொடர்புகொள்பவரின் உண்மை நிலைமையை ஆராய்ந்து உணரவேண்டும்' என்பது கருத்து.*

114. வடுவிலா வையத்து, மன்னிய மூன்றில்,
நடுவணது எய்த, இருதலையும் எய்தும்;
நடுவணது எய்தாதான் எய்தும், உலைப்பெய்து,
அடுவது போலுந் துயர்.

*குற்றமில்லாது அமைந்த இந்த உலகத்திலே பொருந்திய, அறம் பொருள் இன்பம் என்று சொல்லப்படுகின்ற மூன்றனுள், நடுவிற் சொல்லப்பட்ட பொருளானது வந்து வாய்க்க, அதன் முன்னும் பின்னுமுள்ள அறமும் இன்பமும் வந்து வாய்ப்பனவாகும். நடுவிற் சொல்லப்பட்ட பொருள் வந்து*

அடையாத ஒருவனோ உலையிலிட்டுக் காய்ச்சுவது போன்ற கொடிய துன்பத்தையே எந்நாளும் அடைவான்.

இதனால், செல்வம் வறுமை என்பவற்றின் உண்மையான நிலைமை கூறப்பட்டது. 'பொருளற்றவனுக்கு அறமும் செய்யவியலாது; இன்பமும் கிடைத்தலரிது; துன்பமே பெரிதாகும்' என்பது கருத்து.

115. **நல்லாவின் கன்றாயின், நாகும் விலைபெறூஉம்;**
**கல்லாரே யாயினும், செல்வர்வாய்ச் சொற்செல்லும்,**
**புல்லீரப் போழ்தின் உழவேபோன் மீதாடிச்,**
**செல்லாவாம், நல்கூர்ந்தார் சொல்.**

நல்ல பசுவின் கன்று என்றால், அஃது இளம் பெட்டைக் கன்றாயினும் நல்ல விலையினைப் பெற்றுத்தரும். அது போலவே, படியாதவர்களாயிருந்தாலும், அவர்கள் செல்வர் களாயிருந்தால், அவர்களுடைய வாய்ச்சொற்கள் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படும். அற்ப ஈரமுள்ள பொழுதிலே உழப்படும் உழவினைப் போல, மேலே மட்டுமே ஏற்புடைய தாகத் தோன்றி வறுமையுடையவர் வாய்ச்சொற்கள், எவருடைய உள்ளத்தும் ஆழமாகக் கொள்ளப்படாததாகவே போய்விடும்.

செல்வர் மூடராயினும், அவரிடமிருந்து பயன்பெறலா மென்பது கருதி அவர் சொற்களைப் பலரும் மதிப்பர். வறியவர் சொற்களிலே அறிவுடைமை தோன்றினும் மேலுக்குத் தலையை அசைப்பார்களே அல்லாமல் உள்ளத்துள் எவரும் கொள்ளார். இதுவே, சொல்லின் உண்மையான நிலையாகும்.

116. **இடம்பட மெய்ஞ்ஞானம் கற்பினும் என்றும்**
**அடங்காதார் என்றும் அடங்கார்,-தடங்கண்ணாய்!**
**உப்பொடு நெய், பால், தயிர், காயம் பெய்தடினும்,**
**கைப்பறா, பேய்ச்சுரையின் காய்.**

விசாலமான கண்களை உடையவளே இயல்பாகவே அடக்கம் உடையவரான தன்மை இல்லாதவர்கள், மெய்ம்மையான அறிவினை உணர்த்தும் நூல்களை எல்லாம் எப்போதும் விரிவாகக் கற்றாலும், ஒரு பொழுதும் அடக்கம் உடையவராகவே மாட்டார்கள். எதுபோலவென்றால், உப்பும் நெய்யும் பாலும் தயிரும் காயமும் சேர்த்துச் சமைத்தாலும், பேய்ச்சுரைக்காய் தன்னுடைய இயற்கையான கசப்பினின்றும் நீங்காததைப் போல என்க.

*இதனால் அடங்காதவரது இயல்பின் உண்மை நிலைமை கூறப்பட்டது.*

**117. தம்மை இகழ்வாரைத் தாமவரின் முன்இகழ்க!
என்னை, அவரொடு பட்டது? - புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப
உறற்பால யார்க்கும் உறும்.**

*புன்னை மரங்களின் பெருமையுடைய பூக்கள் மணங்கமழ்கின்ற கானற்சோலைகள் மிகுந்துள்ள கடற்கரை களுக்கு உரிய தலைவனே! ஒரு காரணமும் இல்லாமல் நம்மை இகழ்ந்து பேசுபவர்களை, அவர் நம்மை இகழ்வதற்கு முன்னமே நாம் நிந்தித்து ஒதுக்கிவிட வேண்டும். நம்மை இகழ்கின்ற அவர்மீது நமக்குண்டாகிய கண்ணோட்டம் எதற்காகவோ? வரத்தக்கனவாகிய இன்பதுன்பங்கள் எவர்க்கும் வந்தே தீரும்.*

*'நன்மை தீமைகள் வருவன வந்தே தீரும். அதனால் தம்மை இகழ்பவரை எவரும் பாராட்ட வேண்டியதில்லை. அவரை இகழ்ந்து ஒதுக்குக' என்பது கருத்து. இதனால், கீழோர் இயல்பும் அவரை ஒதுக்க வேண்டியதான உண்மையும் கூறப்பட்டது.*

**118. ஆவேறு உருவின வாயினும், ஆபயந்த
பால்வேறு உருவின அல்லவாம்;-பால்போல்
ஒரு தன்மைத் தாகும் அறம்; நெறி, ஆபோல்
உருவு பலகொளல், ஈங்கு.**

*பசுக்கள் வெவ்வேறு வகையான உருவத் தோற்றங்களை உடையனவாகக் காணப்பட்டாலும், அவற்றின் பயனான பால் வெண்மையேயன்றி வெவ்வேறான தோற்றம் உடையதன்று. அதைப்போலவே, தருமமும் ஒரே தன்மையினை உடையதே யாகும். இவ்வுலகத்திலே அதன் வழிகள் அப்பசுக்களைப் போலப் பல்வேறு உருவுகளைக் கொண்டிருத்தலும் உண்மை யாகும்.*

*'தருமம் பல்வேறாக இருந்தாலும் அவற்றால் விளையும் பயன் உயிருக்கு நற்கதியான ஒன்றேயாகும்' என்பது கருத்து. இதனால் அறத்தின் உண்மை நிலை கூறப்பட்டது.*

**119. யாஅர், உலகத்தோர் சொல்லில்லார், தேருங்கால்
யாஅர், உபாயத்தின் வாழாதார்?-யாஅர்;
இடையாக இன்னாதது எய்தாதார்? யாஅர்,
கடைபோகச் செல்வமுய்த் தார்?**

ஆராய்ந்து பார்க்குமிடத்து, இந்த உலகத்திலே ஒரு நிந்தைச் சொல்லையேனும் உடையவராக இல்லாதவர்கள் தாம் எவர்? தந்திரத்தினாலே வாழாதவர்தாம் எவர்? வாழ்நாளின் இடையிடையே துன்பத்தை அடையாதவர்தாம் எவர்? வாழ்நாளின் கடைசிவரையிலும் செல்வத்தைப் பொருந்தியிருந்தவர்கள்தாம் எவர்? எவரும் இல்லை என்பது முடிவு.

இவை எல்லாம் உலகத்தில் உண்டாவனதாம் என்ற உண்மை உணர்த்தப் பெற்றது.

**120. தாம்செய் வினை அல்லால் தம்மோடு செல்வதுமற்று,**
**யாங்கணுந் தேரின், பிறிதில்லை,-ஆங்குத்தாம்**
**போற்றிப் புனைந்த உடம்பும் பயமின்றே,**
**கூற்றங்கொண் டோடும் பொழுது.**

நன்றாக எண்ணிப் பார்த்தால் இறந்துபோகுங் காலத்திலே தம்மோடுங் கூடவருவன தாம்தாம் செய்த நல்வினை தீவினை ஆகியவைகளே அல்லாமல் வேறு எதுவுமே இல்லை. கூற்றானது உயிரைப் பற்றிக் கொண்டு ஓடிப்போகும் பொழுது, அப்படித் தாம் பாதுகாத்துப் புனைந்து பேணிய உடம்பும் ஒருவிதப் பயனும் இல்லாததாகப் போய்விடும்.

இதனால், வினைப்பயன் ஒன்றே உண்மையில் நிலையானது என்ற மெய்ம்மை உணர்த்தப்பட்டது. அதனையுணர்ந்து அனைவரும் நல்வினைகளிலே ஈடுபட வேண்டும் என்பது கருத்து.

## 13. தீவினை அச்சம்

பொருள்களின் மெய்மை உணர்வதன் இன்றியமையாமை பற்றி முன் அதிகாரத்திலே கண்டோம். அப்படி ஒவ்வொரு பொருளையும் நுட்பமாக ஆராய்ந்து உண்மை காணும்போது, அவற்றுள் இவை நல்லன வென்பதும் இவை தீயனவென்பதும் பகுத்து அறியலாகும்.

இதேபோல, மெய்யுணர்வின் பயனால் வினைகளில் நன்மை தருவன யாவை என்பதனையும், தீமை விளைப்பன யாவை என்பதனையும் உணரலாம். அப்படி நன்மை தீமைகளைப் பகுத்து அறிபவர் தீமைகளை ஒதுக்கி நன்மைகளிலேயே மனத்தைச் செலுத்த வேண்டும்.

தீவினையின் பயனால், இம்மையிலே தீவினை செய்த வரும் மற்றும் பலரும் துன்பத்திற்கு ஆளாகின்றனர். அத்துடன் அதன்

விளைவு முடிந்து விடுவதும் இல்லை. இந்தப் பிறப்பினை விட்டபோதும், அது ஈட்டிய பழவினையாகப் பிற்பிறவிகளினும் தொடர்ந்து வந்து பற்றுவது என்றோம். மேலும், அதனால் உயிருக்கு ஏற்படும் மறுமையின் துயரங்களையும் முன்னர் பார்த்தோம். இவ்வாறு, உயிரைத் தொடர்ந்து பற்றி வருத்தும் இயல்பு உடையது தீவினையாதலால், அதனை அனைவரும் செய்யாது நீக்க வேண்டும்; அதனைச் செய்யும் முனைப்பு சில சமயங்களிலே ஏற்பட்டாலும், அதன் பின்விளைவுகளை உணர்ந்து அஞ்சி அதனை நீக்கவேண்டும். இந்தக் கருத்தை வலியுறுத்தும் பகுதி இது.

**121. துக்கத்துள் தூங்கித் துறவின்கண் சேர்கலா**
**மக்கள் பிணத்த, சுடுகாடு; -தொக்க**
**விலங்கிற்கும் புள்ளிற்கும் காடே, புலன்கெட்ட**
**புல்லறி வாளர் வயிறு.**

சம்சார வாழ்வாகிய துன்பங்களில் கிடந்து உழன்று தங்கியிருந்தவர்களாக, அவற்றைத் துறந்து உயிர்க்கு உறுதி தரும் துறவுநெறியின் கண் சேரமாட்டாத மனிதர்களுடைய பிணத்தைச் சுடுகாடுகள் மிகுதியாக உடையனவாகும். நல்ல அறிவுத்திறனை இழந்துபோன புலானுண்ணும் அற்ப அறிவு உடையவர்களின் வயிறுகளோவென்றால், அவற்றுள் சேர்ந்த தொகுதியான விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் உரிய இடுகாடு ஆகும்.

இதனால், புலால் உண்ணுதல் ஆகிய தீவினையின் இழிந்த நிலைமை சொல்லப்பட்டது. அதற்கு அஞ்சி அதனை நல்லறிவாளர் நீக்குவர்; பிறரும் நீக்கவேண்டும் என்பது கருத்து.

**122. இரும்பார்க்கும் காலராய் ஏதிலார்க்கு ஆளாய்க்**
**கரும்பார் கழனியுட் சேர்வர்,-சுரும்பார்க்கும்**
**காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்**
**கூட்டுளாய்க் கொண்டு வைப்பார்.**

வண்டினங்கள் ஆரவாரிக்கின்ற காட்டினிடத்தே உள்ளனவாய் வாழுகின்ற கவுதாரியையும் காடையையும் கூடுகளின் உள்ளேயாக இருக்கும்படியாகப் பிடித்து அடைத்து வைப்பவர்கள், இரும்பு விலங்குகள் ஒலிக்கின்ற காலினராகப் பகைவர்களுக்கு அடிமைகளாய்க் கடுமையான வறட்டு நிலத்தினும் வயல்களினும் வேலை செய்யும்படியான நிலையினை அடைவார்கள்.

*இதனாற் பறவைகளைக் கூட்டில் அடைத்துவைக்கும் தீவினையின் பயனைக் கூறி, அதற்கு அஞ்சி அதனைக் கைவிடவேண்டிய முதன்மையும் வற்புறுத்தப் பட்டது.*

**123. அக்கேபோல் அங்கை ஒழிய, விரல் அழுகித்**
**துக்கத் தொழுநோய் எழுபவே-அக்கால்,**
**அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற**
**பழவினை வந்தடைந்தக் கால்.**

*அந்தக் காலமாகிய முற்பிறவிகளில் நண்டைத் தின்னலை மிகவும் விரும்பி, அதன் காலையொடித்துப் போட்டுச் சுட்டுத்தின்ற பழைய வினையானது இந்தப் பிறப்பிலே வந்து அமைந்ததென்றால், சங்கு மணியைப் போல உள்ளங்கை மாத்திரம் எஞ்சியிருக்க, விரல்கள் எல்லாம் அழுகிப்போய்த் துக்கத்தைத் தருகின்ற குட்டநோய் உண்டாகப் பெறுவார்கள்.*

*நண்டு முதலியவற்றை முரித்துத் தின்றதனால் வரும் துன்பங் கூறி, அத்தீவினையை அஞ்சி நீக்கவேண்டும் என்றது இது. அக்கு-சங்கு.*

**124. நெருப்பழற் சேர்ந்தக்கால், நெய்போல் வதூஉம்**
**எரிப்பச் சுட்டு, எவ்வநோய் ஆக்கும்;-பரப்பக்**
**கொடுவினையர் ஆகுவர், கோடாரும், கோடிக்**
**கடுவினையர் ஆகியோர்ச் சார்ந்து.**

*நெய்போன்ற மென்மையும் இதமுமான ஒரு பொருளும், எரியும் நெருப்பினைச் சேர்ந்த காலத்து, உடலை எரிக்கும் படியாகக் காய்ந்து துன்பப்படுத்துகின்ற நோயினை உண்டாக்கும். அதுபோலவே, நல்லொழுக்கங்களிலே இருந்து தவறாதவர்களுங்கூடக் கடுமையான தீவினை செய்பவர்களைச் சார்ந்த காலத்துத், தாமும் தம் ஒழுக்க நெறியினின்றும் கோணுதலுற்று, மிகவும் கொடிய செயல்களைச் செய்பவர்களாக ஆகிவிடுகிறார்கள்.*

*'தீவினைக்கு அஞ்சுவது மட்டுமின்றித் தீவினை செய்வாரோடு, தொடர்பு கொள்ளுவதுங் கூடாதென அஞ்சி ஒதுங்கவேண்டும்' என்றது இது.*

**125. பெரியவர் கேண்மை, பிறைபோல, நாளும்**
**வரிசை வரிசையா நந்தும்; -வரிசையால்**
**வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே**
**தானே, சிறியார் தொடர்பு.**

அறிவினாற் பெரியோர்களாக விளங்குபவர்களுடைய நட்பானது இளம்பிறையைப் போல முதலிற் சிறியதா யிருந்தாலும், முறையே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகும். சிற்றறிவு உடையவர்களுடைய நட்போ வானத்திலே தவழ்கின்ற முழுமதியைப்போல, முதலில் பெரிதாகத் தோன்றினாலும், நாளுக்கு நாள் தேய்ந்துகொண்டே போகும்.

சிறியோர் நட்பினது புன்மை கூறி, அதனைக் கை விட்டுப் பெரியோர் உறவையே நாடுதல் வேண்டுமென்பது வற்புறுத்தப்பட்டது.

**126. சான்றோர் என மதித்துச் சார்ந்தாய்மன்; சார்ந்தாய்க்குச்**
**சான்றாண்மை சார்ந்தார்கண் இல்லாயின்,-சார்ந்தோய்!**
**கேள்;**
**சாந்தகத் துண்டென்று, செப்புத் திறந்தொருவன்**
**பாம்பகத்துக் கண்டன்னது உடைத்து.**

'இவர் எல்லாவகையான நற்குணங்களும் நிரம்பிய சான்றோர் ஆவர்' என மதித்து சிலரை மிகவும் நேசித்தாய். அப்படி நேசித்த உனக்கு நீ சேர்ந்தவர்களிடத்திலே அத்தகைய சற்குண நிறைவு இல்லையானால், அவர்களை அடுத்தவனே! நின் நிலைமையைக் கேட்பாயாக! ஒருவன் உள்ளே வாசனைச் சாந்து இருக்கிறதென்று செப்பைத் திறந்து, அதனுள்ளே பாம்பைக் கண்டதுபோன்ற நிலையை உடையதுதான், உன் நிலையும் ஆகும்.

ஆராயாமல் கொள்ளும் தொடர்பினால் வரும் தீவினை கூறி, அதனை விலக்குவது வற்புறுத்தப்பட்டது.

**127. யாஅர், ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்**
**தேருந் துணைமை உடையவர்?-சாரல்**
**கனமணி நின்றிமைக்கும், நாட! கேள்; மக்கள்**
**மனம் வேறு; செய்கையும் வேறு.**

மலைச் சாரல்களிலே பெருமை பொருந்திய நவமணிகள் நிலைபெற்று கிடந்து பளபளவென ஒளிவீசிக் கொண்டிருக் கின்ற நாட்டை உடையவனே! கேட்பாயாக; ஒருவருடைய உள்ளத்தை இன்னதொரு தன்மையுடையதென்று ஆராய்ந்து அறியும் வல்லமை உடையவராகிய ஒருவர் எவர் இருக்கிறார்? ஒருவருமே இல்லை. ஏனெனில், மனிதர்களின் உள்ளமும் அவர்களுடைய செய்கையும் வேறு வேறாயிருக்கும் தன்மையை உடையனவாகும்.

128. உள்ளத்தான் நள்ளாது, உறுதித் தொழிலராய்க்,
கள்ளத்தான் நட்டார் கழிகேண்மை-தெள்ளிப்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட!
மனத்துக்கண் மாசாய் விடும்.

அருவி நீரானது தெளிவுடையதாய்ச், சேற்றை இடைவிடாது ஒழித்து நிற்கின்ற, அழகிய மலைகளையுடைய நாட்டை உடையவனே! உள்ளத்தால் விரும்பாது, உறுதியான தொழிலைச் செய்பவராகக், கள்ளத்தனமாகச் சிநேகித்தவர் களுடைய மிகுதியான சிநேகமானது மனத்தினுள்ளேயும் குற்றமுள்ளதாய் நிற்கும்.

129. ஒக்கிய ஒள்வாள்தன் ஒன்னார்கைப் பட்டக்கால்,
ஊக்கம் அழிப்பதூஉம் மெய்யாகும்;-ஆக்கம்
இருமையுஞ் சென்று சுடுதலான், நல்ல
கருமமே, கல்லார்க்கண் தீர்வு

ஒருவன் பகைவன்மேல் அவனைக் கொல்லுவதற்காக ஓங்கிய ஒளியுடைய வாளானது, அந்தப் பகைவனின் கையிலேயே போய்ச் சேர்ந்து விட்டால், அப்படி ஓங்கிய வலுவுடைய வலிமையை அழிப்பதுவும் உண்மையாகும். தான் மூடருக்குச் செய்த உபகாரமானது, இம்மை மறுமை என்ற இரண்டிடத்தும் சென்று தம்மை வருத்துதலால், கல்வியறி வில்லாத மூடர்களிடமிருந்து நீங்கியிருப்பதும் ஒரு நல்ல செயலேயாகும்.

130. மனைப்பாசம் கைவிடாய்! மக்கட்கென்று ஏங்கி,
எனைத்தூழி வாழ்தியோ? நெஞ்சே! -எனைத்தும்
சிறுவரையே யாயினும், செய்தநன்று அல்லால்,
உறுபயனோ இல்லை, உயிர்க்கு.

நெஞ்சமே! மனையாளிடத்திலேயுள்ள ஆசையைக் கைவிடமாட்டாய். மக்களுக்குப் பொருள் முதலியன சேர்த்து வைக்க வேண்டுமென்று ஏங்கி எவ்வளவு காலந்தான் பொருள் முயற்சியிலேயே வாழப் போகிறாய்? சிறிதளவான காலமேயானாலும், எவ்வளவாவது செய்து நல்ல செயல்களே அல்லாமல், உயிருக்கு அடையும்படியான நற்பயன் வேறு எதுவுமே இல்லை என்பதை அறிவாயாக.

அறத்துப்பால் முற்றும்.

# பொருட்பால்

'தனி மனிதன் அறநெறியிலே நின்று ஒழுகுதல் வேண்டும்' என்பது, அறத்துப்பாலிலே வற்புறுத்தப்பட்டது. அத்தகைய அறநெறியின் வழிப்பட்டுவரும் பொருளினைப் பற்றிய செய்திகளைக் கூறுவதாகப் பொருளியல் வாழ்வை விளக்குவது இந்தப் பகுதி.

தன்னுடைய இல்வாழ்வின் நுகர்ச்சிக்கு உதவுவது பொருளே என்பதுடன், ஒருவனுடைய புகழ்வாழ்வுக்குரிய செயல்களைச் செய்வதற்கும் அதுவே உதவியாக விளங்குகிறது. அதனால், அதனைத் தவறாது பேணிக் கொள்ளுதலும் தவறாகாது என்பதே ஆன்றோர் கருத்தாகும்.

இந்தப் பொருட்பால் ஏழு இயல்களாகப் பிரிக்கப்பட்டுக் காணப்படும். அரசியல் ஏழு அதிகாரங்கள், நட்பியல் நான்கு அதிகாரங்கள், இன்பவியல் மூன்று அதிகாரங்கள், துன்பவியல் நான்கு அதிகாரங்கள், பொதுவியல் ஓர் அதிகாரம். ஆக மொத்தம் பத்தொன்பது அதிகாரங்கள் இதன்கண் விளங்கும். அவற்றுள் முதலாவது கூறப்படுவது அரசியல்.

## 1. அரசியல்

அரசியலாவது, அரசநெறியை நடாத்தி வரும் நாட்டுத் தலைவனுக்குரிய தன்மையை விளக்கிக் கூறும் பகுதி.

உலகிலே, மக்கள் அனைவரும் பசியும் பகையும் ஒழிந்தவர்களாக வசியும் வளனும் பெற்றவர்களாக, இன்புற்று வாழ வேண்டுமானால், அவர்களைத் தலைமையேற்று நடத்திச் செல்லுவோன் ஒருவனும் வேண்டும். அவன், மக்களின் பாங்கினை நன்கு உணர்ந்தவனாகவும், தான் ஏற்றிருக்கும் தலைமையினை முறையே நிறைவேற்றிச் செல்வதற்குரிய தகுதிகளை உடையவனாகவும் விளங்குதலும் வேண்டும்.

தகுதியற்ற தலைமையின்கீழ், நாட்டின் நிலை சீர்குலைந்தே போகும். பலருடைய வாழ்வும், அந்தத் தலைவனின் தகுதியையும் ஆற்றலையும் பொறுத்தே விளங்குவதனால், அவனுடைய தகுதியை ஆராய்வதும் வகுத்துக் கூறுவதும் சான்றோர் கருத்தாயிற்று. அதனை நாமும் காணலாம்.

# 14. கல்வி

'கல்வி, என்பது, ஒருவன் தன் வாழ்வின்கண் தான் செப்பமாகத் தெளிந்த அறிவுடன் நடந்து கொள்வதற்கு உதவும், தகுதியுடைய நூல்களைக் கற்றலைக் குறிப்பதாகும். இதன் இன்றியமையாமை குறளினும் சரி, இந்நூலினும் சரி, அரசியல் தொடர்புடன் ஒட்டியே வற்புறுத்தப்படுகின்றது.

பொதுவாக, அனைவருக்குமே கல்வி இன்றியமை யாததுதான் என்றாலும், பல்வேறு மக்களையும் ஆண்டு, நாட்டைப் பேணிக்காத்து நிற்கும் பொறுப்புடையவர்களுக்கு, அது மிகவும் இன்றியமையாததாகும் என்பது தெளிவாகும்.

கல்வியாவது, தத்தம் தொழிலுக்கு ஏற்ற அறிவுகளைப் பெருக்கிக் கொள்ளலும், உண்மை உணர்வதற்கான விளக்கங்களைக் கேட்டுக் கற்றும் அறிதலும், அங்ஙனம் அறிந்தபின் அவற்றைப் பிறருக்குத் தான் வகுத்துக்கூற வல்லவனாதலும் ஆகும்.

நம் முன்னோர் வாழ்ந்த மரபுகள், அவர்களுடைய சிறந்த எண்ணங்கள், மற்றும் வாழ்வின் செப்பத்திற்கான பற்பல தெளிந்த முடிவுகள் அனைத்தும் தருவது கல்வி. ஆதலின், அனைவரும் கற்றலில் மனஞ்செலுத்துதல் சிறப்பாகும்.

**131. குஞ்சி அழகும், கொடுந்தானைக் கோட்டழகும்,**
**மஞ்சள் அழகும், அழகல்ல,-நெஞ்சத்து,**
**'நல்லம்யாம்' என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு.**

தம்முடைய தலைமயிரினை அழகாகப் புனைந்து கொள்வதனாலே பெறுகின்ற அழகும், உடலினை வளைந்து கொண்டதாக விளங்கும் ஆடையினது கரைகளால் ஏற்படுகின்ற அழகும், நல்ல மணக்கலவைப் பூச்சுக்களை உடலிலே பூசிக்கொள்வதனால் ஏற்படும் அழகும் உண்மையான அழகு அன்று.· தம்முடைய நெஞ்சத்திலே, 'நாம் நல்லவர்கள்' என்ற உறுதியினைத் தருகின்ற நடுவுநிலைமையை ஏற்படுத்துவதனால், கல்வியினால் ஏற்படும் அழகே உண்மையான அழகாகும்.

'உடலழகுகள் நம்மைப் பார்க்கும் பிறருக்கே அழகாகத் தோன்றுவன; ஆனால் உள்ளத்துக்கு அழகு தருவது கல்வியொன்றினால் மட்டுமே அமையும்' என்பது கருத்து. குஞ்சி-ஆணின் தலைமயிர். கொடும் தானை- வளைவுடைய

ஆடை; உடலை வளைத்துச் சூழ்ந்திருப்பதால் கொடுந்தானை எனப்பட்டது. மஞ்சள்-மகளிர்க்குரிய பூச்சு. இதனால் கல்வி ஆடவர் மகளிர் ஆகிய இருவருக்கும் அழகு தருவது என்பது கூறப்பட்டது.

**132. இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்;**
**தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;**
**எம்மை உலகத்தும் யாங்காணேம், கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து.**

கல்வியானது, இம்மை என்று சொல்லப்படும் இந்தப் பிறவியின் பயனாகிய உறுதிப் பொருள்களையும் தரும். செல்வத்தைப் போலல்லாமல் கொடுக்கக் கொடுக்கக் குறைவு படாமல் மென்மேலும் வளர்ந்துகொண்டே போகவும் செய்யும். அதனையுடைய ஒருவரைப் புகழ் என்னும் பெருமையால் நெடுந்தொலைவுக்கு விளக்கமுறச் செய்யும் சக்தியும், அதற்கு உண்டு. தாம் உயிருள்ளவராக வாழும் அளவும் கல்வி அழிதல் இல்லாது நிலைபெற்றுத் தம்முடன் விளங்கும். ஆதலால் கல்வியைப் போல அறியாமையாகிய நோயை ஒழிக்கின்ற ஒரு மருந்தினை யாம் எத்தன்மையான உலகத்தினும் காண்கின்றோ மில்லை.

கல்வி, அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்கும். பிற செல்வங்களோ அறிவை மறைத்து அறியாமையை வளர்ப்பன. ஆகவே, கற்றல் மிகவும் சிறப்புடையது என்பது கூறப்பட்டது.

**133. களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்**
**விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்;**
**கடைநிலத்தோர் ஆயினும், கற்றறிந் தோரைத்**
**தலைநிலத்து வைக்கப் படும்.**

உவர் நிலத்திலே தோன்றிய உப்பினை நல்ல விளை நிலத்தின் விளைந்த நெல்லினைக் காட்டினும் சிறப்புடையதாகச் சான்றோர் கொள்வார்கள். அங்ஙனமே கடையான பகுதியிலே பிறந்தவர்கள் ஆனாலும், கற்று அறிவுடையவர்களாக விளங்கு பவர்களை, மேன்மையான பகுதியிலே வைத்துப் பெருமைப் படுத்துவார்கள் அறிவுடையோர்.

உயர்வும் தாழ்வும் பிறப்பால் அமைவன வன்று; கல்வியறிவால் அமைவனவே என்பது கருத்து. கடை நிலம், தலைநிலம் என்பன தாழ்ந்த நிலையிலுள்ள குடியினர், உயர்ந்த நிலையிலுள்ள குடியினர் ஆகியோரை இங்கே குறிக்கும்.

**134. வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை;**
**மிக்க சிறப்பின் அரசர் செறின்,-வவ்வார்;**
**எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன**
**விச்சை; மற்று அல்ல, பிற.**

*கல்வியானது தான் வைக்கப்பட்டுள்ள இடத்தினின்றும் பிறரால் களவாடப்பட முடியாதது. கொள்பவர் தகுதியுடையவராக வாய்த்து, அவருக்கு எவ்வளவுதான் கொடுத்தாலும் அதனால் வளர்ச்சி உண்டேயல்லாமல் அழிவில்லை. மிகுதியான சிறப்பின் காரணமாக அரசர்களே சினங்கொண்டு வந்தாலும் கவர்ந்து சென்றுவிட மாட்டார்கள். ஆதலால் ஒருவன் தன் மக்களுக்குத் தான் விட்டுச் செல்லும் செல்வமென்று சேர்த்துவைக்கத் தக்கவை, கல்விப் பொருள்களே யல்லாமல் பிற அல்ல என்று அறிதல் வேண்டும்.*

*'மக்களுக்குச் செல்வத்தைச் சேமித்து வைத்துப் போவதைவிட அவர்களைக் கல்வியறிவு உடையவர்களாக்கி வைப்பதே சிறந்ததாகும்' என்பது கருத்து. எச்சம்-எஞ்சி நிற்பது. விச்சை - கல்வி.*

**135. கல்வி கரையில; கற்பவர் நாள்சில;**
**மெல்ல நினைக்கின், பிணிபல;-தெள்ளிதின்**
**ஆராய்ந் தமையுடைய கற்பவே, நீர்ஒழிய**
**பாலுண் குருகிற் றெரிந்து.**

*வித்தையாகிய கடலோ தனக்கொரு கரையேனும் இல்லாது முடிவின்றி விளங்குவதாகும். அவற்றைக் கற்பவர்களது வாழ்நாட்களோ மிகவும் சிலவாகும். பொறுமையாக நினைத்துப் பார்த்தோமானால், அந்த வாழ்நாட்களினும் இடையிடையே வந்து வருத்தும் நோய்களும் பலவாகும். ஆதலால், நீரினைத் தனியாகப் போகுமாறு பிரித்து ஒதுக்கிவிட்டுப் பாலைமாத்திரம் தான் உண்ணுகின்ற இயல்பினையுடைய அன்னப்பறவை போலத் தெளிவாக ஆராய்ந்து தமக்குப் பொருத்தமான சிறந்த நூல்களை மட்டுமே அறிவுடையோர் படிப்பார்கள்.*

*'அமைவுடைய' என்றது, அறிவுக்கு வளந்தருகின்ற உண்மைப் பொருள் கூறும் நூல்களை; அவற்றை மட்டுமே கற்கவேண்டும் என்பது கருத்து.*

**136. தோணி இயக்குவான், தொல்லை வருணத்துக்**
**காணின் கடைப்பட்டான் என்றிகழார்;-காணாய்!**

**அவன்றுணையா வாறுபோ யற்றே, நூல்கற்ற**
**மகன்றுணையா நல்ல கொளல்.**

தோணியினைச் செலுத்துகின்றவன் பழமையான சாதிகளுள்ளும் கடைப்பட்ட சாதியைச் சேர்ந்தவனே என்பதை அறிந்தாலும், அவனை யாருமே இகழமாட்டார்கள். அவனைத் துணையாகக் கொண்டு ஆற்று வெள்ளத்தைக் கடந்து கரைசேரவே நினைப்பார்கள். இதனைக் கருதுதல் வேண்டும். இதுபோலவே, ஒவ்வொருவரும் அறிவு நூல்களைக் கற்றவன் எந்த வகுப்பினனாயினும் அதனைக் கருதாது, அவனைத் துணையாகக் கொண்டு நல்ல நூற்பொருள்களைத் தாமும் கற்றுக் கொள்ளல் வேண்டும்.

'ஆசானாயிருக்கத் தக்கவன் கல்வியறிவு உடையவனே அல்லாமல் குலவுயர்வு உடையவன் அல்லன்' என்று கூறுவதன் மூலம், கல்வியால் குலப்பிறப்பின் இழிவும் போகும், உயர்வும் வாய்க்கும் என்பது கூறப்பட்டது.

137. **தவலருந் தொல்கேள்வித் தன்மை உடையார்,**
**இகலிலார், எஃகுடையார், தம்முட் குழீஇ,**
**நகலின் இனிதாயின், காண்பாம்; அகல வானத்து**
**உம்பர் உறைவார் பதி.**

தொன்றுதொட்டு வழிவழியாக வருகின்ற குற்றமற்ற நூற்கேள்விகளினது தன்மையைப் பெற்றுள்ளவர்களும், பகைமைக் குணமானது இல்லாதவர்களும், ஆயுதம்போற் கூர்மையான நுட்ப அறிவு உடையவர்களும், தம்முள் ஒன்று கூடியிருக்கும் அவையினிடத்தே கூடியிருந்து மகிழ்தலைக் காட்டினும் இன்பந் தருவதாகுமானால், யாமும், பரந்த வானுலகத்தே தேவர்கள் வாழும் நகரமாகிய அமராவதியைச் சென்று காண்போமாக.

'அறிவுடையோர் அவையிலே கூடியிருக்கும் இன்பத்துக்கு வானுலகத்து இன்பமும் நிகராகாது' என்றது இது. தவல்-தவறுதல். இகல்-பகைமை. எஃகு-வேல்; அதுபோற் கூர்மையான நுண்ணறிவு.

138. **கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை**
**நுனியிற் கரும்பு தின்றற்றே;-நுனிநீக்கித்**
**தூரிற்றின் றன்ன தகைத்தரோ, பண்பிலா**
**ஈரம் இலாளர் தொடர்பு.**

ஒலிமுழங்கும் கடலினது குளிர்ந்த கரைகளை உடைய நாட்டின் தலைவனே! நல்ல நூல்களைக் கற்று அறிவுடைய வர்களாக விளங்குபவர்களுடைய நட்பானது நுனியிலிருந்து அடிநோக்கிக் கரும்பைத் தின்பது போலத் தொடக்கத்திலே சற்று உவர்ப்பாயிருந்தாலும் வரவர இனிமை தருவதாய் இருக்கும். கரும்பை நுனியிலிருந்து தின்னுதலை விட்டு, அடியிலிருந்து நுனிநோக்கித் தின்பதைப் போன்று, முதலிலே இனிமையாக இருந்தாலும், வரவர உவர்ப்பாகப் போய்விடுவது, கல்விப் பண்பற்ற அன்பில்லாதவர்களுடைய தொடர்பு ஆகும்.

'கல்வியுடையவர் தொடர்பே நெடுங்காலம் இன்பந் தருவது' என்று கூறிக் கல்வியின் சிறப்பு வலியுறுத்தப் பட்டது.

**139. கல்லாரே ஆயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின்,**
**நல்லறிவு நாளுந் தலைப்படுவர்-தொல்சிறப்பின்**
**ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலால் புத்தோடு**
**தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.**

தொன்மையாகவே விளங்கும் சிறப்பினையும் பிரகாசமான நிறத்தினையும் உடைய பாதிரிப் பூவினைச் சேர்தலால், புதிதான பானையோடானதும் தன்னிடத்தேயுள்ள குளிர்ந்த நீருக்குத்தான் வாசனையைக் கொடுக்கும். அதுபோலவே படியாதவரேயானாலும் படித்தவருடன் சேர்ந்து நடப்பாரானால், அச்சேர்க்கை காரணமாக, நாள்தோறும் நல்ல அறிவு உண்டாகப் பெறுவார்கள்.

'படியாமற் போனாலும், படித்தவருடைய தொடர்பாவது வைத்துக் கொள்ளவேண்டும்' என்று சொல்வதன் மூலம், கல்வியின் சிறப்பைக் கூறுவது இது.

**140. அலகுசால் கற்பின், அறிவு நூல் கல்லாது,**
**உலகுநூல் ஓதுவது எல்லாம்,-கலகல**
**கூஉந் துணையல்லால், கொண்டு, தடுமாற்றம்**
**போஒந் துணையறிவார் இல்.**

அளவு மிகுந்த நூற்களினுள்ளே உண்மையான அறிவைத் தருகின்ற நூற்களைப் படியாது. இவ்வுலகத்துக்கே பயன்படுகின்ற நூற்களை மட்டுமே படிப்பதெல்லாம், கலகலவென்று கூவும் அளவை உடையதேயல்லாமல், அவ்வுலக நூற்களைப் படித்ததைக் கொண்டு, பிறவித் துன்பங்களினின்றும் தடுமாற்றத்தை நீக்கிக் கொள்ளும் தன்மையை அறிந்தவர் எவரும் இல்லை.

'கற்பதினும், உயிர்க்கு உறுதிதரும் நூற்களைக் கற்பதே சிறந்தது' என்பது கருத்து.

## 15. குடிப் பிறப்பு

தமிழ் அறநூல்கள், பிறப்பினால் உயர்வு தாழ்வு என்ற நிலையினை வன்மையாக மறுத்துக் கூறுவன. எனினும், அவை ஒவ்வொரு குடியின் பழக்கவழக்க வேறுபாடுகளால் அவற்றுள் சில உயர்குடியாகவும், சில உயர்குடி அல்லாததாகவும் விளங்குவதையும் ஏற்றுக் கொண்டுள்ளன.

சாதிக்குத் தக்க பழக்க வழக்கங்கள் சில நிலவுவது உண்மைதாம். அவை காலப்போக்கிலே அந்தக் குறிப்பிட்ட குடும்பத்தார் சமூகத்தின் பல்வகைச் சூழல்களால் நம்முடைய வாழ்வு முறையை அமைத்துக் கொள்ள நேரிட்ட காரணத்தால் உருவானவை. இப்படியே ஒவ்வொரு குடும்பமும் தனக்கென ஒருவகையான பண்பாட்டு ஒழுக்கத்தைப் பேணிவந்து கொண்டிருக்கிறது. அந்தச் சூழ்நிலையிலே பிறந்து வளரும் மனிதர்களும், அந்தந்தப் பண்பாட்டினைக் கொண்டவர் களாகவே விளங்குகின்றனர். இந்த உண்மையை மறைப்பதற்கில்லை.

உயர்ந்த குடியினரிடையே கல்வியும், நல்லொழுக்கமும் இயல்பாகவே படிந்திருக்க வேண்டும். அப்படிப் படிந்திருப்பதன் காரணமாக விளங்கும், அத்தகைய நற்குடிப்பிறப்பின் சிறப்பை இந்தப் பகுதி கூறுகிறது. நற்குடிப்பிறத்தல் ஊழ்வினைப் பயனால் வருவது என்பது சான்றோர் கொள்கை.

**141. உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணும்,**
**குடிப்பிறப் பாளர்தம் கொள்கையிற் குன்றார்;**
**இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா**
**கொடிப்புற் கறிக்குமோ மற்று?**

உடுக்கப்படும் ஆடையும் கந்தலாய்ப்போன வறுமையினை அடைந்து தக்க உணவு இல்லாத காரணத்தால் தம் உடம்பும் மெலிவுற்று நலன் அழிந்துபோன காலத்தினும், உயர்ந்த குடியிலே பிறந்தவர்கள், தம்முடைய அந்தக் குடிக்கு உரிய கொள்கையினின்றும் குறைபடவே மாட்டார்கள். பசியினா லாகிய துன்பமானது மிகுதியாக நேர்ந்தவிடத்தும், சிங்கமானது கொடியாகப் படர்ந்திருக்கும் புல்லைத் தின்னுமோ?

'அது தின்னாதது போலவே அவரும் குடிப்பண்பிற்குக் குறைவுநேரும் செயலிலே ஈடுபடமாட்டார்கள்' என்பது கருத்து.

உடுக்கை-உடை; அதுவும் உலறல், மானம் அழியும் கொடிய வறுமைநிலையை உணர்த்தும். அரிமா: அரி-சிங்கம். மா-விலங்கு; சிங்கமாகிய விலங்கு.

**142. சான்றாண்மை, சாயல், ஒழுக்கம் இவை மூன்றும்**
**வான்றோய் குடிப்பிறந்தார்க்கு அல்லது-வான்றோயும்**
**மைதவழ் வெற்ப! படாஅ, பெருஞ்செல்வம்**
**எய்தியக் கண்ணும், பிறர்க்கு.**

வானம் அளாவியவும், மேகங்கள் தவழ்கின்றவுமான உயரமான மலைகளையுடைய அரசனே! நற்குணங்களால் நிறைவுற்று அவற்றை ஆளுகின்றவோர் தன்மையும், தம் பழக்க வழக்கங்களிலே ஒருவகையான மென்மை இயல்பும் நல்லொழுக்கமும் ஆகிய இவை மூன்றும் புகழால் மேலுலகத்தையும் அளாவியிருக்கும் உயர் குடியிலே பிறந்தவர்களுக்கு மட்டுமே அல்லாமல், மற்றையோருக்குப் பெருஞ்செல்வம் வந்து சேர்ந்த காலத்தும் உண்டாவன அல்ல.

'சான்றாண்மை முதலியன குடிப்பிறப்பால் வருவனவே அல்லாமல், செல்வம் முதலியவற்றின் மிகுதியால் வருவன அன்று' என்று கூறுவதன் மூலம், உயர்குடிப் பிறப்பின் உயர்வு கூறப்பட்டது.

**143. இருக்கை எழலும் எதிர்செலவும், ஏனை**
**விடுப்ப ஒழிதலோடு, இன்ன -குடிப்பிறந்தார்**
**குன்றா ஒழுக்கமாகக் கொண்டார், கயவரோடு**
**ஒன்றா உணரற்பாற்று அன்று.**

சான்றாண்மை உடைய பெரியவர்களைக் கண்டபோது தம் இருக்கையைவிட்டு எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்தலும், அவர்களை எதிர் கொண்டு சென்று வரவேற்றலும், அவர்கள் விடைகொடுத்த பின்பே அவர்களை விட்டுப் பிரிதலும் ஆகிய இத்தகைய பண்புகளை எல்லாம் உயர்ந்த குடியினிடத்தே பிறந்தவர்கள் தம்பாற் குறையாத ஒழுக்கங்களாக மேற்கொண்டிருக்கின்றனர். அதனால், அவர்களை அவை செய்தலில்லாத கயவர்களோடு ஒன்றாக வைத்து எண்ணுதல் பான்மையுடையது அன்று.

உருவால் ஒத்திருப்பினும் உயர்குடியினரும் கயவரும் தத்தம் ஒழுக்கத்தால் வேறுபட்டே இருப்பார்கள் என்பதற்குச் சில கூறி, உயர்குடியினரின் சிறப்புக் காட்டப் பெற்றது.

144. நல்லவை செய்யின் இயல்பாகும்; தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்; -எல்லாம்
உணருங் குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ,
புணரும் ஒருவர்க் கெனின்?

உயர்ந்த குடியிலே பிறந்தவர்கள் ஒரு நல்ல செயலைச் செய்தால், அது அவர்களுடைய குடிப்பிறப்பின் இயல்பு என்று கருதப்படும். அவர்கள் தீய செயலைச் செய்தாலோ பலரும் தூற்றிப் பரப்புகின்ற பெரும் பழியாகிவிடும். ஆதலால், நல்ல குடியிலே பிறத்தல் என்பது ஒருவருக்கு வந்து வாய்க்குமானால், எல்லாவற்றையும் அறியவல்லதான அந்தப் பிறப்பினால்தான் அவர் அடைந்த பயன் என்னவோ?

அந்தக் குடிப்பிறப்பும் பயன் அற்றது என்று சொல்வது போல, அந்த உயர்குடிப் பிறப்பைப் புகழ்ந்தது இது. தாம் செய்யுந் தீயவையால் எழும் பெரும்பழிக்கு அஞ்சி அவர் அவற்றின்கண் ஈடுபடமாட்டார் என்பது குறிப்பு. ஊதியம்-பயன். புணரும்-வந்து பொருந்தும்.

145. கல்லாமை அச்சம், கயவர் தொழிலச்சம்,
சொல்லாமை உள்ளுமோர் சோர்வச்சம்; -எல்லாம்
இரப்பார்க்கொன் றீயாமை அச்சம்; மரத்தார், இம்
மாணாக் குடிப்பிறந் தார்.

தாம் கல்லாதவராகிவிடக் கூடாதே என்ற அச்சமும், தாம் மூடர்களின் தொழில்களுள் எதையாவது செய்து விடக் கூடாதே என்ற அச்சமும். தீய சொற்களைச் சொல்லாம லிருப்பதில் எப்போதாவது தவறிவிடுவோமோ என்ற சொல்லின் தளர்ச்சியைக் குறித்த அச்சமும், தம்மிடம் வந்து இரந்து நிற்பவர்க்கு எதுவும் கொடாமல் இருக்கக் கூடாதே என்ற அச்சமும் - இப்படிப் பல்வேறு அச்சங்களும் நல்ல குடியிலே பிறந்தவர்களுக்கு உள்ளனவாம். அதனால், இப்படி அச்சமே மிகுதியாகவுடைய மாண்பற்ற குடியிலே பிறந்தவர்கள், கடலிடையே செல்லும் மரக்கலத்திலே உள்ளவர்களைப் போன்று சதா கவலையே உடையவர்கள் ஆவார்கள்.

உயர்குடிப் பிறந்தோர் இவற்றுக்கெல்லாம் அஞ்சுவர்; கயவரோ அஞ்சமாட்டார்; அதனால் அச்சமுடைய இது என்ன பிறப்பு? இப்படிப் பழிப்பதன் மூலம் அவர்களுடைய உயர்வைப் போற்றுவது இது.

146. இனநன்மை, இன்சொல், ஒன்று ஈதல், மற்றேனை
மனநன்மை, என்றிவை எல்லாம்-கனமணி
முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே யுள.

*சிறந்த நவமணிகள் முத்துக்களோடுஞ் சேர்ந்து பிரகாசிக்கின்ற, முழங்கும் கடலினையுடைய குளிர்ச்சியான கடற்கரைக்கு உரிய தலைவனே தம்மைச் சேர்ந்தவர் நல்லவராயிருத்தலும், தாம் இனிமையான சொற்களையே சொல்லுதலும், தம்மிடம் வந்து யாசித்தவர்களுக்கு இல்லை என்னாது கொடுத்தலும், மற்றும் தம் மனம் தூய்மை யோடிருத்தலும் ஆகிய இவை எல்லாம், நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்திலேயே உள்ளனவாகும்.*

*நல்ல குடிப் பிறந்தவர்களிடமே இவை எல்லாம் உள்ளன வாதலின், அக்குடியின் சிறப்புப் போற்றப் பெற்றது.*

147. செய்கை அழிந்து, சிதன்மணிடிற் றாயினும்,
பெய்யா ஒருசிறை பேரில் உடைத்தாகும்,
எவ்வம் உழந்தக் கடைத்தும், குடிப்பிறந்தார்,
செய்வர், செயற்பா லவை.

*பெரிய வீடாக இருந்தால், அதன் கட்டுக்கோப்பு எல்லாம் அழிந்துபோய், எங்கும் கறையான்கள் நெருங்கிப் பிடித்திருந்தாலும், மழைநீர் உள்ளே ஒழுகாத ஒரு பக்கத்தையாயினும் அது உடையதாயிருக்கும். அதனைப் போலவே, உயர்குடியிலே பிறந்தவர்கள் தாம் துன்பத்திலே உழன்று கொண்டிருக்கும் காலத்தினும், தாம் செய்வதற்குரிய கடமைகளைத் தவறாது செய்வார்கள்.*

*செய்வதற்குரியவற்றையே செய்வார்கள் என்றதன் மூலம், அவர்கள் செய்யத்தகாத காரியங்களிலே ஈடுபடமாட்டார்கள் என்னும் பெருமையும் கூறப்பெற்றது.*

148. ஒருபுடை பாம்பு கொளினும், ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉம்-திங்கள்போல்,
செல்லாமை செவ்வனேர் நிற்பினும், ஒப்புரவிற்கு
ஒல்கார், குடிப்பிறந் தார்.

*தன்னுடைய ஒரு பக்கமானது பாம்பினால் விழுங்கப் பட்டிருக்கும் காலத்தினும், தன் மற்றொரு பக்கத்தினால் அழகிய இடத்தையுடைய பெரிய பூமியைத் திங்களானது ஒளியுடைய தாகச் செய்யும். அதுபோலவே, தங்கள் முயற்சிகள் ஈடேறாமை*

யாகிற நிலைமையானது செவ்வையாகத் தம்மிடத்தே நேரிட்டிருப்பினும், உயர்குடியிலே பிறந்தவர்கள், தம் சக்திக்கு ஏற்றவாறு உபகாரஞ் செய்வதற்குப் பின்வாங்கவே மாட்டார்கள்.

'எடுத்த காரியம் முழுவதும் நிறைவேறாமற் போனாலும் முடிந்தமட்டும் உதவுபவர் நற்குடிப் பிறந்தவர்; பிறர் இருப்பினும் உதவார்' என்பது கருத்து.

149. செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன,
செல்லிடத்துஞ் செய்யார், சிறியவர், - புல்வாய்
பருமம் பொறுப்பினும், பாய்பரி மாபோல்
பொருமுரண் ஆற்றுதல் இன்று.

தம்முடைய வறுமை முதலியவற்றால், தாம் ஒன்றைச் செய்ய முடியாது போயின காலத்தினும், நற்குடியிலே பிறந்தவர்கள் செய்யும் காரியங்களைத் தம்மால் செய்ய முடிந்த காலத்தினுங்கூடத் தாழ்ந்தகுடியிற் பிறந்தவர் செய்ய மாட்டார்கள். மானானது சேணம் முதலிய போர்க்கோலங்களைச் சுமந்து கொண்டிருந்தாலும், பாய்ந்து செல்லும் தன்மையினை உடைய போர்க்குதிரையைப் போலப் போர் செய்ய வல்ல வலிமையை உடையதா யிருப்பதில்லை.

'கீழோர் வாய்ப்பிருந்தும் நற்செயல்களுள் ஈடுபடமாட்டார்: மேலோர் வாய்ப்பற்றபோதும் முடிந்தவரை ஈடுபடுவர் என்பது கூறி, அவரது குடிச்சிறப்புக் கூறப்பெற்றது.

150. எற்றொன்றும் இல்லா இடத்தும், குடிப்பிறந்தார்
அற்றுதற் சேர்ந்தார்க்கு அசைவிடத்து - ஊற்றாவர்;
அற்றக் கடைத்தும் அகல்யாறு அகழ்ந்தக்கால்,
தெற்றெனத் தெண்ணீர் படும்.

உயர்குடியிலே பிறந்தவர்கள், யாதொரு வசதியும் தம்மிடத்தே இல்லாத இடத்தினும், வேறு கதியற்றுத் தம்மை வந்து அடைந்தவர்களுக்குத், தளர்ச்சி நேர்ந்தவிடத்து ஊன்றுகோல் போலத் தாங்கி உதவுவார்கள். எதுபோல என்றால் - நீர் முழுவதும் வறண்டு போயின காலத்தினும், அகற்சியை உடைய ஆறானது தோண்டின விடத்துத் தெளிவான தண்ணீரை உடையதாயிருப்பது போல் - என்க.

கோடையினும் தோண்டினால் நீர் தந்து உதவும் ஆற்றைப் போல, உயர்குடிப் பிறந்தோர் தம் வறுமையினும் தம்மை வந்து

அடைந்தவர்களுக்கு இயன்றவரை உதவுவார்கள் என்று கூறி, அத்தகைய குடியினரின் பெருமை சொல்லப் பெற்றது. தெள்+நீர்=தெண்ணீர்-தெளிந்த நீர்.

## 16. மேன் மக்கள்

மக்களுள் மேலான பண்பும் ஆற்றலும் உடையவர்களே மேன்மக்கள் எனப்படுவர். இவர்கள் செயற்கு அரியன செய்தலும், கற்று அறிவுடைமையும், நல்லனவே செய்தலன்றித் தீயன மனத்தானும் கருதாமையும், பிறருக்கு உதவும் அருளுடைமையும் ஆகிய பல்வேறு குணங்களுக்கும் உறைவிடமா யிருப்பார்கள்.

நல்ல குடிப்பிறப்பினால் நல்ல பண்புகள் அமைய அவர்கள் மேன்மக்களாக விளங்குதலும் வாய்ப்பதாகும். ஆயினும் அவருள்ளும் ஒரு சிலர் கீழோர் தொடர்பாலும் ஊழ்வினை வசத்தாலும் மேன்மக்கள் ஆகாமற் போதலும் கூடும். அதேபோலக் கீழான குடியிற் பிறந்தும், தம்முடைய தளரா முயற்சியாலும், வினைப்பயனாலும், உள்ளத்து உறுதியாலும் மேலான பண்பாளர்களாக விளங்குபவரும் பலர் உள்ளனர்.

இந்தப் பகுதி, எத்திறத்தாலும் மேன்மையான மக்கட் பண்பு உடையவர்களைப் போற்றுதல் பற்றிக் கூறுவதாகும்.

**151. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்**
**திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்; - திங்கள்**
**மறுவாற்றுஞ்; சான்றோரஃது ஆற்றார்; தெருமந்து**
**தேய்வர், ஒருமாசு உறின்.**

அழகிய இடத்தினை உடையதாகிய வானத்திலே யிருக்கும், பரந்த நிலவொளியை வீசுகின்ற திங்களும், சான்றோரும், பெரும்பாலும் தம்முள் ஒத்திருப்பார்கள். ஆனால் திங்கள் தன்பாற்சேரும் களங்கத்தைத் தான் பொறுத்துக் கொண்டு இருக்கும். சான்றோர்களோ அப்படிப் பொறுக்க மாட்டார்கள். ஒரு குற்றம் தம்பால் நேர்ந்தாலும் அதனை எண்ணி வருந்தித் தம் உயிரையே விட்டுவிடுவார்கள்.

இதனால், அகல் நிலாப் பாரிக்கும் திங்களினும் சான்றோர் சிறந்தவர் என்பது கூறப்பெற்றது. அவரும் தம் சான்றாண்மையால் உலகெங்கும் பரந்த புகழினராயிருப்பர் என்பது உணர்க.

152. இசையும் எனினும், இசையாது எனினும்,
வசைதீர எண்ணுவர், சான்றோர் - விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினிற் றீதோ,
அரிமாப் பிழைப்பெய்த கோல்?

*பெரியவர்கள் ஒன்றைச் செய்தல் தமக்கு இயலுவது என்றாலும், இயலாதது என்றாலும் பழிப்பிற்கு இடமில்லாத சிறந்த காரியங்களைப் பற்றியே நினைப்பார்கள். வேகமாகச் சென்று நரியென்னும் விலங்கின் நெஞ்சைக் கிழித்துக் கொன்ற அம்பினைக் காட்டினும், சிங்கமானது குறிதவறலாற் பிழைத்துப்போக எய்த அம்பானது தாழ்வானதோ? (இல்லை என்பது கருத்து).*

*பெரியோர் உள்ளம் பெரிய காரியங்களிலேயே செல்லும் என்பதுடன், சிறியவற்றிற் செல்லாது என்பதையும் கூறிப் பெரியோர் பெருமை காட்டப் பெற்றது.*

153. நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும், சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார், -உரங்கவறா,
உள்ளமெனும் நாரினாற் கட்டி, உளவரையால்
செய்வர், செயற்பா லவை.

*உணவு இன்மை காரணமாக உடல் மெலிவடைதலால், நரம்புகள் மேலே எழுந்து தோன்றப் பெற்று மிக்க வறுமையினை உடையவர்களாக ஆனாலும், சான்றோர்கள் எல்லை கடந்து குற்றமான செய்கைகளை மேற்கொண்டு, அளவுக்குமீறிச் செல்லவே மாட்டார்கள். தம்முடைய அறிவையே கவறாக வைத்துத் தம் முயற்சியென்னும் நாரினாலே உள்ளத்தைக் கட்டித், தம்மிடத்தே உள்ள அளவிற்கு ஏற்பச், செய்யத்தகுந்த நல்ல காரியங்களையே செய்வார்கள்.*

*கவறு-பிளந்த பனைமட்டை. குரம்பு எல்லை. ஏறார் - மென்மேற் செல்லார். உரம்-அறிவு. மேன் மக்கள் எப்போதும் வரம்பு கடக்கவே மாட்டார்கள். இழிவான செயல்களிலே ஈடுபடார்கள்; உபகாரம் செய்பவராயிருப்பார்கள் என்பன கூறப்பெற்றன.*

154. செல்வுழிக் கண்ணொருநாள் காணினும், சான்றவர்
தொல்வழிக் கேண்மையில் தோன்றப் புரிந்தியாப்பர்;
நல்வரை நாட! சிலநாள் அடிப்படின்,
கல்வரையும் உண்டாம், நெறி.

நல்ல மலைகள் பொருந்திய நாட்டை உடையவனே! போய்க் கொண்டிருக்கும் இடத்திலே ஒருநாள் கண்டு பழகினாலும், அவர்களைப் பழைமை வழியினாலே வந்த சிநேகம் போலத் தோன்றும்படியாக உபசரித்துத் தம்முடன் அவரை அன்புடையவராகப் பிணித்துக் கொள்வார்கள் மேன்மக்கள். சில நாட்கள் காலடி பட்டதென்றால், கல்மலையினும் வழி உண்டாகும் அல்லவோ?

'கல்லிலும் சில நாட்கள் காலடிபட்டால் வழி உண்டாகிறது. அதுபோலச் சிலநாட் பழகினால் எவரும் சினேகிதராகலாம். ஆனால் மேன்மக்களோ ஒருநாட் கண்டாலும் அவர்மீது கனிந்த அன்பு பாராட்டுவர்' என்பது கருத்து.

155. புல்லா எழுத்திற் பொருளில் வறுங்கோட்டி
கல்லா வொருவன் உரைப்பவும், கண்ணோடி
நல்லோர் வருந்தியும் கேட்பாரே, மற்றவன்
பல்லாருள் நாணல் பரிந்து.

பொருள்களின் தன்மையை அறியும் அறிவில்லாத பயனற்ற சபையைச் சேர்ந்தவனும், கற்கவேண்டிய நூற்களைக் கல்லாதவனுமான ஒருவன், தனக்குத் தோன்றிய ஒரு பொருளைப் பொருந்தாத சொற்களால் எடுத்துச் சொல்லவும், மேன்மக்கள், அதனைக் கேட்க நேர்ந்ததற்காக வருத்தப்பட்டு அவன் பலர் முன்பாக அவமானப்பட்டு நிற்றலைக் காண்பதற்கு மனமில்லாமல், அவன்மீது தாட்சணியம் வைத்து, அவன் அப்படிச் சொல்வதைத் தாமும் காது கொடுத்துப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

'மூடர்கள் பேசுவதைப் பெரியோர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்களே என்றால், அது அவர்கள்மீது கொண்ட இரக்கத்தினால்' என்று பெரியோர்களின் பெருமையைக் கூறுவது இது.

156. கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி
இடித்து, நீர் கொள்ளினும் இன்சுவைத்தே யாகும்;
வடுப்பட வைதுஇறந்தக் கண்ணும், குடிப்பிறந்தார்
கூறார், தம் வாயிற் சிதைந்து.

கரும்பினை வாயினாற் கடித்தும், கணுக்கள் நொறுங்கும் படியாக ஆலையிலிட்டுச் சிதைத்தும், உலக்கை முதலியவற்றால் இடித்தும், அதனுடைய சாற்றை எடுத்து உட்கொண்டாலும்,

அது இனிய சுவையுடையதாகவே இருக்கும். தம்மீது குற்றம் தோற்றும்படியாகப் பிறர் தம்மைத் திட்டிப்போன காலத்தும், நல்ல குடியிலே பிறந்தவர்கள், தம்முடைய நல்ல பண்பினின்றும் கெட்டுப் போனவர்களாகத், தங்கள் வாயினால் தீயசொற்களை ஒருபோதும் சொல்லவே மாட்டார்கள்.

'பிறர் வருந்திய காலத்தும் மேன்மக்கள் தம் மேன்மையான குணத்தினைக் கைவிடமாட்டார்கள்' என்பது கருத்து.

**157. கள்ளார், கள்ளுண்ணார்; கடிவ கடிந்தொரீஇ,**
**எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்,-தள்ளியும்,**
**வாயிற்பொய் கூறார்; வடுவறு காட்சியார்**
**சாயின், பரிவ திலர்.**

குற்றமற்ற அறிவினை உடையவராகிய மேன்மக்கள் எனப்படுவோர் திருடமாட்டார்கள்; கள் குடிக்கமாட்டார்கள்; தள்ளத் தகுந்தவைகளை தள்ளி நீங்கி இருப்பார்கள்; அயலாரை அவமானமாக இகழ்ந்து பேசமாட்டார்கள்; தமக்கு எதனாலாயினும் தளர்ச்சி வந்த காலத்தும் அதற்காக வருத்தப்படவும் மாட்டார்கள்.

மேன்மக்களுடைய சிறந்த ஒழுக்கங்கள் இதண்கண் கூறப்பட்டன.

**158. பிறர்மறை யின்கண் செவிடாய்த், திறன் அறிந்து**
**ஏதிலார் இல்கண் குருடனாய்த், தீய**
**புறங்கூற்றின் மூகையாய், நிற்பானேல், யாதும்**
**அறங்கூற வேண்டா அவற்கு.**

ஒருவன், அயலாருடைய இரகசியங்களைக் கேட்பதிலே செவிடனாகவும், அயலானது மனைவியைப் பார்க்குங் காலத்திலே குருடனாகவும், ஒருவர்மேல் தீய சொற்களை அவர்களைக் காணாத இடத்திலே சொல்லுவதிலே ஊமையாகவும், நல்லொழுக்கத்தின் தன்மையை அறிந்து நிற்பானானால், அப்படிப் பட்டவனுக்கு வேறெந்தத் தருமமும் பிறர் சொல்ல வேண்டியதில்லை.

'மேற்சொன்னவையே சிறந்த தருமங்கள்' என்பது கருத்து. இதனால் மேன்மக்களுடைய ஒழுக்கத்தின் தகுதி கூறப்பட்டது. மறை-இரகசியம். மூகை-மூங்கை; ஊமை.

**159. பன்னாளும் சென்றக்கால், பண்பிலார் தம்முழை,
'என்னானும் வேண்டுப' என்றிகழ்ப;-என்னானும்
வேண்டினும் நன்றுமற்று என்று, விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர், சிறப்பு.**

மேன்மையான குணம் தம்மிடத்திலே இல்லாதவர்கள், ஒருவர் அடுத்தடுத்துப் பலநாளும் அவர்களை நாடிச்சென்ற காலத்தில், 'இவர் யாதாயினும் ஒன்றை நம்மிடமிருந்து பெற விரும்புகின்றனரோ?' என்று கருதி, அப்படி வருபவரை இகழ்வார்கள். ஆனால், பெரியோர்களோ என்றால், தம்மிடம் வருபவர் யாதேனும் விரும்பினாலும், நல்லதென்று சொல்லி வரும் அவரைக் காணும்போதெல்லாம் அவருக்குச் சிறப்புச் செய்வார்கள்.

'கீழோர், பலநாளும் வருபவர் ஏதேனும் கேட்பரோ என அஞ்சி, அவர் கேளாமுன்னரே அவரை இகழ்ந்து பேசுவார்கள். மேலோர் அவர் எதனை விரும்பினாலும் அதனைக் கொடுத்து நன்மை செய்வார்கள்' என்பது கருத்து. இதனால் மேலோரின் மனப்பண்பாடு சொல்லப்பட்டது.

**160. 'உடையார் இவர்' என்று, ஒருதலையாப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வர்; - உடைய
பிலந்தலைப் பட்டது போலாதே, நல்ல
குலந்தலைப் பட்ட இடத்து?**

'இவர் செல்வம் உடையவராக இருக்கின்றாரென்று' உறுதியாகப் பற்றிக்கொண்டு, கீழ் மக்களின் பின்னாகப் போய்ப் பிழைப்பார்கள் சிலர். அங்ஙனம் வாழ்பவர்கள் நல்ல குடியிற் பிறந்தவர்களைச் சேர்ந்தவிடத்து, நாம் வேண்டும் பொருள் எல்லாவற்றையும் உடையதாயிருக்கிற ஒரு சுரங்கத்தைப் போலிராதா என்று நினைக்க மாட்டார்களோ?

'செல்வம் உளதோ இல்லையோ மேன்மக்களைச் சேர்வதே சிறப்பாகும்' என்பது இது. இதனால், மேன் மக்களுடைய தொடர்பின் பயன் சொல்லப்பட்டது.

## 17. பெரியாரைப் பிழையாமை

மேன்மக்களின் தொடர்பினால் மனிதர்க்குப் பலப்பல நன்மைகள் உள்ளன. தூயோரும் மேலோருமாகிய அவர்களிடத்து எல்லோருமே பணிவும் அன்பும் உடையவர்களாக் இருக்க வேண்டும். அவர்கள் தொடர்பான செயல்களிலே

தவறு செய்வது மிகவும் வெறுக்கத்தக்க செய்கையாகும். இதனைப் பற்றிக் கூறுவது இந்தப் பகுதி.

பெரியார் என்று பொதுப்படக் கூறியதனால், இது பல முறைகளிலும் உள்ள பெரியார் பலரையும் குறிக்கும். அரசர் அமைச்சர் போன்ற சமூகத் தலைவர்களும், ஆசான் சான்றோர் போன்ற அறிவுத்துறைத் தலைவரும், உயர்குடியினர் துறவியர் போன்றோரும் எல்லாரும் பெரியோர்களே. அவர்கள் தமக்குப் பிழை செய்பவர்களையும் பொறுக்கும் இயல்பு உடையவரே என்றாலுங் கூட அவர்கள் சினங்கொள்வதால் நேரிடுகின்ற பெருங்கேட்டிற்கு ஒவ்வொருவரும் அஞ்சுதலும் வேண்டும்.

பெரியாரைப் பிழையாமை உயர்ந்த பண்புகளை மதித்துப் போற்றும் உள்ளச் செப்பத்தையும் தருவதாதலால் அனைவரும் இதனைக் கவனமாகக் கொள்ளல் வேண்டும்.

161. 'பொறுப்பர்' என்றெண்ணிப், புரைதீர்ந்தார் மாட்டும்
**வெறுப்பன செய்யாமை வேண்டும்; -வெறுத்தபின்,**
**ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட!**
**பேர்க்குதல் யார்க்கும் அரிது.**

அருவிகள் பேரொலியோடு வீழ்ந்து கொண்டிருக்கின்ற அழகிய மலைகளையுடைய சிறந்த நாட்டின் தலைவனே! பெரியோர்கள் குற்றம் என்பதே அறவே இல்லாதவர்கள். அதனால், 'அவர்கள் எது செய்தாலும் பொறுத்துக் கொள்வார்கள்' என்று நினைத்துங்கூடப் பெரியோர் வெறுப்படைகிற செயல்களைச் செய்யாமல் இருக்க வேண்டும். ஏனென்றால், அவர்கள் வெறுப்படைந்து விட்ட பின்னர், அந்த வெறுப்பினால் தமக்கு வரும் கேட்டினைப் போக்குதல் எவர்க்குமே அரிதாகும்.

'அவர்கள் பொறுத்தாலும் அவர்களை மனங்கலங்கச் செய்த தீவினையின் விளைவினின்று யாரும் தப்ப முடியாது' என்பது கருத்து. புரை-உள்ளே புண்பட்டிருக்கும் நிலைமை.

162. **பொன்னே கொடுத்தும், புணர்தற்கு அரியாரைக்**
**கொன்னே தலைக்கூடப் பெற்றிருந்தும்,-அன்னோ?**
**பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல**
**நயமில் அறிவி னவர்.**

சிறந்த மேன்மைப் பண்பில்லாத அறிவினையுடையவர்கள், அதாவது அற்பமான அறிவுடையவர்கள், பொன்னையே

*காணிக்கையாகக் கொடுத்தும் தொடர்பு கொள்வதற்கு அரியவர்களான பெரியவர்களை, ஒன்றும் தராமலே சேர்ந்து பழகத்தக்க வாய்ப்பைப் பெற்றிருந்துங்கூட, ஐயோ! அதனைப் பயனுள்ள பொழுதாகச் செய்து கொள்ளாமல், வீண் பொழுதாகக் கழிக்கின்றார்களே!*

*'பெரியோர்களை அவமதிப்பது மட்டுமன்று; அவர்களுடைய தொடர்பு வலியக் கிடைத்த காலத்தும் அவர்களுடைய தொடர்பின் பயனைப் பெறுவதற்கு மனமின்றி, வீண்காலம் கழிப்பதுகூடப் பிழைப்பட்ட செயலாகும்' என்பது கருத்து.*

**163. அவமதிப்பும், ஆன்ற மதிப்பும் இரண்டும்,**
**மிகைமக்க ளான்மதிக்கற் பால; -நயமுணராக்,**
**கையறியா மாக்கள் இழிப்பும் எடுத்தேத்தும்,**
**வையார் வடித்த நூலார்.**

*தாழ்வாக நினைப்பதும், மேலாக நினைப்பதும் ஆகிய இரண்டும் மேன்மக்களாலேயே மதிக்கத்தக்கவை. நற்குணத்தை உணரமாட்டாதவரும், நல்லொழுக்கத்தை மேற்கொள்ளாத வருமான கீழ்மக்களுடைய இழிவான பேச்சையும், சிறப்பித்துப் புகழும், சொற்களையும், தெளிந்தெடுத்த நூற்களைக் கற்றறிந்த பெரியோர்கள் ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள்.*

*'அற்பரின் பேச்சுப் புகழ்ச்சியானாலும் இகழ்ச்சி யானாலும் அறிவுடையோர் ஒரு பொருட்டாகக் கொள்ள மாட்டார்கள்' என்பது கருத்து.*

**164. விரிநிற நாகம் விடருள தேனும்,**
**உருமின் கடுஞ்சினஞ் சேணின்றும் உட்கும்;**
**அருமை உடைய அரண்சேர்ந்தும் உய்யார்,**
**பெருமை உடையார் செறின்.**

*மிகுந்த ஒளியுடைய படத்தைக் கொண்ட பாம்பானது வெடிப்பு நிலத்தினுள்ளே தான் பதுங்கி இருந்தாலும், இடியானது மிகுந்த கோபத்தால் எழுவதுபோன்ற பேரொலியானது நெடுந்தொலைவினின்று எழுந்தாலும், அதனைக் கேட்டு அச்சமடையும். அதுபோலவே, பெருமை உடையவர்கள் சினங்கொண்டால், அதற்கு ஆளானவர் பிறரால் அழிப்பதற்கும் புகுவதற்கும் அருமையுடைய கோட்டை யினுள்ளே பதுங்கியிருந்தாலும், தப்பிப் பிழைக்கவே மாட்டார்கள்.*

'பெரியாரைப் பிழைத்தவர் தவறாமல் கேடடைவர்' என்பது கருத்து. விரிநிறம்-பளபளப்பான நிறம். விடர் - நிலப் பிளப்பு. கருமின் - இடி. செறுதல் - கோபித்தல்.

165 'எம்மை அறிந்திலார், எம்போல்வார் இல்' லென்று
தம்மைத்தாம் கொள்வது கோளன்று; - தம்மை
அரியரா நோக்கி, அறனறியும் சான்றோர்,
பெரியராக் கொள்வது கோள்.

'எம்மை நீங்கள் அறியமாட்டீர்கள்; எம்மைப் போன்றவர் இவ்வுலகில் எவருமே இல்லை' என்று தம்மைத் தாமே உயர்த்துப் பேசிக்கொள்வது ஒரு பெருமையே ஆகாது. அறநெறிகளை அறியும் சான்றோர்கள் தம்மை அருமை யானவர்கள் என்று அறிந்து பெரியோர்களாக ஏற்றுக் கொள்வதே உண்மையான பெருமையாகும்.

இதனால், தற்புகழ்ச்சி செய்து கொள்பவர் பெரியவர் ஆகமாட்டார்கள்; அருமையான குணங்கள் உடையவர்களே பெரியவர்கள் என்பது அறியப்படும். பெரியோர் ஏற்றுக் கொள்பவரே பெரியவர் என்றதால் அவரைப் பழிப்பவர் கீழ்மக்கள் என்பதும் சொல்லப்பட்டது.

166. நளிகடல் தண்சேர்ப்ப! நாணிழல் போல
விளியுஞ், சிறியவர் கேண்மை; -விளிவின்றி
அல்கும் நிழல்போல், அகன்றகன்று ஓடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

பெரிய கடலின் குளிர்ச்சியான கரையினை உடைய நாட்டின் தலைவனே! அற்பர்களுடைய நட்பானது முற்பகலின் நிலைப்போல முதலில் பெரிதாகத் தோன்றினாலும், வரவரக் குறைந்து போகும். தொன்மையாக வந்து கொண்டிருக்கும் புகழினை உடையவர்களின் தொடர்போ, அங்ஙனம் சுருங்காமல், சாயுங்காலத்து நிழல் போலப் பரந்து பரந்து வளர்ந்து கொண்டே போகும்.

'பெரியவர்களுடைய தொடர்பு நாளுக்குநாள் வளருவதாதலால், அவரைப் பழிப்பதின்றி, அவர் தொடர்பைப் பேணவேண்டும்' என்பது கருத்து.

167. மன்னர் திருவும், மகளிர் எழில் நலமும்
துன்னியார் துய்ப்பர்; தகல்வேண்டா - துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்
உழை, தங்கட் சென்றார்க்கு ஒருங்கு.

*அரசர்களுடைய அளவற்ற செல்வ நலத்தையும், பெண்களுடைய அழகின் நன்மையையும், அவர்களை மிகவும் நெருங்கினவர்கள் எவர்களோ அவர்களே அநுபவிப்பார்கள். அதற்கு ஒரு தகுதி வேண்டியதில்லை. எதுபோலவென்றால், நெருக்கமான தளிர்களைக் கொண்டதாகக் கிளைகள் தாழ்ந்து விளங்கும் குளிர்ந்த மரங்கள் எல்லாம், தங்களிடத்திலே அணுகி வந்தவர்களுக்கெல்லாம், தகுதி நோக்காது ஒருப்போலவே நிழல் தருவதுபோன்று என்க.*

*"பெரியோரும் அனைவரையும் ஒருப்போல ஆதரிப்பவர்; அதனால் அவரையும் 'எம்மைவிட அவரிடம் அதிக அன்பு காட்டுகின்றனரே' என்பது பழிக்க வேண்டாம்; நின் நெருக்கம் போதாது என்று உணர்க" என்பது கருத்து.*

**168. தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்**
**பிரியப், பெரும்படர்நோய் செய்யும்; - பெரிய**
**உலவா இருங்கழிச் சேர்ப்ப! யார் மாட்டும்**
**கலவாமை கோடி யுறும்.**

*எதனையும் விளக்கமாக அறிந்து தெளிகின்ற தெளிந்த அறிவு இல்லாதவர்களிடத்திலுங்கூடச், சிநேகமானது, பிரிய நேருங்காலத்திலே பெரிதான வருத்தந்தரும் நோயினைச் செய்யும். ஆதலால், பெரிய, வற்றாத கரிய கழிக் கானல்களையுடைய கடற்கரைப் பகுதியின் தலைவனே! எவரிடத்திலும் நட்புடன் கலந்து பழகாமலிருப்பது கலந்தபின் பிரிவதினும் காட்டிலும் கோடிமடங்கு சிறப்புடையதாகும்.*

*அற்ப அறிவினரைப் பிரியவே அவ்வளவு வருத்தம் ஏற்படும்போது பெரியோரைப் பிரிவது எவ்வளவு துன்பந்தரும்? அதனால் அத்தகையோரிடத்தும் பிழை செய்தல் பிரிவதற்கு ஏதுவுமாகும்; ஆதலால், செய்தல் கூடாதென்பது வலியுறுத்தப்பட்டது.*

**169. கல்லாது போகிய நாளும், பெரியவர்கண்**
**செல்லாது வைகிய வைகலும், -ஒல்வ**
**கொடாஅது ஒழிந்த பகலும், உரைப்பின்**
**படாஅவாம், பண்புடையார் கண்.**

*கற்க வேண்டிய நூற்களைக் கல்லாது கழிந்து போன நாட்களும், பெரியவர்களிடத்திலே சென்று அவருடைய தொடர்பைப் பெறாது கழிந்த நாட்களும், தம்மால் இயன்றவற்றைக் கொடுத்துத் தருமஞ் செய்யாமற் கழிந்த*

நாட்களும், சொல்லப்போனால், நல்ல பண்பு உடையவர்க ளிடத்திலே விளங்காதனவாகும்.

பெரியோர் தொடர்பின் உயர்வைக் காட்டி அவரைப் பிழையாமை கூறப்பட்டது.

**170. பெரியோர் பெருமை சிறுதகைமை; ஒன்றிற்கு**
**உரியார் உரிமை அடக்கம்; - தெரியுங்கால்,**
**செல்வம் உடையாரும் செல்வரே, தற்சேர்ந்தார்**
**அல்லல் களைய வெனின்.**

'பெரியோர்' எனப்படுபவர்களின் பெருமைக்குரிய குணமாவது, அவர்கள் பெருமை பாராட்டாமல் எளிமையைக் காட்டி நிற்கும் பணிவுடைமையே யாகும். கல்வி முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு உரிமையுடையவர்களுக்கு இருக்க வேண்டிய குணம், அதனால் செருக்குக் கொள்ளாமல் அடக்கமுடன் இருப்பதாகும். ஆராய்ந்து பார்த்தால், தம்மைச் சேர்ந்தவர் களின் துன்பங்களை நீக்குவார்களே யானால்தான் பொருள் உள்ளவர்களும் உண்மையிலேயே செல்வர்கள் ஆவார்கள்.

பெரியோர்களின் சிறப்புக்கூறி, அவர்களைப் பழியாமல் உறவு கொள்ள வேண்டுமென்பது விளக்கப்பட்டது.

## 18. நல்லினம் சேர்தல்

தாம் நல்லவர்களாக நடந்தால் மட்டும் போதாது; தம்மைச் சேர்ந்த அனைவரும் தீயவர்களாயிருந்தால், தம் நல்ல பண்புகளும் விரைவிலே அழிந்துபோம்; தாமும் தீயவர்களாக நேரும். எனவே நல்லவரோடு சேர்ந்து வாழ்தலும் மிகவும் முதன்மையானதாக ஆன்றோரால் கருதப்படும்.

'உன் நண்பர்கள் யாரென்று சொல்லிவிடு; உன்னைப் பற்றி நானே தெரிந்து கொள்வேன்' என்று சொல்வார்கள். இனத்தால் ஒருவன் மதிக்கப்படுதல் என்ற உண்மையை இப்படிச் சொல்வதும் வலியுறுத்தும்.

நட்பு ஆராய்தல் போன்று பின்வரும் அதிகாரங்களினும், நல்லினஞ் சேர்தல் என்னுமிது தனியான தன்மை உடையது. நாம் சேர்ந்த நல்ல கூட்டத்திலே அனைவரும் நமக்கு நண்பர்களாகவோ தெரிந்தவர்களாகவோ இருக்க வேண்டும் என்பதில்லை. 'இன்னார் இந்த இனத்தைச் சேர்ந்தவர்' என்ற ஒன்றே, அந்த இனத்திற்குரிய பெருமையைத் தந்துவிடும்.

171. அறியாப் பருவத்து அடங்காரோடு ஒன்றி,
நெறியல்ல செய்தொழுகி யவ்வும் - நெறியறிந்த
நற்சார்வு சாரக், கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

நன்மை தருவது இதுவெனவும், தீமை விளைப்பது இதுவெனவும் அறியவியலாத இளம் பருவத்திலேயே, அடக்கமில்லாத தீயவர்களோடு சேர்ந்து திரிந்தும், முறையில்லாத செயல்களைச் செய்தும் நடந்து வந்த குற்றங்களும், நன்மையான வழியினை அறிந்த நல்லவர்களுடன் சேர்வதனால், வெயிலானது மிகுதியாகப் புல்லின் நுனியிலே யுள்ள பனியை புல்லைவிட்டு நீக்கிவிடுவது போவதுபோல நீங்கிப் போய்விடும்.

'நல்லினத்தை சேர்வதால் செய்த குற்றங்களும் இல்லாமற் போகும்' என்பது கருத்து.

172. அறிமின், அறநெறி, அஞ்சுமின், கூற்றம்,
பொறுமின், பிறர் கடுஞ்சொல், போற்றுமின், வஞ்சம்
வெறுமின், வினைதீயார் கேண்மை; எஞ்ஞான்றும்
பெறுமின், பெரியார் வாய்ச் சொல்.

எப்பொழுதும் அறநெறியினையே மேற்கொண்டு நடந்து வாருங்கள். கூற்றம் வரும் என்று அஞ்சி நல்லறங்களிலே எப்போதும் ஈடுபடுங்கள். பிறர் கூறுகின்ற கடுமையான சொற்களைப் பொறுத்துக் கொள்ளுங்கள். வஞ்சகமான எண்ணங்களை எல்லாம் அறவே விட்டு விடுங்கள். தீய செயல்களிலே ஈடுபடுபவரது தொடர்புகளை வெறுத்து ஒதுக்குங்கள். எப்போதும் பெரியோருடைய வாயினின்று வெளிப்படும் சொற்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

'பெரியோர் வாய்ச்சொல் பெறுமின்' என்றதால் நல்லினம் சேர்தல் கூறப்பட்டது.

173. அடைந்தார்ப் பிரிவும் அரும்பிணியும், கேடும்,
உடங்குடம்பு கொண்டார்க்கு உறலால், - தொடங்கிப்
'பிறப்பின்னாது' என்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க, அம்மா, என் நெஞ்சு!

நம்முடன் சேர்ந்தவர்களைப் பிரிவதும், தீர்த்தற்கு அருமையான நோய்களும், மரணமும், உடலைப் பெற்றி ருக்கின்றவர்களாகிய நமக்கு ஒருங்கே வந்து சேர்வனவாம்.

அதனால், மிகப் பழைய காலந்தொட்டு தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்ற பிறப்பானது மிகவும் துன்பந்தருவது என்று அறிந்திருக்கிற பேரறிவினை உடையவர்களை என் நெஞ்சமானது உறுதியாகச் சேரக் கடவதாக!

பிறப்பால் வரும் துயரங்களைக் கண்டறிந்து அறவழிகளில் மனஞ்செலுத்தியிருக்கும் சான்றோரைச் சேர்தல் கூறப்பட்டது.

**174. இறப்ப நினையுங்கால், இன்னாது எனினும்,**
**பிறப்பினை யாரும் முனியார் - பிறப்பினுள்**
**பண்பாற்றும் நெஞ்சத் தவர்களோடு எஞ்ஞான்றும்**
**நண்பாற்றி நட்கப் பெறின்.**

ஆராய்ந்து பார்க்குங்காலத்திலே, பிறவி எடுத்தலானது மிகவும் துன்பந்தருவதே என்றாலும், அந்தப் பிறவியினுள்ளும், நல்ல பண்புடையவற்றையே செய்ய வேண்டுமென்னும் உள்ளமுடைய பெரியவர்களோடு எப்போதும் சிநேகத்தைச் செய்து, பிரியாமல் அவருடன் சேர்ந்திருக்கப்பெற்றால், அப்படிப் பிறந்த பிறப்பினையும் இன்னாததென்று எவரும் வெறுக்கமாட்டார்கள்.

'பெரியவர்களின் தொடர்பால் பிறப்பும் பயன் உடையதாகும்' என அவருடைய தொடர்பினைக் கொள்ளலின் சிறப்புக் கூறப்பெற்றது.

**175. ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்**
**பேரும் பிறிதாகித், தீர்த்தமாம்;-ஒரும்**
**குலமாட்சி இல்லாரும் குன்றுபோல் நிற்பர்,**
**நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.**

ஊரிலுள்ள அங்கணங்களினின்றும் வழிந்து செல்லும் கழிவு நீரானது, சிறப்புப் பொருந்தியதொரு ஆற்று நீருடன் சென்று சேர்ந்த காலத்திலே, அதற்குப் பெயரும் அந்த ஆற்றுநீர் என்று சொல்லப்பட்டு வேறானதாகி அது தீர்த்தமாகவும் மக்களால் கொள்ளப்படும். அப்படியே, ஆராய்ந்து பார்த்தால் தமக்கு இயல்பாக வந்துள்ள குடிப்பெருமை இல்லாதவர் களுங்கூட, நற்குணங்களையுடைய நல்லவர்களான பெரியோரைச் சேர்ந்த காலத்திலே, குன்றுபோலப் பெருமையுடன் விளங்குவார்கள்.

பெரியோரைச் சேர்தலால் வரும் அளவற்ற பெருமை இதன்கண் உரைக்கப்பட்டது.

176. ஒண்கதிர் வாண்மதியஞ் சேர்தலால், ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலும் தொழப்படூ உம்;
குன்றிய சீர்மையர் ஆயினும், சீர்பெறுவர்,
குன்றன்னார் கேண்மை கொளின்.

*உயர்ந்ததும், அழகிய இடத்தை உடையதுமான ஆகாயத்திலே விளங்கும், ஒளிக்கதிர்களையுடைய பிரகாசமான சந்திரனைச் சேர்ந்திருப்பதனால், அதன்பாலுள்ள முயற்கறையும் மக்களால் வணங்கப்படும். அதுபோலவே குறைவான சிறப்புகளை உடையவர்களே ஆனாலும், அவர்கள் மலை போன்ற மேன்மையுள்ளவர்களின் தொடர்பினைக் கொள்வார்களானால், தாமும் அவர்களோடு சேர்ந்து மேன்மை அடைவார்கள்.*

*'முயலுக்கு வணக்கஞ் செலுத்துவது தொழுவோர் கருத்தன்று; ஆயினும் அதுவும் தொழப்படும். அதுபோலவே குன்றிய சீர்மையரும் குன்றன்னார் கேண்மை கொளின் சீர்பெறுவர்' என்பது கருத்து.*

177. பாலோடு அளாயநீர் பாலாகும் அல், லது
நீராய் நிறந்தெரிந்து தோன்றாதாம்;-தேரில்
சிறியார் சிறுமையும் தோன்றாதாம், நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

*பாலோடு கலக்கப்பட்ட நீரானது பாலுடன் சேர்ந்து தானும் பாலாகத் தோன்றுமேயல்லாமல், நீராகத் தன்னுடைய நிற வேறுபாடு அறியப்பட்டுத் தோன்றாது. அதுபோலவே, ஆராய்ந்து பார்த்தால், நல்ல பெரியோர்களது பெருமையோடு சேர்ந்துவிடுவதனால், அற்பர்களுடைய சிறுமையான குணமும் வெளியே தோன்றாமற் போகும்.*

*'அவர்களுடைய சிறுமைக்குணம் போகாவிட்டாலுங் கூடப் பெரியவர்களுடைய சேர்க்கையின் காரணமாக, அவர்களும் பெரியோராகப் பிறரால் மதிக்கப்படுவார்கள்' என்பது கருத்து.*

178. கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஓல்காவே ஆகும், உழவர் உழு படைக்கு;
மெல்லியரே யாயினும், நற்சார்வு சார்ந்தார்மேல்
செல்லாவாம் செற்றார் சினம்.

*தோட்டப் பகுதியைச் சார்ந்த பெரிய தினைப்புனப் பகுதிகளிலேயுள்ள மரக்குற்றியை அடுத்திருக்கும் புல்லானது,*

உழவர்களுடைய உழுபடையாகிய கொழுமுனைக்கும் பெயர்த்து எறிய முடியாததாகவே இருக்கும். அதுபோலவே, ஒருவர் தம் அளவிலே வலியற்றவர்களேயானாலும், நல்லினத்தைச் சார்ந்தவர்களானால் அவரைப் பகைத்தவர் களுடைய சினமும் செல்லாமற் போய்விடும்.

**179. நிலநலத்தான் நந்திய நெல்லேபோல், தத்தம்**
**குலநலத்தால் ஆகுவர், சான்றோர்,-கலநலத்தைத்**
**தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை**
**தீயினம் சேரக் கெடும்.**

நல்லினத்தைச் சார்ந்தவரைப் பகைவரின் சினமும் அழிக்கவியலாது என்று கூறுவதன் மூலம், அவரைச் சேர்தலின் சிறப்புச் சொல்லப்பட்டது. குற்றி-மரம் வெட்டியபின் எஞ்சி இருக்கும் அடிப்பகுதி.

நிலத்தினுடைய வளப்பத்தினாலே வளமுடன் வளர்கின்ற நெற்பயிரைப்போல, மனிதர்களும், தாங்கள் தாங்கள் சேர்ந்திருக்கின்ற கூட்டத்தின் நல்ல இயல்புகளாலே தாமும் சான்றாண்மையை உடையவராவர். கப்பலின் சிறப்பை எல்லாம் கடுங்காற்றானது சென்று அழித்துவிடுவது போலச், சான்றாண் மையாகிய உயர்ந்த பண்பும், தீயகுணமுள்ள கூட்டத்தினர் சேர்வதனால் கெட்டு அழிந்துவிடும்.

'சான்றாண்மை தீயினம் சேரக் கெடும்' என்றதால், அதனைச் சேராமல் நல்லினமே சேரவேண்டும் என்பது சொல்லப்பட்டது.

**180. மனத்தான் மறுவில ரேனுந், தாஞ் சேர்ந்த**
**இனத்தால் இகழப் படுவர்;-புனத்து**
**வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே,**
**எறிபுனம் தீப்பட்டக் கால்.**

தம்முடைய மனத்தின் அளவிலே ஒருவர் குற்றமில்லா தவரே யானாலும், தாம் சேர்ந்த கீழான கூட்டத்தின் காரணமாக இகழப்படுவார். எப்படி யென்றால், வெட்டியழிக்கப்பட்ட காட்டிலே நெருப்புப் பற்றிய காலத்திலே, அக்காட்டிலுள்ள மணங்கமழும் சந்தனமும், உயர்ந்த வேங்கையும் ஆகிய மரங்களும் வெந்து போவதைப்போல என்க.

'இயற்கையிலே குற்றமற்றவர்கூடச் சேர்க்கைக் குறை பாட்டால் குறையுடையவர்களாக இகழப்படுவார்கள்' என்று கூறி நல்லினத்தைச் சேர்வதன் சிறப்பு வலியுறுத்தப்பட்டது.

## 19. பெருமை

பெருமை என்பது பெருந்தன்மை என்று பொருள்படும். எந்தக் காலத்தினும் மனத்திலே கலக்கங் கொள்ளாமல் செய்யவேண்டிய அறநெறிகள் முதலியவற்றைச் செய்து, தம் உயர்வை நிலைபெறுத்திக் கொள்ளலாகிய உறுதிப்பாடு இது.

இத்தகைய பெருமைதான் ஒருவனுக்கு வாழ்விலே பலரும் போற்றும் புகழ் வாழ்வையும், தன்னளவிலே தான் சிறந்த பல நல்ல செயல்களைச் செய்தோமென்னும் மன நிறைவையும் தருகின்றது. அதனால், இதனை அடைவதில் மனஞ் செலுத்துவது அனைவரின் கடமை என்பதும் விளங்கும்.

நல்லினஞ் சேர்வதனால் பெருமை வரும்; ஆதலின், அதனைக் கூறிய பின்னர், அப்படிப்பட்ட பெருமையைப் பற்றி அடுத்து விளங்கும் இந்தப் பகுதியை அமைத்துள்ளனர். மன உறுதிப்பாட்டினால் வந்து எய்தும் பெருமையினைப் பற்றி இனி நாம் காண்போம்.

**181. ஈதல் இசையாது; இளமைசேண் நீங்குதலால்,**
**காத லவருங் கருத்தல்லர்; -காதலித்து,**
**''ஆதுநாம்'' என்னும் அவாவினைக் கைவிட்டுப்**
**போவதே போலும் பொருள்!**

பொருள்வளம் இல்லாத காரணத்தினால், வந்து இரந்தவர்களுக்கு எதுவும் கொடுத்துதவவும் முடியாது; இளமைப் பருவமானது நம்மைவிட்டு நெடுந்தொலைவு போய்விட்டதனால், நம்மேல் முன்பு காதலுடையவராயிருந்த மகளிரும், இப்பொழுது நம்மைக் கருதுதலும் இல்லாதவரானார்கள்; ஆதலால், அப்படிப்பட்ட பொருளையும் மகளிரையும் விரும்பி நாம் வாழக்கடவோம் என்ற ஆசையினைக் கைவிட்டுத் துறவுநெறியை நாடிப் போவதே இனி நல்ல காரியம் போலும்!

இல்வாழ்வில் பொருள்வளமும், இளமையுமே பெருமை தருவன; அவை நீங்கின காலத்துத் துறவே பெருமை தருவது என்பது கருத்து.

**182. 'இற்சார்வின் ஏமாந்தேம்; ஈங்கமைந்தேம்'**
**என்றெண்ணிப்**
**பொச்சாந்து ஒழுகுவர், பேதையார்,-'அச்சார்வு**
**நின்றன போன்று நிலையா' என வுணர்ந்தார்,**
**என்றும் பரிவது இலர்.**

தெளிவான அறிவில்லாதவர்கள், 'நாம் இல்லறமாகிய வாழ்வினை மேற்கொண்டதனால் களிப்பு அடைந்தோம்; இந்த உலகத்திலே எல்லா வகையாலும் நிறைவு உடையவர்களும் ஆயினோம்' என்று எண்ணிப் பின் வருவதை மறந்து நடப்பார்கள். அந்தப் பற்றுகள் எல்லாம் நிலைபெற்றவை போலக் காணப்பட்டுப் பின் நிலைத்திராவாய் அழிந்துபோவன என உணர்ந்த அறிவு உடையவர்கள், எக் காலத்தும் வருத்தம் அடையவே மாட்டார்கள்.

'இல்வாழ்வின் நிலையாமையான தன்மையை உணர்ந்து இளமையிலேயே துறவுபூண்டு ஒழுகுதல் பெருமை தருவதாகும்' என்பது கருத்து.

**183. மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து,**
**சிறுமைப் படாதே, நீர் வாழ்மின்-அறிஞராய்;**
**நின்றுழி நின்றே நிறம்வேறாம்; காரணம்**
**இன்றிப் பலவும் உள.**

உலக போகங்களிலே மயக்கம் இல்லாதவர்களாக, உங்களுடைய மறுமை இன்பத்திற்கான நல்ல செயல்களைச் செய்து, ஒரு போதும் சிறுமையான செயல்களிலே ஈடுபடாது, நீங்கள் அறிவுடையவர்களாக வாழ்வீர்களாக. ஏனெனில் முன் இருந்த இடத்திலிருந்தே உடலின் நிறமானது பின்னர் வேறுபட்டுப் போய்விடும். அது மட்டுமன்று; மாறும்படியான காரணமேதும் இல்லாமலேயே வேறுபல மாறுபாடுகள் உண்டாதலும் ஏற்படும்.

உடலின் நிலையாமையும் மாறுபாடும் உணர்ந்து, மறுமை இன்பத்தை நாடி, அதற்கான செயல்களிலே ஈடுபடுவதே பெருமை என்பது இது.

**184. 'உறைப்பருங் காலத்தும், ஊற்றுநீர்க் கேணி**
**இறைத்துணினும், ஊராற்றும்' என்பர்; -**
**கொடைக்கடனும்,**
**சாஅயக் கண்ணும், பெரியார்போன் மற்றையார்**
**ஆஅயக் கண்ணும், அரிது.**

மழை பெய்தலானது அருகிப் போய்விட்ட காலத்தினும் ஊற்றினால் நீரையுடைய கேணியானது இறைத்துக் குடித்தாலும் ஊரிலுள்ளவர்களைக் காப்பாற்றும் என்பார்கள். அதேபோலத் தானம் செய்தலாகிய கடமையும், வறுமையினால் தளர்ந்து போய்விட்ட காலத்தினுங் கூடப் பெரியோர்களால்

*தகுந்த அளவு செய்யப்படும். அந்தப் பெரியோர்களைப் போல, சிறியவர்கள் தம் செல்வம் பெருகிவருகின்ற காலத்தினும்கூடப் பிறருக்கு உதவுதல் அரிதாகும்.*

*இதனால் கொடைக் கடனை என்றும் மறவாது போற்றும் பெரியவர்களின் பெருமை கூறப்பட்டது.*

**185. உறுபுனல் தந்து, உலகு ஊட்டி, அறுமிடத்தும்**
**கல்லூற் றுழியூறும் ஆறேபோற், செல்வம்**
**பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணும், சிலர்க்காற்றிச்**
**செய்வர், செயற்பா லவை.**

*மழை வளமானது செழிப்புற்றிருந்த காலத்திலே மிகுதியான நீரைக் கொண்டு தந்து உலகத்தாரை எல்லாம் உண்ணச்செய்து, அந்த நீர்வளமானது அற்றகாலத்தும் தோண்டும் ஊற்றுக்களிலே ஊறிச் சுரந்து உலகு ஊட்டும் ஆற்றினைப் போலப் பெரியவர்கள், தம்முடைய செல்வங்களை எல்லாம் பலருக்கும் கொடுத்து உதவியதனால் தாம் செல்வமிழந்து வாடிய காலத்தினும், தம் சக்திக்கு ஏற்றபடி சிலருக்காயினும் கொடுத்துச் செய்யும்படியான உதவுதற் செயலிலே ஈடுபடுவார்கள்.*

*கொடைக் குணம் உடைய பெரியோரின் பெருமை கூறப்பட்டது.*

**186. பெருவரை நாட! பெரியார்கண் தீமை**
**கருநரைமேற் சூடேபோல் தோன்றும்;-கருநரையைக்**
**கொன்றன்ன இன்னா செயினும், சிறியார்மேல்**
**ஒன்றானும் தோன்றா கெடும்.**

*பெரிய மலைகளையுடைய நாட்டிற்கு உரியவனே! பெரியவர்களிடத்தே தோன்றிய தீமையானது, பெரிய வெள்ளை எருதின் மேலே இட்ட சூட்டின் வடுப்போல என்றும் மாறாமல் நன்கு வெளிப்படத் தோன்றும். அந்தப் பெரிய வெள்ளை எருதைக் கொன்றதைப் போன்ற தீய செயல்களைச் செய்தார் களானாலும், கீழ் மக்களிடத்தே தோன்றும் ஒரு குற்றமானாலும் வெளிப்படத் தோன்றாமல் அழிந்து போய்விடும்.*

*'பெரியோர் சிறுவடுவும் தம்மேற்படாதவாறு ஒழுக்க நெறியிலே நிலைத்திருக்க வேண்டும்' என்று கூறுவதன் மூலம், அத்தகையோரின் பெருமை கூறப்பட்டது.*

187. இசைந்த சிறுமை இயல்பிலா தார்கண்
பசைந்த துணையும், பரிவாம்;-அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கண்
பகையேயும் பாடு பெறும்.

*சிறுமையான குணங்களே பொருந்திய, நல்ல இயல்பே இல்லாதவர்களிடத்திலே சிநேகித்த அளவு அத்துணைக்கும் துன்பமேயாகும். நிலை தடுமாறிய தீய செயல்களை விளையாட்டாகவும் செய்யவிரும்பாத நல்ல அறிவுடையவர் களிடத்திலே கொண்ட பகைமையுங்கூடப் பெருமையைத் தருவதாகும்.*

*கீழோர், நண்பர்க்கும் தீங்கிழைக்கும் பண்பு கொண்டவர்கள்; அறிவுடையவரோ, பகைமையையும் பொறுக்கும் இயல்பினர். அதனால், அவர்கள் தொடர்பே பெருமைதரும் என்பது கூறப்பட்டது.*

188. மெல்லிய நல்லாருள் மென்மை; அதுவிறந்து
ஒன்னாருள் கூற்றுட்கும் உட்குடைமை; எல்லாம்
சலவருட் சாலச் சலமே, நலவருள்
நன்மை, வரம்பாய் விடல்!

*மென்மையான தன்மைகளையுடைய பெண்களிடத்திலே நாம் மென்மைத் தன்மை உடையவர்களாகவே நடந்து கொள்ளல் வேண்டும். வலிமைமிகுந்த பகைவரிடையே செல்லும்போது, அந்த மென்மைத் தன்மையைக் கைவிட்டு விட்டு, எமனும் அஞ்சும்படியான பயங்கரத்தன்மை உடையவர் களாகவே நாமும் செல்லல் வேண்டும். இப்படியே எல்லாக் காரியங்களிலும் வஞ்சகமாகப் பேசுபவர்களிடத்திலே வஞ்சகமாகப் பேசி அவர்களை வெல்வதற்கும், நற்குண முடையவர்களிடத்திலே நன்மை பொருந்த நடந்து அவர்களின் அன்பைப் பெறுவதற்கும் ஏற்ற தன்மையே, தமது பழக்கத்தின் வரம்பாக அமைந்து இருக்க வேண்டும்.*

*இப்படி நடப்பதே பெருமை என்பது கருத்து.*

189. கடுக்கி, ஒருவன் கடுங்குறளை பேசி
மயக்கி விடினும், மனப்பிரிப்பொன் றின்றித்,
துளக்கம் இலாதவர், தூய மனத்தார்,
விளக்கினுள் ஒண்சுடரே போன்று.

*ஒருவன் தன்னுடைய முகத்தை மிகவும் கடுமையாக வைத்துக்கொண்டு, மற்றொருவன்மீது கடுமையான*

கோட்களைச் சொல்லித், தம்மை மயக்கிவிட்டாலுங் கூட அதனால் தம்முடைய மனத்திலே எவ்விதமானவொரு வேறுபாடும் இல்லாமல் கலக்கமடையாதவர்கள் எவரோ, அவர்களே விளக்கினிடத்தே விளங்கும் ஒளியுடைய சுடரைப் போன்று ஒளியுடன் விளங்கும் தூய்மையான உள்ளத்தை உடையவர் ஆவார்கள்.

புறங்கூறுவார் பேச்சைக் கேட்டுத் தாம் ஒருவித மனமாற்றமும் அடையாதவர்கள் பெருமை உடையவர் என்பது கருத்து.

**190. முற்றுத்தம் துத்தினை நாளும் அறஞ்செய்து**
**பிற்றுத்துத் துத்துவர், சான்றவர்; -அத்துத்து**
**முக்குற்றம் நீக்கி, முடியும் அளவெல்லாம்**
**துக்கத்துள் நீக்கி விடும்.**

பெரியவர்கள், தாம் முதலிலே உண்ணும்படியான உணவினை, நாள்தோறும் பிறருக்குத் தானமாகக் கொடுத்து விட்டுப் பின்னரே தாம் உண்ணுதற்குரிய உணவினை உண்பார்கள். அங்ஙனம், அவர்கள் தாம் உண்பதற்கு முன்பே கொடுத்த உணவுத் தானமானது காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகைக் குற்றங்களால் வரும் பாவங்களையும் போக்கி, அவர்கள் வாழ் நாள் முடியும் வரையும் அவர்களைத் துக்கத்தினின்று நீக்கியும் விடுவதாகும்.

இதனால் பசிக்கு உணவளிப்பதன் பெருமை சொல்லப் பட்டது.

## 20. தாளாண்மை

'தாளாண்மை' என்பது உயிருக்கு உறுதி தருகின்ற நல்ல செயல்களைச் செய்வதிலே ஒருவன் தளராத முயற்சி உடையவனாக இருப்பதைப்பற்றிக் கூறுவதாகும்.

வாழ்வின் பலப்பல காலங்களையும், தன் மயக்க உணர்வின் காரணமாக உயிருக்கு நன்மை தராத பலவற்றினும் ஈடுபடுத்திக் கொண்டிருப்பவனே சாதாரண மனிதன். அங்ஙனமன்றி, உயிருக்கு நிலையான நன்மை தருவன இவைதாம் என உணர்ந்து, அவற்றில் மட்டுமே ஈடுபாடு உடையவராகிப் பிறவற்றை விலக்குவதற்கான உண்மை அறிவினைக் கொண்டவரே, உண்மையில் தாளாண்மை உடையவராவர்.

அங்ஙனம், முயற்சிகளிலே ஈடுபடுவதற்கும் ஒரு தளராத உறுதிப்பாடு வேண்டும். அந்த முயற்சிகள் சிதறாமலும், இடையே பழுதுபடாமலும், கட்டுப்பாட்டுடன், நிறைவெய்தச் செய்யும் ஆற்றலும் வேண்டும். இத்தகைய ஆற்றலே, 'ஆண்மை' எனச் சிறப்பாகக் கூறப்பட்டது.

**191. கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போற்,**
**கேளீவ துண்டு, கிளைகளோ துஞ்சுப;**
**வாளாடு கூத்தியர் கண்போல் தடுமாறும்**
**தாளாளர்க் குண்டோ, தவறு?**

கொள்ளுவதற்கு உரிய நீரினை, மிகுதியாகக் கொள்ளமாட்டாமற் சிறிதளவே கொள்ளுகின்ற தன்மையினையுடைய ஒரு குளத்தின் கீழ்ப் பகுதியிலேயுள்ள நெற்பயிரானது, அக்குளத்தில் நீருள்ள மட்டுமே வளமுடன் விளங்கி நீர் வறண்டதும் தானும் வாடிப் போய்விடுவது போல, உறவின் முறையார்கள் கொடுப்பதைப் புசித்துக் கொண்டு, அப்படிக் கொடுப்பவர்களுக்கு ஓர் உறுப்பாக வாழ்பவர்கள், அவர்களுக்கு வறுமை சேர்ந்த காலத்தில் தாமும் வருந்தி மடிவார்கள். அவ்வாறன்றி, வாளின் சுழற்சிபோல் ஆடுகின்ற ஆட்டக்காரிகளின் கண்பார்வை புடை பெயர்ந்து நிற்பதுபோலத் தம் முயற்சியிலே கவனமாய் விழிப்புடன் முயற்சியைக் கையாள்பவர்களுக்குத், தொடங்கிய செயல் நிறைவேறாமற்போவது என்பதும் உண்டோ?

**192. ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்,**
**காழ்கொண்ட கண்ணே, களிறணைக்கும் கந்தாகும்,**
**வாழ்தலும் அன்ன தகைத்தே, ஒருவன்றான்**
**தாழ்வின்றித் தன்னைச் செயின்.**

காற்றிலே துவண்டு அசைந்து கொண்டிருக்கிற சிறிய கொம்பினையுடையதாகி வழியிலே நின்ற சிறு செடியும், தான் வயிரங்கொண்டு மரமாகிய காலத்திலே, யானையையும் கட்டும்படியான வலிய கட்டுத்தறியாக விளங்கும். ஒருவன் தன்னைத் தான் நின்ற நிலையினின்றும் கீழ்ப்பட்டுப் போதல் இல்லாமல், தன்னை முயற்சியுடையவனாகச் செய்து கொண்டானானால் அவனுடைய வாழ்க்கையும் அத்தகைய உறுதியினை உடையதாகவே விளங்கும்.

'அவன் வாழ்விலே முதலில் தளர்வு தோன்றினாலும், நாளடைவிலே அது உறுதியுடையதாகி விடும்' என்பது கருத்து.

193. உறுபுலி ஊன்இரை இன்றி ஒருநாள்
சிறுதேரை பற்றியுந் தின்னும்;-அறிவினால்
காற்றொழில் என்று கருதற்க! கையினால்
மேற்றொழிலும் ஆங்கே மிகும்.

*மிகுந்த வலிமையுடைய புலியானது தனக்கு உரிய இறைச்சியாகிய உணவு இல்லாமல் வருந்தி, ஒருநாள் சிறிய தேரையைப் பற்றித் தின்னவும் செய்யும். ஆனது பற்றி, ஒருவன் தனக்குக் கிடைத்த யாதொரு தொழிலையும் காலாற் செய்வதற்குரிய அற்பமான செயல்தானே யென்று தன் அறிவினால் கருதாமலிருப்பானாக. அவ்விடத்திலேயே, அவனுடைய முயற்சியினால் மேலான தொழிலும் அப்படியே கிடைக்கலாம் அல்லவா?*

*'செயல்களை அற்பமென்றும் உயர்வென்றும் கருதாமல் சூழ்நிலைக்கு ஏற்றபடி முயற்சியுடன் செய்பவனே உயர்வடைவான்' என்பது கருத்து.*

194. இசையாது எனினும், இயற்றியோர் ஆற்றால்
அசையாது, நிற்பதாம் ஆண்மை;-இசையுங்கால்
கண்டல் திரையலைக்கும் கானலம் தண்சேர்ப்ப;
பெண்டிரும் வாழாரோ மற்று?

*அலைகள் வந்து தாழைகளை மோதி அசையச் செய்து கொண்டிருக்கும் அழகிய கானற் சோலைகளையுடைய குளிர்ந்த கடற்கரைகளுக்கு உரிய தலைவனே! செய்யத் தொடங்கிய ஒரு செயலானது எளிதிலே கைகூடாது என்றாலும் அதனை ஒருவகையாலும் தளராமல் முயற்சியுடன் செய்து நிலை நிறுத்துவதே ஆண்மையாகும். செய்ய எடுத்த காரியமானது எளிதாக வந்து கைகூடினால் பெண்களுங்கூட அவற்றை எளிதாக நிறைவேற்றி மேன்மை அடைய மாட்டார்களோ?*

*'முடியாதெனப் பலரும் சொல்லும் செயலையும் முயற்சியுடன் செய்து முடிக்கும் உறுதியே தாளாண்மை' என்பது கருத்து.*

195. நல்ல குலமென்றும், தீய குலமென்றும்,
சொல்லளவு அல்லாற் பொருளில்லை;-தொல்சிறப்பின்
ஒண்பொருள் ஒன்றோ? தவம், கல்வி, ஆள்வினை,
என்றிவற்றான் ஆகும், குலம்.

*நல்ல குலம் எனவும் தீய குலம் எனவும் சொல்லப் படுவதெல்லாம் சொல்லளவாக மாத்திரமே இருப்பதல்லாமல்,*

அச் சொற்களுக்குரிய சிறந்த பொருள் ஏதும் இருப்பதாகக் காணவில்லை. பழைமையான சிறப்பினையுடைய தூய்மையான பொருள் மட்டுமோ, அத்துடன் தவம், கல்வி, ஆள்வினை என்று சொல்லப்படும் இவைகளாலும் கூடி அமைவதே நல்ல குலமாகும்.

'நல்ல குலம் என்பது ஆள்வினையுடையதாயிருக்கும் குலமேயாகும்' என்று, தாளாண்மையின் சிறப்புக் கூறப்பட்டது.

**196. ஆற்றுந் துணையும், அறிவினை உள்ளடக்கி,**
**ஊக்கம் உரையார் உணர்வுடையார்; - ஊக்கம்**
**உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்**
**குறிப்பின்கீழ்ப் பட்டது, உலகு.**

தாம் ஒரு செயலை முற்றவும்செய்து முடிக்கும் அளவும், அதனைச் செய்வதற்குத் தமக்குள்ள அறிவுத் திறனைத் தம்முள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டு, தம்முடைய முயற்சியினைப்பற்றிப் பிறருக்கு அறிவுடையவர்கள் சொல்லித் திரியவே மாட்டார்கள். பிறருடைய மனவலிமையினை அவர்களுடைய உறுப்புக்களின் நிலைமையினால் ஆராய்ந்து அறிகின்ற அறிவுநுட்பம் உடையவர்களின் ஏவுதலுக்கு அடங்கியதாக இருப்பதே இந்த உலகமாகும்.

**197. சிதலை தினப்பட்ட ஆல மரத்தை,**
**மதலையாய், மற்றதன் வீழூன்றி யாங்குக்,**
**குதலைமை தந்தைகண் தோன்றில், தான்பெற்ற**
**புதல்வன் மறைப்பக் கெடும்.**

கறையானால் அரிக்கப்பட்டுவிட்ட ஆலமரத்தை, அதனின்றும் தோன்றி இறங்கியுள்ள விழுதானது தாங்கும் தூணாக நின்று தாங்கி நிற்பதுபோலத், தளர்ச்சி உடைமை தந்தையினிடத்து உண்டானால், அவன் பெற்ற புதல்வன் தன்னுடைய முயற்சியினால் அதனை மறைக்க, அது நீங்கிப் போகும்.

'தன்னையே யன்றித் தன் முன்னோர்களையும் பெருமைப் படுத்த வல்லது தாளாண்மை' என்பது கூறப்பட்டது.

**198. ஈனமாய், இல்லிருந்து, இன்றி, விளியினும்,**
**மானந் தலைவருவ செய்பவோ - யானை**
**வரிமுகம் புண்படுக்கும் வள்ளுகிர் நோன்றாள்**
**அரிமா மதுகை யவர்?**

யானையின் புள்ளிகளையுடைய முகத்தினைப் புண்ணுண்டாகச் செய்யும் கூர்மையான நகங்களையும், வலிமையுடைய கால்களையும் உடைய சிங்கத்தினைப் போன்ற வலிமை உடையவர்கள், தம் தொழில் முயற்சிகளிலே குறைபாடு உடையவர்களாய், வீட்டிலேயே இருந்துகொண்டு ஒரு பொருளும் இல்லாமல் இறக்க நேரிட்டாலுங்கூட, மானம் இழக்க நேரும்படியான காரியங்களைச் செய்யவே மாட்டார்கள்.

'எடுத்துக் கொண்ட முயற்சிகள் தடையுற நேர்ந்தாலும் அதனையே முயன்று முடிக்க முயல்வார்களே யல்லாமல், கீழான காரியங்களில் சிறந்தோர் ஈடுபட மாட்டார்கள்' என்பது கருத்து.

199. தீங்கரும்பு ஈன்ற திரள்கால் உளையலரி
தேங்கமழ் நாற்றம் இழந்தாஅங்கு, - ஓங்கும்
உயர்குடி யுட்பிறப்பின் என்னாம், பெயர்பொறிக்கும்
பேராண்மை இல்லாக் கடை?

இனிமையான கரும்பானது ஈன்ற, திரட்சியான கால்களையுடைய குதிரையின் பிடரிமயிர் போன்ற பூவானது, தேனோடுங் கூடியதாகக் கமழ்கின்ற நறுமணத்தை இழந்ததைப்போலத், தன்னுடைய பெயரை நிலைநிறுத்துகின்ற பெரிய முயற்சியுடைமையானது இல்லாத விடத்து, ஒருவன் மிகவும் புகழுடைய உயர்ந்த குடியிற் பிறந்ததனால்தான் என்ன பயன்?

உயர் குடியிலே பிறந்தாலும் முயற்சியற்றவர்க்குப் பெருமை இல்லை என்பது கருத்து.

200. பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோறு ஆர்வர் கயவர்; - கருனையைப்
பேரும் அறியார், நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும்.

ஒருவித முயற்சியும் இல்லாத கீழ்மக்கள், பெருமுத்தரையர் என்பவர் மிகவும் விருப்பமுடன் அளிக்கின்ற பொரிக்கறியோடுங் கூடிய சோற்றினை உண்டு காலங்கழிப்பார்கள். பொரிக்கறியைப் பேரும் அறியாதவர், மிகவும் விரும்பிச் செய்த தம் முயற்சியின் பயனாகப் பெற்று உண்ட நீரும், அம் முயற்சிச் சிறப்பினால் அமுதமாக விளங்குவதாகும்.

'தன் முயற்சியின்றி இரந்து உண்ணும் உணவினும், தன் முயற்சியால் கிடைக்கும் நீரே சிறப்புடையதாகும்' என்பது கருத்து.

## 2. நட்பு இயல்

மனிதன், தனித்து வாழுகின்ற தன்மை உடையவன் அல்லன். ஒருவருடன் ஒருவர் சேர்ந்து வாழுகின்ற 'பாசம்' என்ற பிணைப்பினால் பலருடன் கூடி வாழுகின்றவன்தான் மனிதன். அப்படி, மனிதன் கூடிவாழும் குணம் உடையவனாதலால்தான், உலகிலே நாடும் அரசும் என்ற கூட்டு அமைப்புகள் பலவும் எழுந்தன.

இயற்கையிலே இப்படிக் கூடிவாழுகின்ற இயல்புடையவனான மனிதனிடம், அப்படிக் கூடி வாழ வேண்டிய ஒரு நெருக்கடியும் இல்லாமற் போகவில்லை.

எதிலும் குறைபாடு உடையவனாக விளங்கும் மனிதன், தன்னிடமுள்ள குறையைப் போக்கிக்கொள்ள மற்றவனின் உதவியை நாடுகிறான். இப்படி அவனும் அடுத்தவனை நாடிச் செல்ல 'நட்பு' என்ற ஒருவகைப் பாச உறவும் வளர்கிறது.

துன்பம் நேர்ந்தவிடத்து உற்றுழி உதவியும், இன்பம் பெருகியவிடத்துக் கூடிக் களித்தும் உதவுவதற்கு நண்பர்கள் வேண்டும். அத்தகைய நண்பர்களிலே, உறவின் முறையாரின் தொடர்பினைப் பற்றிக் கூறுவது இந்தப் பகுதி.

## 21. சுற்றம் தழால்

'உறவு முறையார்' என்போர், தாய்வழி தந்தை வழி வரும் உறவினர்களும், கொள்வினை கொடுப்பினை பற்றி வரும் உறவினர்களும் ஆவர். பொதுவான நண்பர்களைக் காட்டிலும், இவர்கள் தம்முடைய இயல்பான உறவுப்பிணிப்பின் காரணமாக அதிகமாக நட்புச் செய்வதற்கு உரியவராவர்.

வாய்ப்பும் வளனும் பெற்ற ஒருவன், தான்மட்டும் இன்புறுவதிலேயோ, அல்லது தன் இல்லத்தவரான மனைவி மக்கள் மட்டும் இன்புறுவதிலேயோ கவனஞ் செலுத்துவது போதாது. அவன், தன்னைச் சேர்ந்த உறவின் முறையினர் எல்லாருமே துன்பத்தின் நீங்கியவர்களாக இருக்கும் வண்ணம், தன்னாலியன்ற அளவுக்கு அவர்களுக்கு உதவியும், அவர்களைக் காத்தும் வருதல் வேண்டும்.

தன் குடும்பம், தன் சுற்றம், தன் நட்பு, தன் ஊர், தன் நாடு என்று படிப்படியாக அகற்சி பெற்றுக் கொண்டே போகும் உறவுப் பிணிப்பிலே, இரண்டாவதாக விளங்குவதுதான் சுற்றம் பேணுதல் ஆகும்.

**201. வயாவும் வருத்தமும் ஈன்றக்கால் நோவும்,**
**கவாஅன் மகன்கண்டு தாய்மறந் தாஅங்கு,**
**அகாஅத் தான்உற்ற வருத்தம் உசாஅத் தன்**
**கேளிரைக் காணக் கெடும்.**

கருவுற்றிருக்கிற காலத்திலே உண்டாகின்ற இயல்பான பலவித நோவுகளையும், அந்த நோவுகளாலும் பிறவற்றாலும் வருகின்ற வருத்தங்களையும், கருவுயிர்த்துக் குழந்தையைப் பெறுகின்ற பிரசவ காலத்தே உண்டாகும் நோவுகளையும், தன் மடியின் மீது தன் மகனை இருத்தியதைக் கண்ட அளவாலேயே ஒரு தாயானவள் மறந்துவிடுவாள். அதனைப் போலவே பலவகையான தளர்ச்சிகளாலும் ஒருவன் அடைந்த துன்பங்கள் எல்லாம், அதனைப்பற்றிக் கேட்கவரும் தன் உறவினரைக் கண்ட அளவானே அவனை விட்டு நீங்கிப் போய்விடும்.

'மகனைக் கண்டதும், தான் முன்னர் அடைந்த நோவுகளைத் தாய் மறப்பதுபோலவே, உறவினரைக் கண்டதும் ஒருவன் பெற்றிருந்த எல்லா வகைத் தளர்ச்சிகளும் மறைந்துபோகும். அந்த அளவுக்கு உறவுப் பாசம் இருக்க வேண்டும்' என்பது கருத்து.

**202. அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட்கு எல்லாம்**
**நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்,-பழுமரம் போல்**
**பல்லார் பயன்துய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே**
**நல்லாண் மகற்குக் கடன்.**

வெயிலானது நெருப்பாகக் காய்கின்ற பொழுதிலே, அந்த வெம்மைக்கு ஆற்றாதவையாகத் தன்னை வந்து அடைந்தவர்களுக்கு எல்லாம், எவ்வித வேறுபாடும் இன்றி ஒரே தன்மையாக நிழல்தந்து உதவிக் காத்து நிற்கின்ற நிழல்தரும் மரத்தைப்போல, உறவினர் வறுமையால் வாடி வெதும்பித் தம்மை வந்து அடைந்தபோது, அவர்கள் அனைவரையுமே, அவர்களுக்குள் எவ்விதமான வேறுபாடுகளும் காட்டாமல் ஒரே சமநிலையிலே தாங்கிக் காத்தல் வேண்டும். அத்துடன் பழங்கள் நிரம்பிய மரத்தைபோலப், பலரும் தன் பயனைப் பெற்று உண்டு களிக்கத்தான் அதனால் வருத்தமுற்றும், அதனைத் தான் பெற்ற

தகுதியாகக் கருதி வாழவேண்டும். இவையே, 'நல்ல ஆண்மகன்' என்று சொல்பவர்க்கெல்லாம் உரிய சிறந்த கடமையாகும்.

நிழல் மரம்போல இருப்பிடமும், பழமரம்போல உணவும் தந்து பேணவேண்டும் என்பது கருத்து. நிழன் மரம் தான் துயருறாது உதவும்; பழமரம் தான் துன்புற்றும் உதவும். அதுபோலவே இருநிலையினும் உதவுதல் வேண்டும் என்பதும் கருத்தாகும்.

**203. அடுக்கன் மலைநாட! தற்சேர்ந் தவரை**
**எடுக்கலம் என்னார் பெரியோர் - அடுத்தடுத்து**
**வன்காய் பலபல காய்ப்பினும், இல்லையே**
**தன்காய் பொறுக்கலாக் கொம்பு?**

மலையடுக்குகள் பலவற்றைக் கொண்ட நாட்டிற்கு உரியவனே! பெரியவர்கள், தம்மை நாடிவந்து புகலாக அடைந்தவர்களுக்கு உதவி, அவர்களை உயர்த்த மாட்டோம் என்று ஒருபோதும் சொல்லவே மாட்டார்கள். அடுத்தடுத்துப் பெரிதான காய்கள் மிகப் பலவாகக் காய்த்தபோதினும், தன் காய்களைத் தாங்காது தள்ளிவிடும் மரக்கிளை எதுவுமே இல்லை அல்லவா? அதுபோலத்தான், பெரியவர்களும், எவரையும் தம்மால் தாங்கமுடியாது என்று தள்ளி விடுவதில்லை.

'மென்மையான சிறு கொம்பும், தன் பெரிய காய்கள் என்றதால் தாங்கும் சக்தியுடையதாவது போலத், தாம் தளர்ந்த நிலையினும், பெரியோர் வாடிவரும் தம் சுற்றத்தினருக்கு உள்ளன்புடன் உதவுவார்கள்' என்பது கருத்து.

**204. உலகறியத் தீரக் கலப்பினும் நில்லா,**
**சிலபகலாம் சிற்றினத்தார் கேண்மை;-நிலைதிரியா**
**நிற்கும், பெரியோர் நெறியடைய நின்றனைத்தால்,**
**ஒற்கம் இலாளர் தொடர்பு.**

உலகத்தாரெல்லாம் அறியும்படியாக, முற்ற முழுக்கக் கலந்தவர்களாகப் புறத்தே விளங்கினாலும்கூடச் சிறுமைக் குணம் உடையவர்களுடைய உறவெல்லாம், சில நாட்களின் அளவே நிலைத்து நிற்கும். தம்முடைய தகுதியிலே மாறுதல் இல்லாது, நல்ல குணங்களினின்றும் பிறழாது நிலைபெற்றவர் களாயிருக்கும் பெரியோர்களுடைய தொடர்போ என்றால், யோகநெறியிலே நிலைத்து நிற்கின்றவரின் உறுதிப்பாட்டைப் போல, என்றும் நிலைமாறாது ஒரு சீராக நிலை பெற்றிருப்பதாகும்.

ஒற்கம்-நற்பண்புகளினின்றும் பிறழ்தல், நெறி-யோக நெறி. தீர-முற்ற முழுக்க. 'புறத்தே கலந்தவர்போலக் காட்டலாற் பயனில்லை; உறுதியான உள்ளத்துடன் நட்புச் செய்வதே சிறப்பு; சிற்றினத்தார் நட்பு அத்தன்மையுடையது அன்று; அதனால் அதைக் கைவிட்டுப் பெரியோரின் தொடர்புகளையே அனைவரும் நாடவேண்டும்' என்பது கருத்து.

**205. 'இன்னர்; இனையர்; எமர் பிறர்' என்னுஞ்சொல்**
**என்னும் இலராம் இயல்பினால் - துன்னித்**
**தொலைமக்கள் துன்பந்தீர்ப் பாரே, யார் மாட்டும்**
**தலைமக்கள் ஆகற்பா லார்.**

'இவர் நமக்கு இன்ன வகையான தொடர்பு உடையவர்; இவர் இப்படிப்பட்ட தன்மை உடையவர்; இவர் நமக்கு வேண்டியவர்; இவர் நமக்கு வேண்டாதவர்' என்றெல்லாம் வேறுபடுத்திப் பேசும் பேச்சுக்கள் யாதொன்றும் இல்லாதவர்களாக விளங்கும் தன்மையினாலே, துன்பத்தால் வருந்தியவராக வந்த சுற்றத்தார் அனைவருடனும் ஒன்று பட்டு, அவர்களுடைய வருத்தத்தைப் போக்குபவர்கள் யாவரோ அவர்களே, எவரிடத்தும் மேன்மக்களாகின்ற தன்மை உடையவர்களாவார்கள்.

'தம்மை நாடிவந்த உறவினரின் தகுதி உறவு வேறுபாடுகளை மனங்கொள்ளாது, அனைவருக்கும் ஒருப்போலவே உதவுதல் வேண்டும்' என்பது கருத்து. தொலை மக்கள்-வளம் நீங்கித் தளர்ந்த மக்கள்.

**206. பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்**
**அக்காரம் பாலோடு அமரார்கைத்து உண்டலின்,**
**உப்பிலிப் புற்கை, உயிர்போற் கிளைஞர்மாட்டு**
**எக்காலத் தானும் இனிது.**

பொற்பாத்திரத்திலே இட்டுள்ள, புலிநகம் போன்ற வெண்மையான சோற்றைச், சர்க்கரையும் பாலும் கலந்து, அன்பில்லாதவருடைய கையினின்றும் பெற்று உண்பதைக் காட்டினும் உப்பும் இல்லாத புல்லரிசிக் கூழினை, உயிர்போல அன்புகாட்டும் உறவினரிடத்தே எந்தப் பாத்திரத்திலேனும் பெற்று உண்பதுவே இனிதாயிருக்கும்.

அக்காரம்-சர்க்கரை. அமர்தல் - அன்பு காட்டுதல். 'உணவின் இனிமை அளிப்பவரின் அன்பின் தகுதியை நோக்கியே அமைவதாகும்; அதனால், அன்புடனேயே அனைவருக்கும் உதவுக' என்பது கருத்து.

**207. நாள்வாய்ப் பெறினும், தம் நள்ளாதார் இல்லத்து**
**வேளாண்மை வெங்கருனை வேம்பாகும்;-கேளாய்;**
**அபரானப் போழ்தின் அடகிடுவா ரேனும்,**
**தமராயார் மாட்டே இனிது.**

பசியுள்ள முற்பகற் காலத்தில் தானே பெற்றாலும் தமக்கு அன்பில்லாதவர்களுடைய வீட்டிலே உபகாரமாகக் கொடுக்கப்பட்ட விரும்பத்தக்க பொரிக்கறியோடு கூடிய உணவும், வேம்பு போற் கசப்புடையதாகவே இருக்கும். பிற்பகற்காலமான காலமற்ற காலத்திலே, இலைக்கறியோடு கூடிய உணவையே இடுவார்களேனும், தமக்கு அன்புடைய உறவினர்களிடத்திலே பெற்று உண்பதோ இனிதாயிருக்கும்.

நாள்வாய் - காலையும் ஆம். அபரானப்பொழுது- நண்பகலுக்குப் பின்வரும் பொழுது. 'காலத்தால் அன்பற்றவர் களிடமிருந்து பெறும் பெரிய உதவியை விடக் காலங் கடந்தேனும் அன்புடையாரிடமிருந்து பெறும் சிறிய உதவியே இனிதாகும்' என்பது கருத்து.

**208. முட்டிகை போல முனியாது, வைகலும்,**
**கொட்டியுண் பாரும், குறடுபோல் கைவிடுவர்;**
**சுட்டுக்கோல் போல, எரியும் புகுவரே,**
**நட்டார் எனப்படு வார்.**

சம்மட்டி என்னும் கருவியைப்போல, மீண்டும் மீண்டும் சென்று தொடர்பு கொள்வதை வெறுக்காது, நாள்தோறும் பிறர்பொருளை அடித்தடித்துப் பெற்று உண்பவர்களும், அப்படிக் கொடுத்தவர்களுக்குத் துன்பம் வந்த காலத்து உலைக்கள வெம்மை அணுகியதும் பற்றிய இரும்பை அதன்பால் விட்டுவிட்டுத் தான் மீளும் குறட்டைபோல, அவர்களைக் கைவிட்டு ஒதுங்கிவிடுவார்கள். ஆனால் உண்மையான நண்பர்கள் என்று சொல்லப்படுபவர்களோ, அந்த உலையினுள்ளே புகுந்து அப்போதும் உதவுகிற சுட்டுக் கோலைப்போலத் தம் நண்பர்களின் வாட்டத்திலும் பிரியாது, அவருடன் கலந்து, அவருக்கு உதவியாயிருப்பர்.

முட்டிகை-சம்மட்டி. குறடு-பற்றுங் குறடு. சுட்டுக் கோல்-உலையாணிக்கோல். கொட்டியுண்பது-அவர் தமக்குத் தரும்படி அவரைத் தம் வசமாக்கிப் பெற்று உண்பது.

**209. நறுமலர்த் தண்கோதாய்! நட்டார்க்கு நட்டார்**
**மறுமையும் செய்வதொன்று உண்டோ-இறுமளவும்**

**இன்புறுவ இன்புற்று எழீஇ, அவரொடு**
**துன்புறுவ துன்புறாக் கால்?**

நல்ல மணமுள்ள பூக்களால் தொடுக்கப்பெற்ற தலைமாலையினை அணிந்திருப்பவளே! நண்பர்கள், தம்முடன் நட்புப் பூண்டவர்களுக்கு, அவரும் தாமும் இறந்துபோகும் காலம் வரையினும் இன்பமடையத் தக்கவற்றிற்கு அவரோடு தாமும் இன்பப்பட்டு நடந்து, துன்பமடையத் தக்கவற்றிற்கு அவரோடு தாமும் துன்பப்பட்டு நடவாமற்போனால், மறுமையிலும் அத்தகையோர் செய்யத்தக்க நல்ல செயல்தான் ஏதாவது ஒன்று உள்ளதோ?

'இம்மையிலே தான் அவர் நற்பண்புடன் நடக்க வில்லையே? மறுமையிலாவது நடக்கலாமல்லவோ? என்றால், மறுமையிலும் அவர் அப்படி நடவார் என்றனர். இதனால், நண்பர்களின் ஒழுக்க முறைமை கூறப்பட்டது. இங்கே நட்பு, சுற்றத்தாரின் உறவுப் பாசம்.'

210. **விருப்பிலார் இல்லத்து வேறிருந்து உண்ணும்**
**வெருக்குக் கண் வெங்கருனை வேம்பாம்;-விருப்புடைத்**
**தன்போல்வார் இல்லுள் தயங்குநீர்த் தண்புற்கை,**
**என்போடு இயைந்த அமிழ்து.**

அன்பில்லாதவர்களுடைய வீட்டிலே, தனியே இருந்து உண்ணுகின்ற, பூனைக் கண்போல விளங்கும் சூடான பொரிக்கறியோடு கூடிய உணவும், வேம்புபோலக் கசப்பு உடையதேயாகும். ஆனால், தம்மீது விருப்பமுடையவரும், தம்மோடு ஒத்தவருமான ஒருவருடைய வீட்டிலே உண்ணப்படும், தெளிந்த நீரினையுடைய குளிர்ச்சியான புல்லரிசிக் கூழானது, உடலிற்குப் பொருந்தின அமுதமாக விளங்கத் தக்கதாகும்.

வெருக்கு-வெருகுப்பூனை. 'தம் தகுதிக்கு மேற்பட்டவர்களை நாடி உண்பது கூடாது' என்பது கருத்து. இதனால் சுற்றத்தினரைச் சமமாகக் கருதி அன்புடன் உபசரிக்கவேண்டிய கடமை கூறப்பட்டது.

## 22. நட்பு ஆராய்தல்

'நண்பர்கள்' என்று சொல்லப்படுபவர் பலப்பல வகையினராக நம்முடன் தொடர்பு கொள்பவர்கள்.

அவர்களுள், 'நல்ல நட்பினர் எவர்? என்று ஆராய்ந்து அறிந்து, அத்தகையவர்களை மட்டுமே நண்பர்களாகக் கொள்வதும், பிறரை எல்லாம் ஒதுக்கிவிடுவதுமே ஒருவனுக்குச் சிறந்ததாகும்.

நல்ல நண்பர்கள் என நினைத்துப் போலிகளோடு அறியாதே கொள்ளும் உறவினாலே ஏற்படும் பல தீங்குகளையும் கருதியாவது, நண்பர்களைக் கொள்வதிலே நாம் மிகவும் விழிப்புடையவர்களாக இருக்கவேண்டும்.

இன்ப துன்பங்களிலே சமமான பங்குகொண்டு, உற்றுழி உதவியாக நிற்பவரே உண்மையான நட்பினர் ஆவர். அஃதன்றி, நல்ல காலத்திலே கூடியிருந்தும், துன்பம் வந்து நேர்ந்த காலத்திலே கைவிட்டும் போய் விடுகிறவர்கள், நண்பர்கள் ஆகவே மாட்டார்கள்.

**211. கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மை,எஞ்ஞான்றும்,**
**குருத்திற் கரும்புதின் றற்றே; குருத்திற்கு**
**எதிர்செலத் தின்றன்ன தகைத்தரோ, என்றும்**
**மதுரம் இலாளர் தொடர்பு.**

நூல்களிலே சொல்லப்பட்டுள்ள உட்பொருள்களை உணர்ந்தவர்களாகக், கற்றற்கு உரியனவெல்லாம் கற்றுத் தேர்ந்தவர்களுடைய தொடர்பானது, எப்போதும் கரும்பைக் குருத்திலே தொடங்கி அடிநோக்கித் தின்பது போன்றதாக இருக்கும். எக்காலத்தும் இனிய தன்மை இல்லாதவர்களுடைய தொடர்போவென்றால், குருத்திற்கு எதிரே செல்லும்படியாக, அடியிலிருந்து கரும்பை நுனி நோக்கித் தின்பதைப் போல்வதாகும்.

'கற்றவர் நட்பு வரவர இனிக்கும்; கல்லாதவர் நட்பு வரவரக் கசக்கும்' என்று கூறிக் 'கற்றவர்களின் நட்பையே கொள்ளுதல் வேண்டும்' என்பது வற்புறுத்தப்பட்டது.

**212. இற்பிறப்பு எண்ணி, இடைதிரியார் என்பதோர்**
**நற்புடைக் கொண்டமை அல்லது - பொற்கேழ்**
**புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட**
**மனமறியப் பட்டதொன் றன்று.**

பொன்னிறமுள்ள நீர்ப் பெருக்கானது பெருகிவரப், பறவை இனங்கள் அதற்கு அஞ்சி ஓடுகின்ற பூங்குன்ற நாட்டை உடையவனே! ஒருவருடைய நல்ல குடிப்பிறப்பினைக் கருதி, அவர் இடையிலே மாறுபடமாட்டார்கள் என்று

சொல்லப்படுவதான ஒரு நல்ல தன்மையைத், தாம் நட்புச் செய்வதற்கு ஏதுவாகக் கொண்டதே அல்லாமல், அவருடைய மனத்தின் தன்மை அறியப்பட்டே நட்புச் செய்தனர் என்பது, இவ்வுலகத்தில் ஒருபோதும் இல்லையாகும்.

'ஒருவருடைய மனநிலையறிந்தே நட்புச் செய்தல் இயல்வதன்று; ஆதலால் அவர் நற்குடிப் பிறந்தவரா என்பதை அறிந்து அவருடன் நட்புச் செய்தல் வேண்டும்' என்பது கருத்து.

**213. யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்<br>கேண்மை கெழீஇக் கொளல்வேண்டும்;-யானை<br>அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்<br>மெய்யதா, வால்குழைக்கும் நாய்.**

பலகாலம் பழகிப்பழகித் தெரிந்திருந்தாலும் தன் பாகனையே சமயத்திற் கொன்றுவிடுவது யானை. ஆனால், தன்னை உடையவனாயிருந்தவன், எறிந்த வேலானது தன் உடலிலே தைத்திருக்கவும் தன் வாலைக் குழைத்து அவனிடம் அன்பு காட்டிக் கொண்டே நிற்பது நாய். அதனால், யானையைப் போன்றவர்களது நட்பினைக் கைவிட்டு, நாய் போன்றவர்களது நட்பையே ஒவ்வொருவரும் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

'தன்னைப் பலகாலம் பேணிக்காத்தவன் என்றறிந்தும் கொல்லும் யானைபோல, நண்பரையே அழிக்கும் தீயவர் உறவு கூடாது; வேல் உடலிலே தைத்திருக்கவும் வால் குழைத்து நிற்கும் நாய்போலத் துன்பம் தாமே இழைத்த காலத்தும் நட்பினை மறவாது அன்புகாட்டும் ஒருவரது சிநேகமே கொள்ளத்தக்கதாகும்' என்பது கருத்து.

**214. பலநாளும் பக்கத்தார் ஆயினும், நெஞ்சில்<br>சிலநாளும் ஒட்டாரோடு ஒட்டார்; -பலநாளும்<br>நீத்தா ரெனக்கை விடலுண்டோ தந்நெஞ்சத்து<br>யாத்தாரோடு யாத்த தொடர்பு?**

பல நாட்களும் அருகிலேயே இருப்பவர்களானாலும் உள்ளத்திலே சில நாட்களாகிலும் ஒன்றுபடாதவர்களோடு, அறிவுடையவர்கள் நட்புச் செய்யவே மாட்டார்கள். தம் உள்ளத்திலே அன்பாற் பிணிக்கப் பட்டிருப்பவர்களுடன் கொண்டிருக்கும் தொடர்பினை அவர்கள் பலநாட்களும் தம்மைவிட்டு நீங்கியிருக்கின்றனர் என்று கருதி, யாரும் விட்டுவிடுவது இவ்வுலகிலே உளதாகுமோ?

*'உளங்கலந்த நண்பர்கள் பல நாட்களாகப் பிரிந்திருக் கிறார்கள் எனக் கருதி, எவரும் அவர் நட்பை வெறுத்து விடுவதில்லை. பல நாளும் அருகிலேயே இருந்தாலும் உள்ளம் கலவாதவரோடு அறிவுடையவர் நட்புக் கொள்வதும் இல்லை' என்பது கருத்து. உள்ளங்கலத்தலே நட்பு என்பது பொருள்.*

**215. கடையாயர் நட்பிற் கமுகனையர்; ஏனை**
**இடையாயார் தெங்கின் அனையர்; தலையாயார்**
**எண்ணரும் பெண்ணைபோன்று, இட்டஞான் றிட்டதே**
**தொன்மை உடையார் தொடர்பு.**

*கீழ்த்தரமானவர்கள் நட்புச்செய்வதிலே ஒருநாள் உபசரணை தவிர்த்தாலும் பயன்கெடுகின்ற கமுகு மரத்தைப் போன்றவர்கள். மற்றை நடுத்தரமானவர்களோ, இடையிடை உபசரணை இல்லாமற் போனால் பயன்கெடும் தென்னை மரத்தைப் போன்றவர்கள். முதற்றரமானவர்களாகிய பழமைப் பண்புகளிலே சிறந்தவர்களுடைய நட்போ எண்ணுதற்கும் அருமையான பனைமரத்தைப் போன்று நட்ட அக்காலத்தின் தன்மை போன்றே, உபசரணை செய்தாலும் செய்யா விட்டாலும் ஒரே தன்மையாக என்றும் பயன்தருவதாயிருக்கும்.*

*'முதற்றரமானவரோடு கொள்ளும் நட்பே சிறந்தது' என்பது கருத்து.*

**216. கோட்டுப்பூப் போல மலர்ந்து, பிற் கூம்பாது,**
**வேட்டதே வேட்டதாம் நட்பாட்சி, தோட்ட**
**கயப்பூப்போல் முன்மலர்ந்து, பிற்கூம்பு வாரை**
**நயப்பாரும் நட்பாரும் இல்.**

*மரக்கிளைகளிலே பூத்திருக்கும் மலர்களைப் போல, முன்மலர்ச்சி பெற்றது பின் குவிதல் என்றில்லாமல், முதலில் விரும்பியது போலவே என்றும் மாறாத விருப்பமுடைய தாயிருப்பதே, நட்பினை முறையே பேணிக் காத்தல் ஆகும். தோண்டப்பட்ட நீர்நிலையிலேயுள்ள நீர்ப் பூக்களைப்போல, முதலிலே முகமலர்ந்து முகம் குவிக்கின்றவர்களை விரும்பு கிறவர்களும், அவர்களோடு நட்புச் செய்கிறவர்களும் எவருமே இவ்வுலகத்தில் இல்லை.*

*'முதலிலே கொண்ட நட்பு என்றும் மாறாமல் இருக்க வேண்டும்; அதுவே உண்மையான நட்பு' என்பது கருத்து. கோடு-கொம்பு; கிளை கூம்புதல் - குவிதல். கயம்- குளம்; நீர்நிலை.*

**217. கழுநீருள் காரட கேனும், ஒருவன்
விழுமிதாக் கொள்ளின் அமிழ்தாம், -விழுமிய
குய்த்துவையார் வெண்சோறே யாயினும், மேவாதார்
கைத்துண்டல் காஞ்சிரங் காய்.**

*அரிசியைக் கழுவிய கழுநீரிலே சமைத்த கறுத்த இலைக்கறியே யானாலும், ஒருவன் சிறப்புடையதாகக் கருதி ஏற்றுக் கொண்டால் அதுவே அவனுக்கு அமுதமாக விளங்கும். சிறந்த முறையிலே தாளிதஞ் செய்யப்பெற்ற கறிவகைகளோடும், துவையல்களோடும் கூடிப் பெற்ற வெண்மையான சோறே என்றாலும், அன்பில்லாதவர் கையிலிருந்து பெற்று உண்பது என்பது எட்டிக்காயைத் தின்பதுபோலக் கசப்பாகவே யிருக்கும்.*

*'உணவின் சுவையும் தருபவரின் நட்புத் தகுதி பற்றியே கருதியே கொள்ளப்படுவதாகும்' என்பது கருத்து. குய்-தாளிதம்.*

**218. நாய்க்காற் சிறுவிரல்போல் நன்கணியர் ஆயினும்
ஈக்கால் துணையும் உதவாதார் நட்பென்னாம்?
சேய்த்தானுஞ் சென்று கொளல் வேண்டும், செய்
வினைக்கும்
வாய்க்கால் அனையார் தொடர்பு.**

*நாயின் காலிலேயிருக்கின்ற சிறிய விரல்களைப் போல மிகவும் நெருக்கமுடையவராக விளங்கினாலும், ஈயின் காலளவாகவாவது உதவாதவர்களுடைய நட்பு என்ன பயனுடையதாகும்? வயல்களை விளையப் பண்ணுகின்ற வாய்க்காலைப்போல, ஒருவர்க்கு உதவுபவர்களது தொடர்பானது தொலைவிலுள்ள தென்றலும் அதனையே தேடிப்போய்ப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.*

*'நெருக்கமுடையவராயிருந்தும் சிறு உதவியும் செய்யாதவரை வெறுத்து, எட்டியிருந்தாலும் உதவும் பான்மையுடையவரின் நட்பினைத் தேடிப் பெறுக' என்பது கருத்து.*

**219. தெளிவிலார் நட்பின் பகைநன்று; சாதல்
விளியா அருநோயின் நன்றால்; அளிய
இகழ்தலின் கோறல் இனிதே; மற்று இல்ல
புகழ்தலின் வைதலே நன்று.**

*தெளிவான அறிவு இல்லாதவர்களுடைய நட்பினைக் காட்டிலும் அவர்களுடைய பகைமையே ஒருவனுக்கு நன்மை*

*தருவதாகும். எந்த மருந்தாலும் போகாத அரிய நோயிலே கிடந்து துன்புறுவதைக் காட்டிலும், சாதலே ஒருவனுக்கு நன்மை தருவதாகும். ஒருவனது நெஞ்சம் புண்படும் படியாக இகழ்ந்து பேசுதலைவிட, அவனைக் கொன்று விடுதலே இனியதாகும். ஒருவனிடம் இல்லாத குணங்களை எல்லாம் இருப்பதாகக் கூறிப் பொய்யாகப் புகழ்ந்து பேசுவதைவிட, அவனை வைதலே நன்மை தருவதாகும்.*

*'நட்புக் கொள்பவர் இவற்றை எல்லாம் ஆராய்ந்து ஏற்றவாறு நடந்து கொள்ளல் வேண்டும்' என்பது கருத்து.*

**220. மரீஇப் பலரொடு பன்னாள் முயங்கிப்,**
**பொரீஇப், பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்;**
**பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா,**
**மரீஇய, பின்னைப் பிரிவு.**

*அநேகம் பேருடன் சேர்ந்து, பல நாட்களாகக் கலந்து பழகி, மனநிலையிலே ஒப்பாகிப் பொருளாகக் கருதும் ஒரு தகுதி உடையவர்களையே நட்பினராகக் கொள்ளுதல் வேண்டும். சினந்து எழுந்து உயிரைப் போக்குகின்ற பாம்பினோடும்கூட முதலிலே பழகிவிட்டால், பின்னர் விட்டுப் பிரிவதென்பது மிகவும் துன்பந்தருவதாயிருக்கும் அல்லவோ?*

*'தீயோரின் நட்பை முதலிலேயே விலக்கிவிட வேண்டும், நீடித்துப் பழகினால் அதனை விடுவது எளிதாயிராது; அதனால், அப்படிப் பழகாமலிருப்பதே சிறந்ததாகும்' என்பது கருத்து.*

## 23. நட்பிற் பிழை பொறுத்தல்

*'தகுதியுடைய நண்பர்கள்' என்று எவ்வளவுதான் ஆராய்ந்து ஆராய்ந்து உறவு கொண்டாலுங்கூட, அவரும் அறிந்தோ அறியாமலோ நம் மனம் புண்படும்படியான சிலபல பிழைகளைச் செய்து விடுதலும் இயல்பேயாகும். அப்படி அவர் பிழை செய்த காலத்திலே, சினந்து அவரை வெறுப்பதோ, அன்றிக் கடிவதோ நல்ல நட்பின் பண்பன்று. அவருடைய மனநிலை மாற்றத்துக்கு வருந்தி, அப்பிழைகளைப் பொறுத்துக் கொள்ளுதலே சிறந்த நட்பாகும்.*

*நட்பு நிலையாக வளரவேண்டுமானால், இந்த நட்பிற் பிழை பொறுத்தல் என்னும் பண்பு மிகவும்*

இன்றியமையாததாகும். மனிதன் பலகாலமும் பல்வேறு வகையான உணர்ச்சிகளின் பிடிகளில் சிக்குண்டு, நிலை தடுமாற்றம் அடைகின்றவன். அதனால் அவன் பிழை செய்தலும் ஒரொரு சமயம் இயல்பே. அதனைப் பொறுத்துக்கொள்ளும் பண்பே சிறந்த நட்பின் இலக்கணமாகும் என்பது இது.

221. **நல்லார் எனத்தாம் நனிவிரும்பிக் கொண்டாரை,**
**அல்லார் எனினும், அடக்கிக் கொளல் வேண்டும்,**
**நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு**
**புல்லிதழ் பூவிற்கும் உண்டு.**

'*நல்லவர்கள்' என்று நாம் மிகவும் விரும்பி நண்பராகக் கொண்டவர்களை, அவர்கள் அப்படிப்பட்ட நல்லவர்கள் அல்லாதவராகவே இருந்தாலும், அதனைப் பொறுத்து உள்ளத்திலேயே அடக்கிக் கொள்ளுதல் வேண்டும். நெல்லுக்கும் உமி உண்டு; நீருக்கும் நுரையுண்டு; பூவிற்கும் புன்மையான புறவிதழ்கள் உண்டு. அதுபோலவே நல்லவர்களிடமும் சில குற்றங்குறைகள் இருக்கவே செய்யும் என்று கருதுதல் வேண்டும்.*

'*குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்ற கருத்தைக் கூறுவது இது. இதனால் நட்பினரின் குற்றங் குறைகளைப் பொறுத்தல் கூறப்பட்டது.*

222. **செறுத்தோறு உடைப்பினும், செம்புனலோடு ஊடார்,**
**மறுத்தும் சிறைசெய்வர், நீர்நசைஇ வாழ்நர்;**
**வெறுப்ப வெறுப்பச் செயினும், பொறுப்பரே**
**தாம்வேண்டிக் கொண்டார் தொடர்பு.**

*அடைக்க அடைக்க அணையை உடைத்துக் கொண்டு போனாலும், நல்ல நீரோடு பிணக்கங் கொள்ளாதவர்களாக, நீர்வளத்தை விரும்பி வாழும் உழவர்கள் மீண்டும் அதனை அணையிட்டுத் தேக்கிப் பயன் பெறுவார்கள். அதுபோலவே, தாம் விரும்பி நண்பராகக் கொண்டவர்களுடைய தொடர்பினையும், அவர் வெறுக்கும்படியான செயல்களை அடுத்தடுத்துச் செய்தாலும் அவரோடு பிணங்காது, பொறுத்துக் கொண்டே பேணுவார்கள் அறிவுடையோர்.*

'*நீரால் வயலிலே விளைவினைப் பெருக்கிக்கொள்ள விரும்புபவர் போலவே, நட்பினால் நன்மைபெற விரும்புபவரும், நட்பினரின் பிழைகளைப் பொறுத்தல் வேண்டும்' என்பது கருத்து.*

223. இறப்பவே தீய செயினும், தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன்று அன்றோ?-நிறக்கோங்கு
உருவவண்டு ஆர்க்கும் உயர்வரை நாட
ஒருவர்பொறை யிருவர் நட்பு.

*தன்னுடன் நட்புக் கொண்டவர்கள், மிகுதியான தீமைகளையே தனக்குச் செய்தனரானாலும், அவற்றைப் பொறுத்துக் கொள்ளுதல் தகுதியுடைய ஒரு செயல் அல்லவோ? நல்ல நிறமுள்ள கோங்கின் பூவிலே, அழகுள்ள வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கின்ற, உயரமான மலைகளையுடைய நாட்டையுடையவனே ஒருவர் பொறுத்துக் கொள்வது இருவருடைய நட்புக்கும் துணையாகின்றது அல்லவோ?*

*'இருவர் நட்பு' என்றது, கலந்த இருவரும் ஒருவருக் கொருவர் நட்பாகும் நிலையைக் காட்டியதாகும். பிழை பொறுக்காவிடில் இருபாலும் நட்புக் கெடும் என்பது கருத்து.*

224. மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம்
கடுவிசை நாவாய் கரையலைக்கும் சேர்ப்ப
விடுதற்கு அறியார் இயல்பிலரேல், நெஞ்சம்
சுடுதற்கு மூட்டிய தீ.

*மோதி மடிந்து வீழ்கின்ற அலைகள் கொணர்ந்து தந்த ஒளியுடைய சிறந்த முத்துக்களை, மிகுந்த விரை வினையுடைய கப்பல்கள் கரைகளிலே அலையச் செய்து தள்ளுகின்ற கடற்கரைக்கு உரியவனே! நட்பினை விடுவதற்கு அரியவராயிருப்பவர்கள் இயற்கையான நற்குணம் இல்லாதவரானால், அவர் நம் மனத்தை எரிப்பதற்கு மூட்டிய நெருப்பாவார் என்று அறிவாயாக.*

*நண்பர்களின் பிழைச் செயலால், அறிஞரது உள்ளம் வருந்தும் தன்மை கூறிப், பிழை பொறுத்தலின் உயர்வை விளக்குவது இது.*

225. இன்னா செயினும் விடற்பாலர் அல்லாரைப்
பொன்னாகப் போற்றிக் கொளல் வேண்டும் -
பொன்னொடு
நல்லிற் சிதைத்ததீ நாடொறும் நாடித்தம்
இல்லத்தில் ஆக்குத லால்.

*துன்பங்களையே எந்நாளும் செய்தாலும் விட்டுப் பிரியத்தக்கவர் அல்லாதவர்களைப் பொன்னைப் போலக்*

கருதிப் போற்றிக் கொள்ளுதலே வேண்டும். எதுபோல என்றால், பொன் முதலிய நற்பொருள்களுடனே நல்ல வீட்டையும் சிதைத்துவிட்ட நெருப்பையும், வெறுத்து ஒதுக்காது விரும்பி, நாள்தோறும் தம்வீட்டிலே யாவரும் உண்டாக்குவது போல என்க.

'நெருப்பு ஒரு காலத்து வீட்டைச் சுட்டதாயினும், அதன் பயனை அறிந்து, அதனை வெறுக்காமல் மீண்டும் தம் வீட்டு அடுப்பிலே மக்கள் மூட்டுகின்றதைப் போல, நட்பினரின் பிழைகளையும் மறந்து நட்பைப் பேணவேண்டும்' என்பது கருத்து.

**226. இன்னா செயினும், விடுதற்கு அறியாரைத்**
**துன்னாத் துறத்தல் தகுவதோ? - துன்னருஞ்சீர்**
**விண்குத்தும் நீள்வரை வெற்ப! களைபவோ,**
**கண்குத்திற் றென்றுதம் கை?**

*பிறவிடத்துச் சேர்தற்கு அருமையான சிறப்பினை உடைய, வானத்தை முட்டுவதுபோன்று உயரமாக வளர்ந்துள்ள மூங்கில்களை உடைய மலைகளுக்கு உரிய தலைவனே! கண்ணைக் குத்திவிட்டதென்று யாரும் தம் கையினை நீக்கிப் போடுவார்களோ! அது போலவே விடுவதற்கு அரியவராகப் பழகிவிட்டவர்களை அவர்கள் தமக்கு துன்பமே செய்தாலுங்கூட, அவருடன் சேராமல் அவரை நீக்கி விட்டுவிடுதல் தகுதி உடையதாகுமோ? (ஆகாது என்பது கருத்து.)*

**227. இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினும்,**
**கலந்து பழிகாணார், சான்றோர் - கலந்தபின்,**
**தீமை எடுத்துரைக்கும் திண்ணறிவு இல்லாதார்,**
**தாமும், அவரிற் கடை.**

*விளங்குகின்ற நீரினைக் கொண்ட குளிர்ச்சியான கடற்கரையினை உடைய தலைவனே! ''தமக்குத் துன்பமே செய்தாலும் சான்றோர்கள், ஒருவருடன் கலந்தபின்னர், அவருடைய பழியினைக் கருதிப் பார்க்கவே மாட்டார்கள். ஒருவரோடு பழகிய பின்னர், அவருடைய தீய செயல்களை வெளிப்படுத்துக் கூறுகின்ற திண்மையான அறிவு இல்லாதவர்கள், அப்படித் தீமை செய்தவர்களினும் மிகவும் இழிவானவர்கள்'' என்று அறிவாயாக.*

'நண்பரின் குற்றங்களைப் பிறரிடம் கூறிப் பழிப்பவர் மிகவும் இழிந்தவர்' என்பது கருத்து.

**228. ஏதிலார் செய்தது இறப்பவே தீதெனினும்,**
**நோதக்கது என்னுண்டாம், நோக்குங்கால்?-காதல்**
**கழுமியார் செய்த, கறங்கருவி நாட!**
**விழுமிதாம், நெஞ்சத்துள் நின்று.**

ஒலிக்கும் மலையருவிகளையுடைய நாட்டின் தலைவனே! "அயலார் செய்தது மிகவும் தீயதே என்றாலும், ஆராய்ந்து பார்க்குமிடத்தே, அவரை வெறுக்கத் தக்கதாக என்ன இருக்கிறது? அன்பு மிகுந்தவர் ஒரொரு சமயத்திலே செய்த தீங்குகள், மனத்துள்ளாகவே அடங்கி நிலைபெற்று நின்றுவிட்டால், அதுவும் சிறந்ததாகப் பின்னர் விளங்கிவிடும்" என்று அறிவாயாக.

'அத்தீங்குகளைப் பிறரிடம் கூறாது நெஞ்சிலே அடக்கிக் கொண்டால் அதனைச் செய்தவர், தாமே பின்னர் மனம் வருந்தித் திருந்திக் கூடுவர்' என்பது கருத்து.

**229. தமரென்று தாம்கொள்ளப் பட்டவர் தம்மைத்**
**தமரன்மை தாமறிந்தார் ஆயின், அவரைத்**
**தமரினும் நன்கு மதித்துத் தமரன்மை**
**தம்முள் அடக்கிக் கொளல்!**

'தம்மைச் சேர்ந்தவர்கள்' என்று, தாமே விரும்பி நண்பராக்கிக் கொள்ளப்பட்டவர்களைத், தம் உறவிற்குத் தகுதியற்றவராயினமையைத் தாமே பின்னர் அறிந்து கொண்டனரேனும், அவரைத் தம்மைச் சேர்ந்த பிறரினும் சிறப்பாக மதித்து, அவரிடம் காணப்பட்ட தமரல்லாத இயல்பினைத் தம் உள்ளத்தினுள்ளேயே அடக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

'நட்பிற்குத் தகுதியற்றவர் என்று தோன்றினும், அதனை வெளிப்படக் காட்டாமல், அவரைப் பெரிதாக மதிப்பதுபோலக் காட்டி, அவரது பண்பற்ற செயல்களை உள்ளத்தினுள்ளேயே அடக்கிக் கொள்ளுதல் வேண்டும், புறங்கூறிப் பழித்தலாகாது' என்பது கருத்து.

**230. குற்றமும், ஏனைக் குணமும், ஒருவனை**
**நட்டபின் நாடித் திரிவேனேல் - நட்டான்**
**மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க,**
**அறைகடல்சூழ் வையம் நக!**

ஒருவனை நண்பனாகக் கொண்டதன் பின்னர், அவனுடைய குற்றங்களையும் மற்றைக் குணங்களையும் யான் தேடித்தேடித் திரிந்து கொண்டிருந்தேன் என்றால், நட்புச் செய்தவனுடைய இரகசியத்தைக் காக்காமல் விட்டவன் செல்கின்ற கதியிலே ஒலிக்கின்ற கடல்சூழ்ந்த உலகம் எல்லாம் கைகொட்டிச் சிரிக்கும்படியாகச் சென்று, யானும் துன்புறுவேனாக!

'நட்பிற் பிழைபொறுப்பேன்' என்று, ஒருவன் உரைத்த சூள் இது. இப்படியே ஒவ்வொருவரும் தமக்குள் உரைத்து உறுதி கொள்ளுதல் வேண்டும்.

## 24. கூடா நட்பு

'கூடா நட்பு என்பது பொருத்தமற்ற சிநேகம் ஆகும். இருவர், தம் உள்ளத்துள் கலந்த கேண்மை உடையவராகித், தகுதியுடன் நட்பாயிருப்பதே உண்மையான நட்பாகும். அப்படியில்லாமல், உள்ளக் கலப்பு இல்லாதே, வெளியே நட்பினர்போல நடிப்பது எல்லாம் பொருந்தாத நட்பாகவே கருதப்படும்.

மேலும், குடிப்பிறப்பு, குணம், ஒழுக்கம், உள்ளம், அறிவுடைமை என்ற இவற்றாலும், மற்றும் பிறபிற தகுதியுடைமைகளாலும் பொருந்தாதவர்களுடன் கொள்ளும் நட்பும் கூடா நட்பே யாகும்.

நட்புச் செய்வது, உற்றுழி உதவியும் இன்பத்தும் துன்பத்தும் இணைந்து நின்றும், ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருக்கும் பொருட்டாகவே அல்லாமல் வெற்றுரையாடி வீண்பொழுது போக்குவதற்கு மட்டுமே அன்று. இதனை மனத்துட் கொண்டே நட்பினரை ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும்.

நட்பில் பிழைபொறுத்தல் சிறப்பு என்றாலும், அதற்காகப் பொருந்தாதவருடன் நட்புக்கொண்டு, அவர்செய்யும், எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டே போகவேண்டும் என்பதில்லை. அதனால், கூடாநட்பின் இயல்புகளைக் கூறுவதன் மூலம், அதனை விலக்குவது பற்றி இந்தப் பகுதியுள் கூறப்படுகிறது.

**231. செறிப்பில் பழங்கூரைச் சேறணை யாக**
**இறைத்தும், நீர் ஏற்றும், கிடப்பர் - கறைக்குன்றம்**

**பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட!**
**தங்கருமம் முற்றுந் துணை.**

கருமையான மலைகளிலே இருந்தும் அருவிகள் பொங்கி வழிந்து கொண்டிருக்கும் நீர்வளத்துடன் கூடிய மலைகளைக் கொண்ட, நல்ல நாட்டிற்கு உரியவனே! கட்டுக் கோப்பு இல்லாமற்போன பழைய கூரையினையுடைய வீட்டிலே, மழைக்காலத்திலே, உள்ளே பெருகிய மழை நீரினைச் சேற்றையே அணையாக இட்டுத் தடுத்து வெளியே இறைத்துவிட்டும், மேன்மேலும் விழுந்து கொண்டிருக்கும் நீரைத் தரையிலே விழவொட்டாமல் பற்பல ஏனங்களிலே ஏந்தியும், தம்முடைய காரியமானது முழுவதும் நிறைவேறும்வரை, அந்த வீட்டுக்காரனுக்குச் சிலர் துணையாயிருப்பார்கள்.

கட்டுக் கோப்பற்ற பழைய கூரைவீட்டை முதலிலேயே செப்பஞ்செய்து உதவாமல் தம் காரியம் முடியும் வரை, ஒழுக்குக் காலத்து உதவி செய்பவர், அவனுடைய துன்பத்தை நீக்கும் உளங்கலந்த நட்பினர் ஆகார். அது பற்றி அத்தகையோரின் நட்புப் பொருந்தா நட்பு என்பது கூறப்பட்டது.

**232. சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்,**
**மாரிபோன் மாண்ட பயத்ததாம்;- மாரி**
**வறந்தக்காற் போலுமே, வாலருவி நாட!**
**சிறந்தக்காற் சீரிலார் நட்பு.**

வெண்மையான அருவிகள் பலவற்றையுடைய நாட்டிற்கு உரியவனே! சீர்மையான பண்பு உடையவர்களுடைய நட்பானது, மேம்பாடுடைய சிறப்பினதாக மழை வளத்தைப் போல மாட்சிமைப்பட்ட பயனை உடையதாகும். ஆனால், நீர்மை இல்லாதவர்களுடைய நட்பு மிகுதியாகுமானால், அது மழை வறண்டுபோன கோடை காலத்தைப் போன்று பயனற்றதாகவும் துன்பம் தருவதாகவுமே விளங்கும்.

இதனால், சீர்மை இல்லாதவருடன் நட்புக் கொள்வது பொருந்தா நட்பு என்பது கூறப்பட்டது. சீர்மை - சிறந்த குணம்.

**233. நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை**
**விண்ணுலகே ஒக்கும் விழைவிற்றால்; - நுண்ணூல்**
**உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்**
**புணர்தல் நிரயத்துள் ஒன்று.**

நுட்பமான அறிவுடையவர்களுடனே சேர்ந்து, அவர்களுடைய அறிவுப்பயனை அநுபவிக்கும் தன்மையானது விண்ணுலக இன்பத்தையே ஒத்ததாக விரும்பப்படும் தன்மையினை உடையதாகும். நுட்பமான நூல்களை அறிந்த அறிவினை இல்லாதவர்கள் ஆகிய பயனற்றவர்களோடு நட்புக் கொள்ளுதல் நரகத் துன்பங்களுள் ஒன்றாகவே இருக்கும்.

இதனால், 'நுண்ணூல் உணர்வில்லாதவரோடு கொள்ளும் கேண்மை' கூடா நட்பு என்பது கூறப்பட்டது.

234. பெருகுவது போலத் தோன்றி, வைத் தீப்போல்
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும், - அருகெல்லாம்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட!
பந்தம் இலாளர் தொடர்பு.

அருகாமையான இடங்களிலே எல்லாம், உயர்ந்த சந்தன மரச்சோலைகளை உடைய, மலைச்சாரல்கள் மிகுந்த நாட்டிற்கு உரியவனே! உள்ளத்திலே நட்பென்னும் பிணிப்பு இல்லாதவர்களுடைய தொடர்பானது, வைக்கோலிற் பற்றிய நெருப்பைப் போல, முதலிலே பெருகுவதுபோலத் தோன்றினாலும், ஒருபோதும் பயன்படாமல், இறுதியில் தானாகவே கெட்டுவிடும்.

உள்ளப் பிணிப்புக் கொள்ளாதவர் தொடர்பு கூடா நட்பு என்பது கூறப்பட்டது. நந்தும் - கெடும். வை - வைக்கோல்.

235. 'செய்யாத செய்தும் நாம்' என்றலும், செய்வதனைச்
செய்யாது தாழ்த்துக்கொண்டு ஓட்டலும். - மெய்யாக
இன்புறூஉம் பெற்றி இகழ்ந்தார்க்கும், அந்நிலையே
துன்புறூஉம் பெற்றி தரும்.

தம்மால் செய்ய இயலாத காரியங்களைத் தாம் செய்து விடுவோம் என்று சொல்லுதலும், தம்மாற் செய்யக் கூடியவற்றைக் காலத்தாற் செய்யாது காலந்தாழ்த்திக் கொண்டு வீண்பொழுதாகக் கழித்தலும் ஆகிய இவ்விரண்டும், உண்மையாக உலக இன்பங்களை அனுபவிக்கும் தன்மைகளை வெறுத்த துறவு வாழ்வினர்க்குங்கூட, அந்த அளவானே துன்பந்தருகின்ற தன்மையையே கொடுப்பனவாம்.

'செய்யக் கூடாததைச் செய்வோம் என்று கூறுபவர் ஆசை காட்டி மோசம் செய்வர்; செய்யக் கூடியதை உரிய காலத்துச் செய்யாதவர் உண்மை அன்பினராகார்; இத்தகையோர் தொடர்பு கூடாது' என்பது கருத்து.

236. ஒருநீர்ப் பிறந்தொருங்கு நீண்டக் கடைத்தும்,
விரிநீர்க் குவளையை ஆம்பல்ஒக் கல்லா;
பெருநீரார் கேண்மை கொளினும், நீரல்லார்
கருமங்கள் வேறு படும்.

*ஒரே தண்ணீரிற்றானே பிறந்து, ஒன்றாகவே வளர்ச்சி அடைந்த காலத்துங்கூட, மலர்ந்து விளங்கி மணங்கமழுகின்ற நீலோற்பல மலர்களை ஆம்பல் மலர்கள் ஒருபோதும் ஒப்பாவதில்லை. அதுபோலவே, மிகுதியான நற்குணம் உள்ளவர்களுடைய நட்பைப் பெற்றிருந்தாலும், குணம் அற்றவர்களுடைய செயல்கள், எப்போதும் வேறுபட்டவை களாகவே விளங்கும்.*

*"குணவான்களோடு கூடியிருக்கிறாரே" என்று நினைத்துங் "குணமற்றவரை நட்பினராகக் கொண்டு விடக்கூடாது" என்பது கருத்து.*

237. முற்றற் சிறுமந்தி முற்பட்ட தந்தையை
நெற்றுக்கண் டன்ன விரலான் ஞெமிர்த்திட்டுக்
குற்றிப் பறிக்கும் மலைநாட! இன்னாதே
ஒற்றுமை கொள்ளாதார் நட்பு.

*பருவ முதிர்ச்சி அடையாத சின்னஞ் சிறு பெண் குரங்கு, தனக்கு முன்னரே செயலில் ஈடுபட்டுள்ள தன் தந்தையைப், பயற்ற நெற்றைக் கண்டாற்போல விளங்கும் தன் கைவிரல்களால் அப்பாலே தள்ளிவிட்டுத், தான் குற்றியைப் பெயர்த்து எடுத்துக் கொண்டிருக்கும் படியான, மலைகளை உடைய நாட்டின் தலைவனே! மனத்தால் ஒன்றுபட்டு ஒற்றுமை கொள்ளாதவர் களுடைய நட்பானது என்றும் துன்பத்தையே தருவதாகும்.*

*'மன ஒற்றுமை கொள்ளாதார் நட்பு கூடாநட்பு' என்பது கூறப்பட்டது.*

238. முட்டுற்ற போழ்தின் முடுகி; என் ஆருயிரை
நட்டான் ஒருவன்கை நீட்டேனேல் - நட்டான்
கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க!
நெடுமொழி வையம் நக!

*என்னுடைய நண்பன் ஒருவன் முட்டுப்பாடு அடைந்த பொழுதிலே, விரைந்து என் அருமையான உயிரையும், அந்த நட்புச் செய்த அவனுக்காகத் தந்து உதவாமற் போனேனாயின், மிகுந்த பேர்பெற்ற உலகத்திலுள்ளோர் எல்லாரும்*

*நகையாடும்படியாக, 'நண்பனின் பாதுகாவலிலுள்ள அவன் மனையாளைக் கற்பழித்தவன் செல்லும் கொடிய தீக்கதியிலே' யானும் செல்வேனாக.*

**239. ஆன்படு நெய்பெய் கலனுள் அதுகளைந்து,**
**வேம்படு நெய்பெய் தனைத்தரோ - தேம்படு**
**நல்வரை நாட! நயமுணர்வார் நண்பொரீஇப்,**
**புல்லறிவி னாரொடு நட்பு.**

*மனை-மனைவி. கட்டு-கற்பாகிய உறுதி. நண்பனுக்கு ஆபத்தில் உதவாதவன் தீக்கதி சேர்வான் என்பதைக் கூறி, அத்தகையோர் நட்புக் 'கூடா நட்பு' என்பது சொல்லப் பட்டது.*

*தேன் கூடுகள் மலிந்த நல்ல வளம்பொருந்திய மலைகளையுடைய நாட்டின் தலைவனே! நட்பினால் வரும் நன்மையை அறிகிற தன்மை உடையவர்களது தொடர்பைக் கைவிட்டு, அற்பமான புத்தியை உடையவர்களோடு கொள்ளும் நட்பானது, பசுவினிடம் உண்டாகிற நெய்யினைப் பெய்து வைத்துள்ள பாத்திரத்தினுள், அந்த நெய்யைக் கொட்டி விட்டு வேம்பைச் சேர்ந்த நெய்யாகிய வேப்ப எண்ணெயைப் பெய்துவைப்பது போல்வதாகும்.*

*'நல்ல நெய்யை இழந்து, கசக்கும் வேப்ப எண்ணெயைக் கொள்வது போன்றது என்று கூறிப் புல்லறிவினாரோடு கொள்ளும் நட்புக் கூடா நட்பு' என்பது வற்புறுத்தப்பட்டது.*

**240. உருவிற்கு அமைந்தான்கண் ஊராண்மை இன்னா,**
**பருகற்கு அமைந்தபால் நீர்அளா யற்றே;**
**தெரிவுடையார் தீயினத்தார் ஆகுதல், நாகம்**
**விரிபெடையோ டாடி, விட் டற்று.**

*பெருமைக்குரிய சிலபல நற்குணங்களை உடையவனாகிய ஒருவனிடத்திலே, ஊராருக்கு உதவுகிற இயல்பு இல்லாமல் இருத்தல் பருகுவதற்கு என்று அமைந்த பாலிலே நீர் கலந்திருப்பதுபோல ஆகும். அறிவு உடையவரும் கொடியவர் களோடு சேர்ந்தவர்களாகி விடுவது, நாகப் பாம்பானது பெட்டை விரியன் பாம்போடு கலந்து உயிர் நீங்கினாற் போன்றதாகும்.*

*'நாகம் விரிபெடையொடு சேர்ந்தால் சாகும்' என்பார்கள். அதுபோலவே, நல்லவரும் தீயோருடன் சேர்ந்தால் கெடுவர் என்பது கூறித் தீயோருடன் நட்புக் கொள்வது கூடா நட்பு' என்பது சொல்லப்பட்டது.*

# 3. இன்ப இயல்

புலன்கள் தாமே உணர்வு உடையன அன்று. அவற்றான் விளையும் பயன்களை எல்லாம் இன்பமாகவும் துன்பமாகவும் கருதி உணருகின்ற தன்மை, மனத்திற்கே உள்ளதாகும்.

‘இன்பம்’, இவ்வாறு மனத்தினாலேயே உணரப்படும் ஒன்றாதலால் இன்பத்தினை உண்மையாக உணர்ந்து பயன் பெறுவதற்கு மனத்தின் செப்பமும் தெளிவும் இன்றியமையாததாகும்.

‘மனம் புலன்களின் கிளர்ச்சிகளுக்குத்தான் உட்பட்டு, அறியாமை வசத்ததாக விளங்குமானால், தீயனவும் நல்லனவாக உணரப்படுதலும், துயர்தருவனவும் இன்பந்தருவனவாகப் பிழைபட அறியப்படுதலும் கூடும். இதனால், இன்பத்தின் தன்மையை உள்ளபடி அறிவதற்குத் தக்க வகையிலே ஒவ்வொருவரும், தத்தம் மனத்தைத் தகுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்’ என்பது தெளிவாகும்.

அந்த முறையிலே, உள்ளத்தினை இன்ப நெறிகளில் மட்டுமே செலுத்துகின்ற திட்பம் உடையதாகச் செய்வது பற்றிக் கூறும் பகுதி இதுவாகும்.

## 25. அறிவுடைமை

அறிவு உடைமையாவது இயல்பான நுண்ணறிவு உடைமையும், கல்வி கேள்விகளின் பயனாகப் பெற்ற செப்பமும் தெளிவும் ஆகும். இன்னவரின் உறவு நன்மை விளைப்பது, இன்னவரின் உறவு தீமை பயப்பது எனவும், இன்ன செயல் நன்மை தருவது, இன்ன செயல் தீமை தருவது எனவும் நல்லன தீயனவற்றின் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து இன்பந்தரும் நெறிகளிலே மனத்தைச் செலுத்துவதே உண்மையான அறிவுடைமை ஆகும்.

ஆகவே, அறிவு என்பது, காரிய காரணங்களின் உண்மைகளைப் பகுத்து அறிந்து கொள்ளுகின்ற தன்மை என்று கொள்க. இயற்கை அறிவெனவும், செயற்கை அறிவு எனவும் அறிவு இருவகையாகக் கூறப்படும்.

இயற்கை அறிவு, இயல்பாகவே ஒவ்வொருவரிடமும் அமைந்தது; செயற்கை அறிவோ அங்ஙனமன்றி ஒவ்வொரு

வரும் தத்தம் முயற்சியினால், கண்டும் கேட்டும் கற்றும் ஈட்டிக்கொள்வது. இவற்றின் சிறப்பினை இனிக் காணலாம்.

**241. பகைவர் பணிவிடம் நோக்கித் தகவுடையார்**
**தாமேயும் நாணித் தலைச்செல்லார்; -காணாய்;**
**இளம்பிறை ஆயக்கால் திங்களைச் சேராது,**
**அணங்கருத் துப்பின் அரா.**

பகைவராயுள்ளவர், தம் வலியழிந்து பணிந்துவிடுகின்ற தளர்ந்த இடத்தை ஆராய்ந்து பார்த்துத் தகுதி உள்ளவர்கள், அவர்கள்மேல் படைகொண்டு செல்லுதலுக்குத் தாமே வெட்கப்பட்டவர்களாக, அவர்களை வெல்வதற்குப் போகமாட்டார்கள். பார்வையிலேயே வெல்லும் அரிய வலிமையினையுடைய பாம்பும், முழுநிலவாக அல்லாமல், இளம்பிறையாக ஆயின காலத்திலே, திங்களை வருத்துவதற்குச் சேராது; இதனை அறிவாயாக.

'பகைவனானாலும், அவன் தளர்ந்திருக்குங் காலத்து அவனை அழித்தல் அறிவுடையவர் செயல் அன்று' என்பது கருத்து.

**242. நளிகடல் தண்சேர்ப்ப! நல்கூர்ந்த மக்கட்கு**
**அணிகலம் ஆவது அடக்கம்; பணிவில்சீர்**
**மாத்திரை இன்றி நடக்குமேல், வாழுமூர்**
**கோத்திரங் கூறப் படும்.**

பெரிய கடலினது குளிர்ச்சி பொருந்திய கரைகளை உடைய நாட்டின் தலைவனே! வறுமைப்பட்ட மக்களுக்கு எல்லாம் ஆபரணமாக விளங்குவது, அடக்கமுடன் இருத்தலே யாகும். அடக்கம் இல்லாத தன்மையுடனே, தன் எல்லைகடந்து அவர் நடப்பாரானால், அவர் வாழ்கின்ற ஊரிலே அவர்களுடைய குடும்பமே இழித்துப் பேசப்படுவதாகிவிடும்.

வறுமைக்கண், அடக்கமுடன் இருப்பதுதான் அறிவு உடைமை என்பது கருத்து.

**243. எந்நிலத்து வித்திடினும், காஞ்சிரங்காய் தெங்காகா;**
**தென்னாட் டவரும் சுவர்க்கம் புகுதலால்,**
**தன்னாற்றான் ஆகும் மறுமை; வடதிசையும்;**
**கொன்னாளர் சாலப் பலர்.**

எந்த நிலத்திலே விதையை விதைத்தாலும், எட்டி விதையானது தென்னை மரமாக ஒருபோதும் வளரவே

மாட்டாது. தென்திசை நாட்டவர்களும் சுவர்க்கலோகம் செல்வதனால், தத்தம் செயலாலேயே மறுமை இன்பம் என்பதும் உள்ளதாகும். வடதிசை நாட்டினுள்ளும், அந்த மறுமை இன்பத்திற்காவன செய்து ஒழுகாது வீண்காலம் கழிப்பவர்கள் பலராவர்.

'வடதிசை உடையவரே சுவர்க்கம் புகுவர்; தென் திசையார் எத்திறத்தானும் புகமாட்டார்' எனக் கூறிய சில மதவாதிகளை மறுத்து, முனிவர் உரைத்தது இது. அவரவர் ஒழுக்கமே மறுமை இன்பம் தருவது என்பது கருத்து. அவ்வொழுக்கம் அறிவுடைமையினாலேதான் அமைவது என்பதும் அறிக.

**244. வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்**
**தீஞ்சுவை யாதும் திரியாதாம்;-ஆங்கே,**
**இனந்தீது எனினும், இயல்புடையார் கேண்மை**
**மனந்தீதாம் பக்கம் அரிது.**

வேம்பின் இலைகளுக்கு ஊடாகவே இருந்து தான் கனிந்து பழுத்தாலும், வாழைப்பழமானது தன்னுடைய இனிய சுவையினின்றும் எள்ளளவும் மாறுபடாது. அப்படியே தாம் சேர்ந்த கூட்டம் தீயதானாலும், நல்ல பண்பு உடையவர்களுடைய நட்பானது, அதனால் மனங்கொடியதாகிப் போய்விடும் தன்மை உடையதாதல் அரிதாகும்.

வேப்பந் தழைகளை இட்டு, அதனிடையே வாழைக் காய்களை வைத்துப் பழுக்கச் செய்வது உலக வழக்கம். அதனால் வாழையின் கனிச்சுவை கெடாது. அது போலவே, அறிவுடையார், தீயவர் கூட்டத்திடைச் சில சமயம் சேர நேர்ந்தாலும் மனத்தின் பண்பு கெட்டவர்களாக ஆகமாட்டார்கள் என்பது கருத்து.

**245. கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கும்; மலைசார்ந்தும்**
**உப்பீண்டு உவரி பிறத்தலால், தத்தம்**
**இனத்தனையர் அல்லர், எறிகடல் தண்சேர்ப்ப!**
**மனத்தனையர் மக்கள்என் பார்.**

கடற்கரையைச் சார்ந்திருக்கும் இடமாயிருந்தாலும், அவ்விடத்தும் இனிமையான நீர் உண்டாகும். மலைப் பகுதியைச் சார்ந்திருக்கும் இடமாயிருந்தாலும், அவ்விடத்தும் உப்பு நிறைந்த உவர்நீர் உண்டாதலும் உண்டு. அதனால், அலைமோதுகின்ற கடலின் குளிர்ச்சியான கரையை

உடையவனே! மக்கள் என்பவர்களும் தத்தம் இனத்தைப் போன்றவர்கள் அல்லர்; தத்தம் மனத்தை ஒத்தவர்களே யாவர் என்றறிவாயாக.

'நீர், தான் கொண்டிருக்கும் தன்மையைப் பொறுத்தே கொள்ளப்படுவதன்றிச் சார்ந்திருக்கும் இடத்தைப் பொறுத்துக் கொள்ளப்படுவதன்று. அதுபோலவே, மக்களும் அவரவர் மனத்துச் செப்பத்தைக் கருதி மதிக்கத் தக்கவர்களே யல்லாமல், அவரவர் சார்ந்திருக்கும் இனத்தைக் கருதி மதிக்கத்தக்கவரல்லர்' என்பது கருத்து.

**246. பராஅரைப் புன்னைப் படுகடல் தண்சேர்ப்ப!**
**ஒராஅலும் ஒட்டலும் செய்பவோ, நல்ல**
**மரூஉச்செய்தி யார்மாட்டும் தங்கும் மனத்தார்**
**விராஅஅய்ச் செய்யாமை நன்று.**

பருத்த அடியினையுடைய புன்னை மரங்கள் சேர்ந்திருக்கின்ற, குளிர்ச்சியான கடற்கரைச் சோலைகளை உடைய நாட்டின் தலைவனே! உறுதி உடையவர்களாக ஒரு நிலையிலேயே நிலைபெற்று நிற்கும் உள்ளத்திண்மையினை உடையவர்கள், நன்மைகள் சேர்ந்திருக்கின்ற செய்கையை உடையவரான எவரிடத்திலும், நீங்குவதும் சேர்வதும் ஆகிய செயலைச் செய்வார்களோ? இப்படிச் செய்வதனைக் காட்டினும், ஒருவரோடும் நட்புச் செய்யாமல் இருப்பதே நல்ல அறிவுடைமையாகும்.

'நல்லவரோடு சேர்ந்தபின் பிரிவது அறிவுடைமை யாகாது; அப்படிச் சேர்ந்து பிரிவதைவிடச் சேராமல் இருப்பதே நல்லது' என்பது கருத்து.

**247. உணர உணரும் உணர்வுடை யாரைப்**
**புணரப், புணருமாம் இன்பம்; -புணரின்,**
**தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்**
**பிரியப் பிரியுமாம் நோய்.**

நன்மை தீமைகளைப் பகுத்து அறிவதற்குரிய அறிவு உடையவர்களைச் சேர்தலால், அப்படிச் சேர்பவர்களுக்குப் பலவகையான இன்பங்களும் வந்து சேர்வனவாகும். நன்மை தீமைகளைப் பகுத்தறிய வல்ல அறிவில்லாதவர்களைத் தெரியாமல் சேர்ந்துவிட்டால், அவரை விட்டு நீங்கின மாத்திரத்தாலேயே, அவரால் உற்ற துன்பங்களும் நம்மை விட்டு நீங்கிவிடும்.

*'அறிவுடையவரைச் சேர்வதால் இன்பமும், அறிவற்றவரைச் சேர்வதால் துன்பமும் நேரும்' என்பது கருத்து.*

**248. நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும், தன்னை**
**நிலைகலக்கிக் கீழிடு வானும், நிலையினும்**
**மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்**
**தலையாகச் செய்வானும் தான்.**

*நல்ல நிலையிலே கொண்டு தன்னை வைக்கின்றவனும், தன்னைத் தன் நிலையினின்றும் கலங்கச் செய்து கீழ் நிலைக்குக் கொண்டு போகின்றவனும், இருக்கின்ற நிலையைக் காட்டினும் மென்மேலும் தன்னை உயர்த்தி வைக்கின்றவனும், தன்னைத் தலைமையாளனாகச் செய்கின்றவனும் எல்லாம் தானேயாவன்.*

*'அவனவன் அறிவுடைமையே ஒருவனுக்கு உயர்வும் தாழ்வும் தருவது; அது பிறரான் வருவதன்று' என்பது கருத்து.*

**249. கரும வரிசையால், கல்லாதார் பின்னும்**
**பெருமை உடையாரும் சேறல், - அருமரபின்**
**ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப!**
**பேதைமை அன்று; அது அறிவு.**

*அருமையான மரபினையுடைய அலைகள் ஒலி முழங்கிக் கொண்டிருக்கும் கடலினது குளிர்ந்த கரையினையுடைய நாட்டின் தலைவனே! செயல்களின் முறைமையினாலே, படியாத மூடர்களது பின்னாலும் கற்ற பெருமை உடையவர்களும் சென்று சேர்ந்திருப்பது, அவருடைய பேதைமை அன்று; அதுவே அறிவுடைமை என்று அறிவாயாக.*

*குறித்த செயல் காரணமாக, 'அறிவற்றவர்பின் அறிவுடையோர் செல்வதும் அறிவுடைமையே' என்பது கருத்து.*

**250. கருமமும் உள்படாப், போகமும் துவ்வாத்,**
**தருமமும் தக்கார்க்கே செய்யா,-ஒருநிலையே**
**முட்டின்றி மூன்றும் முடியுமேல், அஃதென்ப,**
**'பட்டினம் பெற்ற கலம்'.**

*அறம் பொருள்களுக்குக் காரணமான செயல்களையும் கடன்பட்டுச் செய்து, அவற்றால் வருவனவாகும் இவ்வுலக இன்பங்களையும் துய்த்துத் தகுதியுடையவர்களுக்கே தருமங்களையும் செய்து, இம் மூன்றும் ஒரு பிறப்பிலேயே தடையின்றி முடியுமானால், அதுதான் பட்டினத்தை வந்து அடைந்த மரக்கலம்போலச் சிறப்பு உடையதாகும்.*

'மரக்கலம் ஒரு துறையினின்றும் புறப்பட்டுப் பல விடங்களினும் சென்று வாணிகம் செய்து ஈட்டிய பொருள்களுடன் மீண்டும் கரை வந்து சேர்வது போல, அவன் வாழ்வும் கடைத்தேறியது' என்பது கருத்து.

## 26. அறிவு இன்மை

அறிவு உடைமையே மனிதனுக்குச் சிறந்த நல்வாழ்வைத் தருவதாகும் என்பது பற்றிய செய்திகளை முன்பகுதியிலே நாம் பார்த்தோம். ஆகவே, அறிவின்மை பற்பல கேடுகளுக்குக் காரணமாகும் என்பதும் சொல்லாமலே உணரப்படும். எனினும், அறிவின் சிறப்பினை நன்கு கூறும் வகையால், முதலில் உடன்பாடாகக் கூறப்பட்ட உண்மைகளே, இப்போது எதிர்மறையாகவும் கூறப்படுகின்றன.

'அறிவின்மை' என்பது இயற்கையான நுண்ணறிவு இல்லாத தன்மையையும் குறிக்கும்.

காரிய காரணங்களைப் பகுத்தறியும் தெளிவு இல்லாத காரணத்தால் இம்மை இன்பங்களை எல்லாம் பெற முடியாதவனாகி விடுவதுடன் மறுமை இன்பத்தையும் இழந்துவிடுபவன் ஆவான் ஒருவன் என்று அறிதல் வேண்டும்.

251. **நுண்ணுணர்வு இன்மை வறுமை; அஃதுடைமை**
**பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்; -எண்ணுங்கால்**
**பெண்ணவாய், ஆணிழந்த பேடி அணியாளோ,**
**கண்ணவாத் தக்க கலம்?**

நுட்பமான அறிவுத்திறன் இல்லாமல் இருப்பதுதான், ஒருவனுக்கு வறுமை என்று கூறப்படுவதாகும். அந்த அறிவை உடைமையோ, மிகவும் வளர்ச்சி பெற்ற பெருஞ்செல்வமாகும். எண்ணிப் பார்ப்போமானால், பெண் தன்மையை விரும்பி, ஆண் தன்மையை இழந்து விட்ட பேடியானவள், கண்கள் விரும்பும்படியான கவர்ச்சி மிக்க ஆபரணங்களை அணியமாட்டாளோ?

அறிவுதான் சிறந்த செல்வம்; அஃதற்றோர் செல்வம் எல்லாம் பேடியின் புனைவுகள் பெண்மையாகத் தோன்றினும் பெண்மையாகாதது போலச், செல்வம் போலத் தோன்றினும் செல்வம் ஆகாது என்று அறிதல் வேண்டும்.

252. பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்து,
அல்லல் உழப்பது அறிதிரேல்,-தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற், சேராளே,
பூவின் கிழத்தி புலந்து.

பல்வேறு வகைப்பட்ட நூற் கேள்விகளினால் வாழ்வின் உண்மைப் பயனை உணர்ந்தவர்களுங்கூடத் தம் தகுதி அழிந்து, செல்வம் இல்லாததன் காரணமாகப் பற்பல துன்பங்களுக்கும் உட்பட்டு உழலுகின்றனர். இதன் காரணத்தை ஆராய்ந்தறிய விரும்புவீர்களானால் சொல்வேன் கேளுங்கள்; பழமையான சிறப்பினையுடைய நாவின் கிழத்தியான கலைமகள் அவர்களிடம் கூடி வசிப்பதனால், பூவின் கிழத்தியான திருமகள் பிணக்கங் கொண்டு, அவர்களிடம் சேரமாட்டாள் என்று அறிவீர்களாக.

கலைமகளுக்குத் தொல்சிறப்புக் கூறியது, 'ஒருமைக் கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்புடைத்து' என்பது பற்றி. அதன் பயன் பிற்பிறவிகளிலும் தொடர்ந்து வரும் என்பர். கிழத்தி - உரிமையுடையவள். கல்விச் சுவையிலே தேர்ந்தவர்க்குப் பொருட்பற்றில் மனம் ஈடுபடாமைபற்றி இப்படிக் கூறினார். திருமகள் மாமியும், கலைமகள் மருமகளுமாகப் புராணங் கூறுவதால் அவர்கள் ஒன்றுபட்டு வாழார் என்ற உவமையைக் கூறிக் கருத்து விளக்கப்பட்டது.

253. கல்லென்று தந்தை கழற, அதனையோர்
சொல்லென்று கொள்ளாது இகழ்ந்தவன், மெல்ல
எழுத்தோலை பல்லார்முன் நீட்ட, விளியா,
வழுக்கோலைக் கொண்டு விடும்.

தந்தை, 'படி! படி!' என்று சொல்ல, அப்படித் தந்தை சொல்லும் சொல்லைத் தன் வாழ்வுக்கு உறுதியைத் தருகின்ற ஒப்பற்ற சொல்லென்று கொள்ளாமல், தன் இளமைப் பருவத்திலே இகழ்ச்சியாகக் கருதிக் கைவிட்டவன், பலருக்கும் எதிரில், 'எழுத்தைக் கொண்டிருக்கும் ஓலையைப் படிப்பாயாக' என்று மெதுவாக ஒருவர் நீட்டிய காலத்திலே, உயிரிழந்தவனைப்போல ஆகி, அங்கிருந்து தப்பிப் போய் விடும்படியான நிலைமையினைக் கொண்டுவிடுவான்.

'அறிவின்மை உடையவன் பலர் கூடிய அவையின் கண் இவ்வாறு அவமதிப்பு அடைய நேரும்' என்பது கருத்து. விளிதல்-சாதல், வழுக்கோலை-தப்பிப் போகும் படியான நிலையை.

254. கல்லாது நீண்ட ஒருவன், உலகத்து,
நல்லறி வாளர் இடைப்புக்கு - மெல்ல
இருப்பினும், நாயிருந் தற்றே; இராஅது
உரைப்பினும், நாய்குரைத் தற்று.

*கல்வி கற்காமல் வளர்ந்துவிட்ட ஒருவன், உலகத்திலே, நல்ல அறிவுடையவர்கள் இடையிலே புகுந்து அவர் அறியாமலும், தான் ஏதும் வாய் திறவாமலும் மெல்லென இருந்தாலும், அது 'ஆன்றோர் சபையிலே நாயொன்று சென்று இருந்ததைப் போன்றதே' யாகும். அப்படிப் பேசாதிராது அவன் ஏதாவது சொன்னாலும் அது, 'அந்த நாய் குரைத்ததைப் போன்றதே ' யாகும்.*

*'சபை நடுவே நாய் புகுந்தாலும், அது குரைத்தாலும் அதனை எவரும் மதியாது துரத்தவே முற்படுவதுபோல, அவனையும் எவரும் புறக்கணித்து ஒதுக்கவே முயல்வர்' என்பது கருத்தாகும்.*

255. புல்லாப்புன் கோட்டிப் புலவர் இடைப்புக்குக்
கல்லாத சொல்லும், கடைஎல்லாம்; கற்ற
கடாஅயினும் சான்றவர் சொல்லார், பொருள்மேல்
படாஅ விடுபாக்கு அறிந்து.

*கீழ்மக்கள் எல்லாரும், முறையோடு கற்றறியாத போலிப் புலவர்களின் இடையிலே புகுந்து, தாம் கற்றறியாத செய்திகளைப் பற்றியும் அஞ்சாது பேசுவார்கள். கல்வி கேள்விகளினால் சிறந்த சான்றோர்களோ, தாம் கற்றறிந்த வற்றையும் கூடச் சொல்லும்படி பிறர் கேட்டாலும், அப்படிக் கேட்பவரின் அறிவானது தாம் சொல்லும் அரிய பொருளின் மேல் முழுவதும் செல்லாமல் விடுபட்டுப் போவதைத் தெரிந்து கொண்டவர்களாக, ஏதும் சொல்லாமலேயே இருப்பார்கள்.*

*புலவர்; இகழ்ச்சிக் குறிப்பு. 'அறிவுடையோர் கேட்கும் தகுதி உடையவர்க்கு மட்டுமே சிறந்த பொருள்களை உரைப்பார்கள்; கீழ்த்தரமான அறிவினரோ எதனையும் அறிந்தவர்போல் எங்கும் அடக்கமின்றிப் பேசத் தொடங்கிவிடுவர்' என்பது கருத்து.*

256. கற்றறிந்த நாவினார் சொல்லார், தம் சோர்வஞ்சி
மற்றையர் ஆவார் பகர்வர், பனையின்மேல்
வற்றிய வோலை கலகலக்கும்; எஞ்ஞான்றும்
பச்சோலைக்கு இல்லை, ஒலி.

நூற்களைக் கற்று, உண்மைப் பொருள்களைத் தெளிவாக அறிந்த புலவர்கள், தம் சொற்களிலே ஏற்பட்டுவிடுகிற சோர்வுக்குப் பயந்து கண்டபடி பேச மாட்டார்கள். மற்றைய சிற்றறிவினரோ, அதற்கு அஞ்சாமல் கண்டவிடமெல்லாம் சொல்லுவார்கள். இவை எவை போல என்றால், பனை மரத்தின் மேலுள்ள உலர்ந்த ஓலை கலகலவென ஒலிப்பதையும் பசுமையான ஓலைக்கு அத்தகைய ஒலி செய்யும் குணம் இல்லாமையும் போல என்க.

'ஈரமற்ற ஓலை ஒலித்தல்போல, அறிவற்றோர் பிதற்றுவர்; பசுமையுள்ள ஓலை ஒலிக்காததுபோல அறிவுள்ளோர் அடக்கமாக இருப்பர்' என்பது கருத்து.

**257. பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்றால்**
**நன்றறியா மாந்தர்க்கு அறத்தாறு உரைக்குங்கால்;**
**குன்றின்மேற் கொட்டுந் தறிபோல் தலை தகர்ந்து**
**சென்றிசையா ஆகும், செவிக்கு.**

நன்மை எதுவென அறிந்துணராத மனிதர்க்குத் தருமத்தின் வழியானது இப்படிப்பட்டது என்று சொல்லுங்காலத்திலே, பன்றிக்குக் கூழ்வார்க்கும் தொட்டியிலே மதுரமான மாங்கனியைச் சாறுபிழிந்து விடுவது போன்றதாகவே அது முடியும். மலையின் மேல் அடிக்கிற கட்டுத் தறியினைப்போல, அத் தருமநெறிகள், தம் தலை சிதைந்து, அவர்களின் காதுக்குச் சென்று கேளாதவைகளாகவும் போய்விடும்.

'அறிவின்மை உடையவர்களுக்கு அறம் உரைப்பது வீண்' என்பது கருத்து. தகர்ந்து-சிதறி. மலையிலே அடிக்கும் கட்டுத்தறியாகிய முளை, தன் தலை சிதறுமேயல்லாமல், மலையினுள் புகுவதில்லை. அதுபோலவே மூடனுக்குச் செய்யும் தரும உபதேசமும் அவனுள்ளத்தில் பதியாமற் போய்விடும்.

**258. பாலாற் கழீஇப், பலநாள் உணக்கினும்,**
**வாலிதாம் பக்கம் இருந்தைக்கு இருந்தன்று;**
**கோலாற் கடாஅய்க் குறினும், புகல் ஒல்லா,**
**நோலா உடம்பிற்கு அறிவு.**

நாள்தோறும் வெண்மையான பாலினாலே கழுவிப் பல நாட்கள் உலர்த்தி வைத்தாலும், இயல்பாகக் கருநிறமுடைய கரிக்கு, வெண்ணிறத்தை உடையதான ஒரு தன்மை ஒருபோதும் உண்டாகவே மாட்டாது. கோல் கொண்டு அடித்து அதட்டிச்

சொன்னாலும், முற்பிறப்பிலே புண்ணியம் செய்யாத உயிரையுடைய ஓர் உடம்பிற்குள் அறிவானது ஒரு போதும் நுழையவே மாட்டாது.

'அறிவுரைகள் பூர்வபுண்ணியம் அற்றவர்களின் உள்ளங்களிலே என்றும் நுழைவதில்லை' என்பது கருத்து. இருந்தைக்கு-கரிக்கு. குறினும்-அடிப்பினும். நோலா-நோற்றல் இல்லாத. உடம்பிற்கு-உடம்பை உடைய உயிருக்கு.

**259. பொழிந்தினிது நாறினும், பூமிசைதல் செல்லாது,**
**இழிந்தவை காமுறூஉம் ஈப்போல-இழிந்தவை**
**தாங்கலந்த நெஞ்சினார்க்கு என்னாகும், தக்கார்வாய்த்**
**தேன்கலந்த தேற்றச்சொற் றேர்வு?**

தேனைச் சொரிந்து, இனிமையாக நறுமணம் வீசினாலும், அப்பூவிலுள்ள தேனை உண்ணுவதற்குப் போகாமல் இழிவான பொருள்களையே விரும்பிச் செல்லுகின்ற தன்மையினை யுடைய ஈயைப்போல, இழிவானவைகளே பொருந்தின மனமுள்ளவர்களுக்குத், தகுதியுடையவர் வாயினின்று வெளிப்படும் தேனின் தன்மை பொருந்திய தெளிவுண்டாக்கும் அறவுரைகளின் தெளி வெல்லாம் என்ன பயனைத் தரும்? ஏதும் பயன் தருவதில்லை என்பது முடிவு.

'அறிவற்றோரின் மனம் நல்லோர் அறவுரைகளில் ஈடுபடாது கீழானவற்றினையே நாடிச் செல்லும்' என்பது கருத்து.

**260. கற்றார் உரைக்கும் கசடறு நுண்கேள்வி**
**பற்றாது தன்னெஞ்சு உதைத்தலான்-மற்றுமோர்**
**தன்போல் ஒருவன் முகம்நோக்கித், தானுமோர்**
**புன்கோட்டி கொள்ளுமாம் கீழ்.**

கற்றறிந்த சான்றோர்கள் சொல்லுகின்ற, குற்றமற்ற நுண்மையான நூற்கேள்விகளைத் தனக்கு உறுதியாகப் பற்றிக் கொள்ளாமல், தன்னுடைய உள்ளமானது அவற்றை இகழ்ந்து தள்ளி விடுதலால், கீழ்மகனாவன், தன்னைப் போன்ற மற்றொரு கீழ்மகனுடைய முகத்தைப் பார்த்துத் தானும் ஓர் அற்பமான பேச்சை நிகழ்த்தத் தொடங்கி விடுவான்.

'கற்றார் பேச்சைக் கேளாது, தான் கற்றவன் போலச் செருக்குற்றக் கீழ்மகன், தன்போற் கீழ்மக்களுக்குப் பிரசங்கம் செய்யவும் தொடங்கிவிடுவான்' என்பது கருத்து. கீழ்த்தரமான பிரசங்கிகளைக் குறித்துச் சொல்லியது இது.

# 27. நன்றியில் செல்வம்

செல்வத்தின் பயன் அதனை நல்ல வழிகளிலே செலவிட்டு, ஈட்டியதானும், வறுமையால் தன்னைச் சார்ந்த பிறரும், கூடி அனுபவிப்பதேயாகும். செல்வத்தினால் வருகின்ற பயனை அனுபவியாமல் அதனைச் சேர்ப்பதில் மட்டுமே ஒருவன் மனஞ் செலுத்தினான் என்றால், அவன் உண்மையில் இரங்கத் தக்கவனே யாவான்.

செல்வம் நிலையாமை உடையது என்பதை விளக்கி, அதனால் அது உள்ளபோது பலருக்கு உதவி அறம் செய்து வாழ்தல் வேண்டும் என்பது முன்னரே கூறப்பெற்றது. இந்தப் பகுதியில் உதவி செய்யாமல் சேமித்து வைக்கிற செல்வம் எவ்வாறு பயனற்ற செல்வமாகும் என்பது கூறப் பெறுகின்றது.

மேலும், நன்மையான வழிகளிலே செலவிடப்படாத செல்வம் பயனற்றது ஆவதுமட்டுமன்று, அது தீய வழிகளிலே செலவிடப்படுவதனால் தீமை தருவதாகவும் முடியும் என்பதைக் கருதவேண்டும்.

**261. அருகல தாகிப் பலபழுத்தக் கண்ணும்**
**பொரிதாள் விளவினை வாவல் குறுகா;**
**பெரிதணியர் ஆயினும், பீடிலார் செல்வம்**
**கருதுங் கடப்பாட்ட தன்று.**

பொரிந்த அரையினை உடைய விளாமரத்தினை அது மிகுதியான பழங்களை உடையதாகத் தமக்கு மிகவும் அருகாமையிலேயே இருப்பதாயினும், வௌவால்கள் சென்று ஒருபோதும் சேரமாட்டா. அது போலப், பெரிதும் அருகாமையிலேயே இருப்பவராயினும், தகுதியற்றவர்களுடைய செல்வமானது எளியவர்களுக்கு உதவும் என்று நினைக்கும் முறையினை உடையதன்று.

'விளாமரத்தின் கனி பயனற்றது என்பது கருத்தன்று; பிறருக்குப் பயன்படலாம்; ஆனால், வௌவாலுக்குப் பயன்படாது, அதுபோலப் பீடிலார் செல்வமும், எளியோர்க்குப் பயன்படாது; தீயோர்க்கே பயன்படும்' என்பது கருத்து.

**262. அள்ளிக்கொள் வன்ன குறுமுகிழ வாயினும்**
**கள்ளிமேற் கைநீட்டார், சூடும்பூ அன்மையால்;**

**செல்வம் பெரிதுடையர் ஆயினும், கீழ்களை**
**நள்ளார், அறிவுடை யார்.**

அள்ளி எடுத்துக் கொள்ளலாம் எனும்படியான சிறிய அரும்புகளை மிகுதியாக உடையனவாக இருந்தாலும் அவை சூட்டிக் கொள்ளத்தக்க மலர்கள் இல்லாமையினாலே, யாரும் கள்ளிச் செடியின் மீது அதன் பூக்களைக் கொய்வதற்குக் கைநீட்ட மாட்டார்கள். அதுபோலவே, மிகுதியான செல்வத்தை உடையவர்களாயினும் கீழ்மக்களை அறிவுடையோர் சென்று உதவி கேட்டு ஒருபோதும் அணுகவே மாட்டார்கள்.

'கள்ளி பூத்தாற் போன்றதே, கீழ்மக்களின் பகட்டான செல்வமும், அது எவருக்கும் பயன்படாது கழியும்' என்பது கருத்து.

**263. மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்**
**வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்;**
**செல்வம் பெரிதுடைய ராயினும், சேட்சென்று**
**நல்குவார் கட்டே நசை.**

மிகுந்த அலைகளையுடைய கடற்கரையிலே இருந்தாலும், வலிமையான ஊறுதலை உடையதான உப்புத் தன்மை இல்லாத கிணற்றினிடத்தே சென்றுதான், வேட்கை உடையோர் நீர் உண்பார்கள். ஈயாதவர் பெருஞ்செல்வம் உடையவர்களாக இருந்தாலும் அவர்களை விட்டு, நெடுந்தொலைவிற்குச் சென்றாயினும், கொடுப்பவர்களிடத்திலேதான் அறிவுடையோரின் விருப்பமும் செல்லும்.

வல்லூற்று - அருகிச் சுரக்கும் ஊற்று; விரைவில் சுரக்கும் ஊற்றுமாம். 'கடலின் நிறைந்த நீரை விட்டு உவரில்லாத கிணற்று நீரை விரும்புவதுபோலக் கீழ்மக்களின் பெருஞ்செல்வத்தை அணுகாது ஈபவரின் சிறுகொடையையே பெரியோர் விருப்பமுடன் நாடுவர்' என்பது கருத்து.

**264. புணர்கடல்சூழ் வையத்துப் புண்ணியமோ வேறே;**
**உணர்வது உடையார் இருப்ப;-உணர்விலா**
**வட்டும் வழுதுணையும் போல்வாரும் வாழ்பவே**
**பட்டும் துகிலும் உடுத்து!**

'அறிய வேண்டுவன' எனச் சான்றோர் விதித்தவற்றை எல்லாம் அறியும் அறிவை உடையவர்கள் வறியவர்களாக இருக்கவும், அறிவே சிறிது மற்றவரும், வட்டும் வழுதுணையும் போல உயிர்த் தன்மையற்று எங்கும் பல்கி வாழ்பவருமான

கீழ்மக்கள், செல்வமிகுதியினாலே பட்டும் பிற நல்லாடைகளும் உடுத்துச் செல்வந்தராக வாழ்கின்றார்களே? நெருங்கிய கடல் சூழ்ந்த இவ்வுலகத்திலே, அவரவர் செய்த முன்வினைப் புண்ணியமோ இப்படி அவர்கள் நிலைமை வேறுபட்டுள்ளதன் காரணம்?

'அற்பர் செல்வராயிருக்க, அறிவுடையோர் வறுமையுடையவராயிருப்பது முன்வினைப் பயன் போலும்' என்பது கருத்து. 'வாழ்பவே', 'வாழ்வரே' என்பதும் பாடம்.

**265. நல்லார் நயவர் இருப்ப, நயமிலாக்**
**கல்லார்க்கொன் றாகிய காரணம்,-தொல்லை**
**வினைப்பயன் அல்லது, வேனெடுங் கண்ணாய்!**
**நினைப்ப வருவதொன் றில்.**

வேல்முனை போன்ற நீட்சியான கண்களை உடையவளே! நற்குணம் உடையவர்களும், நல்ல அறிவுடையவர்களும், வறியவர்களாக இருக்கிறார்கள். நற்குணம் இல்லாதவர்களுக்கும், கல்வியறிவு இல்லாதவர்களுக்கும் ஒப்பற்ற செல்வப் பொருள் உண்டாயிருக்கிறது. இதற்குக் காரணம், பழைய பிறப்பிலே செய்த வினையின் பயனால் வந்த விளைவு என்பது அல்லாது, வேறு ஆராய்ந்து பார்க்கத்தக்கதான காரணம் யாதொன்றும் இல்லை.

இதனால், 'இப்பிறப்பில் உதவுவாரும், பிற்பிறப்புகளில் செல்வம் உடையவராவர்' என்பது விளங்கும். 'முற்பிறப்பில், உதவாத நிலையே இப்பிறப்பில் அவர் வறியவரானது' என்பதும் கருத்தாகும்.

**266. நாறாத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்பாவாய்!**
**நீறாய் நிலத்து விளியரோ-வேறாய**
**புன்மக்கள் பக்கம் புகுவாய் நீ, பொன்போலும்**
**நன்மக்கள் பக்கம் துறந்து!**

பூவின் நறுமணம் வீசாத புறவிதழ்களைப்போல, மலர்களுட் சிறந்த தாமரை மலர்மேல் வீற்றிருக்கின்ற பொற்பாவை போன்ற திருமகளே! பொன்னைப்போல அருமையான நற்குணமுடைய மக்களிடத்திலே சென்று பொருந்தி இருப்பதைக் கைவிட்டு, அவர்களினும் மாறுபட்டவர்களாகிய கீழ்மக்களின் பக்கமே நீ சென்று சேர்பவளாவாய்; அதனால், இவ்வுலகத்திலே நீ அழிந்து சாம்பலாகக் கடவாயாக!

'மணமுள்ள பூவிலிருக்கும் நறுமணமில்லாத புறவிதழ் போல், நீயும் மலர்மேலிருந்தும் நறுங்குணம் அற்றவளாயினை எனத் திருமகளைப் பழித்தனர். வறுமையால் வாடிய அறிஞன், இப்படிச் செல்வத்திற்கு அதிதேவதை எனப்படும் திருமகளைப் பழிக்கிறான் என்க.'

**267. நயவார்கண் நல்குரவு நாணின்று கொல்லோ?**
**பயவார்கண் செல்வம் பரம்பப் பயின்கொல்?**
**வியவாய்காண், வேற்கண்ணாய்? இவ்விரண்டும் ஆங்கே**
**நயவாது நிற்கும் நிலை.**

வேல்போன்ற கண்களை உடையவளே! உதவுகின்ற குணமுடையவர்களிடத்திலே உள்ள வறுமையானது வெட்கம் இல்லாததோ? ஒருவருக்கும் உதவாதவரிடத்து உள்ள செல்வம், அவரை விட்டு விடாமல் பரவுவதற்கு ஏற்ற பிசினோ? இவ்விரண்டும், அவ்விடங்களிலே நன்மைப் படாமல் நிலை பெற்றிருக்கின்ற நிலைமையை, நீ வியப்புடன் காண்பாயாக.

பரம்புதல்-நாற்புறமும் ஒட்டுமாறு பரவுதல். பயின் - பிசின். 'செல்வத்தின் பொருந்தாது கூடியிருக்கும் தன்மை' உரைக்கப்பட்டது.

**268. வலவைகள் அல்லாதார், காலாறு சென்று,**
**கலவைகள் உண்டு, கழிப்பர்; -வலவைகள்**
**காலாறுஞ் செல்லார், கருணையால் துய்ப்பவே,**
**மேலாறு பாய, விருந்து.**

பேய்த்தன்மையினை உடையவர்களாக இல்லாத நல்லவர்கள் தங்கள் கால் சென்ற வழியெல்லாம் நெடுந் தொலைவினைக் கடந்து சென்று அங்கங்கே கிடைத்த கலவை யான உணவுகளை உண்டு, தம் வாழ்நாளைக் கழிப்பார்கள். ஆனால் பேய்த்தன்மை உடையவர்களோ, கால்போகும் வழியும் போகமாட்டார்கள்; தம் இடத்திலேயே இருந்து, பாலாறும் நெய்யாறும் பாயும்படியாகப் பொறிக்கறியோடுங் கூடிய உணவினை உண்பார்கள். செல்வத்தின் தன்மை இதுதான்!

இப்படித் தகாதவரிடம் அமைவது நன்றியில் செல்வம் என்பது கருத்து. கலவை-பலரிடம் சிறிது சிறிதாகப் பெற்றதாற் கலவையான சோறு.

**269. பொன்னிறச் செந்நெற் பொதியோடு பீள்வாட,**
**மின்னொளிர் வானம் கடலுள்ளும் கான்றுகுக்கும்**

**வெண்மை உடையார் விழுச்செல்வம் எய்தியக்கால்**
**வண்மையும் அன்ன தகைத்து.**

பொன் போன்ற நிறத்தையுடைய செந்நெற் பயிர்கள் எல்லாம், பொதிந்திருக்கும் கதிர்களோடு தம் கருவும் உட்பட வாடிக்கொண்டிருக்க, மின்னல் விளங்காநின்ற மேகமானது, தன் மழைநீரைக் கடலின் இடையிலே சென்று வெளிப்படுத்திச் சொரிதலும் உண்டு. அறிவின்மை உடையவர்கள், மேலான செல்வத்தைப் பெற்ற காலத்திலே, அவர்களுடைய வள்ளன் மையும் அப்படிப்பட்டதாகப் பயனற்ற தீயவர்களுக்கே உதவியாக விளங்கும்.

'அற்பர், தம் செல்வத்தைத் தகாதவர்களுக்குத் தருவார் களேயல்லாமல், தகுதி உடையவர்களுக்குத் தரமாட்டார்கள்' என்பது கருத்து.

270. **ஓதியும் ஓதார் உணர்விலார்; ஓதாதும்**
**ஓதி அனையார் உணர்வுடையார்; - தூய்தாக**
**நல்கூர்ந்தும் செல்வர், இரவாதார், செல்வரும்**
**நல்கூர்ந்தார், ஈயார் எனின்.**

பகுத்து அறியும் அறிவு இல்லாதவர்கள், எந்த நூல்களையும் படித்திருந்தாலும், அவர்கள் படியாதவர் களேயாவர். பகுத்தறிவு உடையவர்கள், படியாதிருந்தாலும் படித்தாற்போற் சிறந்தவர்கள் ஆவார்கள். மனமானது தூய்மை உடையதாயிருக்க, வறுமையுற்றும் இரந்து செல்லாதவர்கள் செல்வர்களேயாவர். செல்வம் உடையவரும், தம்பால் வந்த இரவலருக்குக் கொடாமற் போனார் என்றால், வறுமைப் பட்டவர்களே ஆவார்கள்.

'உள்ளத் தூய்மையே சான்றோர் என்ற மதிப்பைத் தரும்; ஈதலே செல்வத்திற்கு உரிய மதிப்பைத் தரும்.'

## 4. துன்ப இயல்

'இன்பமும் துன்பமும்' என்று சொல்லப்படுவன எல்லாம், அந்தந்த நிகழ்வுகளைப் பொறுத்தன அன்று; அவ்வவற்றைத் தத்தம் உள்ளத்திலே கொண்டு இன்பமாகவும் துன்பமாகவும் கருதி அநுபவிக்கும் உள்ளத்து நிலையினைப் பொறுத்ததே யாகும்' என்று ஆன்றோர் கூறுவர்.

உள்ளமே நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து, நன்மையென உணர்ந்தவிடத்து இன்பமும், தீமையென உணர்ந்தவிடத்துத் துன்பமும் அநுபவிப்பதாதலால், மேற்கண்ட உண்மை, அவரவர் உள்ளத்து விளங்கும் காரிய காரணங்களின் தராதரங் களைப் பகுத்தறியும் தன்மையைப் பொறுத்ததாகவே அமையும்.

ஈயாமை, இன்மை, மானம், இரவச்சம் போன்றவை சான்றோர்களின் உள்ளத்திலே மிகுந்த துன்பத்தைத் தருவனவாம். அவை பற்றிக் கூறுவது இந்தப் பகுதி.

## 28. ஈயாமை

'ஈதலே' அறங்களுள் எல்லாம் மிகவும் சிறப்புடையதாகக் கொள்ளப்படும். ஈதலினும், வறியார்க்கு ஒன்று ஈதலே மிக்க சிறப்பாகும்.

வறியவரான ஒருவர் வந்து தம்மை இரந்துநின்ற காலத்திலே அவருக்கு உதவ முடியாத நிலையிலே தாம் இருந்தனர் என்றால் சான்றோர் அதற்காக மிகவும் மனம் வருந்தித் துயரப்படுவார்கள்.

கீழ்மக்களோ, இருந்தும் ஈதலிலே மனம் ஈடுபடாத வர்களாக, வறியவர்க்கு ஏதும் தராமலே அவரைப் போக்கி விடுவர். அதனால், இரந்து வந்த எளியோரின் உள்ளம் பெரிதும் புண்படும். அப்படி மறுத்தவரும், மறுமையிலே அளவற்ற துன்பத்திற்கு ஆளாவர்.

ஈயாமை பற்றிய இப்பகுதியினை இனிக் காண்போம்.

**271. நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்**
**அட்டது பாத்துண்டல், அட்டுண்டல்; -அட்டது**
**அடைந்திருந்து உண்டொழுகும் ஆவதில் மாக்கட்கு**
**அடைக்குமாம், ஆண்டைக் கதவு.**

நண்பர்களுக்கும், நட்புச் செய்யாத அயலார்களுக்கும், தம்மிடத்தே உள்ள அளவினாலே சமைத்ததைப் பகுத்துக் கொடுத்து உண்பதே முறையாகச் சமைத்து உண்பதாகும். அப்படியின்றிச் சமைத்ததைக் கதவை அடைத்துத் தனியே இருந்து, தாம் மட்டுமே உண்டு ஒழுகி வருகின்ற நற்குணம் இல்லாத மனிதர்களுக்கு, மேலுலகமாகிய அவ்விடத்துக் கதவும் திறந்திராது, மூடப் பட்டிருக்கும் என்று அறிவாயாக.

'பகுத்து உண்டு வாழாதவன் மறுமையில் சுவர்க்கம் சேரான்' என்பது இது. 'நட்டார்' உறவினரையும், 'நள்ளாதார்' விருந்தினரையும் குறிக்கும். இம்மையாற் புகழையும் மறுமையில் இன்பத்தையும் கருமி இழந்து விடுகிறான் என்பதும் கூறப்பட்டது.

272. எத்துணை யானும், இயைந்த அளவினால்,
சிற்றறம் செய்தார் தலைப்படுவர்; -மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்கால், 'பின்னறிதும்' என்பார்
அழிந்தார், பழிகடலத் துள்.

எவ்வளவேயாயினும், தத்தமக்கு இயைந்த அளவினால், சிறிய தருமங்களையாயினும் செய்து வந்தவர்கள் எக்காலத்தும் மேன்மை அடைவார்கள். அங்ஙனம் இல்லாமல், தம்மிடத்தே பெருஞ்செல்வமானது வந்து அடைந்த காலத்திலே தருமஞ் செய்யாமல், 'பின்னர் அதுபற்றிக் கருதுவோம்' என்றிருப்பவர் கள், உலக நிந்தனையாகிய கடலிலே சிக்கி அழிந்தவர்கள் ஆவார்கள்.

'ஈபவர்கள் பெருமையும் ஈயாத உலோபிகள் சிறுமையும் அடைவார்கள்' என்பது கருத்து. தலைப்படல்-மேன்மைப் படுதல். பழிகடலம்-பழிச் சொற்களாகிய கடல்; கடலளவான பழிச்சொற்களின் மிகுதி.

273. துய்த்துக் கழியான், துறவோர்க்கொன் றீகலான்,
வைத்துக் கழியும் மடவோனை,-வைத்த
பொருளும் அவனை நகுமே! உலகத்து
அருளும் அவனை நகும்.

அருமையாகப் பெற்ற செல்வத்தைத் தான் அநுபவித்து வாழாமலும், அச்செல்வத்தினால் துறக்கப்பட்ட செல்வமற்ற வறியவர்களுக்குக் கொடுத்து உதவாமலும், வீணாகச் சேமித்து வைத்து இறந்து போகின்ற அறியாமை உடையவனாகிய அந்தக் கருமியைப் பார்த்து, அவன் தேடிவைத்த செல்வமும் சிரிக்கும்; உலகத்திலே விளங்கும் கருணை என்னும் பண்பும் சிரிக்கும்.

பெற்றதன் பயனைத் தான் அநுபவிக்காததனால் செல்வமும், அருளுடையவனாகும் வாய்ப்பு இருந்தும் அதனை இழந்ததனால் அருளும், அவனைப் பார்த்துச் சிரிக்கும் என்று கொள்க.

274. கொடுத்தலும், துய்த்தலும் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம், இல்லத்து
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்,
ஏதிலான் துய்க்கப் படும்.

*பிறருக்குக் கொடுத்து உதவுதலையும், தான் அநுபவித்து நுகர்தலையும் அறிந்து செய்யாத உலோபகுணம் பொருந்திய உள்ளத்தை உடையவன் பெற்ற பெருஞ்செல்வமானது, குடியிற் பிறந்த வடிவழகு உடைய கன்னியரைப்போல, அநுபவித்தற்கு உரிய காலம் வந்த பொழுதிலே, அயலானான ஒருவனாலே பெற்று அநுபவிக்கப் படுவதாகும்.*

*அநுபவியாமலும், ஈத்து உதவாமலும் வைத்திருக்கும் ஒருவனுடைய செல்வத்தைக் காலம் வரும்பொழுது அயலார் பெற்று அநுபவிப்பார் என்பது கருத்து.*

275. எறிநீர்ப் பெருங்கடல் எய்தி இருந்தும்,
அறுநீர்ச் சிறுகிணற்று ஊறல்பார்த் துண்பர்;
மறுமை அறியாதார் ஆக்கத்திற், சான்றோர்
கழிநல் குரவே தலை.

*கரையிலே மோதுகின்ற நீரையுடைய பெருங்கடலினை அடுத்ததாக இருந்தாலும், அற்றுப்போம்படியான நீர்ச்சுரப்பினை உடைய சிறுகிணற்று ஊற்றினையே தேடிக்கண்டு அனைவரும் நீர் உண்பார்கள்; ஆதலால், மறுமைப் பயனை அறியாதவர்களுடைய செல்வத்தைக் காட்டிலும், மறுமைப் பயனை அறிந்த சான்றோர்களுடைய மிக்க வறுமையே இவ்வுலகில் மேலானதாகும்.*

*'சான்றோர் இயன்ற அளவுக்குக் கரவாது உதவுபவர்; மற்றையோர் உதவார் என்பது தேற்றம். மிக்குப் பெருகியிருக்கும் கடல்நீர் உண்பதற்கு உதவாதாதலினால் அதனை நாடாது, அருகிருக்கும் உண்பதற்குத் தக்க சிறு கிணற்றையே வேட்கை உடையார் நாடுவது போலக், கருமியின் பெருஞ் செல்வத்தைக் கண்டு மயங்கி அவனுடன் உறவுகொள்ளாது வறியவரான நல்லவரின் உறவையே சான்றோர் பேணிக் கொள்வர்' என்பது கருத்து.*

276. 'எனதெனது' என்றிருக்கும் ஏழை பொருளை,
'எனதெனது' என்றிருப்பன், யானும்; -தனதாயின்,
தானும் அதனை வழங்கான், பயன் துவ்வான்;
யானும் அதனை அது.

'என்னுடையது! என்னுடையது!' என்று உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கிற அறிவற்றவனின் செல்வத்தை, அதற்கு யாதொரு தொடர்பும் இல்லாத யானும் 'என்னுடையது என்னுடையது' என்று சொல்லிக் கொண்டிருப்பேன். அச்செல்வம் அவனுடையதானால், அதனை அவன் தானும் அநுபவியாமல் இருக்கிறான்; பிறருக்கு அதனை வழங்கி மகிழாமலும் இருக்கிறான்; இப்படி அவன் இருப்பானோ? யானும் அதனை அப்படியே ஏதும் செய்ய வகையின்றி இருக்கின்றேன் அல்லவோ!

'கருமியிடம் இருக்கும் செல்வம் செல்வப் பயனைத் தராததினால் இல்லாதது போலவேதான் கருதப்படும்' என்பது கருத்து.

**277. வழங்காத செல்வரின், நல்கூர்ந்தார் உய்ந்தார்;**
**இழந்தார் எனப்படுதல் உய்ந்தார்-உழந்ததனைக்**
**காப்புய்ந்தார்; கல்லுதல் உய்ந்தார்; தம் கைந்நோவ**
**யாப்புய்ந்தார்; உய்ந்த; பல.**

தாம் பெற்றிருக்கும் பொருளைப் பிறர்க்கு வழங்கி உதவாத செல்வரைக் காட்டினும், அச்செல்வமே பெற்றிராத வறுமையாளர்கள் பழியினின்றும் தப்பியவர்கள் ஆவார்கள். அது எப்படி எனில் அவர் அதனை இழந்து விட்டனர் என்னும் அபவாதத்தினின்றும் தப்பினார்கள்; அதனை வருந்திக் காப்பதனின்றும் தப்பினார்கள்; அதனைப் புதைத்து வைப்பதற்கு நிலத்தைத் தோண்டுதலினின்றும் தப்பினார்கள்; தம்கைகள் நோவும்படியாகக் கெட்டியாகப் பற்றியிருப்ப தனின்றும் தப்பினார்கள். இப்படி அவர்கள் தப்பின பலவாகும்.

'பணம் இருந்தும், உதவாதவன் இத்துணைத் தொல்லை களுக்கும் உள்ளாவான்' என்பது கருத்து.

**278. தனதாகத் தான்கொடான், தாயத் தவரும்**
**தமதாய போழ்தே கொடாஅர்;- தனதாக**
**முன்னே கொடுப்பின் அவர்கடியார்; தான் கடியான்**
**பின்னை அவர் கொடுக்கும் போழ்து.**

பொருள் தனக்கு உரிமையுடையதாக இருக்கையிலேதான் கொடுத்து மகிழமாட்டான்; அவன் இறந்துபோன பின் அவனுடைய தாயத்தார்களும் அப்பொருள் தமதாக மாறிவந்த பொழுதிலே தாமும் கொடுத்து உதவமாட்டார்கள். முதலிலேயே பெற்றிருந்தவன் கொடுத்திருந்தால், அவர்கள்

அதனை விலக்க மாட்டார்கள்; அவனுக்குப்பின் அவர்கள் கொடுக்கும் பொழுதும், அவன் வந்து விலக்க மாட்டான்.

பரம்பரை பரம்பரையாகக் கருமித்தனமாக இருக்கும் ஒரு குடும்பத்தைக் குறித்துக் கூறியது இது.

**279. இரவலர் கன்றாக, ஈவார்ஆ வாக,**
**விரகிற் சுரப்பதாம், வண்மை;- விரகின்றி**
**வல்லவர் ஊன்ற வடியாபோல், வாய் வைத்துக்**
**கொல்லச் சுரப்பதாம் கீழ்.**

இரவலர்களைத் தம் கன்றுகளைப் போலக் கருதிக் கொடுப்பவர்கள் அக் கன்றுகளின் தாயாம் பசுவினைப் போல, அவரைக் கண்டதும் உள்ளத்து மகிழ்வினாலே சுரந்து கொடுப்பதே சிறந்த வள்ளன்மையாகும். அந்த உள்ள நெகிழ்வான மகிழ்வு இல்லாமல், வலிமை உடையவர் அழுத்திக் கறக்கப் பால் தருகின்ற பசுவைப் போல, அவ்வவ் விடங்களிலே நிறுத்தித் துன்பப்படுத்தக் கொடுப்பதே கீழ்மக்களின் இயல்பாகும்.

கொல்லுதல்-மிக்க துன்பம் செய்தல். 'கீழ் மக்கள், தம்மை வருத்தியும் அச்சுறுத்தியும் வாட்டுகிற தீயோருக்கே தம் பொருள்களைத் தருவார்களே அல்லாமல், தகுதியுடைய இரவலர்களுக்கு மனமுவந்து உதவமாட்டார்கள்' என்பது கருத்து.

**280. ஈட்டலும் துன்பம், மற்று ஈட்டிய ஒண்பொருளைக்**
**காத்தலும் ஆங்கே கடுந்துன்பம்;- காத்தல்**
**குறைபடின் துன்பம்; கெடின் துன்பம், துன்பக்கு**
**உறைபதி மற்றைப் பொருள்.**

பொருளைத் தேடிச் சேமித்தலும் மிகவும் வருத்தமாகும்; அப்படி ஈட்டிய சிறந்த செல்வத்தைப் பேணிக் காத்தலும் அவ்வாறே பெரும் துன்பமாகும்; அப்படிக் காத்தலில் குறைப்பட்டாலும் துன்பம்; அச்செல்வம் அழிந்து போனாலும் துன்பம். இப்படிச் செல்வமானது பலவகையான வருத்தங்களுக்கே ஓர் உறைவிடமாக இருப்பதாகும்.

ஈத்து மகிழாமல் சேமித்து வைக்கும் செல்வம் பற்றிச் சொல்லியது இது.

# 29. இன்மை

'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்பது திருக்குறள். மனிதன் நல்வாழ்வு வாழவேண்டுமானால், உலக வாழ்விலே தானும் இன்பங்கண்டு, பிறருக்கும் உதவி வாழவேண்டுமானால் அதற்குப் பொருள் இன்றியமையாது வேண்டப்படுவதாகும். ஆகவே, இவ்வாறு மிகமிக இன்றியமை யாததான பொருளினை, தம் ஊழ்வினைப் பயனாலோ, அல்லது தம் முயற்சி இன்மையாலோ அடையப் பெறாதவர்களின் துயரங்களைக் கூறுவதன் மூலம், பொருள் தேடுவதன் இன்றியமையாமையையும், அதனை நல்ல வழிகளிலே செலவிடுவதன் சிறப்பையும் வற்புறுத்துகிறது இந்தப் பகுதி.

ஐம்புலன்களாலும் அநுபவிக்கப்படும் பொருள் யாவும் பொருள் என்றே கருதப்படும். அவை இன்றேல் ஐம்பொறிகளின் அநுபவமாம் இன்பங்களும் இல்லை. அதனால் வரும் துயரங்களும் அதிகம்.

**281. அத்திட்ட கூறை அரைச்சுற்றி வாழினும்,**
**பத்தெட் டுடைமை பலருள்ளும் பாடெய்தும்;**
**ஒத்த குடிப்பிறந்தக் கண்ணுமொன் றில்லாதார்**
**செத்த பிணத்திற் கடை.**

காவி தோய்த்த ஆடையினை அரையிலே சுற்றிக் கொண்டு துறவியாக ஒருவன் வாழ்ந்து வந்தாலும், அவன் பத்து எட்டுப் பொருளாவது உடையவனாக இருப்பது, அப்படிப்பட்ட பலருள்ளும் அவனுக்கு ஒரு பெருமை தருவதாயிருக்கும். உலகத்தாரின் தன்மதிப்பிற்கு ஏற்ற உயரிய குடும்பத்திலே வந்து பிறந்தாலும், யாதொரு பொருளும் இல்லாதவரானால், அவர் உயிர்போன உடலைப் பார்க்கினும் கீழானவராகவே உலகத்தாரால் கருதப்படுவார்கள்.

'உலகிலே பெருமையும் சிறுமையும் பொருள் உடைமை குறித்தே ஏற்படுவது' என்பது கருத்து. அத்து-தையலுமாம். கூறை-ஆடை. பத்தெட்டு-சிறிதளவான பொருள். பிணத்திற்காவது, ஈமக்கிரியைகள் முதலியன செய்வர்; அவனுக்கு அதுவும் செய்யார்; ஆதலின், அதனினும் கடை என்றார்.

**282. நீரினும் நுண்ணிது நெய்யென்பர்; நெய்யினும்**
**யாரும் அறிவர் புகைநுட்பம்; -தேரின்**

**இரப்பிடும்பை யாளன் புகுமே, புகையும்**
**புகற்கரிய பூழை நுழைந்து.**

*நீரினைக் காட்டினும் நெய்யானது நுண்மையானது என்பார்கள். நெய்யினைக் காட்டினும் புகை நுண்மையானது என்பதை யாவருமே அறிவார்கள். ஆராய்ந்து பார்த்தால், இரந்து வாழவேண்டியவனாகிய துன்பமுள்ளவன், அந்தப் புகையும் நுழைந்து செல்லுதற்கரிய தொளையினுள்ளும் புகுந்து செல்பவன் ஆவான்.*

*இதனால், இரந்து வாழ்கின்ற நிலையினையுடைய வறுமையாளனின் துயரத்தின் எல்லை கூறப்பட்டது. பூழை - துவாரம்; தொளை.*

283. **கல்லோங்கு உயர்வரைமேல் காந்தள் மலராக்கால்,**
**செல்லாவாம், செம்பொறி வண்டினம்; -கொல்லைக்**
**கலாஅற் கிளிகடியும் கானக நாட!**
**இலாஅர்க்கு இல்லை தமர்.**

*தோட்டப்புறங்களிலே கிளிகடியும் குறவர் மகளிர், தம் கவணிலே கற்களைக் கொண்டு கிளிகளை ஓட்டுகின்ற காடுசிறந்த நாட்டிற்கு உரியவனே! கற்கள் வளர்ச்சியுடன் விளங்கும் உயர்ந்த மலையின் மேலே, காந்தளானது மலராமற் போனால், சிவந்த புள்ளிகளையுடைய வண்டினம் அவ்விடத்தை நோக்கி ஒருபோதும் செல்வதில்லை. அதுபோலவே பொருள் இல்லாதவரிடத்திலே உறவு முறையாரும் செல்லாராதலினால், அவர்க்கு உறவினரும் இல்லாமற் போவர் என்று அறிவாயாக.*

*'இல்லாதவனை உறவினரும் கைவிடுவர்' என்பது கருத்து.*

284. **உண்டாய போழ்தின், உடைந்துழிக் காகம்போல,**
**தொண்டா யிரவர் தொகுபவே;-வண்டாய்த்**
**திரிதரும் காலத்துத், 'தீதிலிரோ?' என்பார்**
**ஒருவரும் இவ்வுலகத் தில்.**

*பொருளானது உண்டாயிருக்கின்ற பொழுதிலே, உடலானது அழிந்தவிடத்துக் கூடிவரும் காக்கைகளைப் போல ஆயிரக்கணக்கானவர்கள் ஒருவனுக்குத் தொண்டு செய்பவராக வந்து அவன்பாற் கூடுவார்கள். வண்டுகள் மலருள்ள இடங்களைத் தேடித்தேடித் அலைவது போல அவனும் வறுமையால் தனக்கு ஈவாரை நாடிநாடித் திரிகின்ற*

காலத்திலோ, அவனை நோக்கித் 'துன்பம் இன்றி இருக்கின்றீரோ?' என்று கேட்பவர் கூட, இவ்வுலகத்தில் ஒருவரும் இல்லாமற் போவார்கள்.

செல்வம் உள்ள காலத்து வந்து கூடிப், பின் கைவிடும் கயவரைப் பிணந்தின்னும் காக்கைகள் போன்றவர் என்கிறது இப்பாடல். இதனால், இன்மையாளனை எவருமே அணுகார் என்பது கூறப்பட்டது.

285. பிறந்த குலம் மாயும், பேராண்மை மாயும்,
சிறந்ததம் கல்வியும் மாயும், -கறங்கருவி
கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட!
இன்மை தழுவப்பட் டார்க்கு.

ஒலி முழங்கும் அருவிகள், கற்களின்மேல் விழுந்து ஆரவாரிக்கின்ற மலைத் தொகுதிகளை உடைய சிறந்த நாட்டை உடையவனே! வறுமையினாலே கட்டிக் கொள்ளப் பட்டவர்களுக்கு அவர்கள் பிறந்த நல்ல குலத்தின் பெருமையும் இல்லாமற் போகும்; அவர்களுடைய சிறந்த ஆண்மைக் குணங்களும் அழிந்து போய்விடும். மேன்மைப்பட்ட அவர்களுடைய கல்விச் சிறப்பும் பயனற்றதாக அழிவெய்தும்.

'வறியவர்க்குக் குடிப் பெருமையும், ஆண்மையும், கல்வியுங்கூட எச்சிறப்பும் தந்து உதவாமற் போய்விடும்' என்பது கருத்து.

286. உள்கூர் பசியால் உழைநசைஇச் சென்றார்கட்கு
உள்ளூர் இருந்தும், ஒன்று ஆற்றாதான், -உள்ளூர்
இருந்து, உயிர்கொன்னே கழியாது, தான்போய்
விருந்தினன் ஆதலே நன்று.

வயிற்றினுள்ளே நிறைந்த மிகுந்த பசியினாலே தன்னிடத்திலே உணவினை விரும்பி வந்த இரவலர்களுக்குத் தான் உள்ளூரிலேயே இருந்து ஓர் உதவியும் செய்வதற்கு மாட்டாத வறுமையாளன், தன்னூரிலேயே இருந்து தன் வாழ்நாளை வீணாகக் கழியாமல், தான் வேற்றூர்களிற்போய் மற்றவர்க்கு விருந்தினனாக இரந்துண்டு காலங்கழிப்பதே நல்லதாகும்.

'பசியின் மிகுதியால் உணவு விரும்பி வந்தவர்களுக்கு உதவ முடியாத வறுமையைவிடப் பிச்சை எடுத்து உண்டலே சிறந்தது' என்பது கருத்து.

287. நீர்மையே யன்றி, நிரம்ப எழுந்ததம்
கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்,-கூர்மையின்
முல்லை அலைக்கும் எயிற்றாய்! நிரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார்.

கூர்மையின் சிறப்பினாலே முல்லை அரும்புகளின் சிறப்பினையும் வருத்துகின்ற பற்களையும் உடையவளே! வறுமை என்னும் துன்பத்தினாலே சேரப்பெற்றவர்கள், தம்முடைய நற்குணங்கள் மாத்திரமேயல்லாமல், நிறைவு உடையதாகச் சிறந்து நிற்கின்ற தம்முடைய நுண்ணறிவினையும், மற்றும் தம் எல்லா நலங்களையும் ஒருங்கே இழந்து விடுவார்கள்.

'வறுமையாளரின் நற்குணமும் கல்வியறிவும் பயனின்றிக் கெடும்' என்பது கருத்து.

288. இட்டாற்றுப் பட்டொான் றிரந்தவர்க்கு ஆற்றாது
முட்டாற்றுப் பட்டு முயன்றுள்ளூர் வாழ்தலின்,
நெட்டாற்றுச் சென்று, நிரைமனையிற் கைந்நீட்டும்
கெட்டாற்று வாழ்க்கையே நன்று.

வறுமையாகிற தாழ்ச்சியான வழியிலே அகப்பட்டுத் தம்மிடத்திலே வந்து யாராகிலும் ஒன்றை இரந்தவர்களுக்கு உதவ முடியாத முட்டுப்பாடான வழியிலே சிக்கி, அவர்க்குக் கொடுப்பதற்கு முயன்றும் முடியாமல் தன்னுடைய உள்ளூரிலேயே வாழ்தலைக் காட்டினும், நெடுந்தொலைவு களையும் கடந்து தூரதேசங்களிற் போய், அவ்விடத்து வரிசை வரிசையாயுள்ள வீடுகளிலே கை நீட்டித், தான் இரந்து உண்கின்ற கெட்ட வழியிலே வாழும் வாழ்க்கையே ஒருவனுக்கு நல்லதாகும்.

இட்டு - அற்பம்; இட்டாறு - வறுமை. 'நிரைமனை' 'நிறைமனை' எனவும் பாடம். பசிக்கு உணவு அளிக்கவும் இயலாத வறுமையின் கொடுமையைக் கூறிப், பொருளின் தேவை உணர்த்தப்பட்டது.

289. கடகஞ் செறிந்த தம் கைகளால் வாங்கி
அடகு பறித்துக் கொண் டட்டுக்-குடைகலனா,
உப்பிலி வெந்தைதின்று உள்ளற்று, வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

அநுபவிக்கப்படும் பொருள்கள் எல்லாம் போய் வறுமைப்பட்டு வாடின காலத்தே, முன்பு கடகம் செறிந்திருந்த தம் கைகளாலே பக்கத்துள்ள தூறுகளைத் தள்ளிக் கீரைகளைப்

பறித்துக் கொண்டு போய்ச் சமைத்து, வேறு உண்கலன் இன்மையால் பனையோலைக் குடைகளையே உண்கலமாகக் கொண்டு அவற்றிலே உப்பும் இல்லாமல் வெந்த அந்தக் கீரையைத் தின்று, மனவூக்கங் கெட்டு வாழ்பவராவர்கள் சிலர்.

'அப்படியேனும் வருந்தி வாழ்வார்களே அல்லாமல், உலோபிகள்பாற் சென்று இரவார்' என்பது கருத்து. வறுமைத் துயரத்தின் மிகுதி இதன்கண் கூறப்பெற்றது. இதனால், பொருளின் இன்றியமையாமை உணரப்படும்.

**290. ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்**
**பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்,-நீர்த்தருவி**
**தாழா உயர்சிறப்பின் தண்குன்ற நன்னாட!**
**வாழாதார்க் கில்லை, தமர்.**

நிறைந்த புள்ளிகளையுடையவும், அழகு விளங்குகின்றவுமான வண்டின் தொகுதிகள், பூத்து நீங்கின மரக்கிளையின் மேல் ஒருபோதும் செல்லாவாகும். நல்ல தன்மையுள்ள அருவிகள் குறைவுபடாத, உயர்ந்த சிறப்பினையுடைய தண்மையான மலைகளின் வளத்தையுடைய நல்ல நாட்டிற்கு உரியவனே! அதுபோலவே, செல்வம் உடையவராக வாழாதவர்களுக்கு உறவினரும் இல்லாமற் போவர் என்று அறிவாயாக.

'பொருள் இல்லாதவனுக்கு உறவின்முறை யாரும் வந்து உதவமாட்டார்கள்' என்பது கருத்து.

## 30. மானம்

'மானம்' என்பது உலகிலே ஒருவர்க்கு நிலவுகின்ற மதிப்பு ஆகும். அதனைச் சிறிதும் குலையாது பேணிக் கொள்ளவும், மென்மேலும் உயர்வுடையதாக்கிக் கொள்ளவும் முயலுதல் வேண்டும். அந்த நிலையினின்று தாழ்வுறுகின்ற நிலைமை எப்போதாவது வருமானால், தம் மானத்தை இழப்பதினும், உயிரையே இழந்து அதனைக் காப்பதையே சிறப்பாகக் கொள்வர், சான்றோர்.

மானம் இழக்கும் நிலைகள் பெரும்பாலும் வறுமையின் காரணமாகவே ஏற்படும். வேறு சிலபல காரணங்களாலும் ஏற்படலாம். எனினும், வறுமையே பெரும்பாலும் மானமிழந்து இரந்துண்ணத் தூண்டும் கொடுமை உடையது. ஆதலால், இது இன்மையின் பின் கூறப்பெற்றது.

மானம் வேறு; நாணம் வேறு. இதனை நன்றாகக் கவனித்தல் வேண்டும். மானமிழந்தும் உயிர் வாழாத பெருந்தகையோர் பலர் வரலாறுகளை நாம் தமிழ் இலக்கியங்களுள் காணலாம்

291. திருமதுகை யாகத் திறனிலார் செய்யும்
பெருமிதம் கண்டக் கடைத்தும்;- எரிமண்டிக்
கானந் தலைப்பட்ட தீப்போற் கனலுமே
மானம் உடையார் மனம்.

தம்மிடத்திலே, செல்வமானது வலிமை உடையதாக இருப்பதன் காரணமாகத் தக்க நற்குணம் இல்லாதவர்கள் செய்கின்ற வரம்பு கடந்த நடத்தையைப் பார்த்த பொழுது மானம் உடையவர்களுடைய மனமானது நெருப்புப் பற்றிக் காட்டிலே மண்டிய பெருந்தீயைப் போலக் கனன்று கொதிப்படையும்.

'செல்வச் செருக்கினால் தீயோர் வரம்பு கடந்து நடக்கும்போது, மானம் உள்ளவர்கள் மனக்கொதிப்பு அடைவார்கள்' என்பது கருத்து.

292. என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று
தம்பா டுரைப்பரோ, தம்முடையார்? -தம்பாடு
உரையாமை முன்னுணரும் ஒண்மை உடையார்க்கு
உரையாரோ, தாமுற்ற நோய்?

தம்முடைய மானத்தைத் தாம் காத்துப் பேணுகின்ற தன்மையினை உடையவர்கள், வறுமையினால் தம் உடம்பு எலும்பாகப் போய் உதிர்கின்ற நிலையினையே அடைந்தாலும், நற்குணம் இல்லாத செல்வர்களின் பின்னே சென்று தமது வருத்தத்தைச் சொல்லுவார்களோ? சொல்லவே மாட்டார்கள். தம் வருத்தத்தை வாய்திறந்து சொல்வதற்கு முன்னமே. குறிப்பினால் அறிந்து உதவத்தக்க நற்குணம் உடையவர்களுக்குத் தாம் உற்ற வருத்தத்தைக் கூறாமலும் இருப்பார்களோ?

'மானமுள்ளவர்கள், தம் கொடிய வறுமைக் காலத்தும் தீயவர்களை அணுகமாட்டார்கள்; நல்லவர்களையே அணுகுவார்கள்' என்பது கருத்து.

293. யாமாயின் எம்மில்லம் காட்டுதும்; தாமாயின்
காணவே கற்பழியும் என்பார்போல்,-நாணிப்

**புறங்கடை வைத்தீவர், சோறும்; அதனால்,**
**மறந்திடுக, செல்வர் தொடர்பு.**

*நாமானால், வரும் விருந்தினர்களுக்கு நம் வீடு முழுவதையும் காட்டி உள்ளே அழைத்து வந்து உபசரிப்போம். ஆனால், செல்வச் செருக்கு உடையவர்களோ என்றால் தமது வீட்டை எளியவர் காண்கிற மாத்திரத்தாலேயே அதன் உறுதி அழிந்துவிடும் என்று நினைக்கிறவர்களைப் போலத் தம் வீட்டைக் காட்டுவதற்கு நாணங் கொண்டு, புறங்கடையிலேயே இருக்க வைத்துச் சோறிடுவார்கள்; அதனால் செல்வர்களுடைய தொடர்பை மானமுடையவர்கள் எவரும் கொள்ளாமல் மறந்துவிடுவார்களாக.*

*இல்லம் - மனையாள் எனவும் கூறுவர். 'செல்வரின் உறவு உளங்கலந்த உறவன்று' என்பது கருத்து.*

**294. இம்மையும் நன்றாம்; இயனெறியும் கைவிடாது,**
**உம்மையும் நல்ல பயத்தலாற், செம்மையின்**
**நானங் கமழும் கதுப்பினாய்! நன்றேகாண்,**
**மானம் உடையார் மதிப்பு.**

*கத்தூரிச் சாந்தின் மணமானது நன்றாகக் கமழுகின்ற கூந்தலை உடையவளே! மானம் உடையவர்களின் பெருமையானது இவ்வுலகத்திலும் நன்மை தருவதாகும். கூடிய நல்ல வழியையும் கைவிட்டுவிடாது மறுபிறப்பிலும் நல்லவற்றையே உண்டாக்குதலால், அது மறுமைக்கும் நல்லதேயாகும். இதனை நீ அறிவாயாக!*

*மதிப்பு - பிறரால் மதிக்கப்படுதல். 'மானமுடையவராக வாழ்தல் இம்மையிற் பெருமையையும், மறுமையில் புண்ணியப் பயனையும் தரும்' என்பது கருத்து. நானம்-கஸ்தூரி; அதனைச் சேர்த்துக் கூட்டிய மயிர்ச் சாந்து.*

**295. பாவமும் ஏனைப் பழியும் படவருவ,**
**சாயினும் சான்றவர் செய்கலார்; - சாதல்**
**ஒருநாள் ஒருபொழுதைத் துன்பம்; அவைபோல்**
**அருநவை யாற்றுதல் இன்று.**

*பாவச் செயல்களையும் உலகத்துப் பழி ஏற்படும் செயல்களையும் சான்றோர்கள், அவற்றைச் செய்யாத காலத்துத் தாம் சாகும்படி நேரிட்டாலும் கூட, அவை உண்டாகும்படி வரும் செயல்களைச் செய்யவே மாட்டார்கள்.*

ஏனென்றால், சாதல், அந்த ஒரு நாளிலே, அந்த ஒரு வேளையில் மாத்திரமே துன்பந் தருவதாகும்; அந்த இழிவான செயல்களைப் போல நிரந்தரமாக மிகுந்த துன்பங்களைச் செய்வதன்று.

'மானங் கெடுகிற செயல்களிலே ஈடுபடுவதைக் காட்டிலும் உயிரிழப்பதே சிறந்தது' என்பது கருத்து.

**296. மல்லன்மா ஞாலத்து வாழ்பவருள் எல்லாம்**
**செல்வர் எனினும், கொடாதவர்-நல்கூர்ந்தார்;**
**நல்கூர்ந்தக் கண்ணும், பெருமுத் தரையரே,**
**செல்வரைச் சென்றிரவா தார்.**

வளப்பத்தையுடைய இப்பெரிய உலகத்திலே வாழ்பவருக்குள் எல்லாம் சிறந்த செல்வர்கள் என்றாலுங்கூட வந்து இரந்தவர்களுக்குக் கொடாத உலோபிகள் தரித்திரர்களே ஆவர். வறுமை அடைந்தபோதினும் பொருள் உடையவரிடம் போய், அவரை இரந்து நிற்காத மானம் உடையவர்களோ, பெருமுத்தரையர் போன்ற செல்வர்களே யாவார்கள்.

'ஈயாத செல்வரினும், சென்று இரவாத மானம் உடைய வறுமையாளனே மதிப்பிற்கு உரியவன்' என்பது கருத்து. பெருமுத்தரையர் -தஞ்சைப் பகுதியிலிருந்த குறுநில மன்னர்; அந்நாளிலே இருந்தவர்.

**297. கடையெலாம் காய் பசி அஞ்சும்; மற்றுஏனை**
**இடையெலாம் இன்னாமை அஞ்சும்;-புடையுலாம்**
**விற்புருவ வேனெடுங் கண்ணாய்! தலையெல்லாம்**
**சொற்பழி யஞ்சி விடும்.**

வில்லைப்போன்ற புருவத்தையும், பக்கங்களிலே உலவுகின்ற வேலாயுதம் போன்ற நீண்ட கண்களையும் உடையவளே! "கடைத் திறமானவர்கள் எல்லாரும், தம்மை வருத்துகின்ற பசி நோயினைக் குறித்தே அஞ்சுவார்கள். மற்றைய இடைத்திறமானவர்கள் எல்லாரும் தம்மிடம் பொருள் வளம் இல்லாமையைக் குறித்து அஞ்சுவார்கள். ஆனால், மேன் மக்களோ என்றால் உலகத்தாருடைய பழிச்சொற்களுக்கே மிகவும் அஞ்சுவார்கள்" என்று அறிவாயாக.

'பழிச் சொற்களால் மானக்குறைவு நேரிடுதலால், தலைமக்கள் அதற்கே பெரிதும் அஞ்சுவர்' என்பது கருத்து.

298. 'நல்லர்! பெரிதளியர்! நல்கூர்ந்தார்!' என்றெள்ளிச்
செல்வர் சிறுநோக்கு நோக்குங்கால், -கொல்லன்
உலையூதும் தீயேபோல் உள்கனலும் கொல்லோ,
தலையாய சான்றோர் மனம்.

*"இவர் மிகவும் நல்லவர்! இவர் மிகவும் கருணை செய்யத்தக்கவர்! இவர் வறுமை உடையவராயிருக்கிறார்" என்று இகழ்வாகப் பேசிச் செல்வர்கள் பிறரை அவமதிப்புடன் பார்க்கின்ற காலத்திலே, மேன்மக்களாகிய சான்றோர்களுடைய உள்ளமானது, கருமானின் உலைக்கூடத்திலே ஊதி எழுப்புகிற நெருப்புப்போல, உள்ளேயே கனன்று கொதித்துக் கொண்டிருக்கும்.*

*'உள்கனலும்' என்றது, சான்றோர் அடக்கம் உடைய வராதலால், 'மானம் அழியப் பிறரைச் செல்வர் அவமதிப்பதற்கே, மானமுடையவரான அவர் உள்ளக் கொதிப்படைவர்' என்பது கருத்து.*

299. நச்சியார்க் கீயாமை நாணன்று; நாணாளும்,
அச்சத்தான் நாணுதல் நாணன்றாம்; எச்சத்தின்
மெல்லிய ராகித்தம் மேலாயார் செய்தது
சொல்லா திருப்பது நாண்.

*ஒன்றை விரும்பிவந்து அணுகியவர்களுக்கு அதனைக் கொடாமலிருப்பது வெட்கமன்று; நாள்தோறும் அஞ்ச வேண்டிய காரியங்களுக்கு அஞ்சி வாழ்தலும் வெட்கமன்று; தம்மினும் குறைபாடுடைய அற்பராக இருந்து ஆராய்ச்சி இல்லாதவர் தம்பாற் செய்த எளிமையைப் பிறருக்கு வாய்விட்டுச் சொல்லாதிருக்கும் மன உறுதியே உண்மையில் நாணமாகும்.*

*'அறிவற்றோர் தமக்குச் செய்த அவமதிப்பை பிறர் அறியச் செய்யாதிருத்தலே நாணம் உடைமையாகும்' என்பது கருத்து.*

300. கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம் வீழ்ந்த துண்ணா திறக்கும்; இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்,
மானம் அழுங்க வரின்.

*காட்டுப் பசுவைக் கொன்ற, காட்டிலிருக்கின்ற பெரும் புலியானது, தான் கொன்ற அது இடப்புறத்தே வீழ்ந்ததாயின், அதனை உண்ணாது பசியால் தன் உயிரையும் விட்டுவிடும்.*

விசாலமான இடத்தை உடையதாகிய சுவர்க்கத்தின் இடமே தம் கைக்கு வந்து சேர்வதானாலும் சிறந்த மேலோர்கள், அது தமது மானம் கெடுவதனாலே வருவதாயிருந்தால் அதனை விரும்பவே மாட்டார்கள்.

'மானத் தாழ்வு வருவதாயிருந்தால் எந்தப் பேரின்பத்தையும் சான்றோர்கள் விரும்பார்கள்' என்பது கருத்து. கடமா- காட்டுப்பசு. இடம் வீழ்ந்ததைப் புலி உண்பதில்லை என்பதைப் பிற சங்க நூல்களும் கூறும்.

## 31. இரவு அச்சம்

இரந்து வருபவர்களுக்கு, அவருடைய வறுமைத் துயரைப் போக்குவதற்குரிய யாதாயினும் கொடுத்து உதவவேண்டுவது உடையவர் கடமை என்று அறநூல்கள் வற்புறுத்துவதனால், இரத்தலையும் சான்றோர் ஒரு நெறியாக ஏற்றுக் கொள்கின்றனர் போலும் என்று எவரும் கருதிவிடுதல் கூடாது.

இரத்தல் எவ்வளவு கொடுமையானது இழிவானது என்ற சொல்லுவதன் மூலம், அதற்கு உட்படாதிருத்தலே சிறந்த வாழ்வாகும் என்பதை இந்தப் பகுதி விளக்கிக் கூறுகிறது.

இதனால் அவ்வளவு கொடிய மனத்துயருக்கும் இழிவுக்கும் தம் வறுமையின் காரணமாக உட்பட்டு வருபவர்க்கு, இருப்பவர் தவறாது உதவவேண்டும் என்ற நியதியும் உறுதிப்படும்.

இரத்தலால் ஏற்படும் பலவகையான குறைபாடுகளை எடுத்துக் கூறி, அதற்கு அஞ்சி அதனைக் கைவிடுதலை வற்புறுத்துவதே இந்தப் பகுதியாகும்.

**301. 'நம்மாலே யாவர், இந் நல்கூர்ந்தார்; எஞ் ஞான்றும்**
**தம்மாலாம் ஆக்கம் இலர், என்று;-தம்மை**
**மருண்ட மனத்தார்பின் செல்பவோ, தாமும்**
**தெருண்ட அறிவி னவர்?**

"இந்த வறியவர்கள் நம்மாலேயே ஆக்கம் உடையவர்கள். எப்போதும், தம்முடைய முயற்சியினாலே ஆகும் ஆக்கம் உடையவரே அல்லர்" என்று, தம்மை மேலானவராக மயங்கின செருக்குடைய மனத்தினர்களின் பின்னாக, அவர்களுடைய உதவியை நாடித் தெளிந்த அறிவினை உடையவர்கள் செல்வார்களோ? ஒரு போதும் செல்லமாட்டார்கள்.

'செல்வராவதும் வறியவராவதும் ஊழ்வினைப் பயனால் வருவது. கொடுத்தல் அறம் என்று கருதாமல், தன்னாலேயே அவன் வாழ்கின்றான் எனக் கருதும் செருக்குடைய செல்வரை நாடி, அறிவுடையோர் ஒருபோதும் செல்லமாட்டார்கள்' என்பது கருத்து.

**302. இழித்தக்க செய்தொருவன் ஆர உணலின்**
**பழித்தக்க செய்யான் பசித்தல் தவறோ?**
**விழித்திமைக்கும் மாத்திரை யன்றோ, ஒருவன்**
**அழித்துப் பிறக்கும் பிறப்பு!**

ஒருவன், இழிவுக்குக் காரணமான செயல்களைச் செய்து வயிறார உண்டு வாழ்வதனைக் காட்டினும், பிறர் பழிக்கும்படியான செயல்களைச் செய்யாதவனாகப் பசியோடு வருந்தியிருத்தல் தவறாகுமோ? எனில் ஆகாது. ஒரு மனிதன், தன்னுடைய இந்த உடலை அழித்துவிட்டு மீண்டும் புதிய உடலெடுத்துப் பிறக்கும் பிறப்பு, கண்மூடித் திறக்கும் ஒரு மாத்திரை அளவான காலத்திற்றானே நிகழக்கூடியது அல்லவோ?

'உடல் போனால் அடுத்த நொடியே வேறு உடல் கிடைக்கும்; ஆனால், பழிச் சொற்களோ தொடர்ந்து வரும். அதனால் பழிதருகின்ற செயல்களில் ஈடுபடுதல் கூடாது' என்பது கருத்து.

**303. இல்லாமை கந்தா இரவு துணிந்து ஒருவர்**
**செல்லாரும் அல்லர், சிறுநெறி! -புல்லா,**
**'அகம்புகுமின், உண்ணுமின்' என்பவர்மாட் டல்லால்,**
**முகம்புகுதல் ஆற்றுமோ, மேல்?**

தம்மிடத்தே சூழ்ந்த வறுமையின் காரணமாகத் துணிந்து ஒருவர் இரத்தலாகிய அற்பமான வழியிலே செல்லாமலும் இருக்கமாட்டார்கள். ஆனால் அப்படி இரக்க நேரிட்டாலும், மேலானவர்கள், தம்மைத் தழுவிக் கொண்டு, 'வீட்டினுள் வாருங்கள்; உண்ணுங்கள்' என, அன்போடு உபசரிப்பவர் களிடத்திலே அல்லாமல், மற்றவர்களிடத்திலே செல்வதைப் பொறுப்பார்களோ? பொறுக்க மாட்டார்கள் என்பது முடிவு.

'இரப்பதேயானாலும், மனமுவந்து ஈபவரிடத்திலே மட்டும் சென்று இரந்துண்க; பிறரிடத்துச் செல்லாதிருக்க' என்பது கருத்து.

304. திருத்தன்னை நீப்பினும், தெய்வஞ் செறினும்
உருத்த மனத்தோடு உயர்வுள்ளின் அல்லால்
அருத்தஞ் செறிக்கும் அறிவிலார் பின்சென்று,
எருத்திறைஞ்சி நில்லாதாம், மேல்.

*திருவானது தன்னைக் கைவிட்டுப் போய்விட்டாலும், தெய்வமானது தன்மேற் சினந்து வந்து வருத்தினாலும், அவற்றால் தளர்ந்து விடாமல், ஊக்கங் கொண்ட உள்ளத்துடன், தம் உயர்வினைப் பெரிதாக நினைப்பதே அல்லாமல், பணத்தை ஈத்து உதவாமல் வீணே சேர்த்து வைத்திருக்கின்ற அறிவற்ற செல்வர்களின் பின்னே சென்று, மேலோர்கள் தலை குனிந்து ஒருபோதும் நிற்கவே மாட்டார்கள்.*

*'மேலோர், தம் உயர்வினைப் பெரிதாக மதிப்பாரே அல்லாமல், செல்வர் பின்சென்று பணிந்து வாழார்' என்பது கருத்து.*

305. கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை; - இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமாம்; என்கொலோ,
கொள்ளுங்கால் கொள்வார் குறிப்பு?

*இரந்து வருபவர்களுக்குப் பொருளை ஒளிக்காது உள்ளத்தைக் கொடுக்கின்ற உறுதியான அன்பினையுடைய கண்போன்ற மேலோர்களிடத்திலுங்கூடச் சென்று யாசியாமல் வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும். யாசித்தலாகிய அந்தச் செயலை நினைக்குங் காலத்திலேயே உள்ளம் உருகிப் போகின்றது. அப்படியிருக்கவும் பிறரிடம் இரந்து ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங் காலத்திலே அப்படிக் கொள்பவரின் நோக்கந்தான் என்னவோ?*

*'இரத்தலுக்கு அஞ்சி அதனைக் கைவிடல் வேண்டும்' என்பது கருத்து.*

306. 'இன்னா இயைக; இனிய ஒழிக' என்று
தன்னையே தானிரப்பத் தீர்வதற்கு - என்னைக்கொல்,
காதல் கவற்றும் மனத்தினாற் கண்பாழ்பட்டு
ஏதி லவரை இரவு?

*'துன்பங்கள் நம்மிடத்தே வந்து சேரட்டும்; இன்பங்கள் எல்லாம் நம்மைவிட்டு நீங்கிப் போகட்டும்' என்று தன் மனத்தையே தான் நிரம்பச் செய்தலினால், தீர்ந்து*

போகும்படியான வறுமைக்காகப் பொருளாசை கவலைப் படுத்தும் மனத்தினாலே அறிவழிந்து, அயலாரைச் சென்று யாசித்தல் என்ன காரணத்திற்காகவோ?

'உள்ளத்தில் உறுதியுடன் இன்ப துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல், அயலாரிடம் சென்று இரத்தல் கூடாது' என்பது கருத்து.

307. என்றும் புதியார் பிறப்பினும், இவ் வுலகத்து,
என்றும் அவனே பிறக்கலான்-குன்றின்
பரப்பெலாம் பொன்னொழுகும் பாயருவி நாட!
இரப்பாரை எள்ளா மகன்.

மலைகளின் பரந்த இடங்கள் எல்லாம் பொன்னானது ஓடும் படியான, பாய்கின்ற அருவிகளை உடைய நாட்டிற்கு உரியவனே! எக்காலத்தினும் புதிய புதிய மனிதர்கள் பிறந்து கொண்டிருந்தாலும் இவ்வுலகத்தில், என்றும் யாசகரை இகழாத மகனே'மீண்டும் வந்து பிறவாதவன் என்று அறிவாயாக.

'இரப்பவரை இகழாது உதவுபவன், தொடர்ந்து வரும் பிறவித் துயரினின்றும் விடுதலை பெற்று உய்வான்' என்பது கருத்து.

308. புறத்துத்தன் இன்மை நலிய, அகத்துத்தன்
நல்ஞானம் நீக்கி நிறீஇ, ஒருவனை,
'ஈயாய் எனக்கு!' என்று, இரப்பானேல், அந்நிலையே
மாயானோ, மாற்றி விடின்!

புறமாகிய உடலிலே தன்னுடைய வறுமையானது தன்னை வருத்த, அதனால் தன்னுடைய அகமாகிய நல்ல அறிவினைத் தள்ளி, அறியாமையை நிலைபெறச் செய்து, அயலான் ஒருவனை 'எனக்கு ஈவாயாக!' என்று ஒருவன் யாசிப்பானாகில், அந்தச் செல்வன் 'இல்லை' யென்று மறுத்துவிட்டால், அப்படி யாசித்தவன் அவ்விடத்திலேயே இறந்துபோய்விட மாட்டானோ?

இரவினால் நேரும் மானக்கேடு கூறி, அதனை அஞ்சி ஒதுக்கும் கடமை வற்புறுத்தப்பட்டது. மாற்றுதல்-மறுத்தல்.

309. ஒருவர் ஒருவரைச் சார்ந்தொழுகல் ஆற்றி,
வழிபடுதல் வல்லுதல் அல்லால், பரிசழிந்து,
'செய்யீரோ, என்னானும்!' என்னுஞ் சொற்கு இன்னாதே,
பையத்தாம் செல்லும் நெறி.

ஒருவர் மற்றொருவரைச் சார்ந்து நடத்தலைச் செய்து வணக்கமாயிருப்பது உலகில் முறைமையே அல்லாமல், தம் பெருமை கெட்டு, "ஏதாகிலும் உதவி செய்ய மாட்டீர்களோ?" என்று சொல்லுகிற சொல்லைக் காட்டினும், தாம் துன்பம் உண்டாகச் செல்லும் பழைய நெறியே இனிமையாய் இராதோ?

'செல்வரை அணுகி, அவர் உயர்வுக்கு இசையத் தாம் பணிவுடன் இருத்தல் பொருந்துமே யல்லாமல் அவரை இரந்து பெறமுயலுதல் பொருந்தாத ஒழுக்கம்' என்பது கருத்து.

**310. பழமை கந்தாகப் பசைந்த வழியே**
**கிழமைதான் யாதானும் செய்க!-கிழமை**
**பொறாஅர் அவரென்னிற், பொத்தித்தம் நெஞ்சத்து**
**அறாஅச் சுடுவதோர் தீ.**

பழைய காலத்து நட்பினை ஆதாரமாகக் கொண்டு வந்து சிநேகித்த விடத்திலே, தாம் யாதாகினும் ஒரு தக்க உதவியை அவருக்குச் செய்யக் கடவர். அவர், அப்படித் தக்கதாகச் செய்யும் உதவியைத் தம் கடமையாக ஏற்றுக்கொள்ளாமல் போவாராயின், அது தமக்கு மனத்திலே பதிந்து நீங்காமல் எரிக்கும் படியான ஒரு தீயாகவே விளங்கும்.

'அயலார் உதவாமற்போனால் வரும் வருத்தத்தினாலும், பழைய நண்பர்கள் உதவாதபோது வரும் வருத்தம் மிகுதியாயிருக்குமாதலால், அவர்பாற் சென்று இரத்தல் வேண்டா' மென்பது கருத்து.

## 5. பொது இயல்

பொதுவியலாவது, அரசியல் போன்று முன்னர்க் கூறியவற்றுள் எல்லாம் அடங்காத பொதுப்பட்ட செய்திகளைக் கூறும் பகுதி என்று பொருள்படும். இந்தப் பகுதி அறிவியல் என்னும் ஒரே அதிகாரத்தை மட்டுமே கொண்டதாகும். இதனால் ஓர் அதிகாரமும் ஓர் இயலாக அமைதல் கூடும் என்பதும் அறியப்படும்.

அவையானது ஒரு குறிப்பிட்ட தொடர்புடையோர் மட்டுமன்றிப் பல்வேறு நிலையினரும், கருத்தினரும், தொழிலினரும் கூடியிருப்ப தொன்றாகும். ஆட்சித் தலைவனானவன் அதன் போக்கினை அறிந்தே தன் செயல்களை வகுக்கும் கடப்பாடு உடையவனாயிருக்க வேண்டும்.

இந்தப் பொதுவான தகுதியுடைமை பற்றியும் இது பொதுவியல் என வகுக்கப்பட்டிருத்தல் பொருந்தும் எனக் கொள்ளலாம்.

## 32. அவை அறிதல்

*அவை அறிதலாவது, அவையிலே உள்ளவர் களினுடைய கல்வி கேள்வி தகுதி முதலியவற்றின் தராதரங்களை நுட்பமாக அறிந்து, அதற்கு ஏற்ற படியான வகையிலே அங்கு நடந்து கொள்ளுதல் ஆகும்.*

*அவையினை அறியாமற் சென்று, அங்கு தான் கூடியிருக்கவும் உரையாடவும் துணிபவன், பெரிதும் அவமானத்திற்கே உள்ளாகும் நிலையினை அடைவான். அவையின் போக்கினை ஆராய்ந்து, அதற்குத் தக்கபடியாகத் தான் நடந்து கொள்ளுகின்ற ஒருவனோ, அந்த அவையினரின் மதிப்பைப் பெறுவதோடு அதனால் உலகிற் பலராலும் மதிக்கப்படும் புகழையும் அடைவான். இதனைப் பற்றிய செய்திகளை இந்தப் பகுதியுள் நாம் காணலாம்.*

**311. மெய்ஞ்ஞானக் கோட்டி உறழ்வழி விட்டு, ஆங்கோர்**
**அஞ்ஞானம் தந்திட்டு, அதுவாங்கு அறத்துழாய்,**
**கைஞ்ஞானங் கொண்டொழுகும் காரறி வாளர்முன்;**
**சொல்ஞானஞ் சோர விடல்.**

*மெய்ம்மையான அறிவினை உடையவர்கள் கூடியிருக்கும் அவையிலே சேருகிற முறைமையைக் கைவிட்டு, அவ்விடத்திலே ஓர் அறியாமை உடைய பேச்சினைப் பேசிவிட்டு, அந்தப் பேச்சினையே அவ்விடத்திலே மிகவும் அதிகமாகப் பரப்பிக்கொண்டு, தம் அற்பமான அறிவைக் கொண்டு நடக்கின்ற, பழிக்கப்படும் அறிவுள்ளவர்களிடத்திலே, புகழ்ந்து சொல்லத்தக்க தமது அறிவுத் திட்பத்தையும் ஒருவர் வெளிப்படுத்தாது தளரவிட்டு விடல் வேண்டும்.*

*'மூடர்கள் கூடியிருக்கும் கூட்டத்திலே, அறிவுடையோர் தம் அறிவுரைகளைச் சொல்லாதிருக்க வேண்டும்' என்பது கருத்து.*

**312. நாப்பாடம் சொல்லி நயமுணர்வார் போற்செறிக்குந்**
**தீப்புலவற் சேரார், செறிவுடையார்! -தீப்புலவன்**
**கோட்டியுள் குன்றக் குடிபழிக்கும், அல்லாக்கால்,**
**தோள்புடைக் கொள்ளா எழும்.**

தம் வாய்க்கு வந்த பாடங்களைச் சொல்லித், தாம் சொற்களின் நயத்தினை உணர்ந்தவர்களைப் போலப் பிறரைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ளுகிற தீய அறிவுள்ளவரின் கூட்டத்திலே, அறிவுச் செறிவினையுடைய நல்ல புலவர்கள் ஒருக்காலும் சேரமாட்டார்கள். தீயகுணமுள்ள அந்தப் புலவன், அவையினுள், கேட்பவர்களின் மனம் வருந்தும்படியாக நற்புலவர்களின் குடியையே பழித்துப் பேசுவான். அதுவும் இல்லாவிடத்து, தோள்களைத் தட்டிக் கொண்டு அவர்களுடன் சண்டைக்கே எழுந்தாலும் எழுந்திருப்பான்.

'அறிவுச் செப்பமின்றிப் பேச்சுக் கச்சேரி நடத்தும் போலிப் புலவர்களின் கூட்டத்திற்குச் சான்றோர் செல்ல மாட்டார்கள்' என்பது கருத்து.

**313. சொற்றாற்றுக் கொண்டு சுனைத்தெழுதல் காமுறுவர்,**
**கற்றாற்றல் வன்மையும் தாந்தேறார்,-கற்ற**
**செலவுரைக்கும் ஆறறியார், தோற்பது அறியார்,**
**பலவுரைக்கும் மாந்தர் பலர்.**

தம்மிடத்தே இருக்கின்ற சொல்லாற்றலையே பெரிதாகக் கருதிக் கொண்டு அந்தத் தினவினால் வாது செய்வதற்கு எழுந்திருப்பதை விரும்புவார்கள்; அந்த அவையிலுள்ள பிறர் கற்று ஆற்றல் உடையவர்களா யிருப்பதையும், அவர்களுடைய பேச்சு வல்லமையையும் தாம் உணர மாட்டார்கள்; தாம் கற்றவற்றைப் பிறர் உள்ளத்திலே சென்று புகுமாறு தெளிவாக எடுத்துச் சொல்லும் சொல்லின் முறைமையையும் அறியார்கள்; தாம் தோற்றுப்போவதையும் உணர மாட்டார்கள்; இப்படிப்பட்டவர்களாயிருந்தும், வீணாகப் பலவும் சொல்லிக் கொண்டேயிருக்கிற மாந்தர்களே இவ்வுலகத்தில் பலராக இருக்கின்றனர்.

'அறிவுடையோர் இவர்கள் கூட்டத்தைக் கைவிடல் வேண்டும்' என்பது கருத்து.

**314. கற்றதூஉம் இன்றிக், கணக்காயர் பாடத்தால்**
**பெற்றதாம் பேதையோர் சூத்திரம்-மற்றதனை**
**நல்லா ரிடைப்புக்கு, நாணாது சொல்லித் தன்**
**புல்லறிவு காட்டி விடும்.**

தானாகப் படித்துத் தெரிந்தது என்பது சிறிதும் இல்லாமல், பள்ளியில் கணக்காயர் பிறருக்குச் சொல்லிக் கொண்டிருக்கும் பாடத்தினால் ஒரு சூத்திரத்தை ஒரு பேதை

பெற்றுக் கொண்டானாம்; அவன், அப்படிப் பெற்றுக் கொண்ட அந்தச் சூத்திரத்தினை, நல்ல புலவர்களின் அவையிலே புகுந்து தன் பேதைமைக்கு நாணாமல் எடுத்துச் சொல்லித் தன்னுடைய கீழ்த்தரமான அறிவையே வெளிப்படுத்தி விடுபவனாவான்!

'அப்படிச் சொல்லவும், அவனுடைய புல்லறிவு பலரும் அறிந்ததொன்றாய்விடும்' என்பது கருத்து.

**315. வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்,**
**கன்றிக் கறுத்தெழுந்து, காய்வாரோடு-ஒன்றி,**
**உரைவித் தகமெழுவார் காண்பவே, கையுள்**
**சுரைவித்துப் போலுந்தம் பல்.**

'பிறரை வென்றுவிட வேண்டும்' என்ற ஒரே ஒரு காரணத்தினாலே, விலங்கினைப் போன்று உண்மைப் பொருள்களை ஏற்றுக் கொள்ளாதவர்களாகி மிகவும் சினங் கொண்டு போருக்குத் தயாராக எழுந்து, மனங்கொதிப்ப வர்களோடு சேர்ந்து, தம்முடைய சொல்லின் வித்தாரத்தைக் காட்ட எழுகின்றவர், சுரையின் வித்துப் போன்ற தம்முடைய பற்கள் தம் கையில் உடனே கிடைக்கக் காண்பவராவார்கள்.

'மூடர்களுக்கு நல்லுபதேசம் செய்யப் போனால், போகிறவரின் பல் உடைவதுதான் நேரிடும்; அவர்கள் கேட்டுத் திருந்தார்' என்பது கருத்து.

**316. பாடமே ஓதிப் பயன்தெரிதல் தேற்றாத**
**மூடர் முனிதக்க சொல்லுங்கால்,-கேடருஞ்சீர்ச்**
**சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே, மற்றவரை**
**ஈன்றாட்கு இறப்பப் பரிந்து.**

ஒரு பாட்டின் வாய்ப்பாடத்தை மட்டுமே சொல்லிக் கொண்டு, அதன் பொருள் நுட்பத்தைத் தெளிவதிலே மனஞ் செலுத்தாத மூடர்கள், கேட்பவர் சினங்கொள்ளத்தக்க சொற்களைச் சொல்லும் பொழுது, அழிவில்லாத மேன்மையை யுடைய சான்றோர்கள், அப்படி வைதவரைப் பெற்ற தாயைக் குறித்து மிகவும் இரக்கப்பட்டு, அவர்களை அந்தவிடத்திலேயே தக்கப்படி ஒறுத்தற்குத் துணியாமல், தாம் வெட்கினவராகிப் பொறுமையுடன் இருப்பார்கள்.

'மூடனின் பேச்சை மறுத்து உரையாமல் சான்றோர் வாளாவிருப்பது, அவன் தாயை நினைந்து இரக்கப்பட்டே' என்பது கருத்து.

317. பெறுவது கொள்பவர் தோள்போல், நெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லாம் எளிய, நூல்;-மற்றம்
முறிபுரை மேனியர் உள்ளம் போன்று, யார்க்கும்
அறிதற்கு அரிய பொருள்.

எல்லா வகையான நூல்களும், பெறுதற்குரிய பொருளைப் பெற்றுக்கொண்டு இசைகிற வேசிமாரின் தோள்களைப் போலப், படிப்பதற்கு உரிய வழிகளிலே தலைப்பட்டுப் படிக்கிறவர்களுக்கு எல்லாம் எளிதாகவே வந்து கைகூடுவனவாகும். மற்றுத் தளிரையொத்த மேனியாரான அந்த வேசியர்களுடைய உள்ளத்தைப் போன்று எவருக்கும் எளிதிலே அறியமுடியாத பொருள் அருமையினை அவை உள்ளாக உடையனவுமாகும்.

'கற்கும் முறைமைப்படி கற்பவர்க்கு எல்லா நூல்களும் எளிதாகக் கைவரினும், அவற்றின் நுண்பொருளை உணர்தல் சிலரான அறிவுத் திட்பம் உடையவர்களுக்கே கைகூடுவதாகும்' என்பது கருத்து.

318. புத்தகமே சாலத் தொகுத்தும், பொருள் தெரியார்,
உய்த்தகம் எல்லாம் நிறைப்பினும், - மற்றவற்றைப்
போற்றும் புலவரும் வேறே; பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு.

புத்தகங்களை மாத்திரமே மிகுதியாகத் தொகுத்து வைத்திருந்தும், அவற்றின்கண் சொல்லப்பட்டிருக்கும் நுண் பொருள்களை அறியாதவராகி, அவற்றைக் கொண்டுவந்து வீடெல்லாம் நிறைத்தாலும், அப்புத்தகங்களைப் பாதுகாக்கும் புலவரும் வேறாயிருப்பார்கள்; அவற்றின் பொருள்களை அறிந்து பிறருக்குத் தெளிவிக்கும் அறிவுடையோரும் வேறாகவே இருப்பார்கள்.

'புத்தகம் தொகுப்பது மட்டுமே புலமை ஆகாது; அவற்றைக் கற்றுத் தாம் தெளிந்து பிறருக்கும் சொல்லித் தெளிவுறுத்தும் அறிவுச் செழுமையே புலமையாகும்' என்பது கருத்து.

319. பொழிப்பு, அகலம், நுட்பம், நூல் எச்சம், இந் நான்கின்
கொழித்து, அகலம் காட்டாதார் சொற்கள்-பழிப்பில்
நிரையாமா சேக்கும் நெடுங்குன்ற நாட
உரையாமோ, நூலிற்கு நன்கு?

குறை சொல்வதற்கு இல்லாத கூட்டமாகிய காட்டுப் பசுக்களைத் தம்மிடத்திலே சேரச் செய்கின்ற, உயர்ந்த மலைகளையுடைய நாட்டின் அரசனே! பொழிப்புரையும், அகலவுரையும், நுட்பவுரையும், எச்சவுரையும் ஆகிய இந்நான்கு உரைகளாலும், நன்றாக ஆராய்ந்து பொருள் விரிவைக் காட்டாதவருடைய சொற்கள், ஒரு நூலிற்கு நல்ல உரையாகுமோ? ஆகமாட்டாதெனஅறிவாயாக.

பொழிப்பு-கருத்து விள்ளும்படி தொகுத்துச் சொல்வது. அகலம்-பதப் பொருள் முதலியவற்றை நியாயம் காட்டி விரித்துச் சொல்வது. நுட்பம் - சொல் நுட்பம், பொருள் நுட்பம் ஆகியவற்றைக் காட்டுவது. எச்சம்- பாடலிற் சொல்லப்படாது எஞ்சிய தொடர்புடைய செய்திகளைச் சொல்லுதல். இவையே உரையமைதியின் இலக்கணம் ஆகும்.

**320. இற்பிறப்பு இல்லார் எனைத்துநூல் கற்பினும்**
**சொற்பிறரைக் காக்கும் கருவியரோ?-இற்பிறந்த**
**நல்லறி வாளர், நவின்ற நூல் தேற்றாதார்**
**புல்லறிவு தாமறிவ தில்.**

நல்லகுடியிலே பிறந்த பிறப்பின் உயர்வு இல்லாதவர்கள், எவ்வளவு நூல்களைக் கற்றாலும், கல்லாத பிறரின் சொற்களை இகழாமற் காத்தற்கு உரிய அடக்கம் முதலிய கருவிகளை உடையவர்களாவார்களோ? அல்லர். நல்ல குடியிலே பிறந்த நல்ல அறிவாளர்கள், பெரியோர் சொன்ன நூல்களிலே தெளியாதவருடைய ஈனமான அறிவினைத் தாம் உன்னிப்புடன் கவனித்து அறிந்து கொள்வதே ஒருபோதும் இல்லையாகும்.

'நற்குடிப் பிறந்த நல்லறிவாளர், பிறர் புல்லறிவைக் கவனியார், அவரைத் தூற்றவும் செய்யார்' என்பது கருத்து.

## 6. பகை இயல்

மனிதனுக்குப் பகையாவது உட்பகை என்றும், புறப்பகை என்றும் இருவகைப்படும். புறப்பகை, தன்னை ஒழிந்த பிறராலும் பிறவற்றாலும் தனக்கு எதிராக அமைவது. அது, ஊழ்வினை வசத்தாலும் பிறரின் அறியாமை வசத்தாலும் ஏற்படுதல் கூடும். ஆனால் அதுபோலன்று உட்பகை. அது, தன் உள்ளத்து உணர்வுகளை ஒருவன் ஒருநெறிப் படுத்தாததன் விளைவாகவே ஏற்படுவது. இதனால், உலகிலே பகைகடிந்து வாழ விரும்புகிறவன், முதலிலே, தன்னுடைய உட்பகையினைக் கடிந்து

ஒழித்தலிலேயே மிகுதியான கவனஞ் செலுத்துதல் வேண்டும் என்பது தெளிவாகும்.

அப்படிப்பட்ட உட்பகைகளுள், புல்லறிவாண்மை, பேதைமை, கீழ்மை, கயமை ஆகியனபற்றிக் கூறுவது இந்த இயல் ஆகும்.

நல்லன தீயனவற்றைப் பகுத்தறிந்து, நல்லனவே கொண்டு, தீயனவெல்லாம் விலக்கி வாழும் வாழ்வின் செப்பத்திற்கு இவை கேடு விளைவிப்பனவாதலால், இவற்றை அனைவரும் அறிந்து போக்குதல் வேண்டும் என்பது தெளிவு.

## 33. புல்லறிவாண்மை

ஒருவன், தான் சிற்றறிவு உடையவனாக இருந்து கொண்டே மென்மேலும் கல்வியாலும் கேள்வியாலும் அதனை முற்றறிவாக்கிக் கொள்ள நினையாமல், தன் சிற்றறிவுடைமையையே பேரறிவுடைமையாக மதித்துச் செருக்குற்று, உயர்ந்தோர்களின் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளாது போதலே புல்லறிவாண்மை ஆகும்.

புன்மை+அறிவு=புல்லறிவு; அதாவது சிறுமையான அறிவு. அதனை ஆள்பவர் புல்லறிவாளர்; அதாவது சிற்றறிவினர்.

அவைக்குப் புல்லறிவாளர் உரிமையான தகுதி உடையவர் அல்லர். ஆயினும், அவர் சென்று புகுந்த அந்த அவையின் தன்மையை அறியாது அதிற் பிறர் கலந்து கொள்ளுதலும் புல்லறிவாண்மையே யாகும். இது பற்றியே, அவையறிதலை அடுத்து இந்தப் பகுதி அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

**321. அருளின் அறமுறைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்**
**பொருளாகக் கொள்வர் புலவர்; -பொருளல்லா**
**ஏழை அதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை**
**மூழை சுவையுணரா தாங்கு.**

பிற உயிர்களிடத்தே தமக்கு இயல்பாக உள்ள அருளின் காரணமாக அறநெறிகளை எடுத்துச் சொல்லுகின்ற அன்புடையாளரின் வாய்ச் சொற்களை அறிவுடையோர், தமக்குப் பயன் தரும் மெய்ப்பொருளாகக் கருதி ஏற்றுக்கொள்வார்கள். ஒரு பொருளாகக் கருதப்படுவதற்கும் இல்லாத மூடனோ, பாற்சோற்றின் சுவையை அகப்பை அறியாததுபோல, அதன் பயனை அறிந்து உணரமாட்டாத வனாக, அதனை இகழ்ந்து பேசுவான்.

'அறிவுடையோரின் பேச்சுகளை இகழ்வாகச் சுட்டிப் பேசுவான் புல்லறிவாளன்' என்பது கருத்து.

322. **அவ்வியம் இல்லார் அறத்தாறு உரைக்குங்கால்,**
**செவ்வியர் அல்லார் செவிகொடுத்தும் கேட்கலார்,**
**கல்வித்தோல் தின்னும் குணுங்கர்நாய் பாற்சோற்றின்**
**செவ்வி கொளல்தேற்றா தாங்கு.**

தோலை வாயினாலே கௌவித்தின்னும் இயல்பினை உடைய புலையருடைய நாயானது, பாலோடு கூடிய சோற்றினது நல்ல சுவையை அறிந்து கொள்ளுதலிலே தெளிவில்லாததாய் இருக்கும். அதைப்போலவே, பொறாமை முதலிய மனக்குற்றம் இல்லாத சான்றோர்கள் அறநெறியினை எடுத்துச் சொல்லுங் காலத்திலே, நற்குணமில்லாத புல்லறிவாளர்கள், அதனைக் காது கொடுத்துக் கேட்க மாட்டார்கள்.

'புல்லறிவாளர், நல்ல நெறிகளிலே மனஞ்செலுத்த மாட்டார்கள்; புன்மையானவற்றிலேயே மனங்கொள்ளுவர்' என்பது கருத்து.

323. **இமைக்கும் அளவில்தம் இன்னுயிர்போம் ஆற்றை**
**எனைத்தானுந் தாங்கண் டிருந்தும்,-தினைத்துணையும்**
**நன்றி புரிகல்லா நாணின் மடமாக்கள்**
**பொன்றிலென் பொன்றாக்கால் என்?**

கண்ணிமைக்கின்ற அளவிலே தானே, தம்முடைய இனிய உயிரானது போய்விடும்படியான வழியுடைய தென்பதை எல்லாவகையானும் தாம் அறிந்திருந்தும், தினையளவேனும் நல்ல செய்கைகளைச் செய்தலில்லாத வெட்கமற்ற மட மனிதர்கள், இறந்தால்தான் என்ன? அன்றி, இறவாமல் இருந்தால்தான் என்ன? இரண்டும் உலகிற்கு ஒன்றேதான் என்பது முடிவு.

'புல்லறிவாளர் நன்றி புரிதலிலே மனஞ்செலுத்த மாட்டார்' என்பது கருத்து. அவரால் உலகுக்கும் பயனில்லை; அவருக்கும் பயனில்லை என்பதும் சொல்லப் பட்டது.

324. **உளநாள் சிலவால்; உயிர்க்கேமம் இன்றால்;**
**பலர்மன்னும் தூற்றும் பழியால்; -பலருள்ளும்**
**கண்டாரோடு எல்லாம் நகாஅது, எவனொருவன்**
**தண்டித் தனிப்பகை கோள்?**

வாழ்ந்திருக்கிற நாட்களோ மிகவும் சிலவாகும்; உயிர்க்கு உடலை விட்டுப் போகவிடாது காத்து நிற்கும் காவலும் யாதொன்றும் இல்லை; இந்த உலகத்திலே பல பேர்கள் வெளியிட்டுக் கூறுகின்ற பழிச்சொற்களும் மிகுதியாகும். இப்படியிருக்கவும், உலகத்திலுள்ள பல பேர்களுக்குள்ளும், காணப்படுகிற அனைவரோடும் எல்லாம் இனிதாகக் கூடி வாழ்ந்து மகிழாமல், ஒருவன், எவரோடும் கூடாமல் விலகி நின்று, தான் தனியாகவேயிருந்து பிறரோடு பகைமை பாராட்டுதல் எதற்காகவோ?

'அப்படித் தனித்திருந்து பகைமை பாராட்டுதல் புல்லறிவாண்மையின் விளைவு' என்பது கருத்து. தண்டி-கெட்டு; விலகி நின்று.

**325 எய்தி இருந்த அவைமுன்னர்ச் சென்று எள்ளி,**
**வைதான் ஒருவன் ஒருவனை;-வைய**
**வயப்பட்டான் வாளா இருப்பானேல், வைதான்**
**வியத்தக்கான், வாழும் எனின்.**

பலபேர் கூடியிருந்த அவைக்கு முன்னே ஒருவன் சென்று அங்கிருந்த ஒருவனை இகழ்ந்துபேசி வைதான். அப்படி அவன் வையவும் அவனால் வையப்பட்டவன் பொறுமையுடன் சும்மா இருப்பானானால், வைதவன் அதன்மேல் வாழான். அங்ஙனம் இருந்த பின்னும், அவன் உயிரிழக்காது வாழ்ந்தானென்றால் அவன் வியக்கத்தக்கவனே யாவான்!

'அவையிற் சென்று ஒருவரை எள்ளி வைதல் புல்லறிவாண்மை' என்பது கருத்து.

**326. மூப்புமேல் வாராமை முன்னே, அறவினையை**
**ஊக்கி, அதன்கண், முயலாதான், -நூக்கிப்,**
**'புறத்திரு; போகு' என்னும் இன்னாச்சொல் இல்லுள்**
**தொழுத்தையாற் கூறப் படும்.**

தன் உடலின் மேல் மூப்பானது வந்து சேராமைக்கு முன்பாகவே, அறச்செயல்களை மேற்கொண்டு, அந்த வகையிலே முயற்சி எடுத்துக் கொள்ளாதவன், தன் வீட்டினுள்ளேயே ஒதுக்கித் தள்ளப்பட்டும், 'வெளியே போய் இரு, இவ்விடம் விட்டுப் போய்விடு' என்றும் சொல்கிற இனிமையில்லாத சொற்களை, வேலைக்காரியாலும் சொல்லப் படுகின்ற கேவலமான ஒரு நிலைமையே அடைவான்.

'புல்லறிவாளன்' பொருள் தன் உரிமையிலிருக்கும் போது அறஞ் செய்யாமல், முதுமைப் பருவத்திலே அப்படிச் செய்ய நினைப்பினும், பொருள் அவன் ஆட்சியில் இல்லாததால், அவமானப்படுதலே நேரும்' என்பது கருத்து.

**327. தாமேயும் இன்புறார், தக்கார்க்கும் நன்றாற்றார்;**
**ஏமஞ்சார் நன்னெறியும் சேர்கலார்;-தாம் மயங்கி**
**ஆக்கத்துள் தூங்கி அவத்தமே வாழ்நாளைப்**
**போக்குவார் புல்லறிவி னார்.**

அற்பமான அறிவை உடையவர்கள், பொருள் பெற்ற காலத்துத் தாமாகிலும் இன்புறமாட்டார்கள்; தகுதியுடையவர்க்குக் கொடுத்து உதவி நன்மை செய்யவும் மாட்டார்கள்; உயிருக்குப் பாதுகாப்பாகப் பொருந்திய நல்ல அறநெறியினையும் அடையமாட்டார்கள்; தாங்கள் மயக்கங் கொண்டு, அந்தச் செல்வத்திலே கிடந்து உறங்கித் தம் வாழ்நாளை எல்லாம் வீழ்நாளாகவே கழிப்பார்கள்.

'புல்லறிவாளர் செல்வம் பெற்றாலும், அதன் பயனை அநுபவியாது சாவார்கள்' என்பது கருத்து.

**328. சிறுகாலை யேதமக்குச் செல்வுழி வல்சி**
**இறுகிறுகத் தோட்கோப்புக் கொள்ளார்-இறுகிறுகிப்**
**'பின்னறிவாம்' என்றிருக்கும் பேதையார், கைகாட்டும்**
**பொன்னும் புளிவிளங்கா யாம்.**

இளமைப் பருவத்திலேயே, தாம் மரணமடைந்தபின் போகும் இடத்திற்குரிய தருமப் பயனான கட்டுச் சோற்றை மிகவும் அழுத்தமாகக் கட்டித் தோள் மூட்டையாக அமைத்துக் கொள்ளாதவர்கள் எல்லாரும் புல்லறிவாளர்கள். பணத்தைச் சிக்கென அழுத்தமாகப் பற்றிக் கொண்டு, 'தருமத்தைப் பற்றி பின்னே கருதுவோம்' என்றிருக்கும் மூடர்கள், தம் சாவுக் காலத்திலே தானஞ்செய்ய நினைத்துக் கையாற் சைகை காட்டும் பொன் திரளும் கூடப் புளிப்பான விளாங்காயாகி விடும்.

'போகிற காலத்தில் அவன் தருமஞ் செய்ய நினைத்தாலும், அவன் பழைய குணமறிந்த பிறர் அதற்கு ஏற்பன செய்யார்; அவன் எண்ணம் நிறைவேறாது போகும்' என்பது கருத்து.

**329. வெறுமை இடத்தும், விழுப்பிணிப் போழ்தும்,**
**மறுமை மனத்தாரே யாகி, -மறுமையை**

**ஐந்தை அனைத்தானும், ஆற்றிய காலத்துச்**
**சிந்தியார் சிற்றறிவி னார்.**

*புல்லறிவாளர்கள், செல்வமில்லாத காலத்திலும், மிகுந்த நோய் வந்து பற்றிய காலத்திலும் மறுமைக்குரிய அறத்தினைச் செய்யும் கருத்தினை உடையவர்களாகி இருப்பார்கள். செய்யக் கூடிய காலத்திலோ, மறுமைக்குரிய தருமச் செயல்களைச் சிறு கடுகின் அளவாயினும் சிந்திக்கவே மாட்டார்கள்.*

*'தமக்குத் துன்பம் வந்த காலத்தில் தருமத்தைப்பற்றி நினைக்கும் சிற்றறிவினர், அது நீங்கிய காலத்து அந்தத் தரும நினைவையும் அடியோடு மறந்து விடுவார்கள்' என்பது கருத்து.*

330. **என்னே மற் றிவ்வுடம்பு பெற்றும் அறம்நினையார்,**
**கொன்னே கழிப்பர்தம் வாழ்நாளை-அன்னோ**
**அளவிறந்த காதற்றம் ஆருயிர் அன்னார்க்**
**கொளவிழைக்கும் கூற்றமுன் கண்டு.**

*உலகத்திலே புல்லறிவாளர்கள், அறநெறிகளை இயற்றுவதற்கு உதவியான இவ்வுடலினைப் பெற்றிருந்தும், அளவு கடந்த ஆசைக்கு உரியவரான தம்முடைய ஆருயிர் அனையவரைக் கொண்டுபோக முயற்சி செய்கிற கூற்றத்தின் செயலைக் கண்டும், தாம் தருமசிந்தனை இல்லாதவர்களாகித் தம் ஆயுளை வீணாகக் கழிக்கின்றார்களே? ஐயகோ? இது என்ன காரணமோ?*

*'யாருக்காகப் பொருள் சேர்க்கிறார்களோ அவரே போய்விட்ட பின்னும், பொருளைச் செலவிடாது உலோபராயிருப்பவர் புல்லறிவாளர்' என்பது கருத்து.*

## 34. பேதைமை

*பேதைமையாவது முழு மூடத்தனம் ஆகும். 'புல்லறிவு' சிறிது அறிந்தும் பெரிதும் அறியாமையும் உடைய செருக்கின் பாற் பட்டது. ஆனால், பேதைமையோ தானாக எதனையும் சிந்திக்கும் தன்மையே இல்லாத நிலைமை.*

*இதனால், யாராயினும் ஒருவர், ஏதேனும் சொன்ன விடத்து, அதன் தராதரங்களை முற்றவும் தான் ஆராய்ந்து உணராமல் அதனையே உறுதியாகப் பற்றிக் கொண்டு, துன்பத்துக்கு உள்ளாகும் நிலையும் ஏற்படக்கூடும். ஆகவே, இத்தகையோர் நிலைமை மிகவும் ஆபத்தானது.*

மனிதனின் உட்பகையாக விளங்கி அவனுடைய நற்செயல்களுக்கான முயற்சிகளிலே நடைக்கல்லாக விளங்குவது இப்பேதைமைப் பண்பாதலினால், இதனைப் பகை இயலுள் கொண்டனர்.

'கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை' என்னும் மாதர்க்கு அணிகலனாகிய பேதைமையும், இந்த முழு மூடத்தனமும் ஒரே தன்மையெனக் கருதுதல் வேண்டா. அது வேறு; இது வேறு.

**331. கொலைஞர் உலையேற்றித் தீமடுப்ப, ஆமை**
**நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே-**
**கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப, ஈண்டை**
**வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.**

கொல்லும் தொழிலிலே வல்லமை உடையதான பெரிய கூற்றமானது, தம் உயிரைக் கொண்டு போவதற்குரிய தக்க வேளையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்க, இவ்வுலக வாழ்வாகிய வலையினிடத்திலே சிக்கி மிகவும் களித்திருக் கிறவர்களுடைய தன்மையானது, வேடர்கள், உலைநீர்ப் பாத்திரத்தை அடுப்பின்மேல் ஏற்றித் தீமூட்ட, அப் பாத்திரத்திலே வேகுவதற்காக இடப்பட்ட ஆமையானது. தன்னுடைய ஆபத்தான நிலைமையைச் சற்றேனும் அறியாமல், அந் நீரிலேயே முழுகிமுழுகி விளையாடிக் கொண்டிருப்பதைப் போன்றதாகும்.

பேதைமை உடையவரின் இயல்பு கூறப்பட்டது.

**332. பெருங்கடல் ஆடிய சென்றார், 'ஒருங்குடன்**
**ஓசை அவிந்தபின் ஆடுதும்' என்றற்றால்-**
**'இற்செய் குறைவினை நீக்கி, அறவினை**
**மற்றறிவாம்' என்றிருப்பார் மாண்பு.**

"குடும்பத்தின் நன்மைக்குச் செய்ய வேண்டிய காரியக் குறைகளை எல்லாம் முதலிலே போக்கிவிட்டு, அறவினைகளை எல்லாம் பின்னாலே கருதுவோம்" என்று கருதி இருப்பவர் களது தன்மையானது, பெருங்கடலிலே நீராடுவது குறித்துச் சென்றவர்கள், 'இக்கடலின் ஒலி முழுவதும் அடங்கிய பின்னர் நாம் நீராடுவோம்' என்று அது ஒலியடங்கக் காத்திருந்தாற் போன்றதாகும்.

'கடல் என்றும் ஒலியடங்காதது போலவே குடும்பக் காரியங்களும் என்றும் முற்றவும் நிறைவுறா. அதனால்,

*அவ்வப்பொழுதே அறவினைகளில் மனஞ் செலுத்துக' என்பது கருதது. செலுத்தாதார் பேதைமையாளர் என்பது தேற்றம்.*

**333. குலம், தவம், கல்வி, குடிமை, மூப்பு, ஐந்தும்**
**விலங்காமல் எய்தியக் கண்ணும், -நலஞ்சான்ற**
**மையறு தொல்சீர் உலகம் அறியாமை**
**நெய்யிலாப் பாற்சோற்றின் நேர்.**

*உயர்குடிப் பிறப்பும், நல்ல தவமுயற்சிகளும், கல்வியும், செல்வத்தாலாகும் குடித்தனப் பாங்கும், ஒழுக்கத்தின் முதிர்ச்சியும் ஆகிய இவ்வைந்தும் தவறாமல் ஒருவனுக்கு வந்து பொருந்தியபோதும், நன்மை மிகுந்த குற்றமற்ற பழமையான சிறப்பையுடைய உலகத்துக்கு ஏற்ற செயல்களைச் செய்வதை அறியாமலிருப்பது, நெய் இல்லாத பாற்சோற்றுக்குச் சமமானதாகும்.*

*'இம்மையில் அவன் எல்லாம் பெற்றும் மறுமைக் காவன செய்யாததனால் பேதைமையாளனே' என்பது கருத்தாகும்.*

**334. கல்நனி நல்ல, கடையாய மாக்களின்**
**சொல்நனி தாமுணரா வாயினும்; - இன்னினியே**
**நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல், என்று**
**உற்றவர்க்குத் தாமுதவ லான்.**

*பிறர் தம்மிடத்தே சொல்லும் சொற்களைத் தாம் கேட்டு உணர்ந்து கொள்ள மாட்டாதவராயினும், தம்மை அடைந்தவர் களுக்கு அப்போதே தம்மேல் நிற்பதற்கும், இருப்பதற்கும், படுப்பதற்கும், நடந்து செல்வதற்கும் என்ற காரியங்களுக்குத் தாம் உதவியாக அமைவதனால், கீழ்மையான மனிதர்களைக் காட்டினும், கற்களே ஒருவகையில் மிகவும் நல்லவைகளாகும்.*

*'பிறருக்கு உதவியாயிருக்கும் கற்கள், உதவாது பேதை மாக்களினும் சிறந்தவை என்று கூறுவதன் மூலம், பேதையர் கல்லினும் கடையர்' என்றனர்.*

**335. பெறுவதொன்று இன்றியும், பெற்றானே போலக்**
**கறுவுகொண்டு, ஏலாதார் மாட்டும் - கறுவினால்**
**கோத்தின்னா கூறி உரையாக்காற், பேதைக்கு**
**நாத்தின்னானும், நல்ல சுனைத்து!**

*தன்னாற் பெறத்தக்கதான பயன் ஒன்றேனும் இல்லாமலிருந்தும், ஏதோ ஒரு பயனைத் தான் அடைந்தவனே போலத் தன் சினத்தை ஏற்கத்தகாத எளியோரிடத்தினும் பகை*

கொண்டு, கோபத்தினாலே துன்பந்தரும் சொற்களைக் கூட்டிச் சொல்லி, அவர்களிடத்தே கடிந்து சொல்லாமற் போனால், பேதைமையாளனுக்கு நல்ல தினவானது அவனது நாக்கினை மிகவும் வருத்தும் போலும்.

'பயனிருக்கிறதோ இல்லையோ, பிறரைப் பழித்துப் பேசாமற் போனால் மூடனுக்கு நாத்தினவு தீராது' என்பது கருத்து.

**336. தம்கண் மரபில்லார் பின்சென்று, தாம், 'அவரை**
**எம்கண் வணக்குதும்' என்பவர்-புன்கேண்மை**
**நற்றளிர்ப் புன்னை மலரும் கடற்சேர்ப்ப!**
**கற்கிள்ளிக் கையிழந் தற்று.**

நல்ல தளிர்களோடும் கூடிய புன்னை மரங்கள் மலர்ந்திருக்கும் படியான கடற்கரைச் சோலைகளுக்கு உரிய அரசனே! தம்மிடத்திலே எவ்வகையான ஒரு முறைமையும் இல்லாதவர்களின் பின்னே சென்று, 'அவர்களை எம்மிடத்தே வணங்கி நிற்கச் செய்வோம்' என்று கூறுபவர்களுடைய அற்பமான உறவானது, கல்லைக் கிள்ளிக் கையைப் போக்கிக் கொண்டது போன்றதாகும்.

'அற்ப குணமுள்ள மூடரை எவராலும் திருத்த முடியாது' என்பது கருத்து. அவருடைய உறவு கொள்பவருக்குத் தீங்காகவே முடியுமென்பது தேற்றம்.

**337. ஆகாது எனினும் அகத்து நெய் உண்டாகின்,**
**போகா தெறும்பு புறஞ்சுற்றும்,-யாதும்**
**கொடாஅர் எனினும், உடையாரைப் பற்றி**
**விடாஅர், உலகத் தவர்.**

ஒரு பாத்திரத்தின் உள்ளே நெய் இருக்குமானால் அது தமக்குக் கிட்டாததேயானாலும் அந்தப் பாத்திரத்தை விட்டு அகன்று போகாமல் எறும்புகள் அதன் வெளிப்புறத்திலேயே விடாமற் சுற்றிக் கொண்டிருக்கும். அதுபோலவே, செல்வம் உடையவரை அவர் எதுவும் கொடாதவரே என்றாலும், உலகத்திலுள்ள பேதை மாக்கள் அவர்களைப் பற்றிக் கொண்டிருப்பாரே யன்றி, விட்டு நீங்கவே மாட்டார்கள்.

'பேதைகள் உலோபிகளான செல்வர்களைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள்' என்பது கருத்து.

338. நல்லவை நாள்தோறும் எய்தார்; அறஞ்செய்யார்;
இல்லாதார்க்கு யாதொன்றும் ஈகலார்,-எல்லாம்
இனியார் தோள் சேரார்; இசைபட வாழார்,
முனியார்கொல் தாம்வாழும் நாள்?

ஒவ்வொரு நாளும் பெறத்தக்க நன்மைகளை நாடி அடையமாட்டார்கள்; தருமத்தையும் செய்யமாட்டார்கள்; வறியவர்களுக்கு ஏதொன்றும் கொடுக்கவும் மாட்டார்கள்; இனிமையான தம் மனைவியரது தோள்களைத் தழுவி இன்புறவும் மாட்டார்கள்; புகழ் உண்டாகும்படி வாழவும் மாட்டார்கள்; இப்படிப்பட்ட மூடர்கள் தாம் வாழும் நாட்களை எல்லாம் வெறுக்கவாவது மாட்டார்களோ?

'அப்படி வெறுக்காமலிருப்பது அதிசயமே' என்பது கருத்து. அவர்கள் வாழ்தல் பயனற்றது என்பது முடிவு.

339. விழைந்தொருவர் தம்மை வியப்ப, ஒருவர்
விழைந்திலேம் என்றிருக்கும் கேண்மை,-தழங்குகுரல்
பாய்திரைசூழ் வையம் பயப்பினும், இன்னாதே,
ஆய்நலம் இல்லாதார் மாட்டு.

ஆராயப்பட்ட நற்குணங்கள் இல்லாதவர்களான மூடர்களிடத்திலே, எவராகிலும் ஒருவர் விரும்பித் தம்மைக் கொண்டாட, அப்படிக் கொண்டாடப்பட்ட மற்றொருவர், 'நாங்கள் விரும்பினோமில்லை' என்றிருக்கும் தொடர்பானது, முழங்குகின்ற ஒலியினைப் பொருந்திய பாய்ந்துவரும் அலைகளையுடைய கடல் சூழ்ந்த பூமி முழுவதையும் தருவதாயிருந்தாலும், சான்றோருக்கு இனிமையற்றதே யாகும்.

'மூடர் உறவு எவ்வளவு பெரிதானாலும் சான்றோர் அதனை விரும்ப மாட்டார்' என்பது கருத்து.

340. கற்றனவும், கண்ணகன்ற சாயலும், இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும்; தானுரைப்பின்
மைத்துனர் பல்கி, 'மருந்திற் றணியாத
பித்தன்' என்று எள்ளப்படும்.

ஒருவன் கற்ற கல்விகளும், அவனிடத்திலே மிகுதியாக வுள்ள மென்மைக் குணமும், அவனுடைய உயர் குடிப்பிறப்பும் என்னும் இவைகளெல்லாம், அயலார்கள் கொண்டாடி னால்தான் பெருமை அடையும். அவைகளை உடையவன், தானே அவற்றைச் சொல்லிக் கொண்டால் மைத்துனர்கள்

அதிகமாகி, 'மருந்தினால் தணியாத பித்தங் கொண்டவன் இவன்' என்று இகழ்ந்து நகையாடவே படுவான்.

மைத்துனக் கேண்மையினர் பரிகாசம் செய்பவராதலால், பரிகாசஞ் செய்பவர் பெருகுதலை, 'மைத்துனர் பெருகி' என்றார். 'மூடன் தனக்குத்தானே பெருமை பேசித் தம்பட்டம் அடித்துக் கொள்வான்' என்பது கருத்து.

## 35. கீழ்மை

'கீழ்மையாவது' கீழமையான குணமுடைய மக்களது தன்மை. இத்தகைய குணம் உடையோர் எவ்வளவுதான் அறிவுறுத்தப்பட்டாலும், செல்வம், தகுதி முதலியவற்றால் உயர்நிலை பெற்றாலும், தத்தம் குணத்தைக் கைவிட மாட்டார்கள்.

இத்தகைய கீழ்மைக்குணம், ஒருவனை என்றும் நல்வழிகளிலே ஈடுபடவிடாமல் கீழான செயல்களிலேயே சதா செலுத்திக் கொண்டிருப்பதாகும். அறநெறிப்பட்டு ஒழுகித் தன் ஆன்மாவிற்கான உறுதிப் பயன்களைத் தேடுவதற்காகப் பெற்ற மனிதப் பிறப்பு, இந்தக் குணத்தினால் வெறும் பாழாகிக் கழியும்.

மேலும், இந்தக் குணத்தால், இவன் செய்யும் கீழ்த்தரமான செயல்களால் வரும் பழிபாவங்கள் இவனை அடுத்துப் பிறபிற பிறவிகளிலும் தொடர்ந்து வந்து துன்புறுத்தும். உட்பகைகளுள் ஒன்றான இதனைப் பற்றிக் கூறுவது இப் பகுதி.

**341. கப்பி கடவதாக் காலைத்தன் வாய்ப் பெயினும்,**
**குப்பை கிளைப்போவாக் கோழிபோல், -மிக்க**
**கனம் பொதிந்த நூல்விரித்துக் காட்டினும், கீழ் தன்**
**மனம்புரிந்த வாறே மிகும்.**

வளர்ப்பவன், தன் கடமையாகக், காலத்தால் தானியத்தைத் தன் வாயிலே போட்டான் என்றாலும் கூடத் தன் இயல்பினாலே குப்பையைக் கிளறுதலை விட்டொழியாத கோழியைப்போல, மிகுந்த மேன்மை நிறைந்திருக்கிற நூற்களின் பொருள்களை விளக்கி விளக்கித் தெரிவித்தாலும், கீழ்மைக் குணமுடையவன் தன் இயல்பினாலே தன் மனம் போனபடி யேதான் வரம்புகடந்து நடப்பான்.

'கீழ்மையாளனின் மனம் என்றும் கீழ்மையான வற்றிலேயே செல்லும்' என்பது கருத்து.

342. 'காழாய கொண்டு, கசடற்றார் தம்சாரல்,
தாழாது போவாம்' என வுரைப்பின்-கீழ்தான்,
உறங்குவாம் என்றெழுந்து போமால், அஃதன்றி
மறங்குமாம், மற்றொன் றுரைத்து.

*''உறுதியான நூற்பொருள்களைத் தமதாக்கிக் கொண்டு குற்றமற்றவராக விளங்கும் பெரியோர்களின் பக்கலிலே, நாம் காலந்தாழ்த்தாது போவோம்' என்று சொன்னால், கீழ்மைக் குணம் உடையவன், 'நாம் உறங்குவோம்' என்று சொல்லி உறங்குவதற்கு எழுந்து போவான்; அஃதன்றியும் வேறொரு காரணத்தைச் சொல்லியும் வரமறுத்துச் செல்வான்.*

*'கற்றவரிடம் போவதையே வெறுத்தும் மறுத்தும் ஒதுங்கிப் போவான் கீழ்மகன்' என்பது கருத்து.*

343. பெருநடை தாம்பெறினும், பெற்றி பிழையாது
ஒருநடையர் ஆகுவர், சான்றோர்; -பெருநடை
பெற்றக் கடைத்தும், பிறங்கருவி நன்னாட!
வற்றாம் ஒருநடை, கீழ்.

*விளங்குகின்ற மலையருவிகளுடைய நல்ல நாட்டை உடையவனே! சான்றோர்கள் பெரிய சிறப்பினையே தாம் பெற்ற காலத்தினும், தம்முடைய தன்மையினின்றும் எள்ளளவும் மாறுபடாமல், எப்பொழுதும் ஒரே நடத்தையுடையவர்கள் ஆவார்கள். கீழ்மகனோ பெரிய சிறப்பினைத் தன் ஊழ்வினை வசத்தினால் பெற்ற காலத்திலும் தன் முந்திய நடத்தைக்கு மாறுபட்ட ஒரு நடத்தையிலேயே வல்லவனாகத் திகழ்வான்.*

*'எவ்வளவு மேன்மை வந்தாலும் சான்றோர் தம் சிறந்த பண்புகளின்றும் மாறாதவர்களாயிருப்பர். கீழ் மக்களோ, பெருமை பெற்ற காலத்துச் செருக்கிக் குணம் வேறுபடுவர்' என்பது கருத்து.*

344. தினையனைத்தே ஆயினும் செய்தநன்று உண்டால்,
பனையனைத்தா உள்ளுவர், சான்றோர்;-பனையனைத்து
என்றுஞ் செயினும், இலங்கருவி நன்னாட;
நன்றில் நன்றறியார் மாட்டு

*விளங்குகின்ற மலையருவிகளையுடைய நல்ல நாட்டை உடையவனே! ஒருவன் செய்த உதவியை, அது தினைத் தானியத்தின் அளவிற்குச் சிறியதேயானாலும், சான்றோர்கள், பனையளவு பெரிதாகக் கருதுவார்கள். என்றும் பனையளவான*

உபகாரங்களைச் செய்து கொண்டேயிருந்தாலும் செய்த நன்றி அறியாத கீழ் மக்களிடத்திலே அவ்வுதவிகள் சிறப்பு உடையனவாக ஒருபோதும் நினைக்கப்படவே மாட்டா.

'கீழோர் நன்றியறிதலும் அற்றவர்கள்' என்பது கருத்து.

**345. பொற்கலத்து ஊட்டிப் புறந்தரினும், நாய் பிறர்**
**எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும்-அச்சீர்,**
**பெருமை உடைத்தாக் கொளினும், கீழ் செய்யும்**
**கருமங்கள் வேறு படும்.**

பொற்கலத்திலே நல்ல உணவை இட்டு ஊட்டி ஊட்டி உபசரித்து வளர்த்து வந்தாலும், நாயானது, பிறருண்டு எறிந்த எச்சில் இலைக்கே கண் இமையாது எதிர்பார்த்திருக்கும். அத்தன்மை போலவே, சிறப்புள்ளவனாக ஏற்றுக் கொண்டாலும் கூடக் கீழ்மகன் செய்யும் செயல்கள் எல்லாம் அந்தச் சிறந்த தன்மைக்கு வேறுபட்டனவாகவே என்றும் இருக்கும்.

'கீழோன் கீழ்மையான செயல்களையே எப்பொழுதும் செய்வான்' என்பது கருத்து.

**346. சக்கரச் செல்வம் பெறினும், விழுமியோர்**
**எக்காலும் சொல்லார் மிகுதிச்சொல்;-எக்காலும்**
**முந்திரிமேற் காணி மிகுவதேல், கீழ் தன்னை,**
**இந்திரனா எண்ணி விடும்.**

பூமண்டலம் முழுவதையுமே தமக்கு உரிமையாகக் கொண்டாற் போன்ற பெருஞ் செல்வத்தையே பெற்றாலும் சான்றோர்கள், எக்காலத்தினும், வரம்புகடந்த சொற்களைச் சொல்லவே மாட்டார்கள். முந்திரி அளவான தன் சிறு செல்வத்தின்மேல் காணியளவான மற்றொரு சிறுதொகை அதிகமாகச் சேர்ந்து விட்டாலும் கீழ்மகன், தன்னைத் தேவேந்திரனாகவே எண்ணிக் கொண்டு, வரம்பு கடந்து உடனே பேசத் தொடங்கி விடுவான்.

'கீழோர், தம்மிடத்தே சிறிது செல்வம் உயர்ந்தாலும், அதனாற் செருக்குற்று வரம்புகடந்து பேசத் தொடங்கி விடுவார்கள்' என்பது கருத்து.

**347. மைதீர் பசும்பொன்மேல் மாண்ட மணியழுத்திச்**
**செய்த தெனினும், செருப்புத் தன் காற்கே யாம்;**
**எய்திய செல்வத்தர் ஆயினும் கீழ்களைச்**
**செய் தொழிலாற் காணப்படும்.**

*குற்றமற்ற மாற்றுயர்ந்த பசும்பொன்னின் மேலாக, மாட்சிமையான இரத்தினங்களைப் பதித்துச் செய்யப்பட்டதே என்றாலும், செருப்பானது காலில் அணிவதற்கே என்றும் தகுதி உடையதாகும். அதுபோலவே பொருந்திய செல்வம் உடையவர்களானாலும், கீழ் மக்கள் அவர்கள் செய்யும் இழிவான தொழில்களால் இழிவுடையவராகவே கருதப்படுவர்.*

*'எத்துணைச் செல்வமுடையவராயினும் சான்றோர், கீழ் களைக் கீழ்களாகவே அவர்கள் செயல்களைக் கருதி மதிப்பர்' என்பது கருத்து.*

**348. கடுக்கெனச் சொல்வற்றாம்; கண்ணோட்டம் இன்றாம்;**
**இடுக்கண் பிறர்மாட்டு உவக்கும்;-அடுத்தடுத்து**
**வேகம் உடைத்தாம்; விறன்மலை நன்னாட!**
**ஏகுமாம்; எள்ளுமாம்; கீழ்.**

*பெருமை பொருந்திய மலைகளுள்ள நல்ல நாட்டை உடையவனே! ''கீழ்மகனது தன்மையானது கடுமையாகப் பேசவல்லதாம்; கண்ணோட்டம் இல்லாததாம்; பிறரிடம் உண்டான துன்பத்திற்கு மகிழ்வடைவதாம்; அடிக்கடி கோபாவேசத்தை உடையதாம்; கண்ட விடத்துச் செல்வதாம்; பிறரை இகழ்ந்து பேசுவதாம்'' என்று எல்லாம் அறிவாயாக.*

*கீழ்மக்களது இயல்புகள் இதன்கண் சொல்லப்பட்டன. கடுக்கென - கடுமையாக. வேகம் - ஆத்திரம்; கோபாவேசம்.*

**349. 'பழையர் இவர்' என்று பண்ணாட்பின் நிற்பின்**
**உழையினியர் ஆகுவர், சான்றோர், -விழையாதே,**
**கள்ளுயிர்க்கும் நெய்தல் கனைகடல் தண் சேர்ப்ப!**
**எள்ளுவர், கீழா யவர்.**

*நெய்தற் பூக்கள் தேனை ஒழுக்குகின்ற, ஒலிக்கிற கடலினது குளிர்ச்சியான கரையை உடையவனே! ஒருவர், தமது பின்னாக வந்து நின்றால் 'இவர்கள் பலநாள் பழகியவர்' என்று எண்ணி, அவர்களிடத்திலே இனிமையானவர்களாக விளங்குவர் சான்றோர்கள். கீழ்களோ, அப்படித் தம்பின் பிறர் வந்து நிற்பதையும் விரும்பாதவராக, அவரை இகழ்ந்து பேசி நிந்திப்பார்கள்.*

*'கீழோர்கள் நட்பின் தன்மையை அறியாத கீழ்மைக் குணம் உடையவர்கள்' என்பது கருத்து*

350. கொய்புல் கொடுத்துக் குறைத்தென்றும் தீற்றினும்
வையம்பூண் கல்லா, சிறுகுண்டை - ஐயகேள்;
எய்திய செல்வத்தர் ஆயினும், கீழ்களைச்
செய் தொழிலாற் காணப் படும்.

அரசனே! கேள்; கொய்யத்தக்க புல்லைக் கொய்து கொடுத்தும், கழுவுதல் முதலியவற்றால் சுத்தப்படுத்தியும் நன்றாகப் பேணினாலும், சிறிய எருதுகள், வண்டியைப் பூண்டு இழுக்க மாட்டாவாம். அது போலவே, பொருந்திய செல்வம் உடையவர்களானாலும் கீழ்களை அவர்கள் செய்யுங் காரியங்களால் பயனற்றவரென அறிதல் கூடும்.

'எவ்வளவு மேன்மைப்படுத்த முயன்றாலும், கீழோர் கீழான செயல்களையே செய்வார்கள்' என்பது கருத்து.

## 36. கயமை

'கயமை என்பதும் கீழ்மை என்பதும் ஒரே மனப் பண்பினைக் குறிப்பனவேயாகும். நல்ல குணங்கள் என்று பல காலுஞ் சொல்லப்பட்டனவெல்லாம் அமையாது ஒழிந்த சிறுமைக் குணமே, பொதுவாகக் கயமை என்று சான்றோரால் கூறப்படும்.

இக்குணம் உடையோரின் தன்மைகள், அவருடைய செல்வமும் பிற தகுதிகளும் எந்த உயரிய நிலைகளிலிருந்த காலத்தினும், கீழ்த்தரமானவைகளாகவே இருக்கும் என்பது தெளிவு.

இதனை முன் அதிகாரத்து ஓரளவு தெளிவுபடுத்தியதன் பின், மேலும் வற்புறுத்துவது கருதி, இப்பகுதியுள்ளும் வகுத்து உரைக்கின்றனர்.

இக்குணம் அமையாது காப்பது நல்வாழ்விற்கு இன்றியமையாதது என்பது கருத்தாகும்.

351. ஆர்த்த அறிவினர், ஆண்டிளையர் ஆயினும்
காத்தோம்பித் தம்மை அடக்குப: -எருவைபோல்
தீத்தொழிலே கன்றித் திரிதந்து, எருவைபோல்
போத்தரார், புல்லறிவி னார்.

நிறைந்த அறிவினை உடையவர்கள், தமது பருவத்திலே, இளையவர்களே யானாலும், தம் புலன்களைத் தீய வழிகளில் செல்லாமல் தடுத்து பாதுகாத்துத், தம்மை அடக்கி ஒழுகுமாறு

செய்து கொள்வார்கள். சிற்றறிவினரோ, தம் வயது முதிருந்தோறும் கெட்ட காரியங்களிலேயே முதிர்ச்சியுற்று, உழன்று வருந்தித் திரிந்து, கொறுக்கையைப் போல, உள்ளே தொளையாயிருப்பதனின்றும் ஒருபோதும் நீங்கவே மாட்டார்கள்.

வயது முதிர்ந்தாலும் புல்லறிவினரின் அறிவு தெளியாது என்பது கருத்து. கொறுக்கை-மேலே வன்மையாகத் தோன்றினும் உள்ளே தொளையுடையதாய் வன்மை யற்றிருப்பது. எருவை-எருவைச் சேவலும் ஆம்: கழுகின் ஒருவகை; இப்படிக் கொண்டால், 'கழுகைப்போல் என்றும் தீத்தன்மையினின்றும் நீங்கார்' என்க.

**352. செழும்பெரும் பொய்கையுள் வாழினும், என்றும்**
**வழும்பறுக்க கில்லாவாம் தேரை;-வழும்பில்சீர்**
**நூல்கற்றக் கண்ணும், நுணுக்கமொன் றில்லாதார்**
**தேர்கிற்கும் பெற்றி அரிது.**

செழிப்பான பெரிய குளத்தினுள்ளேயே எந்நாளும் தாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும், தவளைகள், தம் மேலுள்ள வழுவழுப்பான அழுக்கினை என்றும் நீக்கிக் கொள்ள மாட்டாவாம். அது போலவே நுண்ணறிவாகிய ஓர் ஆற்றல் தம்மிடத்தே இல்லாதவர்கள் குற்றமில்லாத சிறப்பையுடைய நூல்களைப் படித்த காலத்தும், அவற்றின் நுண்மையான பொருள்களை அறியும் தன்மை உடையவராதல் அருமையாகும்.

'அறிவுப் பக்குவமற்ற மூடன் என்ன படித்தும் தெளிவடையான்' என்பது கருத்து.

**353. கணமலை நன்னாட! கண்ணின் றொருவர்**
**குணனேயுங் கூறற்கு அரிதால்; -குணன் அழுங்கக்**
**குற்றம் உழைநின்று கூறுஞ் சிறியவர்கட்கு**
**எற்றால் இயன்றதோ, நா!**

தொகுதிகளான மலைத்தொடர்களையுடைய நல்ல நாட்டை உடையவனே! ஒருவருடைய நல்ல குணங்களையும்கூட அவர் எதிரிலே நின்று முகஸ்துதியாகச் சொல்லுவதற்கு நா எழல் நமக்கு அருமையாயிருக்கும். அப்படியிருக்க, ஒருவரது எதிரிலேயே நின்றுகொண்டு, அவரது நற்குணங்கள் அழியும்படியாகக் குற்றங்களையே எடுத்துச் சொல்லுகின்ற சிற்றறிவினர்க்கு அவர்களுடைய நாக்கு எந்தப் பொருளால் செய்யப்பட்டதோ?

'கீழோர், ஒருவர் உள்ளம் புண்பட்டு ஆத்திரங் கொள்ளும்படியாகக், குறைகூறித் திரியும் இயல்பினர்' என்பது கருத்து.

354. கோடேந்து அகலல்குல் பெண்டிர்தம் பெண்ணீர்மை
சேடியர் போலச் செயல் தேறார்;-கூடிப்
புதுப்பெருக்கம் போலத்தம் பெண்ணீர்மை காட்டி
மதித்திறப்பர், மற்றை யவர்.

*பக்கங்கள் உயர்ந்து அகன்ற அல்குல் தடத்தையுடைய குலமகளிர்கள், தம்முடைய பெண்தன்மையைத் தமக்குப் பணிவிடை செய்யும் பாங்கியர்போலத் தாமே சிறப்பாக அலங்கரித்துக்கொள்ளும் தன்மையை அறிய மாட்டார்கள். அவர்களினும் வேறான வேசையர்களோ வெனில், புதிதாகவரும் நீர்பெருக்கினைப்போலத் தம்முடைய பெண்தன்மையை நன்றாக அலங்கரித்துக் காட்டி ஆடவர்களோடு கலந்து நடப்பார்கள்.*

*குலமகளிர் அலங்காரத்தால் தம் கணவரை ஆட்கொள்ளாமல், தாம் கலந்த காதலாலேயே ஆட்கொள்வர். வேசியரோ தம்மை வெளிப்பகட்டாக அலங்கரிப்பதன் மூலமே ஆடவரைக் கவர்வர். அவர்கள் போலப் பகட்டி ஊரை ஏமாற்றித் திரிபவரே கயவர்' என்பது கருத்து.*

355. தளிர்மேலே நிற்பினும், தட்டாமல் செல்லா
உளிநீரர் மாதோ, கயவர்;-அளிநீரார்க்கு
என்னானும் செய்யார்; எனைத்தானும் செய்பவே
இன்னாங்கு செய்வார்ப் பெறின்.

*மிகவும் மென்மையான துளிரின்மேலே நின்றாலும், ஒருவர் தட்டித் தள்ளாமல் ஊடறுத்துப் போக மாட்டாத உளியின் தன்மையை உடையவர்கள் கயவர்கள். அருளையே தம் தன்மையாகக் கொண்டிருக்கும் சான்றோர்க்கு, அவர்கள் எந்தவொரு உதவியையும் செய்யமாட்டார்கள். ஆனால், தமக்குத் துன்பம் இழைத்துக் கேட்பவரைப் பெற்றால் அவர்கட்கு எவ்வளவானாலும் உதவி செய்வார்கள்.*

*'கீழோரை அச்சுறுத்தினாலும் துன்புறுத்தினாலும் உதவுவாரேயன்றித் தாமாகவே அருள்கொண்டு உதவார்' என்பது கருத்து.*

356. மலைநலம் உள்ளும் குறவன்; பயந்தரு
விளைநிலம் உள்ளும், உழவன்; சிறந்தொருவர்
செய்தநன்று உள்ளுவர் சான்றோர்; கயந்,தன்னை
வைததை உள்ளி விடும்.

*குறவன் எப்போதும் மலையின் வளத்தையே நினைத்துக் கொண்டிருப்பான். பயிர் செய்யும் உழவன் தனக்குப் பயன்தந்த விளைநிலத்தையே நினைத்துக் கொண்டிருப்பான். அதுபோலவே, சான்றோர், தமக்குப் பிறர் ஒருவர் செய்த உபகாரத்தையே சிறந்ததாக எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் கயவனோ, ஒருவன் தன்னைத் திட்டினதையே எப்போதும் மறவாமல் நினைத்துக் கொண்டிருப்பான்.*

*'நல்லவற்றை நினைக்கவும் செய்யான் கயவன்' என்பது கருத்து.*

357. ஒருநன்றி செய்தவர்க்கு ஒன்றி எழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்;-கயவர்க்கு
எழுநூறு நன்றிசெய்து, ஒன்றுதீ தாயின்,
எழுநூறும் தீதாய் விடும்.

*தமக்கு முன்னம் ஓர் உதவியைச் செய்தவர் திறத்தில், சேர்ந்து உண்டான குற்றங்கள் நூறேயானாலும் அவற்றைச் சான்றோர் பாராட்டாமல் பொறுத்துக் கொள்வார்கள். கயவர்களுக்கு எழுநூறு நன்மைகள் செய்து, ஒன்றுமட்டும் தீமையாகி விடுமானால், முன்செய்த அந்த எழுநூறு நன்மைகளும் தீமைகளாகவே அவர்களுக்குத் தோன்றும்.*

*இதனால், கீழோரின் இயற்கை கூறப்பெற்றது.*

358. ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன,
மோட்டிடத்துஞ் செய்யார், முழுமக்கள்;-கோட்டை
வயிரஞ் செறிப்பினும், வாட்கண்ணாய்! பன்றி
செயிர்வேழம் ஆகுதல் இன்று.

*வாள்போன்ற கண்களை உடையவளே! நல்ல குடியிலே பிறந்தவர்கள், தம்முடைய தளர்ச்சியான காலத்தினும் செய்கிற நல்ல செயல்களை, மூடர்கள் தம்முடைய உயர்வான காலத்திலும் கூடச்செய்ய மாட்டார்கள். தனது கொம்புகளிலே பூண் கட்டினாலும், பன்றியானது, வீரங்காட்டும்படியான யானையைப் போலப் போர் செய்ய வல்லதாதல் இல்லையல்லவா!*

'கீழோர்க்கு உயர்வு கொடுத்தாலும், அவர், உயர்வான செயல்களிலே ஈடுபடுவராகார்' என்பது கருத்து.

**359. 'இன்று ஆதும்; இந்நிலையே ஆதும், இனிச் சிறிது**
**நின்று ஆதும்' என்று நினைத்திருந்து, -ஒன்றி**
**உரையின் மகிழ்ந்து, தம் உள்ளம்வே றாகி**
**மரையிலையின் மாய்ந்தார், பலர்.**

"இன்றைக்கு நாம் செல்வம் உடையவராவோம்; இப்பொழுதே செல்வம் உடையவராவோம்; இனிமேற் சிறிது காலங்கழித்துச் செல்வம் உடையவராவோம்" - இப்படிச் சிந்தனை செய்துகொண்டே இருந்து, இவ்வாறு மென்மேற் சொல்லும் சொற்களின் அளவாலேயே தம் உள்ளத்திலே மகிழ்வடைந்து, தம்முடைய உள்ளம் இறுதியிலே செல்வம் பெறாததனால் மாறுபட்டுத் தாமரையிலையைப்போல இறுதியில் யாதும் பயன் பெறாமலே இறந்துபோனவர்கள் தாம் இவ்வுலகிற் பலராவர்.

'செல்வம் வருவதற்கான வாய்ப்புகள் இல்லாத போதும், வருவதாக பெருமை பேசித் திரிதல் கீழோர் இயல்பு' என்பது கருத்து.

**360. நீருட் பிறந்து, நிறம்பசியது ஆயினும்,**
**ஈரங் கிடையகத்து இல்லாகும்;-ஓரும்**
**நிறைப்பெருஞ் செல்வத்து நின்றக் கடைத்தும்**
**அறைப்பெருங்கல் அன்னார் உடைத்து.**

தண்ணீரின் உள்ளேயே தோன்றித் தன் நிறத்திற் பசுமையே உடையதானாலும் சடையினுள்ளே ஈரமானது ஒருபோதும் இருப்பதில்லை. அதுபோலவே, நிறைவான பெரிய செல்வத்திலே எப்போதும் நிலைபெற்றிருந்த காலத்தும், பாறையாகிய பெரிய கல்லைப் போன்ற இரக்கமற்றவர்களையும், இவ்வுலகம் உடையதாக இருக்கின்றது.

'கயவர் கல்நெஞ்சம் உடையவராகவே இருப்பார்கள்' என்பது கருத்து.

## 7. பல்நெறி இயல்

'பல் நெறி இய' லாவது ஒன்றுடன் ஒன்று தொடர் பற்றதான பல்வேறு வகைப்பட்ட ஒழுக்கக் கூறுகளையும் எடுத்துச்சொல்லும் இயல் ஆகும்.

நாலடிச் செய்யுட்களை அதிகாரங்களாக வகுத்து, ஒவ்வோர் அதிகாரத்திற்கும் பத்துப் பத்துச் செய்யுட்களாக அமைத்த சான்றோர், மேற்பட்ட செய்யுட்களை எல்லாம் இப்படித் தனியே ஓர் அதிகாரமாக அமைத்தனர் என்பார்கள் அறிந்தோர்.

இந்த இயலின் தலைப்பே இந்த அதிகாரத்தின் தலைப்பும் ஆகும். எனவே பல்வகையான நெறிகளையும் எடுத்துக் கூறுவது இந்த அதிகாரம் என்று கொள்க. இந்த இயல், இந்த ஓர் அதிகாரத்தை மட்டுமே கொண்டதாகும்.

## 37. பன்னெறி

361. மழைதிளைக்கும் மாடமாய் மாண்பமைந்த காப்பாய்,
இழைவிளக்கு நின்றிமைப்பின் என்னாம்-விழைதக்க
மாண்ட மனையாளை இல்லாதான் இல்லகம்
காண்டற்கு அரியதோர் காடு!

மேகங்கள் தவழ்ந்து செல்லும்படியான உயர்ந்த மாடிகளை உள்ளதாய், சிறப்புப் பொருந்திய காவலுள்ளதாய், ஆபரணங்களாகிய விளக்குகள் நிலைபெற்று விளங்கப் பெறுவதாய் இருந்தாலும், விரும்பும்படியான நற்குணங்களால் மாட்சிமைப்பட்ட மனைவியைப் பெற்றில்லாதவனுடைய அந்த மனையானது, என்ன பயனை உடையதாகும்? அது, கண்களாற் காண்பதற்கும் கூடாத ஒரு கொடிய காடேயாகும்.

எவ்வளவு சிறப்புடையதானாலும், நல்ல மனையாளற்ற வீடு, கொடிய காடேயாகும்' என்பது கருத்து.

362. வழுக்கெனைத்தும் இல்லாத வாள்வாய்க் கிடந்தும்,
இழுக்கினைத் தாம் பெறுவர் ஆயின்-இழுக்கெனைத்தும்
செய்குறாப் பாணி சிறிதே; அச் சின்மொழியார்
கையுறாப் பாணி பெரிது.

இயற்கையிலே கற்பொழுக்கம் இல்லாத மகளிர்கள், தளர்வேதும் இல்லாத சிறந்த வாள்வீரர்களின் சிறந்த பாதுகாவலிலே இருந்தபோதும், எங்ஙனமாயினும் தம் ஒழுக்கத்தினின்றும் தவறுதலைப் பெறுவார்கள். அங்ஙனமாயின், அந்த இனிதாகப் பேசும் சொற்களையுடைய மகளிர்கள், சிறு குற்றத்தையாயினும் செய்யாத காலமும் சிறிதேயாகும். அவர்கள் நல்லொழுக்கத்தைக் கைக்கொள்ளாத காலமோ அதிகமாகும்.

*'கீழான மகளிர், எத்துணைக் காவல் இருந்தாலும் அவற்றையும் மீறித் தம் கீழ்மையான நடத்தையிலேயே ஈடுபடுவார்கள்' என்பது கருத்து.*

**363. 'எறி' என்று எதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை**
**அட்டில் புகாதாள் அரும்பிணி;- அட்டதனை**
**உண்டி உதவாதாள் இல்வாழ்பேய்; இம்மூவர்**
**கொண்டானைக் கொல்லும் படை.**

*தான் செய்த தவறுக்காகக் கணவன் சினங்கொண்ட போது 'என்னை அடி, பார்க்கலாம்' என்று அவனை எதிர்த்து நிற்பவள் கூற்றத்திற்குச் சமானமாவாள். அதிகாலையிலே சமையல் அறைக்குள் போய்ச் சமையல் வேலையிலே ஈடுபடாதவள் தீராத நோய்க்குச் சமமாவாள். தான் சமைத்ததைத் தன் கணவனுக்கு உண்ணக் கொடாது தானே உண்டுவிடுபவள் வீட்டிலே வசிக்கின்ற பேயாவாள். இப்படிப்பட்ட மூவரும், தம்மைக் கொண்ட கணவனைக் கொல்லும்படியான படை போன்றவர்கள் ஆவார்கள்.*

*'கணவனை எதிர்த்து நிற்பதும் வீட்டில் உணவு சமைக்காமலிருப்பதும், கணவனுக்கு இடாமல் தானுண்பதும் கணவன் உயிரை வாங்குவது போல்வனவாகும்' என்பது கருத்து.*

**364. 'கடி' எனக் கேட்டும், கடியான்; வெடிபட**
**ஆர்ப்பது கேட்டும், அது தெளியான்;-பேர்த்துமோர்**
**இற்கொண் டினிதிரூஉம் ஏமுறுதல், என்பவே,**
**கற்கொண் டெறியும் தவறு.**

*இல்லற வாழ்வான துயர வாழ்வினைக் கைவிட்டு விடுவாயாக என்று சான்றோர் பலகாலுஞ் சொல்லக் கேட்டும் அதனைக் கைவிடமாட்டான். தலை வெடித்துப் போம்படியாக சாப்பறை முழங்குவதனைக் கேட்டும் வாழ்க்கை நிலையாமை யினை உடையது என்று தெளிவு கொள்ளான். மறுபடியும் ஒரு மனைவியைக் கொண்டு மகிழ்வாயிருக்கும்படி எண்ணுகின்ற தவறானது, கல்லெடுத்துத் தன்மேல் தானே எறிந்து கொள்ளும் குற்றம் போல்வதாகும் என்பர் பெரியோர்.*

*இது, ஒரு மனைவி இறந்த பின்னரும், மற்றொரு மனைவியை மணந்து இன்புறுவோம் என்று கருதுபவர்களைக் கண்டித்துக் கூறியதாகும்.*

**365. தலையே, தவமுயன்று வாழ்தல்; ஒருவர்க்கு**
**இடையே, இனியார்கண் தங்கல்; -கடையே,**
**புணரா தென் றெண்ணிப் பொருள் நசையால், தம்மை**
**உணரார்பின் சென்று நிலை.**

*தவநெறிக்கு உரிய முயற்சிகளிலே ஈடுபட்டு வாழ்தல் ஒருவர்க்கு மேலான வாழ்வாகும்; அஃதன்றி, நற்குண நற்செய்கைகளையுடைய இனிய மனைவியுடன் கூடி வாழ்தல் நடுத்தரமான வாழ்வாகும்; கிடைக்கமாட்டாது என்று எண்ணிப் பொருளின் மீதுள்ள விருப்பத்தின் காரணமாகத், தம் மேன்மையினை அறியாத கயவர் பின்னே சென்று அவரை ஒட்டி வாழ்தலோ கடைத் தரமானதாகும்.*

*'கருமிகளின் பின்னே, அவர் பொருளைப் பெற விரும்பி ஒட்டிக்கொண்டு திரிவது இழிவானதென்பது' கருத்து.*

**366. கல்லாக் கழிப்பர், தலையாயார், நல்லவை**
**துவ்வாக் கழிப்பர், இடைகள்; கடைகள்**
**'இனி துண்ணேம்! ஆரப் பெறேம் யாம்! என்னும்**
**முனிவினாற் கண்பா டிலர்.**

*முதற்றரமான அறிவினையுடையவர்கள், நூல்களைக் கற்றறிவதிலே தம் காலத்தைக் கழிப்பார்கள்; நடுத்தர மானவர்கள் நல்ல வழியாற் கிடைத்த சுகபோகங்களை எல்லாம் அநுபவிப்பதிலே காலம் கழிப்பார்கள்; கீழ்த் தரமானவர்களோ, ''யாம் இனிதாக உண்ணப் பெற்றிலேமே! செல்வத்தை நிரம்பப் பெற்றிலோமே !'' என்று கருதுகின்ற வெறுப்பின் காரணமாகக் கண்ணுறக்கமும் கொள்ளாமற் கடந்து வருந்திக்கொண்டே இருப்பார்கள்.*

*'உள்ளத்தில் நிறைவுற்று மகிழாது, பிறரைக் கண்டு, ஏக்கத்தால் தூக்கமின்றி அலைக்கழிவர் கடையர்கள்' என்பது கருத்து.*

**367. செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றுமச்**
**செந்நெல்லே யாகி விளைதலால் -அந்நெல்**
**வய னிறையக் காய்க்கும் வளவயல் ஊர!**
**மகனறிவு, தந்தை அறிவு.**

*செந்நெல் வித்துக்களால் உண்டாகிய செழுமையான முளைகள், பின்னும் அச்செந்நெற் பயிராகவே ஆகி விளைவதனால், அப்படிப்பட்ட செந்நெற் பயிர்கள் வயல்கள்*

*நிரம்பும்படியாக விளைகின்ற வளமையான வயல்களாற் சூழப்பட்ட ஊர்களை உடையவனே! மகனுடைய அறிவுத் திறமானது தந்தையின் அறிவுத் திறம் போன்றே அமைந்திருக்கும் என்றறிவாயாக.*

*செந்நெல்- ஒருவகை நெல். இதனால் பரம்பரையாக வரும் அறிவுத்திறன் கூறப்பட்டது. குடிமையின் சிறப்பும் இதனால் அறியப்படும்.*

**368. உடைப்பெருஞ் செல்வரும் சான்றோரும் கெட்டுப்,**
**புடைப் பெண்டிர் மக்களும் கீழும் பெருகிக்**
**கடைக்கால் தலைக்கண்ண தாகிக் குடைக்கால்போல்**
**கீழ்மேலாய் நிற்கும், உலகு.**

*பெருஞ் செல்வம் உடையவர்களாயிருந்த குடியினர்களும், கல்வியறிவு நிறைந்த சான்றோர்களும் தங்கள் தங்கள் நிலைமைகளின்றும் மாறிப்போக, இழிகுணத்தாரான வைப்பாட்டி மக்களும், கீழ்மக்களும் எங்கும் பெருகிக், காற்புறத்திலே இருக்கவேண்டியது தலைப்புறத்திலே இருப்பதாக இடம் மாறிக், குடையினது காம்புபோல, உலகமானது கீழ்மேலாய் நிற்கின்ற தன்மையினை உடையதா யிருக்கின்றதே!*

*உலகின் சீர்கெட்ட நிலைமையை உளங்கொண்டு கொதித்த ஒருவர் கூறியது இது. புடைப் பெண்டிர் பொருள் கொடுப்பார் பக்கம் எல்லாம் சார்ந்திருக்கும் வேசையர்.*

**369. இனியார்தம் நெஞ்சத்து நோயுரைப்ப, அந் நோய்**
**தணியாத உள்ளம் உடையார், -மணிவரன்றி**
**வீழும் அருவி விறன்மலை நன்னாட**
**வாழ்வின், வரைபாய்தல் நன்று.**

*இரத்தினக் கற்களை வாரிக்கொண்டு வந்து வீழ்கின்ற அருவிகளோடு கூடிய சிறந்த மலைகளுள்ள நல்ல நாட்டையுடையவனே! சிநேகிதர்கள், தம் மனத்திலேயிருக்கும் துன்பத்தைச் சொல்ல அந்தத் துன்பங்களைப் போக்குவதற்கு எண்ணாத உள்ளத்தை உடையவர்கள், உயிர் வாழ்ந்திருப்பதைக் காட்டினும், மலையிலிருந்து கீழே வீழ்ந்து தம் உயிரை விட்டுவிடுவதே அவருக்கும் உலகிற்கும் நன்மையாகும்.*

*'நண்பன் துயரைப் போக்காதவர் தற்கொலை செய்து கொள்வதே சிறந்தது' என்பது கருத்து.*

370. புதுப்புனலும் பூங்குழையார் நட்பும் இரண்டும்,
விதுப்பற நாடின், வேறு அல்ல; -புதுப்புனலும்
மாரி யறவே அறுமே, அவரன்பும்
வாரி யறவே அறும்.

*மழைக் காலத்திலே பெருகி வருகின்ற புதுநீர்ப் பெருக்கமும் அழகிய காதணியணிந்த வேசை மாதர்களுடைய சிநேகமும் ஆகிய இவ்விரண்டும், பதற்றமின்றி அமைதியாக ஆராய்ந்து பார்த்தால் தம்முள் ஒரே தன்மை உடையனவேயன்றி வேறுபடுவன அல்ல. புதுநீர்ப் பெருக்கமும் மழை நீங்கினால் ஒழிந்துபோம்; வேசையர் நட்பும் பொருளின்வரவு நீங்கினால் ஒழிந்துபோம்.*

*வேசையர் உறவைக் கண்டித்து உரைத்தது இது.*

**பொருட்பால் முற்றும்.**

# காமத்துப் பால்

உயிர்க்கு உறுதிப் பொருள்களாவன நான்கு. அவை, அறம், பொருள், இன்பம், வீடு என்பன. எவ்வகையானும் நிமித்தம் கூறும் முறையாலன்றி, இலக்கணம் கூறும் முறையால் வீடு விளக்கப்படுவது ஆன்றோர் நூல்களின் மரபன்று. எனவே அதனை நீக்கிப் பிற மூன்றையுமே கூறுவன தமிழ் அறநூல்கள்.

அவற்றுள், அறமும் பொருளும் பற்றிய செய்திகள் இதுவரை காட்டப்பெற்றன. இனிவரும் மூன்று அதிகாரங்கள் இன்பம் பற்றிய உண்மைகளைக் கூறுவனவாம்.

பொருளால் பெற்றுத் துய்க்கப்படுவதான இன்பங்கள் பல; எனினும், அவற்றுள் எல்லாம் சிறப்புடையதாக மதிக்கத் தக்கது காம இன்பமே ஆகும். ஏனெனில் அதுவே ஐம்புலன் களாலும் ஒருங்கே ஒருசமயத்தே அநுபவிக்கத்தக்க சிறப்புடைய தாகத் திகழ்வது.

இப்பகுதியின் முதல் அதிகாரம் இன்ப துன்ப இயலாகவும், இறுதி இரண்டு அதிகாரங்கள் இன்பஇயல் ஆகவும் வகுக்கப் பட்டிருக்கின்றன.

## 1. இன்ப துன்ப இயல்

காம இன்பத்தினும் ஒருசார் இன்பம் தருவதாகவும், மற்றொருசார் துன்பந் தருவதாகவும் விளங்கும் தன்மைபற்றிக் கூறுவது இந்தப் பகுதியாகும்.

மனமொத்த மனைவியுடன் கூடி வாழுகிற இன்பச் செவ்வியினும் மனத்தாற் கலந்து உறவாடாமல், பொன்னுக்கும் பொருளுக்குமே ஆடவர் பலருடன் கூடி வாழும்போது மகளிரின் உறவே, இந்தத் தன்மையின் முழு இயல்பையும் எடுத்துக் காட்டுவதாகும்.

பொன்னும் பொருளும் கொடுத்து அனுபவிக்கும் ஒருவன் மீதும் அவர்க்கு உள்ளார்ந்த பற்றில்லாத காரணத்தால், அப்படி அவன் தருகிற சமயங்களுள், அவர்கள் அவனுக்கு இன்பந் தருப்பவராக விளங்கினும், அவன் தரவியலாது போயின காலத்தும், அன்றி அவனினும் மிகுதிப்படப் பிறர் தர முன்வந்த காலத்தும், அவர் அவனை இழித்துப்பேசி ஒதுக்கி விடுவர். இப்படி இன்பமும் துன்பமும் அமைந்த தன்மையால் இது இப்பெயர் பெற்றது.

## 38. பொது மகளிர்

பொதுமகளிர் என்போர், தமது நலத்தைத் தம் உள்ளங்கலந்த ஒருவனுக்குமட்டுமே அளித்துத் தாமும் இன்புற்று, அவனையும் இன்புறுத்துகின்ற கற்புத் தன்மை இல்லாதவர்கள். தம் நலத்தை விரும்பி, அதற்கான விலையைக் கொடுக்கும் ஆடவர்க்கெல்லாம், இன்னார் இனியார் என்னுமோர் வரைதுறையின்றி, இன்பந் தந்து வாழ்பவர்.

இவர், ஒருவனோடு ஒருத்தி என்ற சிறந்த அறநெறிக் கூறுபாட்டிற்கு எதிரானவராதலினாலும், இவர் உறவினாலே முறையாக அமைந்த பற்பல நற்குடும்பங்கள் கேட்டிற்கு உள்ளாவதனாலும் இவருடன் கொள்ளும் உறவைச் சான்றோர் தீயதென்று கடிந்து உரைப்பர்.

இப்படிப்பட்டவர் சிலர் உளதாகின்ற தன்மை, ஆடவர்களின் ஒழுக்கக் குறைபாட்டின் காரணமாகவே அமைவதேனும், அந்தக் குறைபாடு நீக்கப்படவேண்டும் என்னும் நல்லெண்ணத்தினால், இதனைக் கூறினர் சான்றோர்.

**371. விளக்கொளியும் வேசையர் நட்பும், இரண்டும்<br>துளக்கற நாடின், வேறல்ல;-விளக்கொளியும்<br>நெய்யற்ற கண்ணே அறுமே; அவரன்பும்<br>கையற்ற கண்ணே அறும்.**

விளக்கினது ஒளியும் வேசையர்களுடைய நட்பும் ஆகிய இவ்விரண்டும், மயக்கமின்றி ஆராய்ந்து பார்த்தால் தம்முள் வேறுபட்ட வகையின அல்ல; ஒன்றேயாகும். நெய் வற்றிய அந்தப் பொழுதிலேயே விளக்கொளியும் இல்லாமற் போகும். அதுபோலக் கைப் பொருள் கொடுத்தல் இல்லாமற்போன அந்தப் பொழுதே வேசையரின் நட்பும் நீங்கிப் போய்விடும்.

'இதனால் உண்மை அன்பில்லாதவருடைய இன்பம் இனியதன்று; துன்பந்தருவதே' என்பது சொல்லப்பட்டது.

**372. அங்கோட் டகலல்குல் ஆயிழையாள், நம்மொடு<br>செங்கோடு பாய்துமே என்றாள் மன்;-செங்கோட்டின்<br>மேற்காணம் இன்மையான் மேவாது ஒழிந்தாளே,<br>காற்கானோய் காட்டிக் கலுழ்ந்து.**

அழகிய பக்கங்கள் உயர்ந்து அகன்ற அல்குல் தடத்தை உடையவளான, ஆராய்ந்தணிந்த அணிகலன்களையுடையவள்,

'நம்மோடு செம்மையான மலையுச்சியில் இருந்தும் ஒருசேர வீழ்ந்து உயிர்விடுவோம்' என்று, முன்னர் ஒரு காலத்தே எம்மிடத்துத் தன்னுடைய காதலுறுதி தோன்றிச் சொன்னாள். இப்போதோ, எம்மிடத்துப் பொருள் இல்லாமையினால், செம்மையான மலையுச்சியின் மேல் ஏறி வீழ்வதற்குத் துணிந்துள்ள எம்முடன் வந்து சேராமல், 'தன் காலிலே மலையேறமுடியாத வாதநோய்' என்று கற்பித்துக் காட்டிப் பொய்யாகக் கண்கலங்கித் தன் வீட்டிலேயே தங்கி விட்டாள்.

தன் செல்வமெல்லாம் வேசையுறவால் போக்கடித்து விட்டு, இறுதியில் மலையேறி வீழ்ந்து உயிர்விடத் துணிந்த ஒருவன் கூறுவதாக அமைந்தது இச்செய்யுள். இதனால் வேசையர் இன்பம் உண்மை இன்பம் அன்றென்பதும் பெறப்படும்.

**373. அங்கண் விசும்பின் அமரர் தொழப்படும்**
**செங்கண்மால் ஆயினும் ஆகமன்! -தம் கைக்**
**கொடுப்பதொன்று இல்லாரைக் கொய்தளிர் அன்னார்,**
**விடுப்பர், தம் கையால் தொழுது.**

அழகிய இடமகன்ற வானுலகத்திலேயுள்ள தேவர்களால் வணங்கப்படுகின்ற சிவந்த கண்களையுடைய திருமாலே யானாலும் ஆகட்டும்! தம் கையில் கொடுக்கும் படியான பொருள் ஒன்றும் இல்லாதவரைக் கொய்யத்தக்க தளிர் போன்ற மேனியை உடைய வேசையர்கள், தமது கையால் கும்பிட்டு வெளியே அனுப்பிவிடுவார்கள்; அன்றி, அவர்களுடன் கூடி இன்பந் தரமாட்டார்கள்.

'அழகும் பெருமையும் முதலிய சிறப்பு வாய்ந்த ஆடவரேனும், வேசையர் தமக்குப் பொருள் தராதவரைக் கூடமாட்டார்' என்பது கருத்து.

**374. ஆணமில் நெஞ்சத்து அணிநீலக் கண்ணார்க்குக்**
**காணம் இல்லாதார் கடுவனையர், -காணவே**
**செக்கூர்ந்து கொண்டாரும் செய்த பொருளுடையார்**
**அக்காரம் அன்னார் அவர்க்கு.**

அன்பில்லாத உள்ளத்தையும் அழகிய நீலோற்பல மலர்போன்ற கண்களையும் உடைய வேசையர்களுக்குத் தம்மிடத்தே பொருளில்லாதவர்கள், எத்துணைப் பிற வகையாற் சிறந்தவரேனும், விஷம் போன்று வெறுக்கத் தக்கவர்களே ஆவார்கள். செக்காட்டுதலாகிய தொழில்

உடையவரே யானாலும், அவர், தேடிய பெருஞ்செல்வம் உடையவரானால், அவரே அவர்களுக்குச் சர்க்கரை போல இனிமையாக இருப்பவ ராவார்கள்.

'செக்காடுவார் மேனியின் கசடுடைமைபற்றி அவரைச் சுட்டிக் கூறினர். தரும் பொருள் ஒன்றை வைத்தே ஆடவரை மதிப்பர்' என்பது கருத்து.

**375. பாம்பிற்கு ஒருதலை காட்டி ஒருதலை**
**தேம்படு தெண்கயத்து மீன்காட்டும் ஆங்கு**
**மலங்கன்ன செய்கை மகளிர்தோள் சேர்வர்**
**விலங்கன்ன வெள்ளறிவி னார்.**

தன்னைப் பிடிக்கவரும் பாம்பினுக்குத் தானும் அதனினமே போல ஒரு தலையினைக் காட்டியும் மதுரத்தைப் பெற்றிருக்கிற தெளிந்த நீரையுடைய தடாகத்திலுள்ள மீனுக்குத் தான் அதனினமேபோல மற்றொரு தலையைக் காட்டியும் வாழும் விலங்கினையொத்த செய்கையை உடையவர்கள் வேசையர். அவர்களுடைய தோள்களைச் சேர்பவர்கள் விலங்கினத்தைப் போன்ற பகுத்தறிவற்ற மூடர்களே ஆவார்கள்.

'வேசையர், அவரவர்க்கும் இசைவார்போலக் காட்டிப் பலரையும் இன்புறுத்தும் வஞ்சனையுடையவர். அவர் உறவு, உண்மை உறவென நாடிச் செல்பவர் மூடர்கள்' என்பது கருத்து.

**376. 'பொத்தநூற் கல்லும், புணர்பிரியா அன்றிலும்போல்,**
**நித்தலும் நம்மைப் பிரியலம்' என் றுரைத்த**
**பொற்றொடியும் போர்த் தகர்க்கோடு ஆயினாள்;**
**நன்னெஞ்சே!**
**நிற்றியோ, போதியோ, நீ?**

"எனது நல்ல மனமே! நூலிலே கோத்த, உள்ளே தொளையுடையதான மணியைப் போலவும் கூடியிருத்த லின்றும் பிரியாத அன்றிற் பறவைகளைப் போலவும் எப்பொழுதும் நம்மை விட்டுப் பிரியமாட்டோம்'' என்று முன்னம் நம்மிடத்தே சொன்ன பொன் வளையல் அணிந்த அந்த வேசையும், இப்போது போர் செய்யுந் தன்மையுள்ள ஆட்டுக்கடாவின் கொம்புபோல மாறுபட்ட குணமுடையவள் ஆயினாள். அவள் அவ்வாறான பின்னரும் நீ அவளிடத்தி லேயே ஈடுபட்டு நிற்கின்றாயோ? அல்லது, என்னுடன் புறப்பட்டு வருகின்றாயோ?

வேசை, வெறுத்துக் கைவிட்டும், அவள்மேல் ஆசைமாறாத தன் மனத்தை நோக்கி ஒருவன் கூறியது இது.

**377. ஆமாபோல் நக்கி, அவர்கைப் பொருள் கொண்டு**
**சேமாபோல் குப்புறூஉம் சில்லைக்கண் அன்பினை**
**ஏமாந்து எமதென் றிருந்தார் பெறுபவே,**
**தாமாம் பலரால் நகை.**

முதலிலே இன்பமுண்டாக நக்கிப் பின் உயிரையுண்ணும் இயல்பினையுடைய காட்டுப் பசுவைப் போலத் தம்மிடம் கூடியவர்களது கைப்பொருள் எல்லாம் முதலிலே ஆசைகாட்டிக் கவர்ந்துகொண்டு, பின் எருதைப் போலக் கவிழ்ந்து படுத்துக்கொள்ளுகிற தாழ்ந்த நடத்தையுடைய பொது மகளிடத்திலேயுள்ள அன்பினை, உண்மையென நம்பி இருந்தவர்கள், அவளால் கைவிடப்பட்ட காலத்துப், பலராலும் எள்ளி நகைத்தலுக்கு உள்ளாவார்கள்.

'வேசையர் தரும் இன்பமெல்லாம், வைப்பொருள் கவர்ந்து கொண்டு பின் கைவிடும் உட்கருத்துடனேயே' என்பது கருத்து. சேமா-எருதாகிய விலங்கு.

**378. ஏமாந்த போழ்தின் இனியார் போன்று இன்னாராய்த்**
**தாமார்ந்த போதே தகர்க்கோடாம்-மானோக்கின்**
**தந்நெறிப் பெண்டிர் தடமுலை சேராரே**
**'செந்நெறிச் சேர்தும்' என் பார்.**

செவ்விய வழியிலே சேர்வோம் என்று சொல்லுகிறவர்கள், தாம் மோகத்தால் மயங்கிப் பொருள் தந்தபோது, இனியவர்களைப் போலத் தம்மிடம் வலிய விரும்பி இருந்து, தாம் பொருளிழந்த காலத்திலே விரும்பிச் சென்றபோதும், அன்பில்லாதவர்களாய் ஆட்டுக்கடாவின் கொம்பைப்போல மாறுபடும்படியான, மான் போலும் பார்வையினையுடைய, தமக்குரிய பொருட்பெண்டிர் தன்மையிலேயே நடக்கும் வேசையர்களுடைய பெரிய தனங்களை ஒருபோதும் விரும்பிச் சென்று சேரவே மாட்டார்கள்.

'நல்ல வழியினை நாடுவோர், வேசையர் போகத்தை விரும்பவே மாட்டார்கள்' என்பது கருத்து

379. ஊறுசெய் நெஞ்சந்தம் உள்ளடக்கி, ஒண்ணுதலார்
தேற மொழிந்த மொழிகேட்டுத் -தேறி,
எமரென்று கொள்வாரும் கொள்பவே, யார்க்கும்
தமரல்லர், தம்முடம்பி னார்.

*ஒளிபொருந்திய நெற்றியை உடையவரான பொது மகளிர், பிறருக்குத் துன்பஞ் செய்யும்படியான தம் எண்ணத்தைத் தம்முள்ளேயே மறைத்துவைத்துக், காமுகர் நிச்சயமாக நம்பும்படியாகச் சொல்லிய பசப்பு வார்த்தைகளைக் கேட்டு, அவர்கள்மேல் நம்பிக்கை கொண்டு அவர்களை 'எம்மவர்' என்று கூறிக்கொள்ளுகிறவர்களும் அவ்வாறே கூறிக் கொள்ளக் கடவார்கள். வேசையர் எவ்வகைப் பட்டவர்க்கும் உரியவராகார். தம் உடலைத் தமக்கே உரிமையாக உடையவர் அவர் என்பதே உண்மையாகும்.*

*'வேசையரின் பசப்பு மொழிகளை உண்மையென நம்புதல் கூடாது. அவர் உடல் என்றும் அவர்க்கே உரியதன்றி அதனைப் பிறருக்குக் காதலால் உரியதாக்கும் இயல்பு அவரிடம் என்றும் கிடையாது' என்பது கருத்து.*

380. உள்ளம் ஒருவன் உழையதா, ஒண்ணுதலார்
கள்ளத்தாற் செய்யும் கருத்தெல்லாம்-தெள்ளி
அறிந்த இடத்தும், அறியாராம் பாவம்
செறிந்த உடம்பி னவர்.

*மனமானது மற்றொருவனிடத்திலே இருக்க, விளக்கமான நெற்றியினையுடைய பொதுமகளிர் கபடமாக அன்புடையவர் போற் செய்கின்ற கருத்துக்களையெல்லாம் தெளிவாக ஆராய்ந்து அறிந்த காலத்தும் தீவினையின் மிகுதியை உடைய உடலினையுடைய பாவிகள், ஒருபோதும் அவர்கள் உறவின் கேட்டை அறியவே மாட்டார்கள்.*

## 2. இன்ப இயல்

*காமத்துப்பாலின் முதற்கண், ஒருசார் இன்பம் போலத் தோற்றினும், இறுதியில் துன்பமாகவே அமையும், பொதுமகளிர் உறவினைக் கூறினார். அடுத்து முற்றவும் இன்பம் ஒன்றையே தருவதான கற்புடை மகளிரின் உறவினைக் கூறுகின்றார்.*

*இல்லற நூலினுள் பலபடப் பெண்களின் உறவினை வெறுத்துக் கூறப் பெற்றிருந்தும், அதனை விதந்து கூறும்*

பகுதியும் அமைவது முரணாகாதோ எனின், அன்று. சிற்றின்பமாகிய காமங் கூறும் வகையினாலே, பேரின்பத்தின் சிறப்பைக் காட்டி வலியுறுத்தலே இதன் கருத்தாகும் என்று அறிதல் வேண்டும்.

மேலும், உலகிற்குப் பலவகையிலும் உதவியாக அமைகின்றவன் இல்லறத்தானாகவே அந்நெறியின்றி உலகவாழ்வும் செம்மையுற அமையாதாகலின், அதனைத் திறம்பட நடத்துவதற்கு, அவன் தன் கற்புடை மனைவியோடு கூடிப் பெறும் இன்பமும் முதற்காரணமாதலின் அதனை ஆன்றோர் போற்றினர் என்றும் கொள்க.

## 39. கற்புடை மகளிர்

கற்புடைய பெண்களின் தன்மையினைக் கூறுவது என்பது அதிகாரப் பொருளாகும். கற்பாவது பெண்களிடத்தே தம் நாயகன் ஒருவனிடத்து மட்டுமே உண்டாகும் காதலின் உறுதியாகும்.

நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான் வகையான பெண்மைக் குணங்களினால் நிறைவுற்று மகளிர், ஊழின் வலியினால், தமக்கு உரியான் ஒருவனைக் கண்டு காதலித்துக் கடிமணமும் புரிந்த பின்னர், அவன் ஒருவனே தமக்கு எல்லாமும் என வாழும் உயரிய நிலை இது.

தன் எனவும், தனது எனவும் எழுகின்ற பொதுவான அகப்பற்றும் புறப்பற்றும் இழந்தவளாகத் தமது என்னும் உறவுப் பிணிப்பிலே ஒன்றுபட்டவளாக நிலைபெறும் பெண்ணின் கற்பினது அமைதியிலேயே உலகத்தின் நல்வாழ்வும், வளர்ச்சியும், சிறப்பும் எல்லாம் பொருந்தியிருக்கிறதென்பது ஆன்றோர் கூறும் உண்மையாகும்.

**381. அரும்பெறற் கற்பின் அயிராணி யன்ன**
**பெரும்பெயர்ப் பெண்டிர் எனினும் - விரும்பிப்**
**பெருநசையாற், பின்னிற்பார் இன்மையே பேணும்**
**நறுநுதலாள் நன்மைத் துணை.**

பெறுவதற்கு அரிதான கற்புச் செவ்வியை உடையவளான; அயிராணி என்பவளைப் போன்ற பெரும் புகழுடைய பெண்களே என்றாலும், தம்மைப் பெற்று இன்புற வேண்டும் என்ற ஆசையினால், தம்மை விரும்பித் தமது பின்னே சுற்றிக்

கொண்டிருக்கிற வேற்றாடவர் இல்லாமையாகிய, நற்குணத்தையே பேணுகின்ற அழகிய நெற்றியை உடைய பெண்களே, தம் கணவருக்கு ஏற்ற நல்ல துணைவியராவர்.

அயிராணி-இந்திராணி. பெண்ணின்பால் தளர்ச்சிக் கான குறிப்பு எதனையும் காணாமல், அவளையடைய ஒருவன் முயலான், ஆதலால் இவ்வாறு கூறினார்.

**382. குடநீர்அட்டு உண்ணும் இடுக்கட் பொழுதும்,**
**கடனீர் அறவுண்ணும் கேளிர் வரினும்,**
**கடனீமை கையாறாக் கொள்ளும் மடமொழி**
**மாதர் மனைமாட்சி யாள்.**

குடத்து நீரை மட்டுமே காய்ச்சி உண்பதன்றி, வேறேதும் உண்ணுதற்கு இல்லாத வறுமைத் துன்பம் வந்த காலத்தினும், கடல் நீரும் வற்றிப்போமாறு உண்டு விடுகின்ற பெருங் கூட்டமான சுற்றத்தார் வந்தாலும், தனது கடமையாகிய குணங்களையே ஒழுக்க நெறியாகக் கொள்ளுகின்ற, சாரமான இன்சொற்களை உடைய மனைவியே இல்லற வாழ்விற்குத் தகுந்த பெருமை உடையவளாவாள்.

விருந்தோம்பலும் சுற்றம் பேணலுமாகிய மனைவியரின் கடமையிலே அவளுக்கு உறுதிவேண்டும் என்பது வலியுறுத்தப் பெற்றது.

**383. நாலாறும் ஆறாய், நனிசிறிதாய், எப்புறனும்**
**மேலாறு மேலுறை சோரினும்-மேலாய**
**வல்லாளாய் வாழுமூர் தற்புகழும் மாண்கற்பின்**
**இல்லாள் அமர்ந்ததே இல்.**

நான்கு பக்கங்களினும் வழியை உடையதாகியும், மிகவும் சிறியதாகியும், எல்லாப் பக்கங்களினும் மேல்வழியினின்று தன்மேல் மழைத்துளிகள் வழிவதாகியும் இருந்தாலும், மேலான தருமங்களைச் செய்யவல்ல மனத்திட்பம் உடையவளாகத் தான் வாழ்கின்ற ஊரிலே உள்ளவர் தன்னைப் புகழும்படியான மாட்சிமைப் பட்ட கற்பினையுடைய மனைவி வாழ்கின்றதே சிறந்த மனையாகும்.

'வறுமை மிகுதிக் கண்ணும், தன் ஒழுக்கம் பிறழாமல், பிறருக்கு உதவும் கருத்துடையவளே சிறந்த மனைவியாவாள்' என்பது கருத்து.

384. கட்கினியாள், காதலன் காதல் வகைபுனைவாள்,
உட்குடையாள், ஊர்நாண் இயல்பினாள்,-உட்கி
இடனறிந்து ஊடி இனிதின் உணரும்
மடமொழி மாதராள் பெண்.

*கண்ணுக்கு இனிதான உடல் வனப்பை உடையவளாகவும், தன் காதலனது விருப்பத்திற்கு ஏற்ற வகையெல்லாம் தன்னைப் புனைந்து கொள்ளுபவளாகவும், அச்சம் உடையவளாகவும், ஊரிலுள்ள பிற ஆட்வர்க்கு நாணி ஒதுங்கும் இயல்பினளாகவும், தன் கணவனுக்கு அஞ்சிக் காலமறிந்து அவனோடு பிணங்கிப் பின் இன்பமுண்டாகும்படி உடனே அறிந்து ஊடல் தீர்க்கின்ற வளாகவும், கபடமில்லாத பேச்சுக்களை உடையவளாகவும் இருப்பவளே சிறந்த மனைவியாவாள்.*

385. எஞ்ஞான்றும், எங்கணவர் எந்தோன்மேற் சேர்ந்தெழினும்,
அஞ்ஞான்று கண்டேம்போல் நாணுதுமால் -
எஞ்ஞான்றும்
என்னை கெழீஇயினர் கொல்லோ, பொருள் நசையால்
பன்மார்பு சேர்ந்தொழுகு வார்?

*எந்த நாளும், எம்முடைய கணவர், எம்முடைய தோள்மேல் அணைந்து எம்மைக் கூடி எழுந்தாலும் புதிதாக உறவுகொண்ட அந்த முதல் நாளிலே யாம் கண்டது போலவே இன்றும் அவரைக் கண்டதும் நாணங் கொள்ளுகின்றோம். எம் தன்மை இவ்வாறிருக்கப் பொருள் விருப்பத்தினால் எப்பொழுதும் பலருடைய மார்புகளையும் அணைந்து நடக்கின்ற பொதுமகளிர், வெட்கமின்றி, அந்தப் பலருக்கும் உரியவராயிருக்கின்றனரே? இது என்ன பெண் தன்மையோ?*

*தன் கணவனின் மீது பற்றுள்ள மனைவி ஒருத்தி, பரத்தையை இவ்வாறு இகழ்கிறாள் என்று கொள்க. இதனால் கற்புடை மகளிரின் தன்மை புலப்படும்.*

386. உள்ளத்து உணர்வுடையான் ஓதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்கண் ஒண்பொருள்;-தெள்ளிய
ஆண்மகன் கையில் அயில்வாள்; அனைத்தரோ;
நாணுடையாள் பெற்ற நலம்.

*வள்ளல் தன்மையை மேற்கொண்டவனிடத்திலேயுள்ள மிக்க செல்வமானது, உள்ளத்திலே நல்லறிவினை உடையவன் கற்றறிந்த நூற்பொருள் போலப் பலருக்கும் பயனுடைய தாயிருக்கும். அதுபோல, நாணம் உடைய குலமகள்*

*பெற்றிருக்கும் நல்ல அழகானது மிகச் சிறந்த வீரனாகிய ஆண்மகனது கையிலுள்ள கூர்மையான வாளைப் போலப் பலரும் புகழும்படியாகப் பெருமையுடன் விளங்கும்.*

*தலைவன் தலைவி உரிமையை வியந்து கூறியது இது என்பர்.*

**387. கருங்கொள்ளும், செங்கொள்ளும், தூணிப் பதக்கென்று
ஒருங்கொப்பக் கொண்டானாம், ஊரன்-ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடாது
என்னையும் தோய வரும்!**

*ஊரனாகிய ஒருவன், கரிய கொள்ளையும் சிவந்த கொள்ளையும் அவற்றின் தன்மையறிந்து வேறுவேறாகக் கொள்ளாமல், கொள்ளென்னும் இயல்புபற்றியே ஒரு நீராகத் தூணிப் பதக்கென்று அளந்து வாங்கிக் கொண்டானாம். அதுபோலவே முழுவதும் ஒத்திராத அழகிய நெற்றியையுடைய பொதுமகளிரை அநுபவித்த, மலை போன்ற மார்பினனான என் தலைவனும், நீராடாமல் என்னையும் தழுவுவதற்கு வருகின்றானாம்!*

*பரத்தையிற் சேர்ந்துவந்த தலைவனுடன் ஊடிய தலைவி, 'நீராடாது தோயவரும் என்பதன் மூலம்' அவனுக்கு இசையும் தன் கருத்தையும் உணர்த்துகின்றாள்.*

**388. கொடியவை கூறாதி, பாண; நீ கூறின்,
அடிபைய இட்டொதுங்கிச் சென்று - துடியின்
இடக்கண் அனையம் யாம் ஊரற்கு; அதனால்
வலக்கண் அனையார்க்கு உரை.**

*பாணனே கொடுமையான சொற்களை எம்மிடத்தே கூறாதே; ஏனெனில், யாம் ஊரனுக்கு உடுக்கையினது இடது பக்கத்தைப் போல இப்பொழுது பயனற்றவர்களாக இருக்கின்றோம். அதனால், அப்படிப்பட்ட விடத்தை விட்டு அப்புறமாக ஒதுங்கிச் சென்று, அந்த உடுக்கையின் வலது பக்கத்தைப்போல அவனுக்கு இப்போதெல்லாம் பயன்பட்டுக் கொண்டிருக்கின்ற வேசியருக்குச் சென்று சொல்வாயாக.*

*பரத்தையிற் பிரிந்த தலைவன், பாணன் மூலம் தலைவியின் இசைவைப் பெற முயல, அந்தப் பாணனுக்கு அவள் கூறியது இது.*

389. சாய்ப்பறிக்க நீர்திகழும் தண்வயல் ஊரன்மீது
ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்! -தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந்து அணியகலம்
நோக்கி இருந்தேனும் யான்.

*கோரைப் புல்லைப் பிடுங்க, நீர் விளங்குகின்ற குளிர்ச்சியான வயல் சூழ்ந்த ஊர்களை உடையவனான என் தலைவனின் மீது ஈயானது பறக்கையிலும் அதனைக் காணவும் சகியாமல் முன்னம் நொந்தவளும் யானே, இப்போழுதோ, நெருப்புப் பொறி பறக்குமாறு வேசையர்கள் தமது தனங்களால் தாக்கிப் போர் செய்த, குளிர்ந்த சந்தனக் கலவையைத் தரித்த அவனது மார்பைப் பார்த்துப் பொறுத்திருக்கின்றவளும் யானே தான்!*

*'பரத்தையோடு கூடிவந்த தலைவனோடு ஊடியிராமல், நீ, கூடியதென்னடி?' என்ற தன் தோழிக்குத் தலைவி தன் மன நிலையை இப்படிக் கூறுகிறாள்.*

390. 'அரும்பவிழ் தாரினான் எம்அருளும்' என்று
பெரும்பொய் உரையாதி, பாண -கரும்பின்
கடைக்கண் அனையம் யாம் ஊரற்கு; அதனால்,
இடைக்கண் அனையார்க்கு உரை.

*பாணனே பூவரும்புகள் மலரும்படியான மாலையை அணிந்த எனது நாயகன் எனக்கு அருள் செய்வானென்று பெரிய பொய்யான சொற்களை என்னிடத்தே வந்து சொல்லாதே, ஏனெனில், ஊரனுக்கு, இப்போது யாம் கரும்பின் கடைசியிலுள்ள கணுவை ஒத்திருக்கின்றோம். அதனால், இப்பேச்சைக் கரும்பின் இடையிலுள்ள கணுக்களைப் போல் அவனுக்கு இப்போது இனிதாயிருக்கும் பரத்தையருக்குச் சென்று சொல்வாயாக.*

*'நாயகன் விரைந்து வருவான்' என்ற பாணனிடம், தலைவி வெகுண்டு கூறுவது இது.*

## 40. காமம் நுதலியல்

*காம இன்பத்தின் முறைமையைப் பற்றிக் கூறும் இயல் இதுவாகும். இந்த ஓர் அதிகாரம் மட்டுமே காமத்துப் பாலிற் சாரும் எனவும் கொள்பவர் சிலர். அவர் முன்னிரண்டு அதிகாரங்களையும் பொருட்பாலுட் கொள்வர்.*

*களவுங் கற்புமாக விரிந்த அகப்பொருள் முறைமைகள் எல்லாம் செழுந்தமிழ் நூல்கள் பலவற்றுள்ளும் விரித்துரைக்கப் பட்டிருக்க, நாம் காணலாம். எனினும், இந்தப் பத்துப் பாடல்களுள்ளும் கூறப்பட்டிருக்கும் துறைகளையும் நாம் அநுபவிப்போம்.*

**391. முயங்காக்கால், பாயும்பசலை; மற்று ஊடி**
**உயங்காக்கால் உப்பின்றாம் காமம் - வயங்கோதம்**
**நில்லாத் திரை யலைக்கும் நீள்கழித் தண் சேர்ப்ப**
**புல்லாப் புலப்பதோர் ஆறு.**

*[தலைமகனுக்கு வாயில் நேர்ந்த தோழி, தலைமகளின் புலவி நீங்கச் சொல்லியது இது.]*

*விளங்குகின்ற கடலானது நிலையாக இராமல், அலைகளால் மோதி வருந்துகின்ற, நீண்ட கழிகளினது குளிர்ந்த கரையை உடைய அரசனே! "தழுவிக் கூடாவிட்டால் உடலிலே பசலையானது மிகுதியாகப் பரவும். ஊடல் கொண்டு வருந்தாவிட்டால் காம நுகர்ச்சியானது ஒரு சுவை இல்லாமற் போய் விடும். ஆதலால், கூடுவதும் ஊடுவதுமாக அமைவதே காம இன்பத்திற்கு ஒப்பற்ற நன்னெறியாகும்" என்று அறிவாயாக.*

*இதனால், தலைவி தன் புலவி நீங்கித் தலைவனுடன் கூடுதற்கு இசைந்தாள் என்பது பெறப்படும்.*

**392. தம்மமர் காதலர் தார்சூழ் அணியகலம்**
**விம்ம முயங்குந் துணையில்லார்க்கு-இம்மெனப்**
**பெய்ய எழிலி முழங்கும் திசை யெல்லாம்**
**நெய்தல் அறைந்தன்ன நீர்த்து.**

*[பருவங்கண்டு, ஆற்றாளாகிய தலைவி தோழிக்குச் சொல்லியது இது.]*

*தம்மால் விரும்பப்பட்ட காதலருடைய மாலையணிந்த அழகிய மார்பை மகிழ்வினால் பூரிக்கும்படியாகத் தழுவுவதற்குரிய வாய்ப்பு இல்லாத மாதர்களுக்கு, இம்மென்னும் ஒலியோடு மேகம் நீரைச் சொரிய முழங்கும் திசைகள் எல்லாம், சாப்பறை அடித்தாற் போன்ற கொடிய தன்மை உடையதே யாகும்.*

**393. கம்மஞ்செய் மாக்கள் கருவி ஒடுக்கிய**
**மம்மர்கெநள் மாலை, மலராய்ந்து, பூத்தொடுப்பாள்,**

**கைம்மாலை யிட்டுக் கலுழ்ந்தாள், துணையில்லார்க்கு**
**இம்மாலை என் செய்வது! என்று.**

*[தலைமகள் செலவு உடன்படாமையைத் தலைமகற்குத் தோழி சொல்லியது இது.]*

*கம்மியத் தொழிலைச் செய்கின்ற மனிதர்களாகிய கம்மாளர்கள், தமது கருவிகளை வேலையில்லாமல் அடங்கச் செய்த, மயக்கத்தைக் கொண்ட மாலைப் பொழுதிலே, மலர்களை ஆராய்ந்து எடுத்து, தன் கணவனுக்கு இடுவதற்கு மாலையாகத் தொடுப்பவள், "நாயகனில்லாதவர்களுக்கு இம்மாலை என்ன பயன் செய்வது?" என்று கையிலிருந்த மாலையைக் கீழே போட்டுவிட்டுக் கண்கலங்கி இருந்து அழுதாள்.*

394. **செல்சுடர் நோக்கிச் சிதரரிக்கண் கொண்டநீர்**
**மெல்விரல் ஊழ்தெறியா, விம்மித், தன் - மெல்விரலின்**
**நாள்வைத்து, நம்குற்றம் எண்ணுங்கோல், அந்தோ! தன்**
**தோள்வைத்து அணைமேற் கிடந்து!**

*[வினைமுற்றி மீண்ட தலைமகன் பாகன் கேட்பச் சொல்லியது இது.]*

*மேற்கடலை நோக்கிச் செல்லுகின்ற சூரியனைப் பார்த்துச், சிதறிய செவ்வரிகளையுடைய கண்களிலே நிறைந்துள்ள நீரைத் தன் மெல்லிய விரல்களால் முறைமையாக அடிக்கடி எடுத்தெறிந்து, விம்மி அழுது, தன் மென்மையான விரலினால் நாட்களைக் கணக்கிட்டுக் கொண்டு உறங்காமலே இருப்பாளோ, எம் தலைவி? ஐயோ!*

395. **கண்கயல் என்னும் கருத்தினால், காதலி**
**பின்சென்ற தம்ம, சிறுசிரல்! -பின்சென்றும்,**
**ஊக்கி எழுந்தும், எறிகல்லா ஒண்புருவம்**
**கோட்டிய வில்வாக்கு அறிந்து.**

*[தலைமகன் தான் உற்றதைப் பாங்கற்குச் சொல்லியது இது.]*

*சிறிய சிச்சிலிக் குருவியானது, என் காதலியின் கண்களைக் கயல் மீன்கள் என்கிற எண்ணத்தினால் பற்றக் கருதி, அவள் பின்னே தொடர்ந்தது. அவ்வாறு பின்பற்றிச் சென்றும், முயற்சி செய்தும், அவளது ஒளியுடைய புருவமானது வளைந்த வில்லின் வளைவுபோல் இருந்ததைக் கண்டு அஞ்சிப் பின்னர் ஓடிவிட்டது.*

396 அரக் காம்பல் நாறும்வாய் அம்மருங்கிற்கு, அன்னோ!
பரற்கானம் ஆற்றின கொல்லோ - அரக்கார்ந்த
பஞ்சிகொண் டூட்டினும், 'பையெனப் பையென!' என்று
அஞ்சிப், பின் வாங்கும் அடி!

[*மகளைப் போக்கிய தாய் இரங்கியது இது.*]

*செவ்வாம்பலைப் போலத் தோன்றும் வாயிதழ்களையும் அழகிய இடையினையும் உடைய எம் மகளுக்குச் செம்பஞ்சுக் குழம்பைத் தடவினாலும் அதனையும் பொறுக்கமாட்டாமல் பயந்து, 'மெதுவாக! மெதுவாக!' என்று பின்வாங்கும் இயல்புடைய பாதங்கள், இப்போது, பருக்கைக் கற்களையுடை காட்டையும் எங்ஙனம் கடக்கப் பொறுத்தனவோ?*

397. ஓலைக் கணக்கர் ஒலியடங்கு புன்செக்கர்
மாலைப் பொழுதில் மணந்தார் பிரிவுள்ளி
மாலை பரிந்திட் டழுதாள் வனமுலைமேல்
கோலஞ்செய் சாந்தந் திமிர்ந்து.

[*தலைவனது பிரிவை ஆற்றாது தலைவியின் நிலைமையைத் தோழி கூறியது இது.*]

*ஓலை எழுதும் கணக்கருடைய ஆரவாரமும் அடங்கிப் போயின, அற்பமான சிவப்பினையுடைய மாலைக்காலத்திலே தன்னை மணந்தவனின் பிரிவை நினைந்து, தான் சூடியிருந்த மாலையையும் பிய்த்தெறிந்து அழகிய தனங்களின்மேல் அலங்காரஞ் செய்திருந்த சந்தனச் சாந்தையும் உதிர்த்துத் தள்ளி, அழுதுகொண்டே இருந்தாள் அவள்.*

*இதனால், தலைவன் விரைந்து மணவினை கொள்ளலிலே நாட்டஞ் செலுத்தவேண்டும் என்பது குறிப்பு.*

398. 'கடக்கருங் கானத்துக் காளைபின், நாளை
நடக்கவும் வல்லையோ?' என்றி-கடர்த்தொடீஇ
பெற்றான் ஒருவன் பெருங்குதிரை அந்நிலையே
கற்றான் அஃதூரும் ஆறு?

[*உடன்போக்குப் பொருந்தின தலைமகள் தோழிக்குச் சொல்லியது இது.*]

*ஒளிசிதறும் வளையல்களை உடையவளே 'கடத்தற்கு அரியதான காட்டிலே காளைபோன்ற தலைவனின் பின்னாக நாளைக்கு நடந்து போகவும் நீ வல்லமை உடையையோ?'*

என்றனை, பெரியதொரு குதிரையைப் பெற்றவனாகிய ஒருவன், அந்த நிலையினாலேயே, அதனை ஏறி நடத்தும் முறைமையைக் கற்றவனுமாவான் என்று அறியலாம் அல்லவோ?

உடன் போக்கிற்குத் துணிந்த தலைவியின் பேச்சு இது. போகத் துணிந்தவள், போகும் ஆற்2றலும் தனக்கு உண்டென்கின்றாள்.

**399. 'முலைக்கண்ணும், முத்தும், முழுமெய்யும், புல்லும்**
**இலக்கணம் யாதும் அறியேன்; - கலைக்கணம்**
**வேங்கை வெரூஉம் நெறி செலிய போலும், என்**
**பூம்பாவை செய்த குறி.**

[மகளைப் போக்கிய தாய் கவலைப்பட்டுச் சொல்லியது.]

தன்னுடைய முலைக்கண்களும், முத்துமாலையும் நன்றாக அழுந்துமாறு என்னை உடல்முழுவதும் இறுகக் கட்டித் தழுவிக் கொண்ட அடையாளத்தை, அப்பொழுதே யான் சிறிதும் அறிந்திலேனே! என்னுடைய சித்திரப்பதுமை போன்ற மகள், அப்பொழுது செய்த அடையாளம், கலைமான் தொகுதிகள் வேங்கைப் புலிக்கு வெருவி ஓடுகின்ற காட்டுவழியிலே அவள் மறுநாள் செல்லப் போவதைக் குறித்துத்தான் போலும்.

**400. கண்மூன்று உடையானும், காக்கையும் பையரவும்,**
**என்னீன்ற யாயும் பிழைத்த தென்? - பொன்னீன்ற**
**கோங்கரும்பு அன்ன முலையாய்! பொருள்வயின்**
**பாங்கனார் சென்ற நெறி!**

[தலைமகள் பிரிவாற்றாமையைத் தோழிக்குச் சொல்லியது இது.]

பொன்போன்ற தேமல்கள் பொருந்திய, கோங்கினது அரும்புகளைப் போன்று விளங்கும் முலைகளையுடைய தோழியே! மூன்று கண்களை உடைய சிவபிரானும், காக்கையும், படமுடைய பாம்பும், என்னைப் பெற்ற தாயும் எனக்குச் செய்த குற்றந்தான் என்னவோ? யாதும் இல்லை. குற்றமெல்லாம், என் தலைவர், பொருளினிடத்துள்ள ஆசையினாலே என்னைப் பிரிந்து போன நெறியேயாகும்.

மன்மதனாலும், குயிலாலும், சந்திரனாலும் தன் துயரம் மிகுதியாக, மதனை எரியாது மீண்டும் உயிர்ப்பித்த சிவன்மேலும், தன் குஞ்சு அன்று எனக் கண்டும் குயிலைக்

கொல்லாதுவிட்ட காக்கையின் மீதும், முற்றவும் விழுங்காமல் சந்திரனை மீண்டும் உமிழ்ந்த ராகு கேதுக்கள் மீதும், பிறந்த ஞான்றே தன்னைக் கொன்று விடாது துயரங்களுக்கு ஆட்படுமாறு தன்னை வளர்த்த தாயின்மீதும் குறைப்பட்டு நொந்து கொள்ளுகின்றாள் தலைவி. அவன் அருகே இருந்தால் அவை துன்பஞ் செய்வன அல்லவாதலால், அவன் அருகிலில்லாமையே உள்ள குற்றம் எல்லாம் எனத், தன் ஆற்றாமை மிகுதியையும் கூறுகின்றாள் அத் தலைவி.

**காமத்துப் பால் முற்றும்.**

**நாலடி நானூறும்**
**புலியூர்க் கேசிகன் தெளிவுரையும்**
**முற்றுப் பெற்றன.**

## கீழ்க்கணக்கு நூல்கள்

*கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு. அவற்றைப்* '**பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்**' *என்று குறிப்பிடுவார்கள்.*

*அவற்றின் பாவமைதியை ஒட்டியே* '**கீழ்க்கணக்கு**' *என அவை வகுக்கப்பெற்றன. இதனை,*

**அடி நிமிர்வு இல்லாச் செய்யுள் தொகுதி**
**அறம் பொருள் இன்பம் அடுக்கி அவ்வத்**
**திறம்பட வருவது கீழ்க்கணக்கு ஆகும்**

*என வரும் பன்னிரு பாட்டியல் சூத்திரத்தால் அறியலாம்.*

*தொல்காப்பிய உரையாசிரியர்களான நச்சினார்க்கினியரும் பேராசிரியரும், 'அம்மை' என்னும் வனப்பின்பாற் பட்டனவாகக் கீழ்க்கணக்கு நூல்களைக் காட்டுவர்.*

**சின்மென் மொழியால் தாய பனுவலின்**
**அம்மை தானே அடிநிமிர்பு இன்றே.**

*என்னும் சூத்திர உரைக்கண் இதனைக் காணலாம்.*

*பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் எவை என்பதனை ஒரு பழஞ்செய்யுள் கூறுகின்றது. அது*

**நாலடி, நான்மணி, நானாற்பது, ஐந்திணை, முப்**
**பால், கடுகம், கோவை, பழமொழி, மாமூலம்,**
**இன்னிலைய காஞ்சியுடன், ஏலாதி என்பவும்,**
**கைந்நிலையும், ஆம் கீழ்க் கணக்கு.**

*என்பதாம்.*

*பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள்* **நீதி நூல்கள்** *பதினொன்று;* **அகப்பொருள்** *பற்றியவை* **ஆறு;** **புறப்பொருள்** *பற்றியது களவழி என்னும் ஒன்று.*

*இவற்றின் விளக்கம் அடியில் வருமாறு:*

| **நூல்கள்** | | **பாடியவர்** | **பாடல்கள்** |
|---|---|---|---|
| *1.* | *நாலடியார்* | *சமண முனிவர்கள்* | *400* |
| *2.* | *நான்மணிக்கடிகை* | *விளம்பிநாகனார்* | *100* |
| *3.* | *இன்னா நாற்பது* | *கபிலர்* | *40* |

| | | | |
|---|---|---|---|
| 4. | இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | 40 |
| 5. | கார் நாற்பது | மதுரைக்கண்ணங் கூத்தனார் | 40 |
| 6. | களவழி நாற்பது | பொய்கையார் | 41 |
| 7. | ஐந்திணை ஐம்பது | மாறை பொறையனார் | 50 |
| 8. | ஐந்திணை எழுபது | மூவாதியார் | 70 |
| 9. | திணைமொழி ஐம்பது | சாத்தந்தையார் மகனார் கண்ணம்பூதனார் | 50 |
| 10. | திணைமாலை நூற்றைம்பது | மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் | 150 |
| 11. | முப்பால் (திருக்குறள்) | திருவள்ளுவர் | 1330 |
| 12. | திரிகடுகம் | நல்லாதனார் | 100 |
| 13. | ஆசாரக் கோவை | பெருவாயின் முள்ளியார் | 100 |
| 14. | பழமொழி நானூறு | முன்றுறை அரையனார் | 400 |
| 15. | சிறுபஞ்சமூலம் | மாக் காரியாசான் | 100 |
| 16. | முதுமொழிக் காஞ்சி | மதுரைக் கூடலூர்க்கிழார் | 100 |
| 17. | ஏலாதி | மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் | 80 |
| 18. | கைந்நிலை | மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர்க்காவிதியார் மகனார் புல்லங்காடனார் | 60 |

இவை சங்க காலத்தவை எனச் சிலரும், பிற்காலத்தவை எனச் சிலரும் கூறுவர். தோன்றிய காலம் யாதாயினும் நிலைக்குங் காலம் நிலைபெற்ற நெடுங்காலமாதலின் இவற்றைக் கற்று உளங்கொண்டு நாமும் போற்றுவோமாக!

# பாட்டு முதற்குறிப்பு அகரவரிசை

[ எண் - பாட்டு எண் ]


| | | | |
|---|---|---|---|
| அக்கேபோல் அங்கை | 123 | ஆற்றுந் துணையும் | 196 |
| அகத்தாரே வாழ்வார் | 31 | ஆன் படு நெய்பெய் | 239 |
| அச்சம் பெரிதால் | 81 | இற்சார்வின் | 182 |
| அடுக்கன் மலைநாட | 203 | இசைந்த சிறுமை | 187 |
| அடைந்தார்ப் பிரிவும் | 173 | இசையா ஒரு பொருள் | 111 |
| அத்திட்ட கூறை | 281 | இசையாது எனினும் | 194 |
| அங்கண் விசும்பின் அக | 151 | இசையும் எனினும் | 152 |
| அங்கண் விசும்பின் அம | 373 | இட்டு ஆற்றுப்பட்டு | 288 |
| அங்கோட்ட கலல்குல | 372 | இடம் பட | 116 |
| அம்பல் அயெலெடுப்ப | 87 | இடும்பை கூர் | 107 |
| அம்பும் அழலும் | 89 | இம்மி அரிசித் | 94 |
| அரக்காம்பல் நாறும் | 396 | இம்மை பயக்குமால் | 132 |
| அருகலதாகிப் | 261 | இம்மையும் நன்று ஆம் | 293 |
| அரும்பவிழ் தாரினான் | 390 | இமைக்கும் அளவில் | 323 |
| அரும்பெறற் கற்பின் | 381 | இரவலர் கன்றாக | 279 |
| அரும் பெறல் | 34 | இருக்கை எழலும் | 143 |
| அருளின் | 321 | இரும்பு ஆர்க்கும் | 122 |
| அலகுசால் கற்பின் | 140 | இல்லம் இளமை | 53 |
| அவ்வியம் இல்லார் | 322 | இல்லா இடத்தும் | 91 |
| அவமதிப்பும் ஆன்ற | 163 | இல்லாமை கந்தா | 303 |
| அழல்மண்டு | 202 | இலங்குநீர்த் தண் | 227 |
| அள்ளிக்கொள் வன்ன | 262 | இழித்தக்க | 302 |
| அறம்புகழ் கேண்மை | 82 | இழைத்த நாள் எல்லை | 6 |
| அறிமின் அறநெறி | 172 | இளையான் அடக்கம் | 66 |
| அறியாப் பருவத்து | 171 | இற் பிறப்பு இல்லார் | 320 |
| அறியாரும் அல்லர் | 108 | இற் பிறப்பு எண்ணி | 212 |
| அறிவது அறிந்தடங்கி | 74 | இறப்பச் சிறிதென்னாது | 99 |
| அறுசுவை உண்டி | 1 | இறப்ப நினையுங்கால் | 174 |
| ஆகாது எனினும் | 337 | இறப்பவே தீய | 223 |
| ஆடு கோடாகி | 192 | இன்பம் பயந்தாங்கு | 79 |
| ஆணமில் நெஞ்சத்து | 374 | இன்றாதும் | 359 |
| ஆமாபோல் நக்கி | 377 | இன்று கொல் | 36 |
| ஆர்த்த அறிவினர் | 351 | இன்னர் இனையர் | 205 |
| ஆர்த்த பொறிய | 290 | இன்னா இயைக | 306 |
| ஆவாம் நாம் ஆக்கம் | 32 | இன்னா செயினும் | 76 |
| ஆ வேறு உருவின | 118 | இன்னா செயினும் கனி | 225 |
| ஆட்பார்த்து உழலும் | 20 | இன்னா செயினும் விட | 226 |

| | | | |
|---|---|---|---|
| இனநன்மை இன்சொல் | 146 | என்னானும் ஒன்று | 5 |
| இனியார் தம் நெஞ் | 369 | என்பாய் உகினும் | 292 |
| ஈட்டலும் துன்பம் | 286 | என்றும் புதியார் | 307 |
| ஈண்டு நீர் வையத்துள் | 109 | என்னே மற்றிவ் | 330 |
| ஈதல் இசையாது | 181 | எனக்குத் தாய் | 15 |
| ஈனமாய் இல் இருந்து | 198 | எனதெனது என்று | 276 |
| உடா அதும் | 10 | ஏட்டைப் பருவத்தும் | 358 |
| உடுக்கை உலறி | 141 | ஏதிலார் செய்தது | 228 |
| உடையார் இவர் | 160 | ஏமாந்த போழ்தின் | 378 |
| உண்டாய போழ்தின் | 284 | ஏற்றகை மாற்றாமை | 98 |
| உண்ணான் ஒளிநிறான் | 9 | ஒண்கதிர் வாண் | 176 |
| உடைப்பெருஞ் | 368 | ஒருநன்றி செய்தவர்க்கு | 357 |
| உணர உணரும் | 247 | ஒரு நீர்ப் பிறந்து | 236 |
| உபகாரம் செய்ததனை | 69 | ஒரு புடை பாம்பு | 148 |
| உயிர் போயார் | 50 | ஒருவர் ஒருவரைச் | 309 |
| உருவிற்கு அமைந் | 240 | ஒக்கிய ஒள் வாள் | 129 |
| உருவும் இளமையும் | 102 | ஓதியும் ஓதார் | 270 |
| உலகறியத் தீரக் | 204 | ஓலைக் கணக்கர் | 379 |
| உள்கூர் பசியால் | 286 | கட்கு இனியாள் | 384 |
| உள்ளத்தால் நள்ளாது | 128 | கடக்க அருங் கானத்து | 398 |
| உள்ளத்து உயர் | 386 | கடகஞ் செறிந்த தம் | 289 |
| உள்ளம் ஒருவன் | 380 | கடமா தொலைச்சிய | 300 |
| உள நாள் சிலவால் | 324 | கடல் சார்ந்தும் | 245 |
| உறக்கும் துணை | 38 | கடி எனக் கேட்கும் | 364 |
| உறப்பால நீக்கல் | 105 | கடித்துக் கரும்பினைக் | 156 |
| உறு புலி ஊண் | 193 | கடிப்பிகு கண் முரசம் | 100 |
| உறு புனல் தந்து | 185 | கடுக்கி ஒருவன் | 189 |
| உறைப்பருங் | 184 | கடுக்கெனச் சொல் | 348 |
| ஊக்கித் தாம் கொண்ட | 57 | கடை எலாம் காய் பசி | 297 |
| ஊரங்கண நீர் | 175 | கடையாயார் நட்பில் | 215 |
| ஊருள் எழுந்த | 90 | கண் கயல் என்னும் | 395 |
| ஊறி உவர்த்தக்க | 47 | கண் மூன்று | 400 |
| ஊறுசெய் நெஞ்சந்தம் | 379 | கணங் கொண்டு | 25 |
| எஞ்ஞான்றும் | 385 | கண மலை நன்னாட | 313 |
| எத்துணையானும் | 272 | கப்பிக் கடவதாக் | 341 |
| எந் நிலத்து | 248 | கம்மஞ்செய் மாக்கள் | 393 |
| எம்மை அறிந்திலார் | 165 | கரவாத திண்ணன்பிற் | 305 |
| எய்தி இருந்த அவை | 325 | கருங் கொள்ளும் செங் | 387 |
| எற்று ஒன்றும் | 150 | கருத்து உணர்ந்து | 211 |
| எறி என்று எதிர் | 363 | கரும்பா ட்டிக் கட்டி | 35 |
| எறிநீர்ப் பெருங்கடல் | 275 | கருமமும் உள்படாப் | 250 |

| | | | |
|---|---|---|---|
| கரும வரிசையால் | 249 | கோளாற்றக் | 191 |
| கல் எறிந்தன்ன | 66 | சக்கரச் செல்வம் | 346 |
| கல் என்று தந்தை | 253 | சாய்ப் பறிக்க நீர் | 389 |
| கல் ஓங்கு உயர் | 283 | சான்றாண்மை சாயல் | 142 |
| கல் நனி நல்ல | 334 | சிதலை தினப்பட்ட | 197 |
| கல்லாக் கழிப்பர் | 366 | சிறுகா பெறுகா முறை | 110 |
| கல்லாது நீண்ட | 254 | சிறுகாலையே தமக்குச் | 328 |
| கல்லாது போகிய | 169 | சீரியார் கேண்மை | 232 |
| கல்லாமை அச்சம் | 145 | செந்நெல்லால் ஆய | 367 |
| கல்லாரே ஆயினும் | 139 | செம்மை யொன்றின்றிச் | 85 |
| கல்வி கரை இல | 135 | செய்கை அழிந்து | 147 |
| கழிந்தார் இடுதலை | 49 | செய்யாத செய்தும் | 235 |
| கழுநீருள் கார் | 217 | செல் சுடர் நோக்கிச் | 394 |
| கள்ளார்கள் | 157 | செல்லா விடத்தும் | 149 |
| களர் நிலத்துப் பிறந்த | 133 | செல்வர் யாம் என்று | 8 |
| கற்றதூஉம் இன்றிக் | 314 | செல்வழிக்கண் | 154 |
| கற்றவும் கண் | 340 | செழும்பெரும் | 352 |
| கற்றார் உரைக்கும் | 260 | செறிப்பில் பழங் | 231 |
| கற்று அறிந்த | 256 | செறுத்தோறு | 222 |
| கனைகடல் தண் | 138 | சென்றே எறிப | 24 |
| காணின் குடிப் பழியாம் | 84 | சொல் தளர்ந்து | 13 |
| காதலார் சொல்லும் | 73 | சொற்றாற்றுக் | 313 |
| காலாடு போழ்தில் | 113 | தக்காரும் தக்கவர் | 112 |
| காவாது ஒருவன் | 63 | தக்கோலம் தின்று | 43 |
| காழாய கொண்டு | 342 | தண்டாச் சிறப்பிற்றம் | 62 |
| குஞ்சி அழகும் | 131 | தம் அமர் காதலர் | 392 |
| குடநீர் அட்டு | 382 | தம்கண் மரபில்லார் | 336 |
| குடரும் கொழுவும் | 46 | தம்மை இகழ்ந்தமை | 52 |
| குலம் தவம் கல்வி | 333 | தம்மை இகழ்வாரைத் | 117 |
| குற்றமும் ஏனைக் | 230 | தமர் என்று தாம் | 229 |
| கூர்த்து நாய் கௌவிக் | 70 | தலையே தவம் | 365 |
| கேளாதே வந்து | 30 | தவலருந் தொல் | 137 |
| கொடியவை கூறாதி | 386 | தனிர்மேல் நிற்பினும் | 355 |
| கொடுத்தலும் | 274 | தனது ஆகத் தான் | 278 |
| கொய்புல் கொடுத்துக் | 350 | தாம் செய் வினை | 130 |
| கொல்லை இரும் | 178 | தாமேயும் இன்புறார் | 327 |
| கொலைஞர் உலை | 331 | தாழாத் தளரா | 14 |
| கொன்னே கழிந்தன்று | 55 | தான் கெடினும் | 80 |
| கோட்டுப்பூப் போல | 216 | திருத் தன்னை | 304 |
| கோடேந்து அகல் | 354 | திருமதுகை யாகத் | 291 |
| கோதை அருவிக் | 71 | தினையனைத்தே | 344 |

| | | | |
|---|---|---|---|
| தினைத் துணையர் | 105 | நின்றன நின்றன நில்லா | 4 |
| தீம் கரும்பு ஈன்ற | 199 | நீர்மையே அன்றி | 287 |
| துக்கத்துள் தூங்கித் | 121 | நீரினும் நுண்ணிது | 282 |
| துகள்தீர் பெருஞ்செல்வம் | 2 | நீருட் பிறந்து | 360 |
| துய்த்துக் கழியான் | 273 | நுண்ணுணர்வி | 233 |
| துன்பம் பலநாள் | 54 | நுண் உணர்வு | 251 |
| துன்பமே மீதூரக் | 60 | நெடுங்காலம் ஓடினும் | 69 |
| தெரியத் தெரியும் | 168 | நெருப்பழற் | 124 |
| தெண்ணீர்க் குவளை | 44 | நேர் அல்லார் நீர் | 72 |
| தெளிவு இலார் | 219 | நேர்த்து நிகர் அல்லார் | 64 |
| தோணி இயக்குவான் | 136 | பகைவர் பணிவு இடம் | 241 |
| தோற் போர்வை | 42 | படுமழை மொக்குளிற் | 27 |
| தோற்றஞ்சால் ஞாயிறு | 7 | பண்டம் அறியார் | 48 |
| நச்சியார்க்கு | 299 | பரவா வெளிப்படாப் | 88 |
| நட்டார்க்கும் | 271 | பராஅரைப் புன்னை | 246 |
| நட்புநார் அற்றன | 12 | பருவம் எனைத்துள | 18 |
| நடு ஊருள் வேதிகை | 96 | பல் ஆவுள் உய்த்து | 101 |
| நடுக்குற்றுத் | 93 | பல்லான்ற... | 252 |
| நம்மாலே யாவர் | 301 | பல்லான்ற...கேள்விப் | 106 |
| நயவார்கண் நல்குரவு | 267 | பன்னாளும் | 159 |
| நரம்பெழுந்து | 153 | பல்லார் அறியப் பறை | 86 |
| நரைவரும் என் | 11 | பல நாளும் பக்கத் | 214 |
| நல் ஆவின் கன்று | 115 | பழமை கந்தாகப் | 310 |
| நன்னிலைக்கண் | 248 | பழையர் இவர் என்று | 349 |
| நல்ல குலமென்றும் | 195 | பன்றிக் கூழ்ப் பத்தரில் | 257 |
| நல்லர் பெரிதளியர் | 298 | பனி படுசோலைப் | 17 |
| நல்லவை செய்யின் | 144 | பாடமே ஓதிப் | 316 |
| நல்லவை நாள் | 338 | பாம்பிற்கு ஒரு தலை | 375 |
| நல்லார் எனத் தாம் | 221 | பாலால் கழீஇப் | 258 |
| நல்லார் நயவர் | 265 | பாலோடு அளாய நீர் | 177 |
| நளி கடல்..நல்கூர்ந்த | 242 | பாவமும் ஏனைப் | 295 |
| நளி கடல்... | 166 | பிறந்தகுலம் மாயும் | 285 |
| நறுமலர்த் தண் | 209 | பிறர்மறை யின்கண் | 158 |
| நாப்பாடம் சொல்லி | 312 | புக்க இடத்து அச்சம் | 83 |
| நாய்க்கால் சிறு விரல் | 218 | புணர்கடல் சூழ் | 264 |
| நார்த் தொடுத்து | 26 | புத்தகமே சாலத் | 318 |
| நால் ஆறும் ஆறாய் | 383 | புதுப் புனலும் | 370 |
| நாள்வாய்ப் பெறினும் | 207 | புன்னுனிமேல் நீர்போல் | 29 |
| நாறாத் தகடேபோல் | 266 | புல்லா எழுத்திற் | 155 |
| நில நலத்தான் | 170 | புல்லாப் புன் | 255 |
| நிலையாமை நோய் | 52 | புறத்துத்தன் இன்மை | 308 |

பெயற்பான் மழை 97
பெரியவர் கேண்மை 225
பெரியார் பெரு நட்பு 77
பெரியார் பெருமை 170
பெருகுவது போலத் 234
பெருங்கடல் ஆடிய 332
பெருநடை தாம் 343
பெருமுத்தரையர் 200
பெருவரை நாட 186
பெறுவதொன்று 335
பெறுவது கொள்பவர் 317
பொத்த நூல் கல்லும் 376
பொழிந்தினிது 259
பொழிப்பு அகலம் 319
பொற்கலத்து ஊட்டிப் 345
பொற் கலத்துப் 206
பொறுப்பர் 161
பொன்னிறச் செந்நெற் 269
பொன்னே 161
மக்களால் ஆய 37
மடிதிரை தந்திட்ட 224
மதித்து இறப்பாரும் 61
மரீஇப் பாலொடு 220
மல்கு திரைய கடற் 263
மல்லல் மா ஞாலத்து 296
மலை நலம் உள்ளம் 346
மலைமிசைத் தோன்றும் 21
மழை திளைக்கும் 361
மற்றறிவாம் 19
மறுமைக்கு வித்து 183
மறுமையும் இம்மையும் 95
மன்றம் கறங்க 23
மன்னர் திருவும் 167
மனத்தான் மறுவில 180
மனைப்பாசம் 130
மாக்கேழ் மடநல்லாய் 41
மாண்ட குணத்தோடு 56
மாற்றாராய் நின்று 68
மான அருங்கலம் நீக்கி 40
ம்ுட்டிகை போல 208
முட்டுற்ற போழ்தின் 238
முயங்காக்கால் பாயும் 391
முல்லை முகை முறுவல் 45
முலைக்கண்ணும் 399
முற்றல் சிறு மந்தி 237
முற்றுத்தம் துத்திணை 190
முன்னரே சாநாண் 92
மூப்பு மேல் வாராமை 326
மெய்ஞ் ஞானக் 311
மெய் வாய் கண் மூக்கு 59
மெல்லியல் நல்லாருள் 188
மை தீர் பசும் 349
யாம் ஆயின் எம் 293
யானை அனையவர் 213
யானை எருத்தம் பொலிய 3
யாஅர் உலகத்தோர் 117
யா அர் ஒருவர் 127
யாக்கையை 28
வடுவிலா வையத்து 114
வயாவும் வருத்தமும் 201
வலவைகள் 268
வழங்காத செல்வரின் 277
வழுக்கெனைத்தும் 362
வளம்பட 103
வற்றி மற்றாற்றப் 78
வாழ்நாட்கு அலகா 22
வானிடு வில்லின் (கடவுள் வாழ்த்து)
விரி நிற நாகம் 164
விருப்பிலார் இல்லத்து 210
விழைந்து ஒருவர் 339
விளக்கொளியும் 371
விளக்குப் புக இருள் 51
வினைப்பயன் 33
வெறியயர் 16
வெறுமை இடத்தும் 329
வென்றிப் பொருட் 315
வேம்பின் இலையுள் 244
வேற்றுமை இன்றிக் 75
வைகலும் வைகல் 39
வைப்புழிக் கோட் 134


✪ ✪ ✪

சமண முனிவர்கள் இயற்றிய

# நாலடியார்

## தெளிவுரை

புலியூர்க் கேசிகன்



GO 057

நூல் கிடைக்குமிடம் :

நூலங்காடி...
www.thebookstore.in
e-mail : gowra_09@yahoo.in

கௌரா ஏஜென்ஸீஸ்
10/14, தோப்பு வேங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை - 5.

ரூ.80